கிறிஸ்தவ ஆவிக்குரிய பயணத்தில் ஒவ்வொரு நிலைக்கும் தேவையான ஒரு இன்றியமையாத புத்தகம்

1500 கிறிஸ்தவ எழுப்புதல் மேற்கோள்கள்

கே.எஸ். ஆமோஸ்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

1500

கிறிஸ்தவ எழுப்புதல்

மேற்கோள்கள்

1500

கிறிஸ்தவ எழுப்புதல்

மேற்கோள்கள்

கே.எஸ். ஆமோஸ்

WORD OF CHRIST
CHENNAI, INDIA

45. குணம்
46. குறிக்கோள்
47. குடும்பம்
48. கொடுத்தல்
49. கோபம்
50. சத்தியம்
51. சந்தர்ப்பம்
52. சந்தோஷம்
53. சமாதானம்
54. சவால்
55. சபை
56. சாதனை
57. சாத்தான்
58. சிந்தனை
59. சிலுவை
60. சுயம்
61. செயல்
62. சேவை
63. சோதனை
64. ஞானம்
65. ஞானஸ்நானம்
66. தன்னடக்கமின்மை
67. தன்னம்பிக்கை
68. தரிசனம்
69. தலைமைத்துவம்
70. தாலந்து
71. திட்டம்
72. திருமணம்
73. திறமைகள்
74. தீமை
75. துன்பம்
76. துதி
77. தேவன்
78. தேவனின் அருள்
79. தேவ அன்பு
80. தேவ ஊழியம்
81. தேவ கரம்
82. தேவ நம்பிக்கை
83. தேவனுடைய நோக்கம்
84. தேவ சமாதானம்
85. தேவனுடைய ராஜ்யம்
86. தேவனுடைய வாக்குறுதி
87. தேவனுடையு வார்த்தை
88. தேவ சித்தம்
89. தோல்வி
90. தைரியம்
91. நண்பன்
92. நம்பிக்கை
93. நரகம்
94. நற்குணம் நற்செய்தி
95. நன்றி
96. நித்திய வாழ்வு
97. நியாயத்தீர்ப்பு
98. நேரம்

9. நோக்கம்
0. பணம்
1. பண்பு
2. பணிவு
03. பயம்
04. பரலோகம்
05. பரிசுத்த ஆவி
06. பக்தி
07. பாடுகள்
08. பாவம்
09. பரிசு
0. பரிசுத்த வாழ்வு
1. பிரசங்கம்
2. பிரச்சினை
3. பிரதான கட்டளை
4. புகழ்
5. புத்தகங்கள்
6. புன்னகை
7. புனிதம்
8. பெண்கள்
9. பெருமை
20. பொய்
21. பொறுமை
22. பேராவல்
23. மதம்
24. மரணம்
25. மனம்
26. மனந் திரும்புதல்
127. மனதுருக்கம்
128. மன்னிப்பு
129. மனித உயிர்
130. மகிழ்ச்சி
131. மகிமை
132. மாய்மாலம்
133. மாற்றம்
134. மாதிரி
135. மிஷனரி
136. முட்டாள்
137. முயற்சி
138. மேன்மை
139. வயது
140. வரம்
141. வரலாறு
142. வல்லமை
143. வாய்ப்புகள்
144. வார்த்தை
145. வாழ்க்கை
146. வாசித்தல்
147. விசுவாசம்
148. விசுவாசி
149. விடாமுயற்சி
150. விமர்சனம்
151. வெற்றி
152. வேதாகமம்
153. ஜெபம்
154. பல தலைப்புகள்

ENGLISH BOOKS BY K.S. AMOS

501 Manners & Customs of Bible Times, Vol. 1

A Collection of Select 501 Manners and Customs of Life in Bible Times Both in Old Testament and New Testament.

Pages: 240

Price: Rs 175/-

ISBN-13: 978-8192073651

A Chosen Vessel



A Complete Biography of Pastor Aaron, the First Indian Ordained Protestant Pastor.

Pages: 104

Price: Rs 60/-

ISBN-13: 978-9382134053



1001 Q & A on the History of Christianity in India

This is the first of this kind in India and perhaps in the world to teach the history of Christianity in a Question-Answer mode to the ordinary Christians who have no knowledge of Christian history.

Pages: 148

Price: Rs 75/-

ISBN-13: 978-9382134244

2001 Q & A on the History of World Christianity



This is like eating the seeds of a pomegranate one by one in order to understand the historical Christian heritage. It is easy to read and understand.

Pages: 264

Price: Rs 125/-

ISBN-13: 978-9382134251

அறிமுகம்

ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித் தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம். நீதி. 25:11

தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையுமுள்ளதாயிருக்கிறது. அப்படியே தெய்வத்தினுடைய வார்த்தையின்மேல் நம்பிக்கை வைத்து வாழ்ந்தவர்களின் வார்த்தைகளும் வல்லமை பெற்றே விளங்குகிறது. சரியான வார்த்தையை, சரியான இடத்தில் பயன்படுத்துவதே நல்ல பேச்சாளரின் மற்றும் எழுத்தாளரின் அறிகுறியாகும். அப்படி அவர்கள் பயன்படுத்த அதிக புத்தக மற்றும் அனுபவ அறிவு அவசியம். இவை இரண்டையுமே திரு. கே. எஸ். ஆமோஸ் அவர்கள் ஒருங்கே பெற்றுத் தன் சக தோழர்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் சான்றோர்களின் கருத்துக்களைத் தொகுத்துள்ளார். நம்மைப் போலவே பாடுள்ள மனிதர்கள், தேவ ஆவியால் வழிநடத்தப்படுகையில் சம்பவித்த அனுபவ மொழிகளே இவை. இக்கருத்துக்கள் அனைத்தும் நமக்குள் ஓர் எழுப்புதலை உண்டுபண்ணுவதாகவும், தேவனுக்காக எதையாவது செய்யத் தூண்டுவதாகவும் இருக்கின்றன.

இளமையில் ஓங்கி வளரும் விருட்சம்போல திரு. கே.எஸ். ஆமோஸ், இந்த வாலிபப் பருவத்திலே பல தடைகளைத் தாண்டி முன்னேறி வருகிறார். இன்றைய உலகில் இவர் வயதைப் போன்றோர்கள் பல இலட்சங்களைச் சம்பாதித்தாலும், பலர் இலட்சியங்களே இல்லாமலும் 'ஏனோ தானோ' வாழ்க்கை வாழ்கின்றனர். ஆனால் திரு. கே. எஸ். ஆமோஸ், தேவன் தன்னை அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக ஓடுவதைப் போலவே அனுதின வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். தமிழில் அவர் எழுதும் இந்த முதல் புத்தகத்திற்கு அறிமுகம் எழுத எனக்கு வாய்ப்பு கிடைத்தமைக்கு தேவனைத் துதிக்கிறேன். இப்புத்தகம் அனைத்து ரக கிறிஸ்தவர்களுக்கும் வாழ்க்கையில் முன்னேற உறுதுணையாக இருக்கும் என்பதிலே எவ்வித சந்தேகமும் இல்லை.

திரு. கே.எஸ். ஆமோஸ் எழுதிய நான்கு ஆங்கில புத்தகங்கள் உலகத் தரம் கொண்டவை. அவை அநேகருடைய கரங்களில் தவழ்வதைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறேன். அப்படியே இந்தப் புத்தகம் அனைத்து கிறிஸ்தவர்களின் வீடுகளிலும் இருப்பது மட்டுமல்லாமல் மேற்கோள் காட்டப் பயன்படும் என்பதை நிச்சயமாய் அறிந்திருக்கிறேன். திரு கே.எஸ். ஆமோஸ் அவர்களின் கடின உழைப்பும், விடா முயற்சியும், செய்யும் காரியத்தில் நேர்மையும் நிச்சயம் அவருக்கு முன்னேற்றத்தைத் தரும். வேதாகமம் கூறுவதுபோல், 'தன் வேலையில் ஜாக்கிரதையாய் இருக்கிறவன் நீசருக்கு முன்பாக நில்லாமல் ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்' என்பதும் நிறைவேறும். பரிசுத்த ஆவியானவரால் தன் வாழ்கையில் எழுப்புதல் ஏற்பட உந்துதலாக இருந்த அரிய மேற்கோள்களை சேகரித்துத் தொகுத்துள்ள இவரை, ஒரு 'எழுப்புதல் மேற்கோள்களின் பொறுக்கி' என்று அழைத்தால் மிகையாகாது. அமைதி வழியில் ஓர் அறிவுப் புரட்சியை மேற்கொள்ளும் திரு. கே.எஸ். ஆமோஸ் இன்னும் அநேக படைப்புக்களைக் கொடுத்து, கிறிஸ்தவ சமுதாயத்தை அதன் அடிப்படை உணர்வுக்கு அழைத்துவர அவரோடு சேர்ந்து என் தேவனிடத்தில் நான் பிரார்த்திக்கிறேன்.

இந்த புத்தகத்தில் உள்ள ஒரு மேற்கோளாவது உங்கள் வாழ்வில் திருப்புதலை உண்டுபண்ணும் என நம்புகிறேன். இம்மேற்கோள்கள் வெறும் வார்த்தைகள் அல்ல, பரிசுத்த ஆவியானவாரின் கட்டுப்பாட்டில் இயங்கிய பல பெரிய மகான்களினால் உருவான விலைமதிக்க முடியாத முத்துக்கள். சமயத்திற்கேற்பப் பேச நமக்குப் பல மேற்கோள்களை சேகரித்து, சுலபமான வழியில் நமக்குத் தந்திருக்கும் திரு. கே.எஸ். ஆமோஸ் அவர்களின் எழுத்துப்பணி மேலும் சிறக்க எனது வாழ்த்துக்கள்.

திரு. ஆர். வி. வால்டர்
இயக்குநர்
ட்ரான்ஸ்ஃபாம் இந்தியா மிஷன்
சென்னை, இந்தியா
கைபேசி: 9841712115
Email:iamrvwalter@gmail.com

* * *

முன்னுரை

"கருத்துள்ள சுருக்கமான வாக்கியங்கள் கூரிய ஆணிகள்போல நம் மனதில் உண்மையை உட்செலுத்துகின்றன."

டெனிஸ் டெடிராட்

மேற்கோள் என்பது ஒரு வாசகம் அல்லது சொற்பொழிவிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பாகம் அல்லது எழுத்தாளர் தவிர வேறு யாராவது திரும்பத் திரும்பப் பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படும் ஒரு சொற்றொகுதி ஆகும்.

இவ்வுலகத்தில் தேவனுடைய வார்த்தைக்கு நிகரானது ஒன்றுமில்லை. இருக்கப் போவதுமில்லை. தேவ வார்த்தை, தேவனால் மனிதனுக்கு எழுதப்பட்ட ஒரு வெளிப்பாடு. அவ்வார்த்தையில் வல்லமையும், ஜீவனும் இருக்கின்றன. அவ்வார்த்தைகளினால், தேவனையும் அவர் திட்டங்களையும் அறிந்து, தேவ அழைப்பையும், வல்லமையையும், எழுச்சியையும் பெற்ற நம் சான்றோர்கள், தேவனுக்கென்று பெரிய காரியங்களைச் செய்தனர் மற்றும் சாதித்தனர். தேவ வார்த்தை மட்டுமே தேவனுக்காக எதையும் செய்ய உந்துதலாக இருந்தது. தேவனுக்காக, பாடுகள் அனுபவிக்கவும், இரத்த சாட்சியாக மரிக்கவும், நாடு விட்டு நாடு சென்று ஊழியம் செய்யவும் துணிந்தனர்.

தேவனுடைய வார்த்தை மனிதனுடைய நினைவுகளையும், சிந்தனைகளையும் வெளிப்படுத்துகிறது. எனவே தேவனோடு நம் சான்றோர்கள் கொண்ட தனிப்பட்ட உறவு, ஊழிய அனுபவங்கள் மற்றும் பாடுகளைப் புத்தகங்கள் வாயிலாகவோ அல்லது கட்டுரைகள் வாயிலாகவோ பிற மக்களுக்கு அறிவித்தனர். அவர்கள் சொன்ன கருத்துக்கள் தேவனால் அவர்கள் மூலமாக வெளிப்பட்டவையாகக் கருதப்படுகின்றன. அவையனைத்தும் தேவனையும் சுவிசேஷத்தையும்

1500

கிறிஸ்தவ எழுப்புதல்

மேற்கோள்கள்

1. அர்ப்பணிப்பு

1. அர்ப்பணிப்பு என்பது ஒரு வெற்றுத்தாளின் கீழ்ப்பகுதியில் நீங்கள் கையொப்பமிட்டு, அதைக் கர்த்தரிடத்தில் கொடுத்து அந்தத் தாளை நிரப்பச் சொல்வதாகும். **ரிக் ரென்னெர்**

2. அர்ப்பணித்தல் வாழ்வதற்கான சிறந்த வழி அல்ல, அது மாத்திரமே வாழ்வதற்கான ஒரே வழி. வேறு எந்த வழியுமில்லை. **ரிக் வாரன்**

3. பிரதான கட்டளைக்கும், பிரதான ஆணைக்கும் வழங்கும் ஒரு பிரதான அர்ப்பணிப்பு உங்களை ஒரு மகத்துவமான கிறிஸ்தவனாக்கும். **ரிக் வாரன்**

௪ "அவசர வேலை" என்பது இவ்வுலகம் சார்ந்த வேலைக்குப் பொருந்தவே பொருந்தாது. மாறாக அது தேவ பணிக்கு மட்டும் பொருந்தும். **பெயர் அறியப்படாதவர்**

5. தேவனுடைய ஊழியத்திற்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட ஒரு மனிதனைக் கொண்டு தேவனால் என்ன செய்யமுடியும் என்பதைக் காண இந்த உலகம் இன்னும் காத்திருக்கிறது. **டி.எல்.மூடி**

6. தேவனுக்காக முற்றிலுமாய் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வில் எந்த பயமும் இல்லை. எந்த இழப்பும் இல்லை. எந்த மன வருத்தமும் இல்லை. **பண்டித ரமாபாய்**

7. முழு உலகத்திற்கு என் வாழ்க்கையைக் கொடுக்காமல் என் வாழ்வை இழக்கமாட்டேன். டேவிட் பிரெய்னார்டு

8. தேவனின் பெரிதான கிருபையால் 16 வயதிலேயே உலகத்திலிருந்து தேவனுக்காகப் பிரித்தெடுக்கப்பட்டதையே நான் மிகப் பெரும் சொத்தாகக் கருதுகிறேன். பெஷா என்கிற சீர்திருத்தவாதி தமது உயிலில் எழுதியது.

9. ஓர் இடத்தில் ஊழியம் செய்ய வசதி வாய்ப்பு இருக்கிறது என்று தெரிந்து கொண்டு வருபவர்கள் எனக்கு தேவையில்லை. வசதி வாய்ப்பே இல்லாத இடங்களுக்கு வருகிறவர்கள்தான் எனக்குத் தேவை. டேவிட் லிவிங்ஸ்டன்

2. அழகு

10. அழகு என்பது வலிமையானதாகும். ஒரு சிறிய புன்னகை அதனுடைய பட்டயமாகும். சார்லஸ் ரேடே

11. அழகு என்பது நற்குணத்திலே தேவன் வைத்த ஒரு அடையாளமாகும். ரால்ப் வால்டோ எமெர்சன்

12. அழகு என்பது பெண்களின் ஞானமாகும். ஞானம் என்பது ஆண்களின் அழகாகும். பெயர் அறியப்படாதவர்

13. அழகு என்பது முகத்தில் இல்லை. அது இருதயத்தில் இருக்கிற ஒரு வெளிச்சம். காகில் கிப்ரன்

14. இனிமைப் பண்பு இல்லாத அழகு இரை இல்லாத தூண்டில். ரால்ப் உல்டோ எமெர்சன்

15. அழகற்ற மனதைவிட அழகற்ற முகமே சிறந்தது. ஜேம்ஸ் எல்லிஸ்

16. அழகு என்பது தேவன் ஒருவருக்குக் கொடுத்த பரிசு. அரிஸ்டாட்டில்

3. அறிவு

17. அறிவு மிக அதிகமாக கற்றுக்கொண்டிருக்கிறது என்று

கர்வமாயிருக்கிறது. ஞானம் ஒன்றும் தெரியவில்லையென்று தாழ்மையாயிருக்கிறது. **வில்லியம் கௌபர்**

18. தான் என்கிற வீண் பெருமையுடனும் திருப்தியுடனும் மாபெரும் ஞானக் களஞ்சியமாகத் திகழும் ஒருவனைவிட நான் அறிந்தது மிகவும் அற்பம் என்று தன்னைத் தாழ்த்தும் பெலவீனனே சிறந்தவன். **தாமஸ் அ. கெம்பிஸ்**

19. பேரறிவு, பெரும் பணிகளைத் துவக்குகிறது. உழைப்பு தான் அவற்றை முழுமையாக்குகிறது. **ஜோபர்ட்**

20. மனிதனுடைய முயற்சியினால் பாடுபட்டு சம்பாதிக்கும் அறிவைவிட பரத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் மேலான தெய்வீக ஞானம் எத்தனையோ மடங்கு உன்னதமானது. **தாமஸ் அ. கெம்பிஸ்**

21. நீங்கள் அறியவேண்டியவற்றை அறிந்து கொள்ளாமலிருக் கிறீர்கள் என்பதை அறிந்து கொள்வது, அறிவுப் பாதையில் நீங்கள் எடுத்து வைக்கும் மிகப் பெரிய காலடியாகும். **பெஞ்சமின் திஸ்ரேலி**

22. தான் செய்ய விரும்பும் பணியைச் செய்வதற்கும் பொருத்தமானவர்களைத் தேர்ந்தெடுக்கும் அறிவும், அவர்கள் அப்பணியைச் செய்யும்போது குறுக்கிடாமல் விலகி நிற்கக்கூடிய சுயக் கட்டுப்பாடும் உள்ளவனே சிறந்த நிர்வாகியாவான். **தியோடர் ரூஸ்வெல்ட்**

23. அறிவுக்கு எதிராகப் போராடுவதைவிட விசுவாசத்திற்கு எதிராகப் போராடுவது எப்பொழுதுமே மிக கடுமையானதாகும். **பெயர் அறியப்படாதவர்**

4. அறிவுரை

24. நல்ல அறிவுரையைக் காட்டிலும் விலையுயர்ந்த வெகுமதி வேறெதுவுமில்லை. **டிசைடேரியஸ் ரொஸ்மஸ்**

5. அன்பு

25. அன்பு செலுத்துவதற்கு நம்மைத் தவிர வேறு யாரும் இல்லையென்பதுபோல நம் ஒவ்வொருவரும் மீதும் இறைவன் அன்பு செலுத்துகிறார். **புனித அகஸ்டின்**

26. எல்லையற்ற உமது (தேவ) அன்பு என் உள்ளத்தில் குடி கொள்வதைவிட, எனக்கென்று இவ்வுலகில் எதையுமே விரும்பவில்லை. **சார்லஸ் வெஸ்லி**

27. அன்பு என்பது நீ உணர்கிற ஏதோவொன்று மட்டுமல்ல, நீ செய்கிற ஏதோவொன்றாயிருக்கிறது. **டேவிட் வில்கர்சன்**

28. உலகத்துக்கு அன்பு மடலை அனுப்புகிற தேவனின் கரத்தில் நான் ஒரு சிறிய பென்சிலாயிருக்கிறேன். **அன்னை தெரேசா**

29. உங்களுடைய அனுதின வாழ்வில், ஏற்ற, இறக்கங்களுக்கு மத்தியில், நித்திய நித்தியமாய் நிலைத்திருக்கும் மாறாத மகத்துவம், தேவன் உங்கள் பேரில் வைத்திருக்கும் அன்பே ஆகும். **நீல் T. ஆண்டர்சன்**

30. எங்கே அன்பு இருக்கிறதோ அங்கே வாழ்வு இருக்கிறது. **எம். கே. காந்தி**

31. முதலில் நேசிக்கப்பட்டு, பின்னர் நேசிக்கப்படாமலே போய்விடுவது நேசிக்கப்படாமலேயேயிருப்பதைக் காட்டிலும் சிறந்தது. **ஆல்ப்ரெல் டென்னிசன்**

32. அன்பு விலைபோகாது. அன்புக்கு விலையில்லை. **புனித ஜெரோம்**

33. யாரோ ஒருவரால் நீ நேசிக்கப்படுவது, ஆழமாக உனக்குப் பெலனைக் கொடுக்கிறது. நீ யாரோ ஒருவரை ஆழமாக நேசிப்பது உனக்கு தைரியத்தைக் கொடுக்கிறது. **லாவோ ட்சு**

34. அன்பில்லாத வாழ்வு என்பது கனி கொடுக்காத ஒரு மரம் போன்றது. **காலில் கிப்ரன்**

35. யாரோ ஒருவரை நோக்கிப் புன்னகைக்கும் ஒவ்வொரு நேரமும், அது அன்பின் செயலாயிருக்கிறது, அது அவருக்குக் கொடுக்கும் பரிசாயிருக்கிறது. அது ஓர் அழகான காரியமாயிருக்கிறது.

அன்னை தெரேசா

36. நாம் ஒவ்வொரு நாளும் மற்றவர்களிடம் வைக்கும் ஐக்கியம் அதனால் வெளிப்படும் அன்பு ஆகியவையினாலே தேவன் மீது நாம் காட்டும் அன்பு அளவிடப்படுகிறது. **ஆன்ட்ரு முர்ரே**

37. ஒரு நல்ல ஆசிரியர் கற்பிக்கும் அன்பைக் கொண்டிருக்கிறார். ஒரு உயர்வான ஆசிரியர் கற்கும் அன்பைக் கொண்டிருக்கிறார்.

டாட் விடேக்கர்

38. இந்த உலகில் நம் கண் முன்னால் காணும் ஒவ்வொருவரையும் நேசிக்க இயலவில்லை என்றால் கண்ணுக்குத் தென்படாத கடவுளிடம் எவ்வாறு அன்பு கூற முடியும். **அன்னை தெரேசா**

39. அன்பே மனித வாழ்வின் அணிகலன். அது எங்கு காணப்பட்டாலும் மனதைக் கவரும். **ஜான் ஓவன்**

40. நாம் எவ்வளவு செய்கிறோம் என்பதைத் தேவன் பார்க்கிறதில்லை, ஆனால் எவ்வளவு அன்புடன் அதைச் செய்கிறோம் என்பதை பார்க்கிறார். **அன்னை தெரேசா**

41. இந்த உலக வாழ்க்கையில், நாம் பெரிய காரியங்களைச் செய்ய இயலாது. உயர்ந்த அன்புடன் சிறிய காரியங்களை மட்டும் செய்ய இயலும். **அன்னை தெரேசா**

42. நீ பேசும் வார்த்தை எல்லோருக்கும் புரியும். ஆனால் நீ பேசாத மௌனம் உன்னை நேசிப்பவர்களுக்கு மட்டுமே புரியும்.

பெயர் அறியப்படாதவர்

43. உலகில் பேசிக்கொள்ள ஆயிரம் மொழிகள் இருந்தாலும், நாம் பேசிக்கொள்ள அன்பு மொழி போதும்.

பெயர் அறியப்படாதவர்

மெய்யாகவே முடிவற்றதாயிருக்கிறது, எல்லையற்றதா யிருக்கிறது. **அன்னை தெரேசா**

63. வாழ்க்கையில் மிகப் பெரும் மகிழ்ச்சி, நேசிப்பதும் நேசிக்கப்படுவதும்தான். **சிட்னி ஸ்மித்**

64. விசுவாசத்தின் கனி அன்பு. அன்பின் கனி சேவை. **அன்னை தெரேசா**

65. இசைக்கு மொழியில்லை என்பதைப் போல அன்புக்கும் மொழி தேவையில்லை! **அன்னை தெரேசா**

66. பிரதி பலன் கருதி அன்பு காட்டுவதைவிட, காட்டாமல் இருப்பதே மேல்! **செனகல்**

67. அன்பான செயல் மருந்து மட்டுமல்ல, நல்ல வாழ்த்தும் கூட! **கதே**

68. அறிவு மௌனத்தைக் கற்றுத்தரும். அன்பு பேசக் கற்றுத்தரும். **ரிக்டர்**

69. கடவுள் உலக மக்களுக்கு எழுதுகிற அன்புக் கடிதங்களில் நானும் ஓரிரு வரிகளை எழுதியிருக்கிறேன். இதுவே என் வாழ்நாள் சாதனை! **அன்னை தெரேசா**

70. மூச்சு நின்றால் மட்டும் மரணமில்லை. சில அன்பான இருதயங்களின் பேச்சு நின்றால்கூட மரணம்தான். **பெயர் அறியப்படாதவர்**

71. ஒருவர் மீது அதிக அன்பு கூறுவது என்பது மிக சுலபம். ஆனால் அந்த அன்பிலே நிலைத்து இருப்பது என்பது மிகச் சிறப்பு வாய்ந்தது. **பெயர் அறியப்படாதவர்**

72. வயிற்றுப் பசியைப் போக்குவதைவிட அன்பின் பசியை போக்குவது மிக மிக கடினம். **அன்னை தெரேசா**

73. யார் வேண்டுமானால் அன்பைக் குறித்துப் பேசலாம், கொடுங்கோலர்கூட அந்த வார்த்தையைப் பயன்படுத்தலாம்.

அன்பு என்பது வெறுமனே நீ என்ன சொல்கிறாய் என்பதல்ல, நீ என்ன செய்கிறாய் என்பதுதான். **பெயர் அறியப்படாதவர்**

74. மிக அதிகமாக அன்பு கூறுகிறவர்கள்தான், மிக அதிகமாக சேவை செய்யவேண்டும். **பெயர் அறியப்படாதவர்**

75. உன்னை அதிகமாக நேசிக்கிற ஒருவன்தான் உன்னைக் குறித்து அதிகப்படியான உண்மையை உன்னிடம் சொல்லுவான். **ராபர்ட் முர்ரே**

76. அன்பில்லாத உண்மை வேடத்தனம். உண்மையில்லாத அன்பு மாய்மாலம். **வாரன் வியர்ஸ்பி**

6. அனுபவம்

77. அனுபவம் என்பது ஒருவனுக்கு என்ன நேரிடுகிறது என்பதல்ல, அவனுக்கு அது நேரிடுகிறதினால் அதற்கு அவன் என்ன செய்கிறான் என்பதுதான். **அல்டூயஸ் ஹுக்ஸ்லி**

78. அறிவின் ஒரே மூலம்தனம் "அனுபவம்." **ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**

79. "அனுபவம்" என்பவர் மிகக் கடுமையான ஆசிரியர். ஏனெனில் முதலில் பரீட்சை எழுதச் சொல்லிவிட்டு, பிறகு பாடத்தைக் கற்றுக் கொடுக்கிறார். **வெர்னன் சான்டெர்ஸ் லா**

80. என்ன செய்வது என்பதை அனுபவம் உனக்கு கூறுகிறது. அதை செய்வற்கு தன்னம்பிக்கை உன்னை அனுமதிக்கிறது. **ஸ்டேன் ஸ்மித்**

7. ஆசீர்வாதம்

81. ஆவியின் ஆசீர்வாதம் இரட்சிப்பாகும். ஆத்துமாவின் ஆசீர்வாதம் பரிசுத்தமாகும். **பெயர் அறியப்படாதவர்**

82. சாத்தானால் சேதமுறாமல் விட்டுவிடப்படுவது ஆசீர்வாதத்திற்கு அடையாளம் அல்ல. **சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்**

83. தாமதமாகக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள், இரட்டிப்பாகக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள். **பெயர் அறியப்படாதவர்**

84. ஓர் ஆசீர்வாதத்தை நாம் இழக்கும்போது அதற்கு பதிலாக உடனே மிக எதிர்பாராத விதத்தில் வேறோர் ஆசீர்வாதம் கொடுக்கப்படுகிறதது. **சி.எஸ். லூயிஸ்**

85. நம்மை சந்தோஷப்படுத்துவதற்கு தேவன் நம்மை ஆசீர்வதிக்கவில்லை. நாம் பிறருக்கு ஆசீர்வாதமாக இருப்பதற்குத்தான் நம்மை ஆசீர்வதிக்கிறார். **வாரன் வியர்ஸ்பி**

86. உங்கள் வாழ்க்கையில் சில மக்கள் ஆசீர்வாதமாக இருக்கிறார்கள். உங்கள் வாழ்க்கையில் சில மக்கள் பாடம் கற்றுக் கொடுப்பவர்களாக இருக்கிறார்கள். **பெயர் அறியப்படாதவர்**

87. உலகத்தில் மிகப் பெரிய ஆசீர்வாதம் என்பது ஆசீர்வாதமாக இருப்பதுதான். **ஜாக் ஹைல்ஸ்**

88. நம்மை ஜெபிக்க வைக்கிறது எதுவே, அதுதான் ஆசீர்வாதம். **சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்**

8. ஆத்துமா

89. பெரிதும் துன்பமனுபவிக்கும் ஆத்துமா ஆண்டவரால் தெரிந்தெடுக்கப்பட்ட ஆத்துமாவாகும். **பெயர் அறியப்படாதவர்**

90. எவ்விடத்தில் எவ்விதம் வாழ்ந்தேன் என்பதைப் பற்றி எனக்கு அக்கறையில்லை, என்னென்ன உபத்திரவங்களைக் கடந்து போனேன் என்பதைப் பற்றியும் எனக்குக் கவலையில்லை. ஆனால் கிறிஸ்தவுக்கென்று ஆத்துமாக்களை ஆதாயப் படுத்தினேன் என்பதே பிரதானம். இதுவே என் வாழ்க்கையின் குறிக்கோளும் நோக்கமுமாகும். **டேவிட் பிரெய்னார்ட்**

91. சந்தோஷம் என்பது ஆத்துமாக்களைப் பிடிக்கிற ஓர் அன்பின் வலையாயிருக்கிறது. **அன்னை தெரேசா**

92. தேவனே, எனக்கு ஆத்துமாக்களை கொடும் அல்லது என் உயிரை எடுத்துக்கொள்ளும். **ஜார்ஜ் ஒயிட்ஃபீல்டு**

93. அண்ட சராசரங்களைப் படைத்த இறைவனைப் பார்க்கும் அருள் பெற்ற ஆன்மாவுக்கு மற்றெல்லாப் படைப்புக்களும் ஒருதுரும்பே.
பெண்டிக்ட்

94. மரிக்கும் வரை நமக்கு இன்பம் ஆத்தும ஆதாயமே.
சின்செண்டார்ப்

95. கிறிஸ்துவிடம் நெருங்கி வரும்போதெல்லாம் ஆண்டவரை அறியாத மக்கள் குறித்த வாஞ்சையே என்னை ஆட்கொள்ளுகிறது.
ஜேம்ஸ் சால்மர்ஸ்

96. சிலரது ஆவல் பொன்; இன்னும் சிலரது ஆவல் புகழ்; எனது ஆவலோ ஆன்மாக்களே!
வில்லியம் பூத்

97. நரகத்தின் காட்சியை ஒரு நொடி பார்த்துவிட்டால், நாம் மக்களது மீட்பிற்காய் அங்கலாய்ப்பதை யாரும் தடுக்க முடியாது.
வில்லியம் பூத்

98. நான் என் ஆத்துமாவை இழந்துப்போவதைப் பார்க்கிலும் என் முகத்தில் இருந்து இந்தக் கண்கள் எடுக்கப்பட்டுக் குருடனாகச் சவச்குழிக்குப் போவதையே ஆயிரம் தரம் தெரிந்து கொள்வேன்.
டி.எல். மூடி

99. ஆண்டவரே, எங்களுக்கு ஆன்மாக்களைத் தாரும், மற்ற அனைத்தையும் எடுத்துக் கொள்ளும். **புனித தொன்போஸ்கோ**

100. என் அருகிலுள்ள ஆத்துமாக்கள் துன்பப்படுவதை நான் அறியாமலிருப்பேனானால், கல்வாரி அன்பைக் குறித்து நான் ஒன்றும் அறியவில்லை.
ஏமி கார்மிக்கேல்

101. சிலரே போதகர்களாக ஊழியம் செய்யும்படி அழைக்கப் படுகிறார்கள், ஆனால் ஆத்தும ஆதாயம் செய்ய ஒவ்வொரு கிறிஸ்தவனும் அழைக்கப்படுகிறான்.
பில்லி சன்டே

102. ஆத்துமாக்களைப் பற்றி தரிசனம் எங்கே உண்டோ, அங்கே அறுவடைக்கான எல்லா விதமான உதவியும் உண்டு.
பெயர் அறியப்படாதவர்

103. கண்களில் கண்ணீர் மழை பொழியாதவரை ஆன்மாவில் வானவில் தோன்றாது. **ஜான் வான்ஸ்**

104. பூமியில் உங்களுக்கு ஒரே ஒரு தொழில்தான் இருக்கிறது. அது ஆத்தும ஆதாயம் செய்வதே. **ஜான் வெஸ்லி**

105. தேவனை அறியாத ஒரு மக்கள் கூட்டம் இப்பூமியில் இருக்கிறது என்று நான் அறிவேனானால் என்னால் ஒருபோதும் இளைப்பாற முடியாது. **புனித பிரான்சிஸ் சேவியர்**

106. மெல்ல எரிந்து ஒன்றையும் உருகச் செய்யாமலிருப்பதைவிட, வேகமாக எரிந்த ஏராளமான ஆத்துமாக்களை உருகச் செய்துவிடுவது எவ்வளவோ மேல். **சாது சுந்ததர் சிங்**

107. ஆன்மாக்களுக்காகப் பற்றி எரியும் வைராக்கியத்தை எனக்குத் தாரும். **அலெக்ஸாண்டர் மெக்கே**

108. கிறிஸ்தவர்களில் இரு சாராரே உண்டு. ஒன்று ஆத்துமா ஆதாயகர். மற்றொன்று பின்மாற்றக்காரர். **ஆன்ட்ரூ முர்ரே**

109. உலகிலே அதிகக் கடினமான பணிக்களத்தை எனக்குத் தாரும். அங்கு உமக்கென்று ஊழியம் செய்வேன். **இராபர்ட் மாரீஸன்**

110. ஆண்டவரே, ஸ்காட்லாந்தை எனக்குத் தாரும். இல்லையேல், நான் மரிக்கிறேன். **ஜான் நாக்ஸ்**

111. என்னுடைய எல்லாவிதத் துன்பங்களிலும், ஆத்துமாக் களுக்கான கடும் உழைப்புக்களிலும், என்னுடைய ஆறுதல், நம்பிக்கை, ஊக்கம் அனைத்தும் கிறிஸ்துவின் சிலுவையே அன்றி வேறல்ல. எனக்காக கிறிஸ்து பரலோகத்தை விட்டு இறங்கி சிலுவை பாரத்தைச் சுமந்தார். ஆகையால் நான் கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவதில் பாடுபடுவது ஒரு பெரிய காரியம் அல்ல. **சாது சுந்தர் சிங்**

112. தேவனுடைய பார்வையில் உலகத்தின் செல்வங்களை எல்லாம் கொட்டிக்கொடுத்தாலும் அவை ஓர் ஆத்துமாவின் விலைக்கு ஈடாகாது. **போதகர் சுந்தரம்**

9. இரட்சிப்பு

113. இரட்சிப்பு, தேவனுக்காக மனிதனுடைய வேலையல்ல, மனிதனுக்காக தேவனுடைய வேலை. **லூயிஸ் ஸ்பெரி சேபர்**

114. இரட்சிப்பு இலவசம்தான் . . . ஆனால் பிறரை சீஷராக்குதல், உன் வாழ்க்கையை இரட்சிப்புக்கு விலை கொடுப்பதேயாகும்.
டையட்ரிச் போஹறன் ஹோபர்

115. இயேசு கிறிஸ்துவாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை என்பது என் நம்பிக்கையாகும்போது அதனை அறிவிக்க எந்தத் தியாகமும் செய்ய நான் தயார். **சி.டி.ஸ்டட்**

116. ஒவ்வொரு தலைமுறைக்கும் மறுபிறப்பு அவசியமாயிருக்கிறது.
சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்

117. கிரியையினாலல்ல, விசுவாசத்தினாலேயே இரட்சிப்பு உண்டாகும். அந்த இரட்சிப்பே நற்கிரியைக்கு வழிவகுக்கும்.
ஜான் கால்வின்

10. இரண்டாம் வருகை

118. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் காலம் எப்பொழுது என்று வெளிப்படுத்தப்படாத காரணத்தால், எல்லா நாளும் அவர் வருகையை எதிர்நோக்கி வாழும் எதிர்பார்ப்பின் நாளாகவே இருக்கட்டும். **புனித அகஸ்டின்**

119. நாம் இரண்டாம் வருகையைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால், பாதி உலகத்திற்கு இன்னும் முதல் வருகையைப் பற்றிக் கூடத் தெரியவில்லையே!
ஆஸ்வால்ட் ஜே. ஸ்மித்

120. இயேசு கிறிஸ்து திரும்பி வருகிறார் என்ற செய்தி நாம் வானம் பார்த்து நட்சத்திரங்களை எண்ணுவதற்கு அல்ல, அது நம்மைப் பரிசுத்த ஆவியின் வல்லமையோடு தீவிரமாய்ச் செயல்படச் செய்வதற்குத்தான். **சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்**

121. இயேசு கிறிஸ்து ராஜாதி ராஜாவாய் வரும் அந்த நாளுக்காய் ஆவலாயும் ஆர்வமாயும் காத்திருப்பது உண்மை விசுவாசியின் இயல்பு. **ஜான் ட்ராப்**

122. தேவனை நேசிப்பவர்கள் அவர் வருகைக்காக சலிப்பின்றிக் காத்திருக்க தீர்மானித்தவர்கள். அதுவே அவர்களது ஊக்கமான அன்புக்கும், உத்தம நம்பிக்கைக்கும் உறுதிமிக்க எதிர்பார்ப்பிற்கும் அடையாளம். **புனித அகஸ்டின்**

123. இயேசு கிறிஸ்து நேற்றுதான் இறந்தது போலவும், இன்று உயிர்ந்தெழுந்தது போலவும் நாளை மறுபடியும் வருகிறார் போலவும் நான் வாழ்கிறேன். **மார்டின் லூத்தர்**

124. கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தமாவதற்குச் சிறந்த வழி, கிறிஸ்துவின் பிரசன்னத்தை எப்பொழுதும் மறவாமலிப்பதாகும். **லூசியஸ் அன்னயஸ் செனேகா**

11. இரத்தசாட்சிகள்

125. இரத்தசாட்சிகள் தூண்களில் கட்டப்பட்டனர். சிறையில் அடைக்கப்பட்டனர். சாட்டையடிபட்டனர். ஈட்டிகளால் குத்தப்பட்டனர். சுட்டெரிக்கப்பட்டனர். தலைவெட்டப்பட்டனர். இப்படி இருந்தும் கிறிஸ்தவர்கள் பலுகிப்பெருகினர். **புனித அகஸ்டின்**

126. நாங்கள் இந்த நெருப்பில் எங்கள் ஜீவனை முடித்துக் கொள்ளப் போகவில்லை. ஆனால் மேன்மையான வாழ்வுக்கு எங்களை மாற்றிக் கொள்கிறோம். **இரத்தசாட்சி ஜீலியஸ் பால்மெர்**

127. உம்முடைய (மன்னர்) விருப்பத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று, தேவனுடைய சித்தத்தை நான் அசட்டை செய்வேனானால் அதனால் எனக்கும் பயனில்லை, உமக்கும் பயனில்லை. அவருடைய பயங்கரமான நியாயத்தீர்ப்பு நாளிலே நானும் நீங்களும் நியாயந்தீர்க்கப்படுவோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். **இரத்தசாட்சி தாமஸ்**

128. எனக்குப் பிள்ளைகள் இருக்குமானால் எந்தத் தயக்கமுமின்றி அவர்களை சுட்டெரிக்க ஒப்புவிப்பேனே தவிர, தேவனுடைய வார்த்தையைச் சுட்டெரிக்க நான் ஒப்புவிக்கவேமாட்டேன்.
தீமோத்தேயு

129. என்னைத் துண்டு துண்டாக வெட்டிப் போடுங்கள். என் ஆத்துமாவையும் உங்களால் கூடுமானால் பிளந்து பாருங்கள். அப்படி நீங்கள் எனக்குச் செய்தாலும் என் வாயிலிருந்து நீங்கள் எதிர்பார்க்கும் இயேசுவை மறுதலிக்கும் வார்த்தைகள் வரவே வராது. **இரத்தசாட்சி மைக்கேல் நாகஷிமா**

130. கிறிஸ்துவுக்காக மரணத்தைச் சந்திக்கவும் ஆயத்தமாக இருக்கும் எனக்கு, என் கால்களை வெட்டி எறிந்தாலும் அது எனக்கு ஒரு பொருட்டல்ல. **இரத்தசாட்சி விக்டர்**

131. நான் ஒரு கிறிஸ்தவன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் மரணத்தைச் சந்திக்கவே விரும்புகிறேன். அதுதான் என்னுடைய தைரியம். **இரத்தசாட்சி யூப்பிலியஸ்**

132. என் அன்பின் இயேசு, என் இரட்சகர் என் இருதயத்தில் ஆழமாக பதித்தெழுதப்பட்டிருக்கிறார். ஆகவே என் இருதயம் துண்டு துண்டாக வெட்டப்பட்டாலும் இயேசுவின் பெயர் ஒவ்வொரு துண்டிலும் இருக்கும் என்று நான் நிச்சயித்திருக்கிறேன்.
இரத்தசாட்சி இங்னேசியஸ்

133. கர்த்தர் எனக்கு ஜீவனைத்தந்து என் ஆயுள் நாளைக் கூட்டித் தருவாரென்றால் இந்த நாட்டில் ஏர் ஓட்டுகிற சிறுவன்கூட வேதத்தை எளிதில் அறிந்து கொள்கிற அளவுக்கு தாய்மொழியில் மொழி பெயர்த்து மக்களில் தேவ அறிவை உருவாக்கி உயர்த்த முடியும். இந்த மேலான நோக்கத்திற்காக நான் போப்பாண்டவரையும் அவரது சட்டதிட்டங்களையும் மீறுவதில் தவறில்லை என்றே கருதுகிறேன்.
இரத்தசாட்சி வில்லியம் டிண்டேல்

134. என் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து என்னிமித்தமாக என்னைவிடக் கடினமான சங்கிலியால் கட்டப்பட்டார். இந்த

துருப்பிடித்த சங்கிலியால் கட்டப்படுவதற்கு நான் வெட்கப்படவில்லை. **இரத்தசாட்சி ஜான்ஹஸ்**

135. மரணம் மட்டும் ஒருவரை இரத்த சாட்சி என்று அறிவிப்பதில்லை. அவர் எதற்காக மரித்தார் என்பதிலிருந்து தான் அறிவிக்கப்படுகிறது. **நெப்போலியன்**

136. எனக்கு இரண்டு தலைகள் இருந்தால் கிறிஸ்துவுக்காக அவை இரண்டுமே வெட்டப்பட வேண்டுமானாலும் நான் விட்டுவிடுவேன். **ஹென்றி வாஸ்**

137. இயேசுவுக்காக இரத்தத்தைச் சிந்தியவர்கள் மாத்திரமல்ல, (ஆனால்) இயேசுவுக்கு விடாமுயற்சியுடன் சேவை செய்பவர்களும் இரத்த சாட்சிகளே. **புனித ஜெரோம்**

138. எனது இரத்தத்தால் உனது வாளை நீ கறைப்படுத்தலாம். ஆனால் கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட என் உடலை கறைப்படுத்த யாராலும் முடியாது. **புனித அக்னேஸ்**

139. இரத்த சாட்சியின் இரத்தம் திருச்சபையின் வித்து. **தெர்த்துல்லியன்**

140. இரத்த சாட்சிகளின் பாடுகளும் இறப்பும் பலவிதம். இவற்றின் இடையே அவர்கள் எல்லாரும் தம் விசுவாசத்தைக் காத்தார்கள். அதுவே நமக்குப் பாடம். **புனித வின்சென்ட்**

141. விசுவாசிகளும் சரி, வேத சாட்சிகளும் சரி, இவர்களெல்லோரும் கிறிஸ்துவின் மாசற்ற இரத்தத்தால் விலை கொடுத்து வாங்கப்பட்டவர்கள். இரத்த சாட்சிகளோ தங்கள் பங்கிற்குத் தங்களின் வீர விசுவாசத்தைக் காட்டிவிட்டார்கள். எப்படி? அவர்கள் சிந்திய இரத்தமே சாட்சி. **புனித அகுஸ்தீன்**

142. சாப்பிட விரும்புவதுபோல் இரத்தசாட்சிகளைச் சாக விரும்பச் செய்தது தெய்வீகப் பிரசன்னமே! **தாமஸ் புரூக்ஸ்**

143. நான் தொங்க வேண்டிய கயிற்றை முத்தம் செய்ய ஆயத்தம்; ஆனால் ஒருபோதும் எனது விசுவாசத்தை மறுதலிக்கமாட்டேன். **இரத்த சாட்சி தாஹிர் இக்பால்**

144. இயேசுவின்மேல் கொண்ட உன்னதமான நம்பிக்கையின் வீரனாக அவருக்காக மரிக்க நான் தயார். **தேவ சகாயம் பிள்ளை**

145. தன்னால் இழக்க முடியாத ஒன்றைப் பெற்றுக் கொள்ள, தன்னால் வைத்திருக்க முடியாத ஒன்றை இழப்பவன் முட்டாளல்ல. **ஜிம் எலியட்**

12. இலக்கு

146. ஓர் இலக்கை அடைய கோட்பாட்டில் உறுதியாய் இரு, ஆனால் அதை அடைய பல்வேறு வழிமுறையைப் பயன்படுத்துவதில் இணக்கமாயிரு. **சிக் சிக்லர்**

147. உன் இலக்குகளை அடைவதால் நீ என்ன பெறுகிறாய் என்பது அவ்வளவு முக்கியமல்ல. அவையை அடைவதனால் நீ என்னவாய் ஆகிறாய் என்பதுதான் முக்கியம். **சிக் சிக்லர்**

148. உன் இலக்கை அடைய தடங்கல்கள் வரும்போது, அதை அடைய நீ செல்லும் திசையை மாற்று; அதை அடைவதற்கு உன் முடிவை மாற்றாதே. **சிக் சிக்லர்**

149. தங்களின் இலக்கை அடைய தோல்வியடையும் அநேக மக்கள், திறமையின் குறைபாட்டினால் தோல்வியடைவதில்லை, கடமையுணர்ச்சியின் குறைபாடினால்தான் தோல்வியடைகிறார்கள். **சிக் சிக்லர்**

150. ஓர் இலக்கு என்பது ஒரு காலக்கெடு கொண்ட ஒரு கனவு. **நெப்போலியன் ஹில்**

151. வாழ்க்கையில் நோக்கம் இருக்கும்போது நம்பிக்கை பிறக்கிறது. **ரிக் வாரன்**

13. இயேசு கிறிஸ்து

152. இயேசு கிறிஸ்து இறைவனாக இருந்து என்னுடைய பாவங்களுக்காக அவர் மரித்திருந்தால் நான் அவருக்காகச் செய்யும் எந்தத் தியாகமும் பெரிய தியாகமல்ல. **சி.டி. ஸ்டட்**

153. நீ பெற்றிருக்கிற இயேசுதான் எல்லாமே என்று உணராதவரை உனக்குத் தேவையெல்லாம் இயேசுதான் என்று எப்பொழுதும் உணரமாட்டாய். **அன்னை தெரேசா**

154. கிறிஸ்துவை உடையவனாய் இல்லாமல் கிறிஸ்தவனாய் இருப்பதற்கு ஒரு மனிதனுக்கு கூடாத காரியம். அதே நேரத்தில் அவன் கிறி ஸ்துவை உடையவனாய் இருந்தால் கிறிஸ்துவில் உள்ள எல்லா குணங்களையும் பெற்றிருக்கிறான். **மார்டின் லூத்தர்**

155. நான் உலகத்தைப் புரிந்து கொண்டேன். இவ்வுலகில் ஒரு நன்மையுமில்லை. இயேசு ஒருவரே என்னுடைய சமாதானம். **அனிலா**

156. நாம் வெளிப்படுத்திக் காண்பிக்கிற கிறிஸ்து மிகவும் சிறியதாயிருக்கிறார். ஏனெனில் நம்மிலே நாம் மிகவும் பெரியவர்களாக வளர்ந்திருக்கிறோம். **வாட்ச் மேன் நீ**

157. இயேசு கிறிஸ்து "தான் ஒன்றுமில்லை" என்று சொல்கிறவர்களைக் கொண்டு, அவர்களை "யாரோ ஒருவராக" மாற்றுகிறார். **தெரேசா வெஸ்ட்**

158. கடன்பட்டிராத கடனை செலுத்த, கிறிஸ்து உலகத்துக்கு வந்தார் ஏனெனில் நாம் பெற்ற கடனை நாம் செலுத்த முடியாததினால்தான். **பெயர் அறியப்படாதவர்**

159. இயேசுவின் வாழ்க்கை இரண்டு நடக்க முடியாத செயல்களால் அடைப்புக்குறியிடப்பட்டிருக்கிறது. ஒன்று கன்னியின் கருவறை, இரண்டு வெற்றுக் கல்லறை. **பீட்டிர் லார்சன்**

160. ஒரே ஒரு வாழ்க்கை அது சீக்கிரம் கடந்து போய் விடும். கிறிஸ்துவுக்காக நாம் என்ன செய்திருக்கிறோமோ அது நிலைத்திருக்கும். **சி.டி. ஸ்டட்**

161. கெட்டவர்களை நல்லவர்களாக்க இயேசு கிறிஸ்து இந்த உலகத்துக்கு வரவில்லை. இறந்தவர்களுக்கு உயிர் கொடுக்கத்தான் இயேசு கிறிஸ்து இந்த உலகத்துக்கு வந்தார். **லீ ஸ்ட்ராபெல்**

162. மனித வரலாற்றின் மையப்புள்ளி கிறிஸ்துவே.
லெஸ்லி நியூபிகின்

163. கிறிஸ்து மனித குலத்தின் மூலைக்கல். அவரை வரலாற்றிலிருந்து அகற்ற நினைப்பது உலகின் அஸ்திபாரத்தையே ஆட்டம் காணச் செய்வதாகும்.
எர்னஸ்ட் ரெனின்

164. கிறிஸ்து அனுபவித்த சோதனை, நிந்தனை மற்றும் வேதனைகளோடு ஒப்பிடும்போது நாம் சந்திக்கும் வேதனைகள் ஒன்றுமில்லை. **மார்டின் லூத்தர்**

165. இயற்கையாக நாம் எப்படியிருக்கிறோம் என்பதல்ல, நாம் கிறிஸ்துவிலே என்னவாக இருக்கிறோம் என்பதுதான் முக்கியம்.
ரெயினார்டு போங்கே

166. என் வாழ்வில் என்ன நேரிட்டாலும் சிலுவையில் எனக்காகப் பாடுகளைச் சகித்த இயேசு கிறிஸ்துவையே நோக்கிப் பார்ப்பேன். அவரையே அண்டிக் கொள்வேன். ஒரு நாள் இந்தப் பாடுகளுக்கான காரணங்களை அவர் எனக்கு விளக்கிக் காண்பிப்பார் அதுபோதும் எனக்கு. **ஜோனி எரிக்சன்**

167. எனக்கு மட்டும் ஆயிரம் நாவுகள் இருந்தால், அத்தனை நாவுகளையும் கொண்டு என் இயேசுவைப் போற்றுவேன் !
பீட்டர் போலர்

168. தேவை நிறைந்த மனித சமுதாயத்திற்காக இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்குச் செய்த ஊழியமானது, உலக மக்களுக்காக தேவன் கொண்ட பரிபூரண சித்தத்தின் வெளிப்பாடேயாகும்.
T.L. ஆஸ்பார்ன்

169. கிறிஸ்து இல்லாத ஆன்மீகம் எண்ணெய் இல்லாத விளக்கு.
பெயர் அறியப்படாதவர்

170. பாவியையும் பரிசுத்த தேவனையும் இணைக்கும் ஒரே பாலம் கிறிஸ்துவே. **பெயர் அறியப்படாதவர்**

171. (இயேசு) குருவைப்போல் வாழும் வாழ்க்கை நிச்சயமாய் எளிதான ஜீவியம் அல்ல! அது, தண்ணீரின் மீது நடப்பது போன்றதேயாகும். **சந்திப் பூணன்**

172. கிறிஸ்து இல்லாமல் ஓர் அடியும் எடுத்துவைக்க முடியாது. கிறிஸ்து நம்மோடு இருந்தால் உலகத்திற்கு எங்கு வேண்டுமானாலும் செல்லமுடியும். **டேவிட் லிவிங்ஸ்டன்**

173. கிறிஸ்து அவரிடமிருந்து பணத்தை எடுத்துக்கொள்ள அனுமதிக்கிறார். ஆனால் அவருடைய ஆடுகளை எடுத்துக்கொள்ள ஒருபோதும் அனுமதிப்பதில்லை. **பாஸ்க்யூவர் க்யூஸ்நெல்**

174. இயேசு கிறிஸ்துவும் அவருடைய ஐக்கியமும் எனக்குக் கிடைத்திராவிடில், நான் எப்பொழுதோ பைத்தியக் காரனாயிருப்பேன். **ஜான் ஜி. பேட்டன்**

175. கிறிஸ்து இல்லாமல் அமைதியான கடலில் பயணிப்பதைவிட, கிறிஸ்துவோடு கொந்தளிக்கும் கடலில் பயணம் செய்வது சிறந்தது. **பெயர் அறியப்படாதவர்**

176. இயேசு கிறிஸ்துவால் மாற்ற முடியாத பாவியும் இல்லை, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் மன்னிக்க முடியாத பாவமும் இல்லை. **பெயர் அறியப்படாதவர்**

177. கிறிஸ்துவின் பள்ளியில் நாம் கற்கும் முதல் பாடம் தன்னைத்தானே வெறுப்பதுதான். **மேத்யூ ஹென்றி**

178. நான் என் ஆத்தும கண்களால் கிறிஸ்துவின் இரத்தத்தைக் காண்பேனாயின், அதுவே மெய்யான சத்தியம். **இரத்த சாட்சி ஹக் லேட்டிமர்**

179. என்னிடத்தில் எதுவுமில்லை, நான் எதுவுமில்லை. கிறிஸ்துவின் புகழ்ச்சியைத் தவிர வேறு எதையும் காண்பதில்லை. இவ்வுலகில் அவருடைய விருப்பமேயன்றி வேறு விருப்பங்கள் எதுவுமில்லை. **ஜான் கால்வின்**

80. கிறிஸ்துவுக்காக என்ன செய்கிறோம் என்பதைவிட கிறிஸ்துவோடு இணைந்து என்ன செய்கிறோம் என்பதைக் குறித்துதான் கிறிஸ்து அதிக அக்கறை கொண்டவராயிருக்கிறார். **வாரன் வியர்ஸ்பி**

81. கிறிஸ்துவுக்கு வெளியே நான் வெறுமையாயிருக்கிறேன். கிறிஸ்துவுக்குள்ளே நான் நிறைவாயிருக்கிறேன். **வாட்ச்மேன் நீ**

82. சாத்தான் நம்மைப் பிரிக்கிறதினால் ஜெயம் கொள்கிறான். கிறிஸ்து நம்மை இணைக்கிறதினால் ஜெயம் கொள்கிறார். **பெயர் அறியப்படாதவர்**

83. கிறிஸ்து நமது இருதயத்தின் விருப்பங்களை நிறைவேற்று கிறவராய் இருக்கிறார். அது நாம் விரும்பிய தனிப்பட்ட நேரத்திலல்ல, சிறந்த நேரத்தில்தான். **ராபர்ட் முர்ரே மேக்செனி**

84. என் இரட்சகரைப் பற்றி பேச எனக்கு ஒரு நாவு போதாது. **ரிங்கள் தௌபே**

85. இந்த உலகில் வாழ்கிறபோது, கிறிஸ்துவைப் போலாகுதல் ஒன்றே ஒருவரது தகுதிவாய்ந்த விருப்பமாயிருக்கிறது. இந்தக் குறிக்கோளுக்கு முன்னர் அவரது மற்ற விருப்பங்கள் யாவும் மதியீனமே. **ஹென்றி டிரமண்ட்**

86. நாம் கிறிஸ்துவை நமக்குள் எவ்வளவு அனுமதிக்கிறோமோ அவ்வளவு தான் கிறிஸ்துவுக்குள் நாம் பிரவேசிக்க முடியும். **பி. ரோஜர்ஸ்**

87. நான் மோட்சத்திற்குச் சென்றவுடன் என் முதற்பார்வை என் இரட்சகரின் முகத்தையே பார்க்கும். **ஃபேன்னி கிராஸ்பி, பார்வையற்ற பாடலாசிரியர்**

88. இயேசுவின் துன்பத்தில் பங்கு கொண்டால்தான் அவரது இன்பத்தில் பங்கு கொள்ள முடியும். **சார்லஸ் தெஃ பூக்கோ**

89. கிறிஸ்து என் ஜீவனாயிருக்கையில் அவரில்லாமல் நான் எப்படி ஜீவிக்க முடியும். **சகோ. பக்த்சிங்**

190. இயேசு கிறிஸ்துவுக்குள் மட்டுமே பாவியான மனிதன் நீதிமானாக்கப்படுகிறான். **ஜான் விக்ளிப்**

191. இயேசுவால் எல்லாம் கூடும். இந்த விசுவாசமே வெற்றியைச் சுமந்து வரும். **பெயர் அறியப்படாதவர்**

192. மனு மைந்தர்களை இறைமைந்தர்களாக மாற்றுவதற்காக இறைமைந்தன் மனு மைந்தனானார். **பெயர் அறியப்படாதவர்**

193. கிறிஸ்து மரிக்கும் வேளையை, காலம் நிர்ணயிக்கவில்லை; தான் மரிக்கும் வேளையை கிறிஸ்துவே நிர்ணயித்தார். **புனித அகஸ்டின்**

194. கிறிஸ்து நற்செய்தியைப் பிரசங்கிக்க வரவில்லை. தன்னுடைய வரவால் ஒரு நற்செய்தி பிரசங்கிக்கப்படவே வந்தார். **அறிவர் டேல்**

195. இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம், ஓர் இரத்தச் சாட்சியின் மரணமாக அல்ல. அவர் சிலுவையில் வெற்றி சிறந்தார். பாதாளத்தின் அஸ்திபாரங்கள் அதிர்ந்தன. ஒவ்வொரு மனிதனும் இயேசு கிறிஸ்துவோடு ஐக்கியப்படுத்துவதற்கான வழியை உண்டாக்கினார். **ஆஸ்வால்ட் சேம்பர்ஸ்**

196. இயேசு கிறிஸ்து சிலுவையில் உயிர்நீத்த நிகழ்ச்சியைக் கண்ட எந்த மனுஷனும், பொம்மை விற்கச் செல்லமாட்டான். சிறு குழந்தை கையில் பிடித்திருக்கும் மெல்லிய ஊது குழலின் மூலமாக சவுக்காரம் கரைத்த நீரைக்கொண்டு அழகிய குமிழ்களை ஊதுகிறது. இப்படிப்பட்ட விளையாட்டுகளை நாம் மறப்பதற்குச் சிலுவை ஒன்றே காரணமாகச் செயல்புரியும். **சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்**

197. இயேசு கிறிஸ்து பாடுபட்டு மரணத்தை தழுவியது மனிதர்களாகிய நாம் பாடுகளின்றி வாழவேண்டும் என்பதற்காக அல்ல. அவரைப் போல நாமும் பாடுகளை எதிர்கொள்ள வேண்டும் என்பதற்காகவே. **ஜார்ஜ் மேக் டொனால்ட்**

198. கிறிஸ்துவின் கன்னிகைப் பிறப்பை மறுதலிப்பது கிறிஸ்துவின் மீட்புத் திட்டத்தையே செயலிழக்கச் செய்வதாகும். **ஐ. எம். ஹால்டுமேன்**

199. ஒரு சிறிய கைப்பிரதி தாவீதின் கரத்திலிருந்த கவண் கல்லிற்கு ஒப்பாகும். கிறிஸ்துவின் கரங்களில் அக்கைப் பிரதி இராட்சத ஆத்துமாவை வீழ்த்திவிடும். **இராபர்ட் முர்ரே மேக்செய்னி**

200. இந்த முழு உலகத்தை ஆட்சி செய்வதைப் பார்க்கிலும் கிறிஸ்துவுக்காக மரிக்கவே நான் விரும்புகிறேன். **புனித இக்னேசியஸ்**

201. கிறிஸ்து எல்லாருக்காவும் மரிக்கவில்லை, ஒவ்வொருக்காகவும் மரித்திருக்கிறார். **பில்லி கிரஹாம்**

202. என் அன்புள்ள மீட்பராகிய, இயேசு கிறிஸ்துவை நான் கண்டுபிடித்ததே மாபெரும் கண்டுபிடிப்பு. **ஜேம்ஸ் யங் சிம்சன்,** குளோரே பாஃர்ம் மயக்க மருந்தைக் கண்டுபிடித்தவர்

203. இயேசுவிடம் நீங்கள் கூட நெருங்கும்போது, உங்களை உயர்த்த வேண்டிய அவசியம் குறைந்துவிடும். **ரிக் வாரன்**

204. இயேசு கிறிஸ்துவின் இராஜ்யத்தை விரிவடையச் செய்வதே என்னுடைய முதன்மையான பணி. **வில்லியம் கேரி**

205. என்னுடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்காக நான் பாடு அனுபவிப்பது ஒரு மாபெரும் மகிழ்ச்சி. **சாது சுந்தர் சிங்**

206. உலகத்திற்கு மரிக்க இப்பொழுதே கற்றுக்கொள், அப்போதுதான் நீ கிறிஸ்துவோடு ஜீவிக்க ஆரம்பிப்பாய். **தாமஸ் அ.கெம்பிஸ்**

207. இயேசு கிறிஸ்து ஒரு சாதாரண மனிதனல்ல; உலகில் உள்ள வேறு எவரோடும் அவரை நாம் ஒப்பிடவே முடியாது. அலெக்ஸாண்டர், சீசர், சார்லிமெக்ன் என பலர் சாம்ராஜ்யங்களைத் தோற்றுவித்தார்கள். என்றாலும் அவைகள் எல்லாம் வாள் முனையில் ஸ்தாபிக்கப்பட்டவை. ஆனால் இயேசு கிறிஸ்துவோ அன்பினால் தமது சாம்ராஜ்யத்தை

ஸ்தாபித்தார். அவருக்காகத் தங்கள் உயிரையும் கொடுக்கக் கூடிய கோடிக் கணக்கானோர், இன்றளவும் தோன்றிக் கொண்டே இருக்கிறார்கள். இது என்னை வியப்படையச் செய்கிறது. **நெப்போலியன் போனாபாட்**

208. உன்னையே, நீ அறிந்து கொள் – சாக்ரடீஸ். உன்னையே, நீ கட்டுப்படுத்திக்கொள் – சிசெரோ, உன்னையே, நீ கடவுளுக்குக் கொடு –இயேசு கிறிஸ்து. **வால்டர் டி. பாடுரா**

209. நம் எதிரிகள் தங்கள் ஆசிரியர் யாரென்று தங்கள் நடத்தையால் காட்டுகிறார்கள். நாமோ இயேசுவை நம் ஆசிரியர் என்று நம் நடத்தையால் காட்டுவோம். **புனித கிரகோரியார்**

210. இரண்டு மெழுகுத் துண்டுகள் ஒன்றாய் சேருவதுபோல, திவ்விய நன்மை வாங்குகிறவன் இயேசுவோடு ஒன்றியிருக்கிறான். இயேசு அவனில் இருக்கிறார். இவன் இயேசுவில் இருக்கிறான். **புனித சிரில்**

211. கிறிஸ்து தேவனுடன் ஒரே பொருளாயிருந்து, அதே வேளையில் மனிதனோடும் ஒன்றாகக் கலந்த ஆளாக இருந்தால் மட்டுமே, மனிதனை மீட்க இயலும். காரணம், தேவனும் மனிதனும் சந்திப்பது கிறிஸ்துவின் மனித அவதாரத்தில்தான். **புனித சிரில்**

212. நான் கிறிஸ்துவிடம் திரும்பும்போது நான் எனது ஆள்தத்துவத்தை அவருடையதற்கு விட்டுக் கொடுக்கிறேன். அப்பொழுதுதான் எனக்கே உரித்தான மெய்யான ஆள்தத்துவத்தைப் பெற்றுக் கொள்கிறேன். **சி.எஸ். லூயிஸ்**

213. கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரிப்பது சுலபம். கிறிஸ்துவுக்காக வாழ்வது கடினம். **சாது சுந்தர் சிங்**

214. இயேசு கிறிஸ்துவோடு அதிக நேரத்தைச் செலவிடுகிறவன் அவரைப் போலவே மிக அதிகம் ஆகிறான். **பெயர் அறியப்படாதவர்**

215. கிறிஸ்துவைப் போல நம்மை ஆக்கவே நம்மை போல கிறிஸ்து ஆனார் . **அதானாசியஸ்**

216. சந்தோஷம் என்பது துன்பத்தின் இல்லாமை இல்லை. அது கிறிஸ்துவின் பிரசன்னமேயாகும். **வில்லயம் ஹாவென்**

217. "ஒருவன் தனக்கென என்ன வைத்திருக்கிறான்" என்று உலகம் கேட்கிறது. "தான் வைத்திருக்கிறதை எப்படி பயன்படுத்து கிறான்" என்று கிறிஸ்து கேட்கிறார். **ஆன்ரூ முர்ரே**

218. கிறிஸ்துவில் வலிமையாய் வளரும் முறை என்பது உன்னையே வலிமையற்றதாய் ஆக்குவது தான். **ஆஸ்வால்ட் சாம்பர்ஸ்**

14. இயேசுவின் இரத்தம்

219. இயேசுவின் இரத்தம் மட்டுமே நம்மைப் பாதுகாக்கும். அவரின் வசனம் மட்டுமே நம்மை உறுதிப்படுத்தும். ஆனால் கீழ்ப்படிதல் மட்டுமே நம்மை மகிழ்ச்சியாக்கும். **டி.எல். மூடி**

220. ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆண்டவர் இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தத்தால் மீட்டெடுக்கப்பட்ட அடிமை. எனவே, தனக்கென்று உரிமை பாராட்டத் தகுதியற்றவன். **தே. தேவசகாயம்**

15. இயேசுவின் நாமம்

221. இயேசுவின் நாமம் நமது உதடுகளில் இருக்கும்போது வெற்றி ஆரம்மாகிறது. இயேசுவின் சுபாவம் நமது இருதயத்தில் வரும்போது மட்டுமே வெற்றி முழுமையாகிறது. **பிரான்ஸிஸ் பிராங்கிபைன்**

16. இளமை

222. இளைஞர்கள் தேவனுக்கென்று பெரிய காரியங்களைச் செய்ய எழும்பும்போதுதான் எழுப்புதலும், புதுப்பித்தலும் ஆரம்பமாகிறது. **ஜிம் பர்ன்ஸ்**

223. இளமை என்பது புரிந்துகொள்ளுதலைக் குறைவாகவும் அறிய ஆர்வமுள்ள இயல்பை அதிகமாகவும் கொண்டுள்ள இளமை யான வாழ்க்கையாகும். **அந்தோனி ப்ரூக்ஸ்**

224. நாம் இளமையில் கற்றுக்கொள்கிறோம். முதுமையில் புரிந்து கொள்கிறோம். **மேரீஒன் எப்நெர் எஸ்சென்பச்**

225. வாலிபர்களுக்கு, முன்மாதிரியானவர்கள்தான் தேவை. குற்றம் கண்டுபிடிப்பவர்களல்ல. **ஜான் ஊடன்**

17. இளைப்பாறுதல்

226. எங்களை உமக்காகவே உருவாக்கியுள்ளீர். உம்மில் இளைப்பாறுதல் காணும் வரை எங்கள் இருதயங்களுக்கு இளைப்பாறுதல் இல்லை. **புனித அகஸ்டின்**

227. நீ உலகத்தை பார்த்தால், துன்பப்படுவாய். நீ உன்னையே பார்த்தால் சோர்வடைவாய். நீ தேவனை நோக்கிப் பார்த்தால் இளைப்பாறுதலடைவாய். **கூரி டென் பூம்**

18. உதவி

228. நம்மால் எல்லாருக்கும் உதவி செய்ய இயலாது. ஆனால் யாரோ ஒருவருக்கு நம் எல்லாராலும் உதவி செய்ய இயலும். **ரொனால்ட் ரீகன்**

229. நன்மை செய்கிறவர்களுக்குச் சிலுவை வெளிப்பட்டிருக்கிறது, காரணம் அவர்கள் செய்யும் நன்மை போதுமானதாக இல்லை என்பதினால்தான். **ஜோகன் ஹெச் ச்ரோடர்**

19. உத்தம ஊழியர்கள்

230. நாட்டைச் சீர்திருத்த சிறந்த வழி உத்தம ஊழியர்களை ஏராளமாக உருவாக்குவதே. **புனித கணிசியுஸ் இராயப்பர்**

20. உண்மை

231. ஒவ்வொருவரும் உண்மை அவர்கள் பக்கம் இருக்க விரும்புகிறார்கள், ஆனால் உண்மையின் பக்கம் இருக்க எவரும் விரும்புவதில்லை. **ரிச்சர்ட் வாட்லி**

232. "உண்மை"க்கு நாம் செலுத்தும் மரியாதை, அதை பயன்படுத்துவதுதான். **ஜேம்ஸ் ரஸ்செல் லோவெல்**

233. உண்மையைப் பேசுவதற்கு அநேக வார்த்தைகள் வேண்டியதில்லை. **சீஃப் ஜோசப்**

234. உண்மை எப்பொழுதும் வலிமையாயிருக்கிறது. அது எப்படி வலிமையற்றதாய்த் தோன்றுகிறது என்பது விஷயமல்ல. பொய் எப்பொழுது வலிமையற்றதாயிருக்கிறது. அது எப்படி வலிமையுள்ளதாய் தோன்றுகிறது என்பது விஷயமல்ல. **பிலிப்ஸ் ஃப்ரூக்ஸ்**

235. சிறிய காரியம் என்பது சிறிய காரியமாகும். ஆனால் சிறிய காரியத்தில் உண்மையாயிருந்தால் மிகப் பெரிய காரியமாகும். **ஜேம்ஸ் ஹட்சன் டெய்லர்**

21. உபத்திரவங்கள்

236. உபத்திரவத்தில் மேன்மை பாராட்டுவது தேவனில் அன்பு கூறுகிறவனுக்குக் கடினமல்ல, அப்படி மேன்மை பாராட்டுவது ஆண்டவருடைய சிலுவையில் மேன்மை பாராட்டுவதாகும். **தாமஸ் அ. கெம்பிஸ்**

237. இந்தியாவில் சபையின் மிகப்பெரிய வளர்ச்சிக்கு கிறிஸ்தவர்கள் சந்திக்கும் உபத்திரவங்கள் வாய்ப்புகளாகவே அமைந் திருக்கின்றன. அநேகக் கிறிஸ்தவர் அல்லாதவர்கள்கூட தேவனை ஏற்றுக்கொள்ள கிறிஸ்தவர்கள் படும் உபத்திரவங்கள் மறைவான ஆசீர்வாதமாகவே உள்ளன. **சாமுவேல்**

238. கிறிஸ்துவுக்காக உபத்திரவங்களை அனுபவிக்கத் தன்னை ஒப்புக் கொடுத்தவரைத் தவிர வேறொருவரும் பரம காரியங் களைக் கிரகிக்கக் கூடியவரல்லர். **தாமஸ் அ. கெம்பிஸ்**

239. கிறிஸ்துவுக்காக மனப்பூர்வமாய் பாடனுபவிக்கிறதைவிடத் தேவனுக்குப் பிரியமானதும் உனக்கு நன்மையுமானது இந்த உலகத்தில் இல்லை. **தாமஸ் அ. கெம்பிஸ்**

240. தன் ஆத்தும நேசரின் பூரண சித்தத்திற்குத் தன்னை ஒப்புக்கொடுத்து, அவருக்காக அனைத்துப் பாடுகளையும்

ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இல்லாதவன் எவனும் அன்புள்ளவன் என்று அழைக்கப்படுவதற்குத் தகுதியற்றவன்.
தாமஸ் அ. கெம்பிஸ்

241. உபத்திரவம் விசுவாசிக்கு உலைகளம், பாடுகள் திருச்சபைக்கு உரவளம். இரத்த சாட்சிகள் உலகிற்கு விதைகள்.
பெயர் அறியப்படாதவர்

22. உபவாசம்

242. உபவாசத்தினால் சரீரம் ஆன்மாவுக்கு கீழ்ப்படிய கற்றுக் கொள்கிறது. ஜெபத்தினால் ஆன்மா சரீரத்திற்கு ஆணையிடக் கற்றுக்கொள்கிறது. **வில்லியம் செக்கெர்**

243. உடலோடு செய்யும் போரில் வெற்றி பெற்றுத் தர வல்லமை வாய்ந்த கருவி உபவாசமே. **புனித பிரான்சிஸ் பவோலா**

23. உயிர்த்தெழுதல்

244. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நம் விசுவாசத்திற்கு ஒரு பிற்சேர்க்கை அல்ல; அதுவே நம் விசுவாசத்திற்கு ஆதாரம்.
ஜேம்ஸ் ஸ்டூவர்ட்

245. இயேசுவின் வரலாறு மட்டுமே மரணத்தில் முடிவதில்லை. அதன் திருப்புமுனையாக அவரது உயிர்த்தெழுதல் அல்லவா கெம்பீரமாக நிற்கிறது. **A.W. டோசர்**

246. கர்த்தர் உயிர்தெழுதலின் வாக்குத்தத்தைப் புத்தகங்களில் மட்டும் எழுதவில்லை. இளவேனிற் பருவத்தின் ஒவ்வொரு இலையிலும் எழுதியிருக்கிறார். **மார்டின் லூத்தர்**

247. கிறிஸ்து உயிர்த்தெழுந்ததுபோல கிறிஸ்துவுக்குள் வாழ்பவர்களும் உயிர்த்தெழுவார்கள். **சி.எஸ். லூயிஸ்**

248. திறந்திருக்கும் கிறிஸ்துவின் கல்லறையே சபை உருவாகும் கருவறையாகும். **ராபர்ட்சன் நிக்கோல்**

249. கிறிஸ்துவின் பாடு மற்றும் மரணம், தேவ மகிமையை வெளியரங்கமாக்க வடிவமைக்கப்பட்ட ஒன்று. பாடு இல்லாமல் பரலோக மகிமையும் இல்லை. **வில்லியம் ஜெய்**

250. உலகம் பெற்றிராத சிறந்த செய்தி கல்லறையிலிருந்து வந்ததே - உயிர்த்தெழுதல் . **ஆனன்**

251. சுவிசேஷம் உயிர்த்தெழுதலை விளக்கவில்லை. உயிர்த் தெழுதலே சுவிசேஷத்திற்கான முழு விளக்கமாயிருக்கிறது. **ஜான்வல்**

252. கிறிஸ்து உயிர்த்தெழுந்தபோது மரணம், மரணத்தைத் தழுவிவிட்டது. **பெயர் அறியப்படாதவர்**

253. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் புனைக்கதையோ அல்லது சிறுவர்களுக்காக எழுதப்பட்ட சாகசக் கதையோ அல்ல; உலகில் எவரும் மறுக்கக்கூடாத சர்ச்சைக்கு அப்பாற்பட்ட வரலாறு அது. **A.W. டோசர்**

24. உலகம்

254. உலகப் பொருட்கள் நம்மிடமிருந்து எடுக்கப்படும்வரை நாம் அவைகளோடு எவ்வளவு ஒட்டியிருக்கிறோமெனத் தெரியாது. **புனித அகஸ்டின்**

255. உலகம் ஓர் ஆபத்தான இடமாயிருக்கிறது. ஏனெனில் தீங்கிழைப்பவர்களினாலில்லை. அதைப் பார்த்து எதுவும் செய்யமாலிருப்பவர்களினால்தான். **ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**

256. உலகத்தை, சுவிசேஷத்தின் வல்லமையால் தலைகீழாகத் திருப்புவதற்கு பதிலாக, முற்கால சபை செய்தது போல, நாம் நம்மை தலைகீழாகத் திருப்புவதற்கு இந்த உலகத்தை அனுமதித்திருக்கிறோம். **கிரேக் லாரி**

257. உலகம் ஒரு புத்தகம். பயணமே செய்யாதவர்கள் ஒரே ஒரு பக்கத்தை மாத்திரம் தான் படிக்கிறார்கள். **புனித அகஸ்டின்**

258. உலகம் அமைதியில் குழப்பத்தை உண்டுபண்ண முடியும், ஆனால் தேவன் மட்டும் குழப்பத்தில் அமைதியை உண்டுபண்ண முடியும். **தாமஸ் வாட்சன்**

259. இந்த உலகம் மரிக்கிறவர்களின் இடம். பரலோகம் வாழ்கிறவர்களின் இடம். **ட்ரையான் எட்வர்ட்ஸ்**

260. உலகம் நாளைக்கு அழியப்போகிறது என்று நான் அறித்திருந்தாலும்கூட இன்று ஒரு மரத்தை நடுவேன். **மார்டின் லூத்தர்**

25. எண்ணம்

261. உன் மனதில் தோன்றும் எண்ணங்களைக் கருத்துடன் காவல் செய், ஏனெனில் அவைகள் பரலோகத்தில் வாசிக்கப்படு கின்றன. **புனித அகஸ்டின்**

262. அநேகமான நமது பிரச்சினைகளின் அடிப்படைக் காரணம் நாம் தேவனைப் பற்றி கொண்டுள்ள தாழ்வான எண்ணமே. **A.W.டோசர்**

263. மனிதர்களின் இரண்டாவது எண்ணங்களே மிகவும் விவேகமானவை. **யூரிபைடெஸ்**

26. எதிர்ப்பு

264. எதிர்ப்பு என்பது தேவனுடைய ஆசீர்வாதத்திற்கு ஒரு சான்று மட்டுமல்ல நாம் வளர்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பும் கூட. **வாரன் வியர்ஸ்பி**

265. உங்களுக்கு எதிர்ப்புகள் இல்லையென்றால் முன்னேற்றத் திற்கான வாய்ப்புகளும் இல்லை. **பெயர் அறியப்படாதவர்**

27. எளிமை

266. மனுஷனை உலகக் காரியங்களுக்கு மேலாய் உயர்த்தும் செட்டைகள் எவையெனில், எளிமையும் தூய்மையுமே. **தாமஸ் அ. கெம்பிஸ்**

267. எளிமையாக வாழ், தாராளமாக நேசி, அதிக உணர்வோடு அக்கறைகொள், அன்பாகப் பேசு, மீதியைத் தேவனிடத்தில் விட்டு விடு. **ரொனால்ட் ரீகன்**

28. எழுப்புதல்

268. எழுப்புதல் எப்போது தேவையிருக்கிறது? கவனமின்மை மற்றும் அக்கறையின்மை மக்களைச் செயல்படாமல் வைத்திருக்கும் போது தான். **பில்லி சன்டே**

29. எழுதுதல்

269. ஏதோ ஒன்று நீ சொல்ல விரும்புகிறதினால், நீ எழுதுகிறதில்லை. சொல்வதற்கு ஏதோ ஒன்று வைத்திருக்கிறதினால் நீ எழுதுகிறாய். **எஃப்ஸ்காட் ஃபிட்ஸ்ஜெரால்ட்**

270. நீ உலகத்தை மாற்ற விரும்பினால், உன் பேனாவை எடுத்து எழுது. **மார்டின் லூத்தர்**

30. ஒழுக்கம்

271. ஒழுக்கம் என்பது வாழ்க்கையின் பிரச்சினைகளைத் தீர்க்க தேவைப்படுகிற இன்றியமையாத கருவிகளின் குழுமமாகும். **எம். ஸ்காட் பெக்**

272. தான் எப்படியும் அகப்பட்டுக் கொள்ளமாட்டோம் என்றிருந்த பிறகு ஒரு மனிதன் எவ்வாறு நடந்து கொள்கிறான் என்பதே அவனது உண்மையான ஒழுக்கத்தின் அளவு கோலாகும். **தாமஸ் டி. மெகாலே**

273. மிகப் பெரிய ஒழுக்கமின்மைகளில் ஒன்று என்பது எவரேனும் ஒருவருக்கு நாம் ஒருவராயில்லாததுதான். **அன்னை தெரேசா**

31. கடமை

274. இன்றைய கடமையை தள்ளி வைப்பதால் நாளைய கடமையிலிருந்து தப்பித்துவிட முடியாது. **ஆபிரகாம் லிங்கன்**

275. ஒரு பல்கலைக்கழகத்தின் முதல் கடமை ஞானத்தைப் போதிப்பதைதவிர வணிகத்தையல்ல, சுபாவத்தைத் தவிர தொழில் நுட்பத்தையல்ல. **வின்ஸ்டன் சர்ச்சில்**

276. ஒருவனுடைய கடமையில் விடாமுயற்சியுடன் செயலாற்றுவதும், அமைதியாக இருப்பதும், பொய் குற்றச்சாட்டு சிறந்த பதில்களாகும். **ஜார்ஜ் வாஷிங்டன்**

32. கவலை

277. கவலை, நாளைய தினத்தைக் குறித்தான கவலையை நீக்குகிறதில்லை. மாறாக இன்றைய தினத்திற்கான பெலத்தைத்தான் குறைக்கிறது. **சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்**

278. நாளைய தினத்தைக் குறித்ததான கவலை இன்றைய மகிழ்ச்சியைத் திருடுகிறது. **பார்பரா கேமரேன்**

279. உங்கள் கவலையைக் குறித்து தேவனிடம் ஜெபியுங்கள். தேவன் கவலைப்படட்டும். **மார்டின் லூத்தர்**

280. கவலையுடன் தூங்கச் செல்வது முதுகில் சுமையைச் கட்டிக் கொண்டு உறங்குவதாகும். **ஹாலிபர்டன்**

281. நான் பிழைத்திருக்க வேண்டுமோ அல்லது பிழைத்திருக்க வேண்டாமோ என்பது என் ஆண்டவரின் பிரச்சினை. அதைக் குறித்து நான் கவலைப்படுவது அவசியமற்றது. **டேவிட் பிரெய்னார்ட்**

33. கனவு

282. கனவுகளின் அருமையை யாரெல்லாம் நம்புகிறார்களோ அவர்களுக்குத்தான் எதிர்காலம் உரியதாயிருக்கிறது. **எலிநர் ரூஸ்வெல்ட்**

283. கனவு என்பது ஏதோ ஒன்றிலிருந்து எழுவதில்லை. மாறாக அது ஏதோ ஒன்றிலிருந்து உன்னை எழுப்புவதாகும். **சார்லி ஹெட்செஸ்**

34. கல்வி

284. கல்வி, வாழ்க்கையின் துன்பங்களுக்கு ஒழுக்கப் பயிற்சியாகும்.
A. நார்த் ஒயிட்கெட்

285. நல்ல கல்வியை யாரும் விரும்புகிறதில்லை, நல்ல பட்டத்தைத்தான் விரும்புகிறார்கள். **லீ ரூடோல்ஃப்**

286. கல்வியின் பயன் மக்களை ஏமாற்றிப் பொருள் சேர்ப்பது இல்லை. உண்மை எது, பொய் எது, நடந்தது எது, கற்பனை எது, என்பதைத் தெரிந்து கொள்வதற்கு உதவுவதுதான் கல்வி அறிவாகும். **மார்டின் லூத்தர் கிங் ஜூனியர்**

287. அன்றாட வாழ்வில் வரும் அனுபவங்களே தலை சிறந்த கல்வி.
பெயர் அறியப்படாதவர்

288. ஒழுக்கத்தோடு சேர்ந்த அறிவை வளர்ப்பதுதான் உண்மையான கல்வி. திறமையை மட்டும் அளிக்கும் கல்வியால் சமுதாயத்திற்குத் தீமையே விளையும். **மார்டின் லூத்தர் கிங் ஜூனியர்**

289. உலகத்தில் மாற்றத்தை கொண்டுவர நீ பயன்படுத்தக் கூடிய மிக வல்லமையான ஆயுதம் கல்வியாகும். **நெல்சன் மன்டேலா**

290. மக்களுக்கு சிந்தனை செய்ய கற்றுக்கொடுப்பதுதான் கல்வியின் பிரதான இலக்காகும். **லார்ட் க்ரோமர்**

35. கற்றுக் கொள்தல்

291. இன்று பட்டதாரியாகிறவன், நாளை கற்றுக் கொள்தலை நிறுத்துகிறான் என்றால், அவன் மறுநாளே கல்வியற்றவனாகிறான். **நியூட்டன் டி. பேக்கர்**

292. என்று நீ கற்றுக் கொள்வதை நிறுத்துகிறாயோ, அன்று நீ அழிவை நோக்கிப் பயணிக்கிறாய். **ஐசக் அசிமாவ்**

293. கடந்த காலத்தில் உன்னைக் காயப்படுத்தியதைக் குறித்து மறந்துவிடு, ஆனால் அது கற்றுக் கொடுத்த பாடத்தை மறந்துவிடாதே. **பெயர் அறியப்படாதவர்**

294. சரியான (வழியில்) முறையில் காரியங்களைக் செய்ய கற்றுக்கொள்ள அறியாமலிருப்பது மிகப் பெரிய அவமானம் அல்ல, கற்றுக்கொள்ள விருப்பமில்லாததே பெரிய அவமானமாகும். **பென்ஞமின் ஃப்ராங்ளின்**

36. கருத்து

295. ஒரு கருத்தை ஏற்றுக்கொள்ள மனதில்லாதவன் விவாதத்திற்குத் தகுதியற்றவன். **ரிச்சர்டு வாட்லி**

296. ஒரு மனிதன் மரிக்கலாம், தேசங்கள் எழும்பலாம் மற்றும் வீழ்ச்சியடையலாம், ஆனால் ஒருவன் விட்டு சென்ற கருத்து எப்பொழுதும் நிலைத்திருக்கிறது. **ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**

37. கிரியை

297. தேவன் எவைகளை நிறைவேற்றக் கிரியை (Working in) செய்கிறாரோ அவைகளை நிறைவேற்ற மனிதர்கள் கிரியை (Working in) செய்வதில்லை. **சகரியா பூணன்**

298. கிரியை என்பது மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட தேவனுடைய ஐஸ்வரியம். **சகரியாஸ் டேனி ஃபோமம்**

299. நமக்காக தேவன் கிரியை செய்ய நாம் அவருக்காகக் காத்திருக்கும்போது, நம் மூலமாய் தேவன் கிரியை செய்ய அவர் காத்திருக்கிறார். **ரிக் வாரன்**

38. கிருபை

300. கிருபை பரலோகத்திலிருந்து பூலோகத்திற்கு இறங்குகிறது. ஏனெனில் அதை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாம் தேவனை பிரதிபலிக்கலாம். **கியாம் பாட்டிஸ்டா கரால்டி**

301. கிருபை, இரக்கம், மற்றும் அன்பு ஆகியவற்றைக் குறித்து பிரசங்கிக்கும்முன் நியாயத்தீர்ப்பு சட்டம், மற்றும் பாவம் ஆகியவற்றைக் குறித்து பிரசங்கிக்க வேண்டும். 90 சதவீதம் சட்டத்தைக் குறித்துப் பிரசங்கி. 10 சதவீதம் கிருபையைக் குறித்துப் பிரசங்கி. **ஜான் வெஸ்லி**

02. சட்டம் கோபத்தையும் பயத்தையும் உண்டுபண்ணுகிறது. கிருபை இரக்கத்தையும் நம்பிக்கையையும் உண்டுபண்ணு கிறது. **மார்டின் லூத்தர்**

39. கிறிஸ்தவம்

03. கிறிஸ்தவத்தை விமர்சிப்பவன், அதை செயல்படுத்தமாட்டான். அதை செயல்படுத்துகிறவன் அதை விமர்சிக்கமாட்டான். **பெயர் அறியப்படாதவர்**

04. கிறிஸ்தவம் ஒழுங்காக செயல்படுகிறதினால் உண்மை யானதல்ல, உண்மையாயிருக்கிறதினால் தான். **ஒஸ் கின்னெஸ் எழுத்தாளர்**

05. கிறிஸ்தவம் என்பது நல்லவனாய் அல்லது கெட்டவனாய் இருப்பதைக் குறித்ததல்ல அது உயிரோடு இருக்கிறோமா அல்லது இறந்து விட்டோமா என்பதைக் குறித்தது. **பெயர் அறியப்படாதவர்**

06. கிறி ஸ்தவ மதத்தின் வெளிச்சமாயிருக்கிற கிறிஸ்துவை நான் கண்டுகொள்ளவில்லை. உலகத்தில் பிறக்கிற ஒவ்வொரு மனிதனின் வெளிச்சமாயிருக்கிற கிறிஸ்துவை நான் கண்டுகொண்டேன். **பண்டித ரமாபாய்**

07. நாம் கூடி வருகின்ற இடங்களில் கிறிஸ்துவை பல கோணங்களில் வாழ்த்திப் பாடுவதில் அல்ல கிறிஸ்தவம். நாம் வாழ்கின்ற இடங்களில் கிறிஸ்துவைப் பிரதிபலித்து வாழ்வதுதான் கிறிஸ்தவம். **பெயர் அறியப்படாதவர்**

08. கிறிஸ்தவம் மெய்யான மார்க்கம் என்று வெற்றுக் கல்லறை நிரூபிக்கிறது. வெற்று சபை அதை மறுக்கிறது. **பெயர் அறியப்படாதவர்**

9. கிறிஸ்தவம் என்பது சும்மா யோவான் 3:16 யும் அப்போஸ்தலர் 16:31 யும் திரும்ப திரும்பச் சொல்வதல்ல, மாறாக கிறிஸ்து வுக்கு நம் வாழ்க்கையையும் இருதயத்தையும் கொடுப்பதாகும். **ஹாரி ஐரன்சைட்**

310. கிறிஸ்தவ மார்க்கத்தின் வேலை ஒருவனைத் துன்பத்திலிருந்து காப்பாற்றுவதல்ல, மாறாக துன்பத்திற்குள்ளேயே காப்பாற்றுவதாகும். **ஸ்டான்லி ஜோன்ஸ்**

311. கிறிஸ்தவத்தின் பிரச்சினை என்பது அறிவின் தேவையல்ல, கீழ்ப்படிதலின் தேவையாகும். **ஜான் மேக்ஸ்வெல்**

312. கிறிஸ்தவம், உலகப் பிரச்சினைகள் மற்றும் உலகத்திலிருந்து உன்னை நிலைமாற்றுகிறதில்லை. ஆனால் அது வெற்றிக் களிப்பாக இந்த உலகத்தில் வாழ உன்னைத் தகுதியாக்குகிறது . **தெரேசா வெஸ்ட்**

313. உள்ளான சாட்சியே கிறிஸ்தவத்தின் உறுதியான சாட்சியாகும். **சாமுவேல்**

314. கிறிஸ்தவம் இன்னொரு மதமல்ல. கடவுளை அடைவதே மதங்களின் நோக்கமாக இருக்குமானால் கிறிஸ்தவம் மட்டுமே மதம் எனும் அந்தஸ்துக்கு தகுதி வாய்ந்தது. **பெயர் அறியப்படாதவர்**

315. இன்றளவும் இந்தியா கிறிஸ்தவ நாடாக ஆகாததற்கு, இந்தியாவில் குறைவான கிறிஸ்தவ முன்மாதிரிகளே அதற்கு காரணமாகும். **கே. எஸ் ஆமோஸ்**

316. மதம், என்பது கடவுளுக்காக மனிதனின் தேடல், கிறிஸ்தவம் என்பது மனிதனுக்காக தேவனின் தேடல். **ஜெஃப்பர்ச்ன் பெத்கே**

317. சீஷத்துவம் இல்லாத கிறிஸ்தவம் என்பது எப்பொழுதும் கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவமாகும். **டயட்ரிச் போன்ஹெ ஃபெர்**

318. சொகுசாக வைக்கக்கூடிய ஒரு மதத்தை நீ விரும்பினால், நிச்சயமாக நான் கிறிஸ்தவத்தை பரிந்துரைக்கமாட்டேன். **சி. எஸ். லூயிஸ்**

319. தேவன் அடைபட்டுக் கிடக்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட உலகம், இயற்கை வழிகளுக்கு உட்பட்டுத் தானாகவே இயங்கும்

இயற்கை உலகம், என்ற இரண்டுக்கும் உலகக் கண்ணோட்டத்தை விசுவாசிகள் ஆதரிக்கும் வரையில் கிறிஸ்தவம் இந்த உலகத்தைப் பாதிக்கப் போவதில்லை. **டாக்டர் பால் ஹியுபெர்ட்**

40. கிறிஸ்தவர்கள்

320. கிறிஸ்தவர்களாக நமது கடமை என்னவென்றால் எப்பொழுதும் பரலோகத்தை நமது கண்களிலும் பூலோகத்தை நமது காலுக்கடியிலும் வைப்பதாகும். **மேத்யூ ஹென்றி**

321. கிறிஸ்துவின் அழைப்பைப் பெறாத ஒரு கிறிஸ்தவன், கிறிஸ்தவனல்ல. **கே.எஸ். ஆமோஸ்**

322. வானாதி வானங்களுக்கு மேலாக உயர்ந்திருப்பவரை வாழ்வின் எல்லையெங்கும் உயர்த்துபவனே உண்மையான சீஷன். **பெயர் அறியப்படாதவர்**

323. உடலின்பத்துக்குரியவன் மனிதனுக்குப் பயப்படுகிறான். தேவனுக்கல்ல. பெலமுள்ள கிறி ஸ்தவன் தேவனுக்குப் பயப்படுகிறான். மனிதனுக்கல்ல. பெலனற்ற கிறிஸ்தவன் மனிதனுக்கு மிக அதிகமாக பயப்படுகிறான். தேவனுக்கோ மிகக் குறைவாக பயப்படுகிறான். **வான் ஃப்ளாவல்**

324. உங்கள் கிறிஸ்துவை விரும்புகிறேன், ஆனால் உங்கள் கிறிஸ்தவர்களை விரும்பவில்லை. ஏனெனில் உங்கள் கிறிஸ்தவர்கள் உங்கள் கிறிஸ்துவைப் போலில்லை. **M.K. காந்தி**

325. ஒரு கிறிஸ்தவனைப்போல முழுதுமாக பிறருடைய இன்னல் களை தாங்கிக் கொள்ள முடியாத ஒருவனை என் வாழ்க்கையில் நான் பார்த்ததேயில்லை. **அலெக்ஸாண்டர் டோப்**

326. கற்றுக்கொள்கிற கிறிஸ்தவர்கள் வளர்கிற கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவர்கள் கற்பதை நிறுத்தும்போது, அவர்கள் வளர்வதை நிறுத்துகிறார்கள். **ஜான் வெஸ்லி**

327. எல்லா கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் சீஷர்கள், அதாவது வேதாகம மாணவர்கள். சபையே அவர்களது பள்ளிக்கூடம்.

போதகர்கள் வேதாகமத்தைக் கற்றுக்கொடுக்கும் பயிற்சியாள
கள். வேதாகமமே அவர்கள் பயிலும் இலக்கண இலக்கியம்
அதையே சீஷர்களுக்குத் தினமும் கற்பிக்க வேண்டும்
ரிச்சர்ட் பாக்ஸ்ட

328. ஒரு கிறிஸ்தவனின் பெலன் அவனது உடல் வலுவையோ மனபெலத்தையோ, பண திரட்சியையோ சார்ந்ததல்ல தேவனோடு அவனுக்குள்ள உறவு எத்தனை ஆழமானது என்பதைத் பொறுத்ததே.
A.W. டோச

329. ஒரு மனிதன் அவன் எங்கு இருக்கிறானோ அங்கு கிறிஸ்தவனாக இருக்கவில்லையென்றால், வேறெங்கும் அவன் கிறிஸ்தவ னாயிருக்க முடியாது.
ஹென்றி வார்டு பீச்ச

330. கிறிஸ்தவர்களைக் குறித்து நான் அறியாதிருப்பேனென்றால் நானும் ஒரு கிறிஸ்தவனாக மாறியிருப்பேன்.
ஜ்ஞ காந்தி

331. ஒரு கிறிஸ்தவனுக்கு ஓய்வு நாள் ஆசரிப்பு இல்லை, ஓய்வு நாளை ஆசரிப்பவன் கிறிஸ்தவன் இல்லை.
வாட்ச்மேன் நீ

332. உலகின் எப்பகுதியிலும், எக்காலத்திலும் உண்மையைச் சுட்டிக்காட்டிய ஞானிகள் கிறிஸ்தவர்களே. **ஜஸ்டின் மார்ட்டையர்**

333. கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையில் காண்கிறதைக் கொண்டுதான் மக்கள் கிறிஸ்தவத்தை நிதானிக்கின்றனர்.
மாக்ஸ் வெல்

334. கிறிஸ்தவனாய் இருப்பது என்பது வெறுமனே கிறிஸ்துவை விரும்புவதல்ல, கிறிஸ்துவைப்போல இருப்பதாகும். கிறிஸ்துவைப் போல இருக்காதவன் கிறிஸ்துவை விரும்பாதவன்.
தெரேசா வெஸ்ட்

335. முதலாவதாக கிறிஸ்தவராகிய நீங்கள் இயேசு கிறிஸ்துவைப் போல வாழத்தொடங்குங்கள். இரண்டாவதாக, உங்கள் சமயத்தைக் கலப்படமின்றியும் சாரம் குறைந்து போகாதபடியும் பின்பற்றுங்கள். மூன்றாவதாக, கிறிஸ்தவத்திற்கு ஆதாரமும்

மையமுமாக இருக்கக் கூடிய அன்பிற்கு முக்கியத்துவம் கொடுங்கள். **எம். கே. காந்தி** (ஸ்டான்லி ஜோன்ஸிடம் கூறியது)

336. கிறிஸ்தவர்கள் தீங்குகள் சேர்ந்திருந்தால் ஒளி வீசுவார்கள். பிரிந்திருந்தால் மங்கிவிடுவார்கள். **பெயர் அறியப்படாதவர்**

337. சோதிக்கப்படாத ஆயிரம் கிறிஸ்தவர்களை காட்டிலும் சோதிக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவன் சிறந்தவன். **மார்டின் லூத்தர்**

338. மெய்யாகவே கிறிஸ்தவர்கள் வேதாகமத்தில் சொல்லப்பட்ட இயேசு கிறிஸ்துவின் போதனைக்கு ஏற்ப வாழ்வார்கள் என்றால் இந்தியாவே இன்று கிறிஸ்தவ நாடாயிருக்கும். **M.K. காந்தி**

339. கிறிஸ்தவனாய் இருப்பதற்குப் பொருள் மன்னிக்க முடியாததை மன்னிப்பதுதான். ஏனெனில் தேவன் உன்னில் மன்னிக்க முடியாததை மன்னித்திருக்கிறார். **சி.எஸ். லூயிஸ்**

340. அண்டை வீட்டாருக்கு கிறிஸ்துவைப்போல இருப்பதுதான் ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமையாகும். **மார்டின் லூத்தர்**

341. கிறிஸ்தவர்கள் பாவம் செய்கிறார்கள் என்று இந்த உலகம் அதிகமாக கவலைப்படுகிறது என்று நான் யோசிக்கவில்லை, ஆனால் கிறிஸ்தவர்கள் எப்படி இருக்கக்கூடாதோ அப்படி இருக்கிறார்கள் என்றுதான் இந்த உலகம் கவலைப்படுகிறது. **காஸ்டிங் க்ரெளன்ஸ்**

342. நூறு பேரில் ஒருவன் வேதாமத்தைப் படிப்பான். மற்ற தொண்ணூற்று ஒன்பது பேர் கிறிஸ்தவனைப் படிப்பார்கள். **டி.எல்.மூடி**

343. நீ எப்பொழுதும் இருந்தபடியே இருக்கிறாய் என்றால் நீ ஒரு கிறிஸ்தவன் அல்ல. ஏனெனில் ஒரு கிறிஸ்தவன் புதிய சிருஷ்டிப்பாய் இருக்கிறான். **பெயர் அறியப்படாதவர்**

கிறிஸ்தவ அனுபவம்

344. கிறிஸ்தவ அனுபவம் என்பது ஆரம்பத்திலிருந்து முடிவுவரை விசுவாசத்தின் பயணமாகும். **வாட்ச்மேன் நீ**

41. கிறிஸ்தவ ஊழியம்

345. கிறிஸ்தவ ஊழியம் என்பது வணிகங்கள் எல்லாவற்றிலும் மிக மோசமானது. தொழில்கள் எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது.
ஜான் நியூட்டன்

42. கிறிஸ்தவ வாழ்க்கை

346. கிறிஸ்தவ வாழ்க்கை சிறிதளவும் சிறந்ததல்ல, முற்றிலும் வேறுபாடானது. **கிளாரன்ஸ் செக்ஸ்டன்**

347. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது அன்பையும் விசுவாசத்தையும் உள்ளடக்கியது. **மார்டின் லூத்தர்**

348. கிறிஸ்தவ வாழ்க்கையில் தேவனில் அன்பு கூறுவதும் இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதும் எந்த அளவு இன்றியமையாததோ அதேபோலவே மற்றவர்களுக்காக மன்றாடி ஜெபிப்பதும் இன்றியமையாதது. **ஆன்ட்ரூ முரே**

349. ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ஓர் உணர்வு பூர்வமான திருப்பம் நம் வாழ்க்கையில் ஏற்படுவதாகும்.
அலெகஸ்ாண்டர் ஒயிட்

350. கிறிஸ்தவ வாழ்க்கையில் சமாதானத்தையும் வெற்றியையும் பெறுவதற்கான இரகசியம், "சுகம்" என்ற கடுஞ்சுமையைக் கழற்றி வைத்து விட்டு, கடுமையைத் தளர்த்தும் எஜமானனின் நுகத்தைப் பூட்டிக் கொள்வதிலேயே இருக்கிறது.
J.H. ஜோவெட்

351. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது வெறுமனே கேட்பதோ அல்லது தெரிந்துகொள்ளுதலோ அல்ல, கிறிஸ்துவின் சித்தத்தைச் செய்வதேயாகும். **ஃப்ரெட்ரிக் W.ராபர்ட்சன்**

352. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது யுத்தகளத்திலே முடிவில்லாத ஈடுபாடு கொண்டதாகும். **வாட்ச்மேன் நீ**

353. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது சாத்தானுக்கு எதிரான ஒரு யுத்தம்.
சகரியா பூணன்

354. கர்த்தருக்கு பயப்படுதல் என்பது கிறிஸ்தவ வாழ்க்கையின் அ, ஆ, இ ஆகும். **சகரியா பூணன்**

355. உலகக் காரியங்களிலிருந்து பிரிந்து தேவனுக்கென்று பிரிக்கப்படுதல்தான் கிறிஸ்தவ வாழ்க்கையின் முதலாவது கோட்பாடகும். **வாட்ச்மேன் நீ**

43. கிறிஸ்துமஸ்

356. கிறிஸ்துமஸ் என்பது தேவனிடமிருந்து வந்த பரிசு. அதை ஒருவன் வேறு யாருக்காவது கொடுக்காதவரை, அதை அவனால் வைத்திருக்க முடியாது. **பெயர் அறியப்படாதவர்**

357. சக மனிதரிடம் நாம் அன்புகூறும் ஒவ்வொரு நேரமும் நற்செயலாய் அது வெளிப்படும் ஒவ்வொரு நிகழ்வும் கிறிஸ்துமஸ்தான். **பெயர் அறியப்படாதவர்**

358. கிறிஸ்துமஸ் பாடல் பாடுபவதும், கிறிஸ்துமஸ் விருந்தை உண்ணுவதும் மட்டுமல்ல, கல்வாரி அன்பைப் பகிர்ந்து தேவனின் மன்னிப்பை மனிதர்களுக்கு அளிப்பதும் கிறிஸ்தவனுக்கு அழகு. அதுவே உண்மையான கிறிஸ்துமஸ். **பெயர் அறியப்படாதவர்**

359. கிறி ஸ்துமஸ் என்பது நமது பரிசுப் பொருட்களை திறந்து பார்ப்பதல்ல, நமது இருதயங்களைத் திறப்பது தான். **ஜானிஸ் மேடிடெரி**

360. கிறிஸ்துமஸ் தேவனுடைய இருதயத்தில் ஆரம்பமானது. மனித இருதயத்தை அது தொடும்போ து அது நிறைவு பெறுகிறது. **பெயர் அறியப்படாதவர்**

361. பாவிக்களுக்கான ஒரு செய்தி இல்லாத மற்றும் தொலைந்து போன ஆத்துமாக்கான ஒரு பாரம் இல்லாத கிறிஸ்துமஸ் எனக்கு வேண்டாம். **ஜான் ஆர். ரைஸ்**

362. கிறிஸ்துவின் பிறந்த நாளை எத்தனை பேர் அனுசரிக்கிறோம். எவ்வளவு குறைவான பேர் அவருடைய கட்டளையைக் கைக்கொள்கிறோம். **பென்ஞமின் ஃப்ராங்ளின்**

44. கீழ்ப்படிதல்

363. கடவுளுக்குக் கீழ்ப்படிகிறவனுக்குச் சாத்தான் கீழ்ப்படியாதிருக்க முடியாது. **பெயர் அறியப்படாதவர்**

364. தொட்டில் முதல் தொழுமரம் வரை கீழ்ப்படிதல்! நூற்றுக்குநூறு கடவுளைக் களிப்பாக்கிய வாழ்க்கை! **பெயர் அறியப்படாதவர்**

365. நம்புகிறவன் மட்டும் கீழ்ப்படிகிறான். கீழ்ப்படிகிறவன் மட்டும் நம்புகிறான். **டயட்ரிச் போன் ஹெபர்**

366. நூறு பிரசங்கங்களைக் காட்டிலும் ஒரு கீழ்ப்படிதலின் செயலே சிறந்தது. **டயட்ரிச் போன் ஹெபர்**

45. குணம்

367. இப்பூமியில் உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய இறுதி இலக்கு சௌகரியமல்ல, மாறாக குணாதிசய வளர்ச்சியேயாகும். **ரிக் வாரன்**

368. உலகத்தில் எங்கு போனாலும் பணத்துக்கு மதிப்பு, ஆனால் பரலோகத்தில் உன் நல்ல குணத்துக்கு மதிப்பு. **பெயர் அறியப்படாதவர்**

369. நாம் செல்வத்தை இழக்கும்போது எதையும் இழக்கவில்லை. நாம் ஆரோக்கியத்தை இழக்கும்போது ஏதோ ஒன்றை இழக்கிறோம். நாம் குணத்தை இழக்கும்போது எல்லாவற்றையும் இழக்கிறோம். **பில்லி கிரஹாம்**

370. என்னுடைய குணத்தை நான் காத்துக்கொள்வேனென்றால், என்னுடைய நற்பெயர் என்னைக் காத்துக் கொள்ளும். **டி.எல்.மூடி**

46. குறிக்கோள்

371. ஒரு கூட்டமாக உருவாகக்கூடிய தொண்டர்களைப் பெறுவது எனது குறிக்கோளல்ல. ஒரு இயக்கமாக மாறக்கூடிய தலைவர்களை உருவாக்குவதுதான் எனது குறிக்கோள். **ஜான் சி. மேக்ஸ்வெல்**

372. குறைந்த குறிக்கோள்தான் குற்றமேயொழிய தோல்வி அல்ல.
லோவெல்

373. வாழ்க்கையின் இலட்சியம் மட்டுமே நாம் தேடவேண்டிய சிறந்த பொக்கிஷம். **R.L. ஸ்டீவன்சன்**

47. குடும்பம்

374. நீ எந்தக் குடும்பத்திலிருந்து வந்தாய் என்பது முக்கியமல்ல, நீ உருவாக்கப்போகும் குடும்பமே முக்கியம் வாய்ந்தது.
ரிங் லார்ட்நெர்

375. குடும்பம் என்பது ஓர் ஆடை. அதில் இருவகை நூல்கள் எப்போதும் இருக்கும். ஒன்று நன்மை, மற்றொன்று தீமை.
வில்லியம் ஷேக்ஸ்பியர்

376. குடும்பம் என்பது எளிய வாழ்க்கை, உயர்ந்த சிந்தனை.
வேர்ட்ஸ் வொர்த்

377. குடும்பத்திற்கான தேவ பணி என்பது தேவ குடும்பத்தை விரிவாக்குவதுதான். **ஆன் டனகன்**

48. கொடுத்தல்

378. கொடுப்பதற்குக் கற்றுத் தாரும், ஆனால் எவ்வளவு கொடுக்கிறோம் என்று எண்ணிடாமல் கொடுப்பதற்கு.
புனித இக்னேஷியஸ்

379. தேவன் என்னை ஆசீர்வதிப்பது வாழ்க்கையின் தரத்தை உயர்த்துவதற்கல்ல, கொடுத்தலின் தரத்தை உயர்த்துவதற்காகத்தான். **பெயர் அறியப்படாதவர்**

380. அதிகம் வைத்துள்ளவன் செல்வந்தன் அல்ல, அதிகம் கொடுப்பவனே செல்வந்தன். **பெயர் அறியப்படாதவர்**

381. உன் செல்வத்தைப் பதுக்கி வைத்தால் அழிவே. அதை இழத்தல் வாழ்வே. ஆதலால் கொடு. **பேசன்ஸ் ஸ்ட்டிராங்**

382. தேவன் நமக்கு இரண்டு கரங்களைக் கொடுத்திருக்கிறார். ஒன்று பெறுவதற்கும் மற்றொன்று கொடுப்பதற்கும். **பில்லி கிரஹாம்**

383. தருவதற்கு ஏதுமில்லை எனும் அளவுக்கு யாரும் ஏழையில்லை. பெற்றுக்கொள்ள ஏதுமில்லை எனும் அளவுக்கு யாரும் செல்வந்தருமில்லை. **போப் ஜான் பால் II**

384. கொடு, பெறுவாய். உன் கோப்பைத் ததும்பி வழியும் அளவுக்குப் பெற்றுக்கொள்வாய், அப்படித்தான் நீ ஊட்டம் பெறுவது. நீ கொடுப்பதை எதைக் கொண்டு அளக்கிறாயோ அதைக் கொண்டே நீயும் அளக்கப்படுகிறாய். **பாய்ர்ட் டி. ஸ்பால்டிங்**

385. உன் வீட்டில் உனது தேவைக்கு மேல் எஞ்சியிருக்கும் உணவுப்பொருட்கள் ஏழைகளுக்கே உரியவை. உனது இல்லத்தில் அடுக்கடுக்காக வைத்திருக்கும் ஆடைகள் உனது தேவைக்கு மிஞ்சினால் மூடிக்கொள்ள எதுவுமின்றித் தவிக்கும் ஏழைக்கே உரியவை. உனது தேவைக்கு மேலான காலணிகள் வெறுங்காலோடு செல்லும் ஏழைக்கே உரியவை. உன் இரும்புப் பெட்டியில் சேர்த்து வைத்திருக்கும் செல்வம் ஏழைக்கே உரியது. இரக்கச் செயல்களை நீ செய்யாது விட்டுவிடும்போது அத்தனை முறையும் அறம் தவறுகின்றாய். **புனித பசிலியார்**

386. தேவனுடைய ஊழியத்திற்கு நீ கொடுப்பதற்கிணங்க தேவன் உனது வருமானத்தைக் குறைக்காதவாறு, உன் வருமானத்திற்கேற்றவாறு தேவனுக்கு கொடு. **பீட்டர் மார்ஷல்**

387. உலகம் சிறியதாகுமென்றால் தேவனுடைய பணிக்கு கொடுப்பதைக் குறைத்துக்கொள்ளலாம். **பெயர் அறியப்படாதவர்**

388. இன்று கிறிஸ்தவர்கள் நாயின் சாப்பாட்டிற்கு அதிக பணம் செலவிடுகிறார்கள். பிறகு அருட்பணிக்குக் கொடுக்கிறார்கள். **லியோனார்ட் ரேவன் ஹில்**

389. கொடுத்தல் என்பது முடியும் அல்லது முடியாது என்பதை குறித்ததான ஒரு விஷயம் அல்ல. அது சித்தமா அல்லது சித்தம் இல்லையா என்பதைக் குறித்தான ஒரு விஷயமாகும். **பெயர் அறியப்படாதவர்**

390. தேவனுக்கு நான் எவ்வளவு கொடுக்கிறேன் என்பதல்ல, தேவனுடைய பணத்தில் நான் எவ்வளவு எனக்கென்று வைத்துக் கொள்கிறேன் என்பதே நாம் சிந்திக்க வேண்டிய விஷயமாகும். **ஆஸ்வால்ட் ஜே. ஸ்மித்**

391. சம்பாதிப்பதினால் பிழைப்பு உண்டாகிறது. கொடுப்பதி னால்தான் வாழ்க்கை உண்டாகிறது. **வின்சென்ட் சர்ச்சில்**

49. கோபம்

392. கோபத்திற்கு மருந்து மௌனம் காப்பதும், தாமதிப்பதுமாகும். **பெயர் அறியப்படாதவர்**

393. சரியாகப் புரிந்து கொள்வதற்கு இருக்கும் இரண்டு எதிரிகள் கோபமும், சகிப்புத்தன்மையின்மையும்தான். **எம். கே. காந்தி**

394. கோபத்திற்கு மிகப் பெரிய தீர்வு தாமதமே. **செனேகா**

395. கோபத்தை அடக்குவது நல்லது, அதைத் தவிர்ப்பது மிகவும் நல்லது. **எட்வர்ட்ஸ்**

396. யார் வேண்டுமானாலும் கோபப்படலாம். அது மிகவும் எளிதானது. ஆனால் சரியான அளவு, சரியான நேரத்தில், சரியான நபர் மீது, சரியான காரணத்திற்காக சரியான விதத்தில் கோபப்படுவதற்கான ஆற்றல் மட்டுமே அநேகரிடம் இல்லாதது. அது மிகவும் எளிதானதல்ல. **அரிஸ்டாட்டில்**

397. அனாவசிய கோபம் என்பது கொஞ்ச நேரத்தில் பொங்கி அமரும் மடமையின் அலைகளாகும். **பெயர் அறியப்படாதவர்**

398. கோபம் என்னும் அமிலம் அது தேக்கி வைத்திருக்கும் மனிதனையே அதிகம் காயப்படுத்தும். அது மடை திறந்து வெளிப்படும்போதோ பிறரையும் காயப்படுத்தும். **பெயர் அறியப்படாதவர்**

399. சூரியன் அஸ்தமிக்கும் முன்னமே தன் கோபத்தைக் களைந்து தன் கோபத்திற்கான காரணத்தைச் சொல்லி கோபப்பட்டவனோடு மனம் பொருந்துபவனே உயர்ந்த மனிதன். **பெயர் அறியப்படாதவர்**

400. கோபத்தின் வார்த்தைகளால் உடைக்கப்பட்ட ஓர் இருதயத்தை சீர்ப்படுத்துவதைவிட அவ்வார்த்தைகளை பேசப்படாமலே விட்டு விடுவது நலமாகும். **பெயர் அறியப்படாதவர்**

401. கோபம் என்பது ஒருகளைச்செடி. வெறுப்பு என்பது ஒரு மரம். **புனித அகஸ்டின்**

50. சத்தியம்

402. நீ சத்தியத்தைப் பேசுவது சிலருக்குக் கஷ்டமாக இருக்கலாம். ஆனால் அதுவே உன் இஷ்டமாக இருக்கவேண்டும். **பெயர் அறியப்படாதவர்**

403. அன்பற்ற சத்தியம் மாய்மாலமானது, சத்தியமற்ற அன்பு மனிதத் தன்மையற்றது. **பெயர் அறியப்படாதவர்**

404. பொய்க்காக ஐக்கியப்படுவதைக் காட்டிலும் சத்தியத்திற்காகப் பிரிந்து செல்வது நல்லது. **பெயர் அறியப்படாதவர்**

405. சத்தியத்தைச் சொல்லாமலிருந்து அங்கீகரிப்படுவதைவிட, சத்தியத்தைச் சொன்னதால் புறக்கணிக்கப்படுவது மேல். **வாரன் வியர்ஸ்பி**

406. நாம் கெட்டதைக் கைவிடுவது மாத்திரமல்ல, சத்தியத்தைக் காண்பிக்க வேண்டும். இந்த உலகம் ஒன்றுமில்லை என்று நாம் மக்களுக்குச் சொல்கிறோம்: இந்த உலகம் ஒன்றுமில்லை யென்று நம் வாழ்க்கைகள் வெளிப்படுத்திக் காட்டட்டும். **ஜேம்ஸ் ஹட்சன் டெய்லர்**

407. சத்தியம் செய்ய நிதானமாக இருப்பவனே அதை நிறைவேற்று வதில் அதிக உண்மையுள்ளவன். **வின் ஜாக்ஸ் ரூசோ**

408. தேவனுடைய சத்தியம் படைக்கப்பட்டவைகளை அன்பினால் நியாயந்தீர்க்கிறது. சாத்தானுடைய சத்தியம் அவைகளை வெறுப்பினாலும் பொறாமையினாலும் நியாயந்தீர்க்கிறது. **டயட்ரிச் போகன்ஹெபர்**

51. சந்தர்ப்பம்

409. அசாதாரணமான சந்தர்ப்பங்களுக்காகக் காத்திருக்காதே. சாதாரணமான சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள். **ஆரிசன் ஸ்வெட் மார்டன்**

410. கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளும்போது கிடைக்கும் சந்தர்ப்பங்கள் அதிகமாகிப் போகின்றன. **ஸான்சூ**

411. இந்த உலகில் சாதிக்கிறவர்கள் எழுந்து நின்று சுற்றும் முற்றும் தமக்குத் தேவையான சரியான சந்தர்ப்பங்களைத் தேடுகிறவர்கள். அவர்களுக்கு அவை தென்படவில்லை என்றால் அவற்றை அவர்கள் படைத்துக் கொள்கிறார்கள். **ஜார்ஜ் பெர்னார்ட் ஷா**

52. சந்தோஷம்

412. உனது வாழ்வின் சந்தோஷம் என்பது உனது சிந்தனையின் தரத்தைப் பொறுத்து இருக்கிறது. **மார்கஸ் எரிலியஸ்**

413. தேவன் எனக்கு ஒரு வேலையைச் செய்வதற்குக் கொடுத்திருக்கிறபோது, அதை நான் மறுக்காமல் செய்து முடிப்பதில்தான் என்னுடைய சந்தோஷமிருக்கிறது. **C.T. ஸ்டட்**

414. வாழ்வில் ஒரே ஒரு சந்தோஷம் தான் இருக்கிறது. அது நேசிப்பதும், நேசிக்கப்படுவதும். **ஜார்ஜ் சான்ட்**

415. செயல், எப்போதும் சந்தோஷத்தைக் கொண்டு வராது. ஆனால் செயல் இல்லாமல் சந்தோஷம் இல்லை. **பென்ஞமின் திஸ்ரேலி**

416. சந்தோஷம் என்பது ஒரு பரிசு அல்ல, அது ஒரு விளைவு. கஷ்டம் என்பது ஒரு தண்டனை அல்ல, அது ஒரு விளைபயன். **இராபர்ட் க்ரீன் இன்கொர் சோல்**

417. சந்தோஷம் என்பது உன்னால் ஆன்மாக்களைப் பிடிக்க முடிகிற ஒரு அன்பின் வலையாயிருக்கிறது. **அன்னை தெரேசா**

418. உனக்காக யாருமில்லை என்று கவலைப்படுவதை விட, யாருக்கும் நீ பாரமாயில்லை என்று சந்தோஷப்படு.
பெயர் அறியப்படாதவர்

53. சமாதானம்

419. சமாதானம் எனும் நதி பரிசுத்தம் எனும் சிகரத்திலிருந்துதான் பாய்கிறது.
தாமஸ் வாட்சன்

420. ஒரு புன்னகையோடுதான் சமாதானம் ஆரம்பமாகிறது.
அன்னை தெரேசா

421. சமாதானம் என்பது நீடமையின் ஒரு ஒழுங்காகும்.
புனித அகஸ்டின்

422. வன்முறையினால் சமாதானத்தை மலரச் செய்துவிட முடியாது. முறையாகப் புரிந்து கொள்ளுதலில் தான் சமாதானப் பூ மலரும்.
ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

423. சமாதானம் என்பது ஜோதிகளின் பிதா, விசுவாசிகளின் இதயத்தில் ஏற்றிவைக்கும் ஒளி விளக்கு.
வில்லியம் ஹென்ட்ரிக்சன்

424. மன சமாதானத்தைப் பெறாமல் மனிதர்களிடம் சமாதானமாக இருக்க முயலும் எந்தவொரு முயற்சியும் சூம்பிப்போன காலுக்குப் பொன் காலணி பூட்டி நடக்க முயல்வதைப் போன்றதாகவே இருக்கும்.
ஜான் பணியன்

54. சவால்

425. சவால் இல்லாமல் வளர்ச்சி இல்லை. மாற்றம் இல்லாமல் சவால் இல்லை.
வாரன் வியர்ஸ்பி

426. வாழ்க்கையின் மிகப் பெரிய சவால் என்பது மனிதனின் மனிதனாக இருப்பதல்ல, தேவனின் மனிதனாக இருப்பதுதான்
சார்லி டி. ஜோன்

427. சவாலை எதிர்கொள்ளும் வழி, சவாலை எதிர்கொள்ள முடியும் என்று நம்புவதேயாகும்.
சி. ரான்டால் பாவெல்

428. உண்மையில் மனிதன் எதிர்கொள்ளும் வேதனையை எவ்வாறு கையாளுவது என்பதே ஒவ்வொரு கிறிஸ்தவனும் எதிர்கொள்ளும் மிகப் பெரிய சவாலாகும். **பெயர் அறியப்படாதவர்**

55. சபை

429. சபை தன்னைப் பற்றி மட்டுமே கவனமும், கரிசனையும் கொண்டிருக்குமானால், தேவனுடைய பார்வையில் அது கருத்தும் நோக்கமும் அற்ற சபை. **ரெயினார்டு போங்கே**

430. ஒரு விளக்கிற்கு விளக்குத்தண்டு தேவையிருப்பதுபோல, ஒரு மரத்திற்கு மண் தேவையிருப்பதுபோல, ஒரு மின்சார பல்பிற்கு அதை இணைத்திருக்கும் சாக்கெட் தேவையிருப்பதுபோல ஒரு கிறிஸ்தவ விசுவாசிக்கு சபை தேவை. **ரெயினார்டு போங்கே**

431. ஒரு சபைக்குள் உட்கார்ந்து கொண்டு, ஒரு சொகுசு வீட்டில் அங்க அசைவு எதுவுமின்றி ஓய்வெடுத்துக் கொண்டிருப் பதைப்போல் வாழும்படி இயேசு நம்மை அழைக்கவில்லை. நமக்கு ஒரு வேலை உண்டு. அது பொழுது போக்கல்ல. ஆனால் இந்த உலகத்தையே மாற்ற வேண்டிய, மிகப் பிரமாண்டமான வேலை. **ரெயினார்டு போங்கே**

432. மனிதகுலத்திற்கு சுவிசேஷத்தை அறிவிப்பதே சபையினுடைய உன்னதமான நோக்கமாகும். **உல்ஃப் எக்மன்**

433. ஒவ்வொரு விசுவாசியும் வளர்வதற்கும் ஊழியம் செய்வதற்குமான ஸ்தலம் சபையே. எல்லா வெளிப்பாடுகளும் கிடைக்கக்கூடிய இடமும் சபையே. **உல்ஃப் எக்மன்**

434. சபையின் குறிக்கோளான இலக்கு எழுப்புதலே. தேவ பிரசன்னத்தையும் அவரது மகிமையையும் அவருடைய ஜனங்களுக்கு வெளிப்படுத்துவதே அதன் கனியாகும். **உல்ஃப் எக்மன்**

435. திருச்சபையானது மேம்பட்ட முறைகளைத் தேடுகிறது. திருவுள்ளமோ மேம்பட்ட மனிதரைத் தேடுகிறது. **இ.எம். பவுண்ட்ஸ்**

436. சபை என்பது இரட்சிக்கப்பட்ட ஜனங்களின் ஐக்கியமாகும். அவர்கள் மத்தியில் கிறிஸ்துவின் தலைமைத்துவமானது, ஸ்தாபிக்கப்பட்ட நடைமுறை உண்மையாய் உள்ளது.
சகோ. பக்த்சிங்

437. சபையை பலர் பக்தியுள்ளவர்களுக்கான வழிபாட்டு ஸ்தலம் என்றுதான் எண்ணுகிறார்களேயன்றி, தங்களுக்குச் சரியான வழிகளைக் காண்பிக்கும் ஸ்தலமாக எண்ணுகிறதில்லை.
பெயர் அறியப்படாதவர்

438. சபை மாத்திரம் இல்லாதிருந்தால் என்றைக்கோ சாத்தான் இந்த உலகத்தை நரகமாக்கியிருப்பான். **ஸ்டான்லி ஜோன்ஸ்**

439. சபை ஒரு சரீரம், ஒரு கட்டிடம் அல்ல. சபை ஜீவனுள்ள அங்கம், ஒரு ஸ்தாபனம் அல்ல. **பெயர் அறியப்படாதவர்**

440. அன்பில்லாத சபை செத்த சபை. **ஜான் ஸ்டாட்**

441. தொழுகை எனும் நகையைத்தான் நவீன கால சபைகள் தொலைத்துவிட்டன.
A.W. டோசர்

442. தனது சபையைவிட இப்பூமியில் தேவனுக்கு வெகுமதியானது வேறு எதுவும் இல்லை.
ரிக் வாரன்.

443. சபையில் வாரா வாரம் மரித்தவர்களை உயிரோடு எழுப்புவதினால் தேவன் கிரியை செய்கிறார் என்றால், அது எப்படி நடக்கிறது என்று பார்க்க மக்கள் சபைக்கு எப்பொழுதும் வருவார்கள். இந்நிகழ்ச்சியைக் குறித்துப் பேசாத சபைகளையே நீ பார்க்க முடியாது. வெற்று சபையை எப்படி நிரப்புவது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறாயா? பதில் இங்கே இருக்கிறது. உன் லாசருவை எழுப்பு. **சாமுவேல் சாட்விக்**

444. கிறிஸ்துவின் பிரதான கட்டளையை நிறைவேற்ற உதவுவதில் தீவிரமாக ஈடுபடாத எந்த சபையும் தொடர்ந்து இயங்க அல்லது செயல்பட தன்னுடைய வேதாகம உரிமையை இழந்துவிட்டது.
ஆஸ்வால்டு ஜே. ஸ்மித்

445. கிறிஸ்துவின் மீது உறுதியான விசுவாசமும் உபத்திரவங்களைச் சகித்துக்கொள்ளும் மனப்பாங்கு இருக்குமானால் சபை மிக வேகமாக வளர்ச்சியடையும். **பெயர் அறியப்படாதவர்**

446. சுவிசேஷத்தை அறிவிக்காத எந்த சபையும் புதைபடிவமாகும். **ஆஸ்வால்டு ஜே. ஸ்மித்**

447. சபையானது மிஷனரிகளை அனுப்ப வேண்டும் அல்லது அழிய வேண்டும். **மென்டெல் டெய்லர்**

448. ஒரு சுகவீனமான சபைக்குச் சிறந்த மருந்து அதற்கு மிஷனரிபணி தாகத்தை ஏற்படுத்துவதுதான். **டேவிட் விலிங்ஸ்டன்**

449. உலக முழுவதும் முழு சுவிசேஷத்தை அறிவிப்பது முழு சபையின் முழுத்தொழிலாயிருக்கிறது. **சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்**

450. இன்றைய திருச்சபைகள் தேவனின் சித்தத்திற்கேற்ப செயல்படவில்லை. மனிதனின் சித்தத்திற்கேற்ப செயல்படுகிறது. **கே.எஸ். ஆமோஸ்**

451. அநேக சபைகள் இழந்து போன ஆத்துமாக்களை நேசிப்பதைவிட அவைகளின் பாரம்பரியங்களையே நேசிக்கின்றன. **பெயர் அறியப்படாதவர்**

452. சபையின் நோக்கங்களை உண்டுபண்ணுவது நமது வேலையில்லை, அவற்றை கண்டுபிடிப்பதுதான். **ரிக் வாரன்**

453. பிரதான அனுப்புதலுக்கும் கட்டளைக்கும் மிகுந்த ஈடுபாடு கொண்ட சபை மிகப் பெரிய சபையாக வளரும். **ரிக் வாரன்**

454. நிகழ்ச்சிகளினால் சபையை வளர்ப்பதிலே கவனம் செலுத்தாதீர்கள். செயலினால் மக்களை வளர்ப்பதிலே கவனம் செலுத்துங்கள். **ரிக் வாரன்**

455. சரிசமநிலையுடைய சபை ஆரோக்கியமான சபையாகும். **ரிக் வாரன்**

456. அநேக கிறிஸ்தவர்கள் சபையைத் தன் தேவைக்கு பயன்படுத்துகிறார்கள். ஆனால் அதை நேசிப்பதில்லை.
ரிக் வாரன்

457. மனிதர்களிடத்தில் கிறிஸ்துவைச் சேர்ப்பது சபையின் பணியல்ல, கிறிஸ்துவினிடத்தில் மனிதர்களை சேர்ப்பதுதான்.
டோரத்தி சேயர்ஸ்

458. இருக்கும் கிறிஸ்தவர்களைப் பராமரிப்பதிலேயே பல தலைமுறைகளாக, சபைகளின் ஊழியர் வளமும், பொருளாதார வளமும் செலவிடப்பட்டு வருகிறது. ஆனால் உண்மையில் கிறிஸ்துவின் சபைகள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்வதில் அல்ல, சபைக்கு வெளியே இருப்பவர்களை ஆதாயப்படுத்துவதில்தான் செலவு பண்ணப்பட வேண்டும்.
பேராயர் வேதநாயகம் சாமுவேல் அசரியா

459. அநேக கிறிஸ்தவர்கள் தேவனைத் தேடவோ, அவரைப் பிரியப்படுத்தவோ சபைக்குச் செல்கிறதில்லை. போதகரை பிரியப்படுத்தவும், கல்லறைக்காகவும் "உள்ளேன் ஐயா" என்று சொல்லுவதற்கும் சபைக்குச் செல்கிறார்கள். **கே.எஸ். ஆமோஸ்**

460. திருச்சபை, அது கிறிஸ்துவால் மீட்கப்பட்டவர்களின் சங்கமம். அது தேவனுக்குச் சொந்தமானது. தேவ அன்புக்கு அடிமைகளான இவர்கள் வேறே எதற்கும் எவருக்கும் அடிமைப்படாதவர்கள். **பெயர் அறியப்படாதவர்**

461. மிஷனரி சபையாக இல்லாத எந்த சபையும் இயேசு கிறிஸ்து வரும்போது மிஸ்ஸிங் (Missing) சபைாக இருக்கும் **F.B. மேய**

462. சபைகளின் ஜெப எழுச்சியைப் பொறுத்தே உலகம் முழுவது சுவிசேஷம் அறிவிப்பது சாத்தியமாகும். அனைத்து உல சபைகள் மறந்து விட்ட நொறுங்குதலின் ஜெபத்தை மீண்டு நடைமுறைப்படுத்துவதைப் பொறுத்தே அது நிகழ கூடியதாகும். **ராபர்**

463. கிறிஸ்துவின் நற்செய்தியை எஞ்சியுள்ள உலகத்துக்கு அறிவிக்காமல் இருப்பதே சபையின் மிகப்பெரிய பாவம்.
எமில் புர்னர்

464. சபையினுடைய வேலை மக்களை சந்தோஷப்படுத்து வதற்குத்தான் இருக்கிறது என்று நான் யோசிக்கவில்லை. ஆனால் மக்களை பரிசுத்தப்படுத்துவதற்குத் தான் இருக்கிறது என்று யோசிக்கிறேன். **சக் கால்சன்**

465. தேவனுடைய ராஜ்யம் மனிதர்களால் நிரம்பியிருக்கிற சபைகளினால் மேம்படப்போகிறதில்லை. சபையில் தேவனால் நிரம்பியிருக்கிற மனிதர்களாலேதான். **டன்கன் காம்பெல்**

466. சபை என்பது பரலோகத்திற்குச் செல்கிற வழியல்ல, அது பரலோகத்திற்கு வழிநடத்துகிற ஒரு தெரிவிப்புக்குறி.
அட்ரியன் ரோகர்ஸ்

467. சுவிசேஷம் விரைந்து பரவுவதற்குக் காரணம் மக்கள் நற்செய்தியைக் கேட்பதற்கு ஆர்வமாயில்லை என்பதல்ல. சபை சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு தகுதி இழந்து காணப்படுவதே மிக முக்கிய காரணமாகும். **பால் லிட்டில்**

468. கிறிஸ்துவின் சொல்லுக்கும் செயலுக்கும் தத்ரூப சாட்சி பகரவே சபை உலகில் வைக்கப்பட்டுள்ளது. **டோனால்ட் இங்கிலீஸ்**

469. நற்செய்தி எனும் விதையால் வளரும் மரமே சபையாகும்.
ஜோன்ஸ்

470. சபைக்கு தேவன் கொடுத்த பணி என்பது காணக்கூடாத தேவனை உலகத்துக்குச் காட்டுவதேயாகும். **வான்ஸ் ஹவ்னர்**

471. விசுவாசிகளைப் பாதுகாக்க அல்ல, விசுவாசியாயில்லாதவர்களை இரட்சிப்பதற்கே சபை. **வின்சி கோம்**

472. தீயைக் குறித்து நீங்கள் விளம்பரம் செய்ய வேண்டியதில்லை. தீ எரியும்போது ஒவ்வொருவரும் ஓடி வருவார்கள். அதுபோலவே உங்களுடைய சபை அக்கினியாய் இருந்தால் நீங்கள் அதைக்

குறித்து விளம்பரம் செய்ய வேண்டியதில்லை. ஜனங்கள் அதை முன்னதாகவே அறிந்து கொள்வார்கள். லியோனார்டு ரேவன்ஹில்

473. சபை என்பது மத சடங்குகளுக்காக மக்கள் கூடிவரும் கட்டிடமல்ல. அது இரட்சிக்கப்பட்ட ஜனங்கள், தேவனை ஆராதிக்கவும் ஒருவரையொருவர் ஐக்கியத்தால் கட்டியெழுப்பவும் ஒன்று கூடும் இடமாகும். டோனால்டு கிரே

474. கிறிஸ்து மனிதகுலத்துக்குச் செய்துள்ள தொண்டும், அதன் பயனாக கடவுள் அளித்துள்ள நம்பிக்கையும்தான் திருச்சபையின் முதன்மையான தனிச்சிறப்பாகும். பெயர் அறியப்படாதவர்

475. சபையின் சமாதானத்தைப் பாதுகாப்பதற்கான வழி அதனுடைய புனிதத் தன்மையைப் பாதுகாப்பதுதான். மேத்யூ ஹென்றி

476. பொருத்தமான சபையை ஒருவர் நாடலாம். சவால் என்னவென்றால் உண்மையான சபையை நாடுவதுதான். பேராயர் ஜோசப் மேக்கின்னி

477. உலகத்தோடு ஒத்துப்போகிற சபை எங்களுக்கு வேண்டாம். உலகத்தை அசைக்கிற சபை எங்களுக்கு வேண்டும். G.K. செஸ்டெர்சன்

56. சாதனை

478. கடவுளுக்கு ஏற்ற குடும்பத்தைக் கட்டுவதே சாதனைகளி லெல்லாம் சாதனை! பெயர் அறியப்படாதவர்

479. உங்கள் அனுபவத்தின் மூலம் கற்றுக்கொள்வது ஞானமுள்ள காரியமாய் இருந்தாலும், மற்றவர்களின் அனுபவங்களின் மூலம் கற்றுக்கொள்வது அதிக ஞானமுள்ள சாதனையாகும். ரிக் வாரன்

480. பெரிய காரியங்களைச் சாதிப்பதற்கு நாம் செயல்பட்டால் மட்டும் போதாது, கனவு காண வேண்டும். திட்டமிட்டால் மட்டும் போதாது, நம்ப வேண்டும். அனடோல் ஃப்ரான்ஸ்

481. சாதனைகள் படைப்பது பெலத்தினாலல்ல, விடாமுயற்சியால்தான். **டாக்டர் சாமுவேல் ஜான்சன்**

482. ஏதாவது சாதிக்க விரும்பினால், தவறுகள் இழைக்கத்தான் போகிறீர்கள். தவறிவிடுவோமென்று பயந்தால், நீங்கள் வாழ்க்கையில் வெற்றி காணவே முடியாது. **பில் வில்சன்**

483. மனிதனுடைய மிகப்பெரிய கண்டுபிடிப்பு தேவ சித்தத்தைக் கண்டுபிடிப்பதுதான். மனிதனுடைய மிகப் பெரிய சாதனை தேவனுடைய சித்தத்தைச் செய்வதுதான். **பெயர் அறியப்படாதவர்**

484. தேவனிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார். தேவனுக்காக அரிய காரியங்களைச் செய்யப்பார். **வில்லியம் கேரி**

485. பெருந்தன்மையாக தோல்வியடையத் துணிகிறவர்கள் மட்டுமே, எப்பொழுதும் பெரிய காரியங்களைச் சாதிக்கிறார்கள். **ராபர்ட் எஃப் கென்னடி**

57. சாத்தான்

486. சாத்தானைத் தவிர மனிதனுக்கு ஒரே ஒரு விரோதிதான் உண்டு. அவனுடைய அந்த எதிரி தனது சுயமே. **சகரியாஸ் டேனி ஃபோமம்**

487. பிசாசு ஒருபோதும் பரிசுத்தவான்களை உருவாக்க முடியாது. ஜெபிக்காத போதகர்களும் ஒருபோதும் மன்றாட்டு வீரர்களை எழுப்ப முடியாது. **லியோனார்டு ரேவன்ஹில்**

488. அழிப்பதற்கு சாத்தான் நம்மைச் சோதிக்கிறான். மகுடம் சூட்ட தேவன் நம்மைச் சோதிக்கிறார். **ஆம்ப்ரோஸ்**

489. சிங்கங்கள் நாட்டைச் சூறையாடிக் கொண்டிருக்கின்றன நாமோ சுண்டெலிகளை வேட்டையாடிக் கொண்டிருக்கிறோம். **எமில் ஜெபசிங்**

490. சாத்தானுக்குச் சேவகனாயிருப்பதற்கு அவன் உனக்குச் கொடுக்கும் மிக பெரிய வெகுமதி நரகமாகும். **பில்லி சன்டே**

491. செல்வம் எங்கே இருக்கிறதோ அங்கே சாத்தான் வருகிறான். எங்கே இல்லையோ அங்கே இருமுறை வருகிறான்.
பெயர் அறியப்படாதவர்

492. விசுவாசியின் இருதயத்தில் உண்டாகும் எரிச்சல் என்பது எப்பொழுதும் சாத்தானை நமக்கருகில் வைத்துக் கொள்ளக் கொடுக்கும் அழைப்பாகும். **பெயர் அறியப்படாதவர்**

58. சிந்தனை

493. உலகத்தில் மனோகரமான காரியங்கள் என்பது மனோகரமான சிந்தனைகளாகும். வாழ்வின் உயர்வான கலை என்பது அச்சிந்தனைகளை எவ்வளவு அதிகமாகப் பெறமுடியுமோ அதைப் பெறுவதாகும். **மான்டெய்க்னோ**

59. சிலுவை

494. சிலுவையை ஏற்றுக்கொள்வதன் பொருள் இந்த உலகத்திற்கு மரிக்கும் ஸ்தானத்தை ஏற்றுக் கொள்வதேயாகும்.
சகரியா பூணன்

495. மனப்பூர்வமாய் கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட உங்களுக்கு விருப்பம் இல்லையெனில், நீங்கள் அறிந்த கொண்ட தேவனுடைய பரிபூரண அன்பின் அறிவு அனைத்தும் வெறும் எழுத்துக் குவியலே. **சகரியா பூணன்**

496. இயேசு கிறிஸ்துவின் பரலோக ராஜ்யத்தை நேசிப்போர் அநேகர், ஆனால் அவர் சிலுவையைக் சுமக்க ஆசிப்பவர் சிலர்.
தாமஸ் அ.கெம்பிஸ்

497. உன் சிலுவையை நீ சந்தோஷமாய்ச் சுமப்பாயானால், அது உன்னைச் சுமக்கும். நீ சிலுவையை வெறுப்போடு சுமப் பாயானால் அது உனக்குப் பாரமாயிருக்கும். **தாமஸ் அ.கெம்பிஸ்**

498. பூலோகத்தில் சிலுவையை சுமக்காதவர்கள் பரலோகத்திலே கிரீடம் சூடாதவர்கள். **சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்**

499. சிலுவையோடு நம் பழைய வரலாறு முடிகிறது. உயிர்த்தெழுதலோடு நம் புதிய வரலாறு ஆரம்பமாகிறது. **வாட்ச்மேன் நீ**

500. கிறிஸ்துவின் மரணமில்லாமல் பாவத்தின் மரணமில்லை. **ஜான் ஓவன்**

501. தேவன், சிலுவையிலே அவருடைய அன்பை நிரூபித் திருக்கிறார். கிறிஸ்து சிலுவையிலே தொங்கி இரத்தம் சிந்தி மரித்தபோது, தேவன் இந்த உலகத்திற்குச் சொன்னது நான் உன்னை நேசிக்கிறேன். **பில்லி கிரஹாம்**

502. அநேக கிறிஸ்தவர்கள், இரண்டு திருடர்களிடையில் சிலுவையில் அறையப்படுகிறார்கள்: நேற்று செய்தவற்றைக் குறித்ததான வருத்தம் மற்றும் நாளைய தினத்தைக் குறித்ததான கவலை. **வாரன் வியர்ஸ்பி**

503. கிறிஸ்துவின் சிலுவையே நாம் பரலோகத்தில் பிரவேசிப் பதற்கான சாவி. **பெயர் அறியப்படாதவர்**

60. சுயம்

504. சுயசித்தம் நரகத்திற்கு அழைத்துச் செல்லுமேயொழிய ஒருபோதும் பரலோகத்திற்கு அழைத்துச் செல்லாது. **சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்**

505. தன்னைத்தான் வெறுப்பதில் தான் ஒரு மனிதனுடைய உண்மையான முன்னேற்றம் அடங்கியுள்ளது. சுய வெறுப்புள்ளவன் பூரண சுதந்திரவானும் மிகுந்த பாதுகாப்பு உள்ளவனுமாவான். **தாமஸ் அ. கெம்பிஸ்**

61. செயல்

506. செயல்வீரர் போல் யோசி, சிந்தனைச் செல்வன் போல் செயல்படு. **ஹென்றி பெர்க்சன்**

507. நன்றாக சொல்லப்படுகிறதைவிட நன்றாக செய்யப்படுகிறதே சிறந்தது. **பெஞ்சமின் ஃப்ராங்ளின்**

508. மிகப்பெரிய செயல்கள் திட்டமிடுவதைவிட சிறிய செயல்கள் செய்யப்படுவது மிகவும் சிறந்தது. **பீட்டர் மார்ஷல்**

62. சேவை

509. சேவை செய்யாதவன் கட்டளையிடத் தகுதியற்றவன். **ஜான் ஃப்ளோரா**

510. பெரிய சேவைகள் நம்மால் முடியும் செயல்களை வெளிப்படுத்துகிறது. சிறிய சேவைகள் நமது புனிதத் தன்மையை வெளிப்படுத்துகிறது. **ஜார்ஜ் ஹெச். மாரிசன்**

511. நாம் பிறருக்குச் செய்யும் சேவை என்பது பூமியிலே நாம் தங்கியிருக்கும் அறைக்குச் செலுத்தும் வாடகைப் பணம் ஆகும். **வில்ஃப்ரெட் கிரென்ஃப்பெல்**

512. சேவை செய்வதற்கு நம்மைவிட மேன்மையான ஒன்றை நாம் கண்டுகொள்ள வில்லையென்றால் அது நமக்கு நாமே சேவை செய்தில் தான் முடியும். **பெயர் அறியப்படாதவர்**

513. மனித வாழ்வின் நோக்கம் என்பது சேவை செய்வதற்கும் இரக்கப்படுவதற்கும் மற்றவர்களுக்கு உதவி செய்ய ஆவலாயிருப்பதுமாகும். **ஆல்பர்ட் ஸ்வெய்ட்சர்**

63. சோதனை

514. சோதனை நமக்குப் புறம்பாக நம்மை சுற்றிலும் இருக்கிற ஒன்றே ஒன்றுதான். நாம் சந்திக்கின்றோம். ஆனால் அது நமக்குள்ளிலிருந்துதான் ஆரம்பிக்கின்றது. **ரிக் வாரன்**

515. ஒவ்வொரு சோதனையும் நாம் தேவன் அருகில் மேலும் நெருங்கிச் சேரும் சந்தர்ப்பங்கள். **ஜான் குயின்லி**

516. என்னுடைய சோதனைகள் தெய்வீகத்தில் என்னுடைய ஆசிரியர்களாக இருக்கின்றன. **மார்டின் லூத்தர்**

517. சோதனை என்பது பலவீனத்திற்கோ நீங்கள் உலகப் பிரகாரமான வாழ்க்கை வாழ்கிறீர்கள் என்பதற்கோ அடையாளமல்ல, மாறாக

சாத்தான் உங்களை வெறுக்கிறான் என்பதற்கே அது அடையாளமாய் இருக்கின்றது. **ரிக் வாரன்**

518. கெட்ட சிந்தனை, துணியைப் பெட்ரோலில் நனைப்பதற்கு ஒப்பாயிருக்கிறது. சோதனை என்னும் தீப்பொறி அதன்மீது விழும்போது அத்துணியில் தீப்பற்றிக் கொள்ளும். **ஜார்ஜ் குட்மேன்**

519. நம்மில் மோசமானதை வெளிக்கொணருவதற்கு சாத்தான் நம்மைச் சோதிக்கிறான். ஆனால் நம்மில் சிறந்ததை வெளிக்கொணருவதற்கு தேவன் நம்மைச் சோதிக்கிறார். **வாரன் வியர்ஸ்பி**

520. கடுந்துன்பங்களால் தேவன் நம்மைச் சோதித்தறிகிறார். சாத்தான் சோதனைகளால் நம்மைச் சோதித்தறிகிறான். உலகம் அடக்குமுறையினால் நம்மைச் சோதித்தறிகிறது. **ஹென்றி ஸ்மித்**

521. நமக்கு நேர்கிற எல்லா காரியங்களுக்கும் நாம் பொறுப் பில்லாதவர்களாய் இருக்கலாம். ஆனால் அக்காரியங்கள் நமக்கு நேரிடும்போது (அவைகளுக்கு) எவ்வாறு செயல்படுகிறோம் என்பதற்கு பொறுப்புடையவர்களாக இருக்கிறோம். **பெயர் அறியப்படாதவர்**

522. சோதனைகள் என்பது விசுவாசத்தின் எதிரிகளல்ல ஆனால் தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார் என்பதை நிரூபிக்க அவை வாய்ப்புகளாகும். **பெயர் அறியப்படாதவர்**

64. ஞானம்

523. ஞானம் என்ற புத்தகத்தில் உள்ள முதல் அத்தியாயம் நேர்மையாகும். **தாமஸ் ஜெப்ஃபர் சன்**

524. உண்மையான ஞானம் என்பது உனக்கு ஒன்றும் தெரியாது என்று தெரிந்து கொள்வதாகும். **சாக்ரடீஸ்**

525. என்னால் மாற்ற இயலாத காரியங்களை ஏற்றுக் கொள்ள சாந்தமான குணத்தை எனக்குத் தாரும் ஆண்டவரே, நான்

காரியங்களை மாற்றுவதற்கு தைரியத்தை எனக்குத் தாரும். அவையிரண்டிற்கு உள்ள வேறுபாட்டை அறிய ஞானத்தைத் தாரும். **ரெய்ன் ஹோல்ட் நீபர்**

526. ஞானம் என்பது அடுத்து என்ன செய்வது என்பதைத் தெரிந்து கொள்வதாகும். ஒழுக்கம் என்பது அதைச் செய்வதாகும். **டேவிட் ஸ்டார் ஜோர்டன்**

527. நிறங்கள் மங்குகின்றன, கோவில்கள் பொடிந்து விழுகின்றன. பேரரசுகள் வீழ்ச்சியடைகின்றன. ஆனால் ஞானமான வார்த்தைகள் என்றென்றும் நிலைத்திருக்கின்றன. **எட்வார்ட்டு எல் தான்டைக்**

528. உனக்கு அறிவு தேவையென்றால் பள்ளிக்குச் செல். ஞானம் தேவையென்றால், முழங்கால்படியிட்டு ஜெபித்துப் பெற்றுக்கொள். அறிவு என்பது ஞானமல்ல. ஞானம் என்பது அறிவைச் சரியாக பயன்படுத்துவதாகும். **வான்ஸ் ஹாவ்நெர்**

529. நம்மை ஞானமாக்குவதற்கு இரண்டு காரியங்கள் அவசியமாயிருக்கின்றன. முதலாவது நாம் படிக்கிற புத்தகங்கள், இரண்டாவது நாம் சந்திக்கிற மக்கள். **சார்லஸ் ஜோன்ஸ்**

65. ஞானஸ்நானம்

530. ஞானஸ்நானம் என்பது தேவனுக்கு முன்பாகப் பணிவதும் அவரை நம் வாழ்வில் செயல்படச் செய்வதாகும். **மேக்ஸ் லுகாடோ**

66. தன்னடக்கமின்மை

531. தன்னடக்கமின்மை மிகக் கொடிய தீங்கு என்று சொல்லாவிட்டாலும் மனிதனுக்குத் தெரிந்த மிகக் கொடியவைகளில் ஒன்று. **ஆபிரகாம் லிங்கன்**

67. தன்னம்பிக்கை

532. இயற்கை உலகத்தில் தன்னம்பிக்கை என்பது தன்திற நம்பிக்கையாகும். ஆவிக்குரிய உலகில் அது தேவ நம்பிக்கையாகும். **ஆஸ்வால்ட் சாம்பர்ஸ்**

533. நான் தன்னம்பிக்கையை இழக்கவில்லை. ஏனெனில் கைவிடப்பட்ட ஒவ்வொரு தவறான முயற்சி, முன்னோக்கிச் செல்ல வேறொரு படி. **தாமஸ் எடிசன்**

68. தரிசனம்

534. தரிசனமென்பது மனிதர்களுடைய இருதயத்தில் ஓங்கி எரிகிறதான ஓர் உணர்ச்சி வசத்தைப் போலல்லாமல், ஒரு தேசத்திற்காகவும், இனத்திற்காகவும் மற்றும் மக்களுக்காகவும் பரலோகத்திலிருந்து சபைகளுக்காகக் கொடுக்கப்பட்ட ஒரு தெளிவான மற்றும் சுருக்கமான நீல அச்சுப்படிவம். **உல்ஃப் எக்மன்**

535. உலகத்தில் மிகமிக துயருள்ள மனுஷன் யாரென்றால் பார்வையிருந்தும் தரிசனமில்லாதவனே. **ஹெலென் கெல்லர்**

536. தரிசனம் உள்ள ஓர் உழைப்பாளியை எனக்குக் காட்டுங்கள். ஒரு நாள் சரித்திரத்தையே மாற்றப்போகும் மனிதன் அவன்தான் என்று நான் நிரூபிக்கிறேன். **ஜே.சி.பென்னி**

537. தரிசனமற்ற ஊழியம், ஜெபமற்ற வாழ்வு, திடனற்ற விசுவாசம், அன்பற்ற ஊழியர் இவைகளே இன்றைய ஊழியத்தின் தடைக்கற்கள். **பெயர் அறியப்படாதவர்**

538. தரிசனம் எங்கே இல்லையோ அங்கே நம்பிக்கை இல்லை. **வாஷிங்டன் கார்வெர்**

539. ஒரு தரிசனம் இல்லாமல் மக்கள் அழிகிறார்கள். அவ்வாறே மக்கள் இல்லாமல் ஒரு தரிசனம் அழிகிறது. **பெயர் அறியப்படாதவர்**

540. தேவன் மாத்திரமே ஓர் உலக தரிசனத்தைப் பெற்றிருக்கிறார். நாம் ஒரு குறிப்பிட்ட தரிசனத்தைத் தான் பெற்றிருக்கிறோம். அதிகமாக அவரைப் போல் ஆக முயற்சிக்கும்போது, நம்முடைய தரிசனமும் அவரைப் போலாகிறது. **பெயர் அறியப்படாதவர்**

69. தலைமைத்துவம்

541. தலைமைத்துவம் என்பது அதிகாரத்தைக் காட்டும் ஒரு விஷயம் அல்ல. ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தின் அனுமதியே தலைமைத்துவம். **உல்ஃப் எக்மன்**

542. தலைமை என்றால் பட்டங்களும் பதவியும் என்று நினைக்கிறார்கள். அதுவல்ல, பிறர்க்கு வழிகாட்டி, தலைமை தாங்கி நடத்தி அவர்களில் உறங்கிக் கிடக்கும் சிறப்பான தாலந்துகளை வெளிக்கொணரும் திறமையே தலைமை. **சீசர் கேஸ்டலானோஸ் D.**

543. நம்முடைய தலைமையின்கீழ் இருக்கும் மனிதர்கள் எல்லாரும் பட்டை தீட்டப்படாத இயற்கை வைரங்கள். அவர்களைப் பட்டை தீட்டி, பிரகாசிக்க வைப்பதே, தலைவனுடைய கடமை. **சீசர் கேஸ்டலானோஸ் D.**

544. ஒருவன் மிக உயர்ந்த தலைமையை அடைய விரும்பினால், அவன் செய்ய வேண்டிய தியாகமும் மிகப் பெரியதே. **பெயர் அறியப்படாதவர்**

545. தலைமைத்துவம் என்பது அதிகபட்ச சேவையைக் கொடுப்பதாகும். தலைமைத்துவம் என்பது பெருமளவிலான மிகப்பெரிய சுயநலமற்ற தியாகம் என்று சொல்லலாம். உலகத்திலேயே மிகப்பெரிய பணியாகிய நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ராஜ்யத்தைக் கட்டி எழுப்புவதில் முழுமையாக ஈர்க்கப்பட்டிருப்பது அது என்று சொல்லலாம். **ஜான் மாட்**

546. மக்களை வழி நடத்த, அவர்களுக்குப் பின் நட. **டாவோ ட்சு**

547. மேல் அதிகாரிக்கும் தலைவருக்கும் உள்ள வேறுபாடு : மேல் அதிகாரி "நீ போ" என்று சொல்கிறார். தலைவர் "நாம் போவோம்" என்று சொல்கிறார். **இ.எம். கெல்லீஸ்**

548. பெருந்தலைவர் என்பவர் பெரிய காரியங்களைச் செய்கிறவராய் இருக்கவேண்டிய அவசியமில்லை. பெரிய காரியங்களைச்

செய்கிற மக்களைக் கண்டடைகிறவரே பெருந்தலைவர்.
ரொனால்ட் ரீகன்

549. ஒரு குழு மிகச் சிறியதாக இருப்பினும் கிறிஸ்துவின் போதனைகளை அணுவளவேனும் மாற்றியமைக்காமல் காத்துப் பின்பற்றுமானால் அந்தக் குழு மூலம் இதுவரை நடந்திராத ஒரு பெரிய மறுமலர்ச்சியை வரலாற்றில் காண முடியும்.
பேராயர் சார்லஸ் ஸ்டீபன் நீல்

550. தனக்காக தியாக இருதயமும் பிறர்க்காக அன்புள்ள இருதயமும், தேவனுக்காக அனலுள்ள இருதயமும் கொண்டவர்களே நல்ல தலைவர்களாக ஊழியம் செய்ய முடியும். **புனித அகஸ்டின்**

551. ஒரு கிறிஸ்தவ தலைவரின் உண்மையான அறிகுறி என்பது பிற மக்களைக் கட்டியெழுப்ப முயற்சிப்பதும், பிற தலைவர்களை உருவாக்குவதுமாகும். **சக் கோல்சன்**

552. அநேக பெரிய தலைவர்கள் சமாதானத்தை உண்டுபண்ண முயற்சிக்கிறார்கள். ஆனால் அது ஏற்கனவே செய்யப் பட்டிருக்கிறது. அதை நாம் செய்வதற்கு தேவன் நம்மை ஏற்படுத்தியிருக்கிறார். நாம் செய்யவேண்டியது எல்லாம் சமாதானத்திற்குள் நுழைய வேண்டியது தான். **டி.எல். மூடி**

553. தலைவரின் வேகம்தான் அவர் குழுவின் வேகம்.
பெயர் அறியப்படாதவர்

70. தாலந்து

554. தாலந்து, தேவன் கொடுத்தது. நன்றியுள்ளவனாயிரு. தற்பெருமை, தன்னால் உண்டானது கவனமாயிரு.
தாமஸ் லா மான்ஸ்

71. திட்டம்

555. உங்கள் ஜீவியத்திற்கென, தேவன், ஒரு திட்டம் வைத்திருக்கக்கூடும்! ஆனால் அந்தத் திட்டம் நீங்கள் நொறுங்கி உடைபடும் வரை ஒருபோதும் நிறைவேறாது. **சகரியா பூணன்**

6. நீ திட்டமிட்டவை எல்லாம் செய்து முடித்து விட்டாய் என்றால், நீ சரியாகத் திட்டமிடவில்லை என்றுதான் அர்த்தம்.
எட்வர்ட் ஈவெரெட் ஹாலே

72. திருமணம்

7. திருமணம் என்பது முதல் அதிகாரம் செய்யுள் வடிவில் எழுதப்பட்ட மற்றும் மீதமுள்ள அதிகாரங்கள் உரைநடையில் எழுதப்பட்ட ஒரு புத்தகமாகும். **பீவர்லி நிக்கோல்ஸ்**

8. "நீ இதைச் செய்தால், நான் அதைச் செய்கிறேன்" என்ற வாசகத்திலே தங்களுடைய திருமணங்களை அடிப்படையாகக் கொள்ள முயற்சிக்கிற மக்களால் விவாகரத்து நீதிமன்றங்கள் நிரம்பி வழிகின்றன. **மேரி கார்ச்ன்**

9. ஒரு திருப்தியான திருமணம் முழுமையான வெகுளித்தனத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. அது விவேகமுள்ள மௌனத்தை அடிப்படையாகக் கொண்டது. **மாரீஸ் எர்னெஸ்ட்**

0. திருமணம் என்பது வைட்டமின்கள் போன்றது. ஒருவருக்கொருவர் தேவையான குறைந்தபட்ச தினசரித் தேவைகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வதாகும். **மேன்கே**

.. திருமணம் ஆவதற்குமுன் கண்களை நன்றாகத் திறந்துவை. அதற்குப் பின் பாதிக்கண் மூடியிருக்கட்டும். **தாமஸ் ஃப்புல்லர்**

2. திருமணத்தில் ஒற்றுமையைவிட மிக இனிமையானது ஒன்றுமில்லை மற்றும் கருத்து வேறுபாட்டைவிட மிகக் கடுந்துன்பம் ஒன்றுமில்லை. **மார்டின் லூத்தர்**

. மனைவி இல்லாத மனிதன் பூக்கள் இல்லாத மலர்க்கூடை போலிருக்கிறான். **பெயர் அறியப்படாதவர்**

. திருமணத்தில் வெற்றி சரியான துணையை வெறுமனே கண்டுபிடிப்பதனால் வருவதில்லை சரியான துணையாக இருப்பதில் தான் வருகிறது. **பார்நெட் ஆர் ப்ரிக்நெர்**

565. திருமணத்தில் மூன்று ரிங்குகள் (Rings) இருக்கின்றன. முதலாவது எங்கேஜ்மெண்ட் ரிங் (Engagement Ring), இரண்டாவது வெட்டிங் ரிங்(Wedding Ring), மூன்றாவது ஃசஃப்பரிங் (Suffering). **பெயர் அறியப்படாதவர்**

566. நான் இதுவரை சந்தித்த கிறிஸ்தவர்களில் மிகவும் சிறப்பானவர் யார் என்று யார் கேட்டாலும் என் மனைவி ரூத் என்று தான் நான் பதிலளிப்பேன். **பில்லி கிரஹாம்**

567. ஒரு சந்தோஷமான திருமணம் பயனுடைமைக்கும் சந்தோஷத்திற்கும் ஒரு புதிய தொடக்க முனையாகவும் வாழ்க்கையின் ஒரு புதிய ஆரம்பமாகவும் இருக்கிறது. **டீன் ஸ்டான்லி**

568. திருமணம் என்பது சரியான ஆளைக் கண்டுபிடிப்பது அல்ல, சரியான ஆளாய் இருப்பதாகும். **பெயர் அறியப்படாதவர்**

569. திருமணம் என்பது நீ திருப்தியடைதல் என்பதைக் காட்டிலும் நீ ஒப்புரவாதல் என்பதை அதிகமாய்க் குறிக்கிறது. **பெயர் அறியப்படாதவர்**

570. அன்பு செத்துவிட்டது என்று விவாகரத்து பெறுவது, கார் ஓட்டுவதற்கு பெட்ரோல் இல்லை என்று அதை விற்பனை செய்வதுபோலிருக்கிறது. **டயன் சோல்லி**

571. நேர்மைதான் சிறந்த திருமண காப்பீட்டுத் திட்டமாகும். **வில்லார்ட் ஹார்லி ஜூனியர்**

572. உலகில் நமக்கு மிகப்பெரிய முன்திருமண ஒப்பந்தம் இருக்கிறது? அது அன்பு என்று அழைக்கப்படுகிறது. **பெயர் அறியப்படாதவர்**

573. கிறிஸ்தவர்கள் திருமண உறுதிமொழியை மீறும்பொழுது, தேவன் அவர்களுக்காக ஏற்படுதின திருமண திட்டத்தை ஏற்க மறுக்கிறார்கள். **வால்டர் ஸ்கோடல்**

574. நல்ல திருமணப் பொருத்தம் பெற்றவன் சிறகுடையவன். மோசமான பொருத்தம் பெற்றவன் விலங்கிடப்பட்டவன்.
வில் ரோகர்ஸ்

575. திருமணம் அநேக துன்பங்களைக் கொண்டது. ஆனால் திருமணமாகாத நிலை இன்பங்களைக் கொண்டதில்லை.
சாமுவேல் ஜான்சன்

576. ஒரு திருமணத்தை வெற்றியடையச் செய்ய இருவர் தேவை. தோல்விக்கு ஒருவர் போதும். **ஹெர்பெர்ட சாமுவேல்**

577. சகிப்புத்தன்மையின் மிகவும் ஆழ்ந்த உணர்ச்சியைத் தூண்டத்தக்க எடுத்துக்காட்டு என்பது ஐம்பதாவது திருமண பொன் விழா கொண்டாடுவதுதான். **பெயர் அறியப்படாதவர்**

578. தேவனுக்குக் கீழ்ப்படியாத கணவனுக்கு எந்த மனைவியும் கீழ்ப்படிய விரும்புகிறதில்லை. **T.D. ஜேக்ஸ்**

579. நானும் ரூத்துவும் பரிபூரண திருமண வாழ்க்கையைப் பெற்றிருக்கவில்லை, ஆனால் ஓர் உயர்வான திருமண வாழ்க்கையைப் பெற்றிருக்கிறோம். திருமண தம்பதியர்களிடம் பரிபூரணத்தை எதிர்பார்ப்பது என்பது முற்றிலும் சாத்தியமற்றது.
பில்லி கிரஹாம்

580. ஒரு ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் தங்களைக் கொடுக்கிறவர்களாகவும் மன்னிக்கிறவர்களாகவுமுள்ள தன்மையுடைய இருவரின் ஐக்கியமே திருமணமாகும்.
ரூத் பெல் கிரஹாம்

581. என் திருமண வாழ்வில்தான் அகிம்சையின் கோட்பாட்டை முதலில் கற்றுக்கொண்டேன். **எம்.கே. காந்தி**

582. திருமண வாழ்வின் நோக்கம் என்பது ஒரே மாதிரியாக யோசிப்பதல்ல. ஒன்றாக இணைந்து யோசிப்பதுதான்.
இராபர்ட் சி.டாட்ஸ்

583. உங்களுக்கு எனது அறிவுரை என்பது நீங்கள் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்பதுதான். நீ ஒரு நல்ல மனைவியை

கண்டடைந்தால் சந்தோஷமாய் இருப்பாய். இல்லையென்றால் தத்துவஞானியாக ஆகிவிடுவாய். **சாக்ரடீஸ்**

584. சீர்கேடான திருமணங்கள் அவிசுவாசத்தை உண்டுபண்ணு கிறதில்லை. அவிசுவாசம்தான் சீர்கேடான திருமணங்களை உண்டுபண்ணுகிறது. **ஃப்ராங்க் பிட்மேன்**

585. கணவனும் மனைவியும் சண்டை போடுவது சில வேளைகளில் அவசியமாயிருக்கிறது. அப்போது தான் ஒருவரையொருவர் மிக நன்றாக புரிந்து கொள்கிறார்கள், தெரிந்து கொள்கிறார்கள். **கோதி**

586. அன்பு மிக வேகமானது போல் தோன்றுகிறது. ஆனால் அது எல்லா வளர்ச்சியிலும் மிக மெதுவாக இருக்கிறது. ஆணும் பெண்ணும் திருமணமாகி, காலாண்டு ஆகாதவரை பரிபூரண அன்பு என்ன என்பதை உண்மையாகவே ஒருவரும் தெரிந்து கொள்கிறதில்லை. **மார்க் ட்வைன்**

587. திருமணம் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயுள்ள ஓர் உறவு. அதில் சுதந்திரம் சமமானது. சார்ந்துள்ள நிலை பரிமாற்றமானது. கடமையுணர்ச்சி பரஸ்பரமானது. **லூயிஸ் கே. ஆன்ஸ்பாச்சர்**

588. வெற்றியுள்ள திருமணம் என்பது ஒவ்வொரு நாளும் திரும்பத் திரும்ப கட்டப்பட வேண்டிய ஒரு மாளிகையாகும். **ஆன்ட்ரூ மாயூரோய்ஸ்**

589. அன்பில்லாத திருமணம் எங்கேயிருக்கிறதோ அங்கே திருமணமில்லாத அன்பிருக்கிறது. **பென்ஜமின் ஃப்ராங்ளின்**

590. தம்பதிகளாக இருக்கும்போது கிடைக்கும் அதே அளவு மதிப்பு ஒரு திருமணமாகாதவனுக்குக் கிடைப்பதில்லை. அவன் முற்றுப்பெறாத குறைவுள்ள ஒரு மிருகம். அவன் கத்திரிக்கோலின் விந்தையான ஒரு பாதியை ஒத்திருக்கிறான். **பெஞ்சமின் ஃப்ரங்க்ளின்**

591. ஒரு நல்ல திருமணம் என்பது இரண்டு பேருக்கு இடையேயுள்ள ஒப்பந்தம் அல்ல. மூன்று (மணமகன், மணமகள், கிறிஸ்து) பேருக்கு இடையேயுள்ள ஒரு புனிதமான உடன்படிக்கையாகும். **டொனால்ட் டி. காஃப்மேன்**

592. திருமணம் என்பது யுத்தத்திற்குப் போகிறதுபோல ஒரு துணிவான செயலாகும். **G.K. செஸ்டெர்டன்**

593. திருமணம் தோற்றுப்போகிறதில்லை மக்கள்தான் தோற்றுப்போகிறார்கள். **ஹாரி எமெர்சன் ஃபாஸ்டிஸ்க்**

594. ஒரு நல்ல திருமணத்தைவிட அழகான மற்றும் நேசமான உறவு மற்றும் தோழமை வேறெதுமில்லை. **மார்டின் லூத்தர்**

595. திருமணத்தைத் தேவன் ஏற்படுத்தினார். எந்தவொரு அரசின் உட்பிரிவும் அதை உருவாக்கினதில்லை. எந்தவொரு சமூக அமைப்பும் அதை மேம்படுத்தியதில்லை. திருமணம், தேவனால் உணரப்பட்டு, அவரது மனதில் பிறந்த ஒன்றாகும். **மேக்ஸ் லுகாடோ**

596. தேவன், படைப்பால் ஒன்றிலிருந்து இரண்டை உண்டுபண்ணினார். அதே போல் மறுபடியும் திருமணத்தால் இரண்டிலிருந்து ஒன்றை உண்டுபண்ணினார். **தாமஸ் ஆடம்**

597. கணவனை விட்டு ஓடிப்போகும் பெண் பள்ளிக் கூடத்தில் இருந்து ஓடிப் போவதற்குச் சமம். **பெயர் அறியப்படாதவர்**

598. சரிசமத்தின் உரிமையுடைய கூட்டரசு வரிசையில் திருமணமாகாதவர்கள் வேலியடைக்கிற குச்சியாக வலிமையாக இருந்தாலும் அதைச் சிறப்பாக கட்டுகிறவர்கள் திருமணமானவர்களே. **தாமஸ் ஃபுல்லர்**

599. விருப்பமில்லாத திருமணம் ஓர் அவமதிப்பாகும். உணர்ச்சியில்லாத திருமணம் ஓர் அடிமைவேலையாகும். ஒரு திருமணத்தில் விருப்பம் உணர்ச்சி இரண்டுமே வேண்டும். **ரவி சகரியாஸ்**

73. திறமைகள்

600. திறமைகள் என்பது வரிக் குறைப்புகள் போன்றது. நாம் திறமைகளைப் பயன்டுத்துகிறோம் அல்லது இழக்கிறோம்.
சாம் ஜென்னிங்ஸ்

601. திறமை என்பது நீ ஒன்றைச் செய்ய தகுதியைப் பெற்றிருப்பதாகும். நீ என்ன செய்கிறாய் என்பதை உள்ளெண்ணம் தீர்மானிக்கிறது. அதை நீ எவ்வளவு நன்றாகச் செய்கிறாய் என்பதை உன் மனப்பான்மை தீர்மானிக்கிறது. **லூஹால்ட்ஸ்**

74. தீமை

602. தீமையே நடக்கும் என்று நம்புகிறவன் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கஷ்டங்களையே காண்கிறான், நன்மையே நடக்கும் என்று நம்புகிறவன் ஒவ்வொரு கஷ்டத்திலும் வாய்ப்புகளையே காண்கிறான். **வின்ஸ்டன் சர்ச்சில்**

603. யாருக்கும் தீமை செய்யாமலிருப்பது மட்டும் அறம் ஆகாது. நல்லது செய்யாமலிருப்பதும் தீமையே. **புனித அத்தனாசியார்**

604. கெடுதல் செய்பவர்களுக்கு எதிராக நாம் பயன்படுத்தும் கடைசியான ஆயுதம் அன்பு கூர்வதும் அவர்கள் தேவையைச் சந்திப்பதுமாகும். **லுயு ப்ரியோலோ**

605. தீமையைத் தீமையால் எதிர்க்காதே என்ற இயேசுநாதரின் போதனையை இந்த உலகம் கடைப்பிடிக்கவில்லை. அதனால் தான் இவ்வுலகம் இவ்வளவு தீமையுள்ளதாக இருக்கிறது.
சுவாமி விவேகானந்தர்

75. துன்பம்

606. கர்த்தர் எனக்குச் சில துன்பங்களைக் கொடாதிருந்தால் சங்கீதங்களின் பொருளையும் பரிசுத்த ஆவியானவரின் வரத்தையும், கிறிஸ்தவனுடைய கடமைகள் என்ன என்பதையும் ஒருபோதும் அறிந்திருக்கமாட்டேன். **மார்டின் லூத்தர் மனைவி**

607. மனிதருடைய மனதிலே தேவனை வைக்காமல் அதற்குப் பதில் உலகத்தை வைப்பதால், அது அவர்களைத் துன்பமாகிய புயல் வீசுகையில் இலைகள் அசைவதுபோல் பயந்து நடுங்கச் செய்கிறது.
ஆர்ச் பிஷப் லேட்டன்

608. துன்பப்படுதல் என்பது நம் கழுத்தில் கட்டிவிடப்பட்ட கல் போன்றது. ஆனால் அது முத்தெடுக்கக் கடலில் முழுகுகையில் நாம் நீரிலிருக்கக் கட்டிய கல்லே ஆகும்.
ரிச்சியர்

609. பல வேளைகளில் துன்புறுத்துவோரிடமிருந்து நாம் அடைகின்ற வேதனைகளில்தான் கிறிஸ்துவை மிக உறுதியாகக் கண்டடைய முடிகிறது.
புனித அம்புரோஸ்

610. துன்பங்கள் நமக்கு வருவதெல்லாம் நமது மனதைச் சமநிலையில் வைத்துக் கொள்வதற்குத்தான், வருத்தம் கொடுப்பதற்காக அல்ல.
H.W. பீச்சர்

611. துன்பம் மனிதர்களை உருவாக்குகிறது. செழுமை பயங்கர ஜந்துக்களை உருவாக்குகிறது.
விக்டர் ஹுகோ

612. துன்பம் உண்மைக்கு முதற்பாதை.
லார்ட் பிரையான்

76. துதி

613. என்னுடைய உடல் ஊனத்திற்காக நான் என் தேவனைத் துதிக்கிறேன். ஏனெனில் அப்படிச் செய்ததின் மூலம் நான் என்னை அறிந்துகொண்டேன், என் பணியை அறிந்துகொண்டேன், என் தேவனை அறிந்துகொண்டேன்.
ஹெலன் கெல்லர்

77. தேவன்

614. தேவனற்ற நிலையில் மனிதனின் அறிவும், வெற்றிகளும், கண்டுபிடிப்புக்களும், ஆவிக்குரிய வாழ்வில் பயனற்றவை என்பது உண்மை.
பில்லி கிரஹாம்

615. தேவனை நேசிப்பது என்பது ஒழுக்கங்களில் மிகப் பெரியது. தேவனால் நேசிக்கப்படுவது என்பது ஆசீர்வாதங்களில் மிகப்பெரியது. **பெயர் அறியப்படாதவர்**

616. தேவன் நம்மை அடிக்கும்போதும், தட்டிக் கொடுக்கும்போதும், அப்பாவாக அவர் கரம் நம்மீது இருப்பதை உணரலாம். **ஆப்ரகாம் ரைட்**

617. ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும் இறைவனின் திட்டமே. **புஷ்னெல்**

618. மனிதனில் உள்ள தேவனின் பிரசன்னமே மனசாட்சி. **ஸ்வீடன்பர்க்**

619. உலக காரியங்களுக்கு கொடுக்கிற உயர்வான மதிப்பு எப்போதும் தேவனுக்குக் குறைவான மதிப்பைக் கொடுக்கிறதைச் சுட்டிக்காட்டுகிறது. **பெத் மூர்**

620. தேவனோடு நெருங்கிய உறவு கொண்ட ஒருவன் எப்போதும் மனிதர்களால் மிரட்டப்படமாட்டன். **லியோனார்ட் ரேவன்ஹில்**

621. குழப்பமான மற்றும் உடைந்த ஒன்றிலிருந்து ஒன்றை அழகானதாகவும் பயனுள்ளதாகவும் உருவாக்குவதில் தேவன் ஒரு சிறந்த வல்லுநர். **போதகர் சார்லஸ் ஸ்வின்டோல்**

622. தேவன் என்ன விரும்புகிறோரே அதை ஒருவன் விரும்புகிற போதுதான் ஒருவருடைய இருதயம் உண்மையாய் இருக்கிறது. **தாமஸ் அக்குவினாஸ்**

623. ஒருவன் காத்திருப்பது நல்லது என்று தேவன் காண்கிறவரை, அவர் ஒருவரையும் காத்திருக்கச் செய்வதில்லை என்று நான் நிச்சயித்திருக்கிறேன். **சி. எஸ். லூயிஸ்**

624. குற்றம் செய்து சட்டத்தால் விடுவிக்கப்பட்டவர் சொல்கிறார்: தேவனுடைய விதிமுறைகளை உடைத்து விட்டேன். உண்மையாக தேவனை ஏற்றுக் கொண்டவர் சொல்கிறார்: நான் தேவனுடைய இருதயத்தை உடைத்து விட்டேன். **டிம் கெள்ளர்**

625. தேவனால் பயன்படுத்தப்பட நீ சித்தமாய் இருக்கவில்லையென்றால் சித்தமாயிருப்பதற்கு, உன்னைச் சித்தப்படுத்த தேவனிடம் கேள். **F.B. மேயர்**

626. மனிதன் நடப்பதற்கு தேவன் ஒரு பாதையை ஏற்படுத்தியிருக்கிறார். அப்பாதையில் ஒழுங்கும் நோக்கமும் இருக்கிறது. **பெயர் அறியப்படாதவர்**

627. நாம் பெறும் மிக உயர்வான அறிவு, தேவனை அறிகிற அறிவே. **பெயர் அறியப்படாதவர்**

628. தேவன், மனிதர்களைத் தண்ணீரில் ஆழமான இடத்திற்குக் கொண்டு செல்வது, மூழ்கடித்துக் கொல்வதற்கல்ல, அவர்களைச் சுத்தம் செய்வதற்கே. **ஜான். H. ஆக்கி**

629. தேவ உதவியில்லாமல் நான் வெற்றியடைய முடியாது. தேவ உதவி இருந்தால் நான் தோல்வியடைய முடியாது. **ஆப்ரகாம் லிங்கன்**

630. ஆதியிலே தேவன் மனிதனை தனது சாயலாகவே படைத்தார். பாவத்தில் விழுந்ததிலிருந்து மனிதன், இன்னும் அந்த சாயலை திரும்பப் பெற முயற்சி செய்து கொண்டிருக்கிறான். **பெயர் அறியப்படாதவர்**

631. தேவன் நம்மோடு இல்லை என்று தோன்றுகிறபோது, அவருடைய மிக முக்கியமான வேலையை நம்மில் செய்து கொண்டிருக்கிறார் என்பதினால்தான். **பெயர் அறியப்படாதவர்**

632. என்னைப் போல தேவனை யோசிக்கச் செய்ய முயற்சிப்பது எனது வேலையல்ல, ஆனால் ஜெபத்திலும், உபவாசத்திலும் தேவனைப் போல யோசிக்க முயற்சிப்பதுதான். **A.W. டோசர்**

633. தேவன் இல்லாமல் நல்ல சூழ்நிலைகளில் யாரெல்லாம் இருக்கிறார்களோ அவர்களுக்குச் சமாதானம் கிடைக்காது. தேவனோடு மோசமான சூழ்நிலைகளில் யாரெல்லாம் இருக்கிறார்களோ அவர்களுக்குச் சமாதானம் தேவைப்படாது. **ஜான் மேக் ஆர்தர்**

634. தேவனின் செய்தியை நாம் மாற்றும்போது செய்தியின் தேவனை நாம் மாற்றுகிறோம். **வாரன் வியர்ஸ்பி**

635. தேவ அன்பின் உண்மையான அளவு என்பது அவர் அளவில்லாமல் நம்மை நேசிப்பதுதான். **பெயர் அறியப்படாதவர்**

636. தேவன் நம்மை சுகமாக இருப்பதற்கு மட்டும் நம்மைத் தேற்றவில்லை, பிறறைத் தேற்றுபவர்களாக உருவாக்கத்தான். **டாக்டர் ஜான் ஹென்றி ஜே.ஹெச் ஜோவெட்**

637. தேவன் நம்மீது அன்பு கூர்ந்தது, நாம் அன்பு கூறப்படத்தக்கவர்கள் என்பதினாலல்ல, தேவன் அன்பாயிருப்பதினால்தான். **சி.எஸ். லூயிஸ்**

638. தேவனின் ஒழுக்க முறையின் நோக்கம் நம்மை தண்டிப்பதல்ல, நம்மை மறுரூபப்படுத்துவதற்கே. **ஜெர்ரி ப்ரஜ்ஜஸ்**

639. தேவன் இல்லாத வாழ்க்கை என்பது கூர்முனை இல்லாத சீவப்படாத பென்சிலைப்போன்றது. **பெயர் அறியப்படாதவர்**

640. என் கரங்களில் வைத்திருந்த எல்லாவற்றையும் நான் இழந்து விட்டேன். ஆனால் தேவனுடைய கரங்களில் நான் எதையெல்லாம் வைத்திருந்தேனோ அதைத்தான் நான் இன்னும் வைத்திருக்கிறேன். **மார்டின் லூத்தர்**

641. நம்மில் அநேகர் உடைந்த பொருட்களைத் தூக்கி எறிந்து விடுகிறோம். ஆனால் தேவனோ ஒரு பொருளைப் பயன்படுத்துவதற்குமுன் வழக்கமாய் அதை உடைக்கிறார். **பெயர் அறியப்படாதவர்**

642. நமது வெளிப்புறக் குறைபாடுகள் தேவனுக்கு நாம் கொடுக்கும் முன்னுரிமையை நினைவூட்டுவதாயிருக்கிறது. வெளிப்புற அழகின் ஏமாற்றத்திலல்ல, தேவன் குணத்தில் அக்கறை கொண்டவராயிருக்கிறார். **W. எர்வின் லூட்சர்**

643. பெரிய காரியங்களைத் தேடுவதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால் தேவனுக்குத் தேடாமல் உனக்காக தேடுவதுதான் தவறு. **ஜே. ஆஸ்வால்ட் சான்டர்ஸ்**

644. தேவன் உலகத்தை இரட்சிக்கவில்லை. ஏற்கனவே இரட்சித்து விட்டார். ஆண்களையும், பெண்களையும் இரட்சிப்பை உணரச் செய்வதே நமது பிரதான பணியாகும். **ஆஸ்வால்ட் சாம்பர்ஸ்**

645. தேவ கட்டளைக்குக் கீழ்ப்படிவதுதான் நாம் அவரிடத்தில் அன்பு கூர்கிறோம் என்பதற்கான ஒரே அறிகுறி. **ஃபெரி பிரிட்ஜ்**

646. தேவனுக்குப் பயப்படுதல் குறித்ததான குறிப்பிடத்தக்க காரியம் என்பது நீ தேவனுக்குப் பயப்படும்போது, வேறு எந்தவொன்றுக்கும் பயப்படாய். ஆனால் நீ தேவனுக்குப் பயப்படாத போது, வேறு எல்லாவற்றிற்கும் பயப்படுவாய். **ஆஸ்வால்ட் சாம்பார்ஸ்**

647. தேவன் நம் ஜெபங்களுக்குப் பதிலளிக்கிறார். காரணம் நாம் நல்லவர்கள் என்பதினாலல்ல அவர் நல்லவர் என்பதினாலேயே. **A.W. டோசர்**

648. ஒரு பாவியை தேவன் பயன்படுத்த முடியாதது போலவே, சோர்ந்து போனவனையும் தேவன் பயன்படுத்த முடியாது. **பில்லி கிரஹாம்**

649. தேவன் நம்மைப் பயன்படுத்த புத்திசாலிகளை எதிர்பார்க்கிற தில்லை, ஆனால் பரிசுத்தவான்களை எதிர்பார்க்கிறார். **ஆலன் ரெட்பாத்**

650. தேவனுக்கு நேர்ந்த பெருந்துயரம் என்னவென்றால் நாம் அவரை நேசிக்க, நம்மை வேண்டிக்கொள்ள தமது குமாரனை சிலுவையிலே மரிக்கச் செய்ததுதான். **ஜாக் ஹைஹல்ஸ்**

651. தேவன் ஆட்சி செய்கிற ஒரு நாடாக நாம் இருக்கிறோம் என்பதை நாம் எப்போதும் மறப்போமென்றால், பின்னர் நாம் அழிந்து போகிற ஒரு நாடாயிருப்போம். **ரொனால்ட் ரீகன்**

652. செய்ய முடியாத காரியங்களைச் செய்ய முயற்சிக்காத வரையில் தேவனின் உதவியாதாரங்களை நாம் சோதித்தறியவேமாட்டோம். **எப்.பி. ப்ரூஸ்**

53. தேவன், சுமக்க அரிதானதை நம்மீது சுமத்துபவர் அல்ல; நம் திராணிக்கு மேலாக நம்மைச் சோதிப்பவரும் அல்ல.
பெயர் அறியப்படாதவர்

54. எதிர்காலத்தின் கையில் என்ன இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. ஆனால் அந்த எதிர்காலம் யார் கையில் இருக்கிறது என்று எனக்குத் தெரியும். **பெயர் அறியப்படாதவர்**

55. தேவன் நாம் வெற்றியடைய நம்மை வேண்டுகிறதில்லை, நாம் முயற்சி செய்யவேண்டும் என்று மட்டும் வேண்டுகிறார்.
அன்னை தெரேசா

56. ஒரு கதாநாயகனாக இருந்து உலகத்தை நேசிப்பதைவிட தேவனை நேசித்து தான் இன்னாரென்று தெரியாமல் மரித்துப் போவது சிறந்தது. **எர்வின் லட்சர்**

57. தேவனோடு ஐக்கியம் கொள்ளாத எந்தவொரு நாளும் எனக்கு வீண் நாளே! **ரிச்சர்ட் புல்லர்**

58. மனித புத்திக்கு எட்டாத இரகசியம் என்பது கடவுள் மனிதனானதும், வார்த்தையானவர் மாம்சமானதுமாகும்.
சார்லஸ் வெஸ்லி

59. தேவனிடத்தில் ஐசுவரியமாய் இருப்பது வேறு. இவ்வுலகில் செல்வச் செழிப்போடு வாழ்வது என்பது வேறு.
பெயர் அறியப்படாதவர்

60. எப்போதாவது கடவுள் மனிதனாகவும் மனிதன் கடவுளாகவும் இருந்திருக்கக் கூடுமானால் இவ்விரண்டும் இயேசு கிறிஸ்துவிலேயே மட்டும் நனவாயிருக்கிறது. **லார்ட் பைரன்**

61. தேவன், மனிதனுக்கு என்ன திருவுளம்பற்றினார் என்பதை அறிய வேண்டுமானால் இயேசு வழியாக அவர் மனித குலத்துக்கு என்ன மொழிந்தார் என்பதை உற்றுப் பாருங்கள்.
சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்

62. மனிதர்கள் எல்லாருமே தேவ சாயலில் படைக்கப்பட்டவர்கள் என்பதால் பேதமின்றி எல்லாரும் நம் நேசத்திற்கு உரியவர்கள்.
பிரான்சிஸ் ஸ்கேபார்

663. வெளிச்சத்தில் தனிமையாக பணி செய்வதைவிட இருட்டிலே தேவனோடு இணைந்து பணியாற்றுவேன்.
மேரி கார்டினர் பிரெய்னார்ட்

664. இன்று தேவனின் தொடர் வழி நடத்துதலைப் பெற முடியாமல் பலர் தடுமாறுவதற்குக் காரணம் ஏற்கனவே தேவன் வெளிப்படுத்திய காரியங்களுக்குக் கீழ்ப்படியாதிருப்பதே.
பெயர் அறியப்படாதவர்

665. நான் மாறுதலடைந்தது என் சுய அறிவுத் திறமையல்ல. கடவுளே இதற்கு காரணம். **புனித சிப்ரியன்**

666. எனது மிகப் பெரிய கவலை தேவன் நம் பக்கம் இருக்கிறாரா இல்லையா என்பதல்ல. எனது மிகப் பெரிய கவலை நான் தேவன் பக்கம் இருக்கிறேனா என்பதுதான். **ஆப்ரகாம் லிங்கன்**

667. கர்த்தாவே, உம்முடைய இருதயத்துக்குப் பிரியமானால் என் இருதயத்தை உடைக்கச் சித்தமாயிருக்கிறேன்.
பெயர் அறியப்படாதவர்

668. தேவ பிள்ளைகள் அழிவுக்காக முன்குறிக்கப்படவில்லை, அவர்களை சிங்காசனத்தில் அமர்த்தவே தேவன் முன்குறித்திருக்கிறார். **பால் பில்ஹிமெர்**

669. உலகில் உள்ள ஒவ்வொரு சிருஷ்டியையும் நாம் நல்ல விதமாக நோக்குவோமானால், அது நமது இருதயங்களை கடவுள் பக்கமாக உயர்த்தும். **புனித பெலிக்ஸ்**

670. தேவனுக்காக களைக்கும்வரை உழைப்பது இத்துணை இனிமையாக இருந்தால், மோட்சத்தில் அவரை அனுபவிப்பது எவ்வளவோ அதிக இனிமையாயிருக்கும். **புனித காஸ்பர்**

671. தேவன் இல்லாமல் மக்களாட்சி நீண்ட காலம் நீடித்திருக்க இயலாது மற்றும் நீடிக்காது. **ரொனால்ட் ரீகன்**

672. நீங்கள் இல்லாமலிருந்தபோது உங்களை சிருஷ்டித்தவர், நீங்கள் இல்லாமலிருக்கும்போது உங்களை நியாயந்தீர்க்கமாட்டார்.
புனித அகஸ்டின்

673. தேவனின் ஒவ்வொரு பிரதான வேலையில் மூன்று நிலைகள் இருப்பதை நான் காண்கிறேன். முதலாவது இது கூடாத காரியம், பிறகு இது கடினமானது, அப்புறம் இது முடிந்தது.
ஜேம்ஸ் ஹட்சன் டெய்லர்

674. எனக்கு எதுவும் வேண்டாம், ஆனால் என் கர்த்தருக்காக எனக்கு எல்லாம் வேண்டும்.
வாட்ச்மேன் நீ

675. எவர் ஒருவர் நம்மைப் படைத்தாரோ, அவர் நம்மை பக்குவப்படுத்துவார்.
புனித அகஸ்டின்

676. இந்த உலகம் நமக்காக வைக்கப்பட்டிருக்கிற கடவுளுடைய பாடசாலை.
பேட்டன்

677. ஆண்டவர் நம்முடைய படகில் இருப்பாரானால் புயல்வராது என்று அர்த்தமல்ல. எந்தப் புயல் வந்தாலும் நம்முடைய படகை மூழ்கடிக்க முடியாது என்பதே உண்மை. அவர் எப்பொழுதும் நம்முடைய படகில் இருக்கட்டும்.
பெயர் அறியப்படாதவர்

678. தேவனைத் தெரிந்து கொள்வது என்பது அவரைப் பிறருக்குத் தெரியப்படுத்துவதாகும்.
லோரென் கன்னிங்கம்

679. மாம்சம் மனுஷீகத்தைப் பிறப்பிக்கிறது. தெய்வீகம் தெய்வீகத்தைப் பிறப்பிக்கிறது.
ஹோமர் டங்கன்

680. தேவனுடைய ராஜ்யம் என்பது தேவ வல்லமை நமது வாழ்வில் செயல்படுவதேயாகும்.
பெயர் அறியப்படாதவர்

681. தேவனோடு நீங்கள் உறவு கொண்டிருப்பது என்பது உலகத்தோடு ஓயாமல் போர் செய்வதாகும்.
சார்லஸ் ஃபுல்லர்

682. கடவுள் இல்லையென்றால் நாத்திகர்கள் இல்லை.
ஜி.கே. செஸ்டெர்டன்

683. ஒரு மனிதனைப் புரிந்து கொள்கிற ஒரு புழுவை எனக்குக் காட்டுங்கள். தேவனைப் புரிந்து கொள்கிற ஒரு மனிதனை நான் காட்டுகிறேன்.
ஜான் வெஸ்லி

684. கடவுளோடு நெருங்கி ஜீவித்தவர்கள் எவரும் வாழ்க்கையை வீணடித்தவர்கள் அல்ல. **ஹோரிடியஸ் போனர்**

685. தேவனை அறிந்திருக்கிறவர்கள்தான் வீர சாகசம் புரிவோர். தேவனைப் புகழ்வோர் அல்ல. **ரேவண்ட் ஹில்**

686. கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று ஏற்றுக்கொள்ளாவிட்டால் வாழ்க்கையின் நோக்கம் என்ன என்ற கேள்வி அர்த்தமற்றதாய் இருக்கும். **பேட்ரண்ட் ரஸ்ஸல் (நாஸ்திகர்)**

687. நீங்கள் தேவனாலும் தேவனுக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டீர்கள் என்பதைப் புரிந்து கொள்ளும் வரை ஒருபோதும் வாழ்க்கை உங்களுக்கு ஓர் அர்த்தத்தையும் தராது. **ரிக் வாரன்**

688. தேவன் பரிபூரணமானவர்களை மாத்திரமே பயன்படுத்தியிருந்தால், அவரால் ஒன்றையுமே செய்து முடித்திருக்க முடியாது. **ரிக் வாரன்**

689. மனிதனின் முகத்தை நாம் பார்க்கும்முன் தினமும் காலையில் தேவனுடைய முகத்தை நாம் பார்க்க வேண்டும். **டி.எல்.மூடி**

690. நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதைவிட நீங்கள் என்னவாய் இருக்கிறீர்கள் என்பதில்தான் தேவன் அதிகம் ஆர்வம் கொள்கிறார். **ரிக் வாரன்**

691. நாம் எவ்வாறு வேகமாய் வளர்கிறோம் என்பதைக் குறித்து நாம் சிந்திக்கையில், நாம் எவ்வாறு பலமாக வளர்கிறோம் என்பதைக் குறித்து தேவன் கரிசனையாய் இருக்கிறார். **ரிக் வாரன்**

692. நீங்கள் யாராக இருக்கிறீர்களோ அது தேவன் உங்களுக்கு அருளிய கொடை; நீங்கள் என்னத்தைச் செய்கிறீர்களோ அது நீங்கள் தேவனுக்கு அருளும் கொடை. **பெயர் அறியப்படாதவர்**

693. தன் சொந்த வலிமையினால் எவரும் பாதுகாப்பாக இல்லை, ஆனால் தேவ இரக்கத்தினாலும், கிருபையினாலும் ஒருவன் பாதுகாப்பாக இருக்கிறான். **புனித சிப்ரியன்**

694. தேவனுக்கென்று அனலாக எரிகிற விளக்காயிருங்கள்; அப்பொழுது நீங்கள் எரிகிறதைக் காண உலகம் திரண்டு வரும்.
சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்

695. ஆண்டவரில்லாமல் வாழ்கிறவனே அட்டத் தரித்திரன், ஆண்டவரோடு சேமமாய் வாழுகிறவனே கோடீஸ்வரன்.
தாமஸ் அ. கெம்பிஸ்

696. ஒருவன் தன்னைத்தானே தெரிந்து கொள்வதுதான் எல்லாப் பாடங்களிலும் மிகப்பெரிய பாடமாகும். ஒருவன் தன்னைத் தானே தெரிந்து கொள்கிறானென்றால், அவன் தேவனைத் தெரிந்து கொள்வான். தேவனை தெரிந்து கொள்தலில், அவன் தேவனைப் போல ஆவான். **புனித கிளமன்ட்**

97. ஒன்றுமில்லாததிலிருந்து தேவன் ஏதோவொன்றை உருவாக்குகிறார். ஆகையால் ஒருவன் தான் ஒன்றுமில்லை என்று சொல்லாத வரை, அவனிடமிருந்து, தேவனால் எதையும் உருவாக்க இயலாது. **மார்டின் லூத்தர்**

98. உன் வாழ்க்கை தேவன் கையில் இருக்கட்டும். ஏனெனில் உன் வாழ்க்கையைக் கொண்டு நீ தேவனுக்காகச் செய்வதைக் காட்டிலும் தேவன் அதிகமாக செய்ய இயலும். **டி.எல். மூடி**

99. தேவன் மனிதனை தன் சாயலாக உண்டாக்கினார். ஆனால் அந்நல்லுறவை மனிதன் தேவனுக்குத் திருப்பி கொடுத்து விட்டான். **ஃப்ரென்ச் தத்துவஞானி வோல்டையர்**

00. தேவன் செய்ய இயலாத பணியைச் செய்யவிரும்பும்போது, இயலாத ஒருவனைக் கொண்டு அதைச் செய்ய அவனைத் தயார் செய்கிறார். **சார்லஸ் ஆர். ஸ்வின்டோல்**

1. தங்களைத் தாங்களே முழுவதும் நிரப்பிக் கொண்டவர்களை தவிர ஒருவரையும் தேவன் வெறுமையாய் அனுப்புவதில்லை.
டி.எல். மூடி

78. தேவனின் அருள்

702. தேவனின் அருள் எனக்கு இருந்திராவிடில், நான் இறுதிவரை கல் மனிதனாக, எல்லோருக்கும் சுமையாகவே இருந்திருப்பேன்.

புனித வின்சென்ட் பவுல்

79. தேவ அன்பு

703. தேவ அன்பு, இருதயத்தில் பொங்கும் கடவுளின் வற்றாத நீர்வீழ்ச்சி! சமுதாயத்தைப் பசுமை வெளியாக்குவதே அதன் ஒப்பற்ற மாட்சி!

பெயர் அறியப்படாதவர்

80. தேவ ஊழியம்

704. தேவனுக்கு ஊழியம் செய்து கொண்டே நான் வாழ விரும்புகிறேன். அதிலே நான் மரிக்கவும் விரும்புகிறேன்.

டேவிட் லிவிஸ்டன்

705. தேவனுடைய ஊழியத்திற்குத் தகுதியுள்ள மக்களை அவர் அழைப்பதில்லை. அவர்கள் சித்தமாயிருக்கும்போது அழைத்து, அவர்களைத் தகுதியுடையவர்களாக்குகிறார்.

பெயர் அறியப்படாதவர்

706. நாம் தேவனுடைய பணிக்கென சென்ற திசையில் விலைக்கிரயம் ஏதும் இல்லையென்றால், தியாகம் ஏதும் இல்லையென்றால், நாம் ஊழியத்திற்கென அழைக்கப்பட்ட நமது அழைப்பு மெய்யாகவே தேவனிடத்திலிருந்த தான் வந்ததா? என்ற தீர்க்கமான கேள்வியை நமக்குள் கேட்டுப் பார்க்க வேண்டியது மிகவும் அவசியம்.

வாட்ச்மேன் நீ

707. தேவன் நமக்கென்று நியமித்துள்ள ஊழியத்தைச் செய்து முடிக்கும்வரை நாம் அனைவரும் சாகாவரம் பெற்றவர்களே. தேவனின் கரங்களில் நமது ஜீவன் இருப்பது எத்தனை ஆசீர்வாதம்.

ஜான் ஜி. பேட்டன்

81. தேவ கரம்

708. தேவனின் கரங்களில் நான் ஒரு எழுதுகோல்.

அன்னை தெரேசா

709. ஒவ்வொரு சோதனையிலும் போராட்டத்திலும், தேவனுடைய கரம் அதில் இருக்கிறது என்பதைக் காணும்படி தேவ கிருபை வேண்டுமென அவரை வேண்டிக்கொள். பின் அதை அறிந்த உடனே, அதற்கு ஒப்புக்கொடுக்கும்படி கிருபை வேண்டுமென வேண்டிக்கொள். ஒப்புக்கொடுப்பதற்கு மட்டுமல்ல அதை ஏற்றுக்கொள்வதற்கும், அதில் களிகூர்வதற்கும் தேவையான கிருபை வேண்டுமென வேண்டிக்கொள். நாம் இந்நிலையை அடையும்போது, நமது துன்பங்களுக்கு ஒரு முடிவு உண்டாகிறது என்று நான் கருதுகிறேன். **சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்**

82. தேவ நம்பிக்கை

710. தேவ நம்பிக்கை உள்ளவர்களுக்கு விளக்கம் தேவையற்றது. நம்பிக்கையற்றவர்களுக்கு விளக்கம் கொடுப்பது இயலாத ஒன்று. **பெயர் அறியப்படாதவர்**

83. தேவனுடைய நோக்கம்

711. நமது சென்றகாலத் தோல்விகளை நாம் தாழ்மையாக ஏற்றுக்கொள்ள சம்மதிப்போமானால் தேவனுடைய நோக்கத்தை நாம் நிறைவேற்ற அவை நமக்கு தடையாய் இருப்பதில்லை. **சகரியா பூணன்**

83. தேவ சமாதானம்

712. தேவ சமாதானம் என்பது தேவ சித்தத்திற்குத் தங்களை அர்ப்பணித்தோருக்கு மட்டுமே தேவன் தரும் ஈவு. **பெயர் அறியப்படாதவர்**

84. தேவனுடைய ராஜ்யம்

713. நம் இருதயத்தில் தேவனுடைய ராஜ்யம் இல்லையென்றால் உலகத்தில் வேறெங்கும் இருக்க முடியாது. **ஆல்பர்ட் ஸ்வேய்ட்சர்**

714. கிறிஸ்துவுக்காய் இழந்தவர் எவரும் தரித்திரரானதில்லை. தேவனுடைய ராஜ்ய மேன்மைக்காய் கஷ்டப்பட்டோர் நஷ்டப்பட்டதில்லை. **எமில் ஜெபசிங்**

85. தேவனுடைய வாக்குறுதி

715. தேவனுடைய வாக்குறுதியின் பூரணத்துவத்தைப் பெற்றுக்கொள்வது மனச்சாட்சியின் விசுவாசத்தை விட மேலானது கீழ்ப்படிதலாகும். **T.L. ஆஸ்பார்ன்**

716. தேவனுக்குக் கீழ்ப்படிய விரும்பும் விசுவாசிக்குச் சத்துருக்கள் உண்டு. **வாரன் வியர்ஸ்பி**

717. வேத வாக்குறுதிகள் தேவனால் கையெழுத்திடப்பட்ட காசோலை. **எஃப். பி. மேயர்**

718. தேவனுடைய வாக்குத்தத்தங்கள் ஒரு காசோலையைப் போல் நமக்கு வழங்கப்பட்டுள்ளது. அதை நீங்கள் பிரேம் செய்து தொங்க விடுவதைக் காட்டிலும், பரலோக வங்கியில் செலுத்தி வேண்டுதல் செய்து, காசோலையின் பணத்தைப் பெறுவதே ஞானமுள்ள செயலாகும். **சகரியா பூணன்**

719. வாக்குத்தத்தத்தைப் பார்க்கிலும் சுகமான தலையணை இல்லை. கிறிஸ்துவில் உள்ள உறுதியான விருப்பத்தைப் பார்க்கிலும் சுகமான படுக்கை எதுவும் இல்லை. **சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்**

86. தேவனுடைய வார்த்தை

720. காணப்படாதவைகளின் சித்திரத்தை நமக்குள் தீட்டி நிலவரப்படுத்துவது தேவனுடைய வார்த்தை. **சார்லஸ் கேப்ஸ்**

721. நவீன காலத்தில் பயன்படுத்தப்படும் லேசர் கத்தியைக் காட்டிலும் பிழையற்றதும் நம்பகமானதும் கூர்மையானதுமான தேவனுடைய வார்த்தையை நான் என் வாழ்நாள் முழுவதும் பயன்படுத்த விரும்புகிறேன். அதன் காரணமாக என்னுடைய அறுவைக் கத்தியை இனிப் பயன்படுத்தமாட்டேன் என்று முடிவு செய்துவிட்டேன். **ஒரு மருத்துவர் கூறியது**

722. தேவனுடைய வார்த்தை ஒன்றைத் தவிர நியாயந்தீர்க்கும் சட்டமாக வேறெதையும் நான் அடையாளம் காட்டுவதற்கு இல்லை. **ஸ்விங்ளி**

723. கடவுளின் வார்த்தை பரிசுத்தமானது மட்டுமல்ல, உங்களையும் பரிசுத்தவானாக மாற்ற வல்லது. **வில்லியம் பிளமர்**

724. தேவனுடைய வார்த்தையைக் குறித்து நாம் செய்ய வேண்டிய நான்கு காரியங்கள் உண்டு. முதலாவது, அது தேவனுடைய வார்த்தை என்று ஒப்புக்கொள்ள வேண்டும. இரண்டாவது, அவைகளை மனதில் பதித்துக் கொள்ளவேண்டும். மூன்றாவது, அவைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். நான்காவது அவற்றை உலகத்துக்கு அறிவிக்க வேண்டும். **வில்லியம் வில்பர்ஃபோர்ஸ்**

725. தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்தை யாரெல்லாம் நிராகரிக்கிறார்களோ, அவர்கள் மிக விரைவில் அருட்பணி மற்றும் சுவிசேஷப் பணிக்கான உத்வேகத்தை இழக்கிறார்கள். **பெயர் அறியப்படாதவர்**

726. ஆவிக்குறிய அறிவு என்பது தேவனுடைய வார்த்தைகளைக் கற்று தேவ சித்தத்தில் வளர்வதாகும். **பெயர் அறியப்படாதவர்**

727. நீ தேவ வார்த்தையை மட்டும் வைத்திருந்தால், நீ உலர்ந்து போவாய். நீ பரிசுத்த ஆவியை மட்டும் பெற்றிருந்தால் வெடித்துச் சிதறுவாய். ஆனால் அவை இரண்டையுமே பெற்றிருந்தால் முதிர்வு நோக்கி முன்னேறுவாய். **பெயர் அறியப்படாதவர்**

728. உலகம் மாறுகிறது. சூழ்நிலைகள் மாறுகின்றன. நாம் மாறுகிறோம். ஆனால் தேவனுடைய வார்த்தை ஒருபோதும் மாறுவதில்லை. **வாரன் வியர்ஸ்பி**

729. தேவனுடைய வார்த்தையைக் கைவிட்டு நீ வெற்றியாளனாய் இருப்பதைவிட, அதைக் கொண்டு நீ உண்மையுள்ளவனாயிருப்பதே சிறந்தது. **பெயர் அறியப்படாதவர்**

730. கண்களால் பார்க்கிறபடி நான் நடப்பதில்லை. காதுகளால் கேட்கிறபடி நான் நடப்பதில்லை. உணர்வினால் நான் நடப்பதில்லை. தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து நடக்கிறேன். **வாட்ச்மேன் நீ**

731. தேவனுடைய வார்த்தை நம்மில் வல்லமையோடு வாசம் செய்யவில்லை என்றால், நம்மிடமிருந்து தேவனுடைய வார்த்தை வல்லமையோடு புறப்பட்டுச் செல்லாது. **ஜான் ஓவன்**

732. என்னுடைய மனசாட்சி தேவனுடைய வார்த்தைகளால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளது. **மார்டின் லூத்தர்**

87. தேவ சித்தம்

733. தேவ சித்தத்தை ஏற்றுக் கொள்ளாததைத் தவிர, ஜெபத்தால் கிடைக்காதது வேறு ஒன்றுமில்லை. **பெயர் அறியப்படாதவர்**

734. ஆண்டவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிதலே நாம் சாய்ந்து கொள்ளக்கூடிய மிருதுவான தலையணை. **பெயர் அறியப்படாதவர்**

735. பல ஆண்டுகளுக்கு முன்பே என் வாழ்க்கையில் ஒரு நாள், ஜார்ஜ் முல்லர் இறந்துவிட்டார். இளைஞனாக இருந்தபோது என் வாழ்க்கையில் பல சாதனைகளாற்ற வேண்டுமென்ற நோக்கம் எனக்கும் இருந்தது. அவை யாவற்றிக்கும் ஒரு நாள் இறந்துவிட்டேன். அப்பொழுது ஆண்டவராகிய இயேசுவே, இன்றிலிருந்து எனது சித்தமல்ல, உமது சித்தமே என் வாழ்க்கையில் நிகழக்கடவது என்றேன். அந்த நாள் முதற்கொண்டு என்னை தேவன் அவருடைய கிரியைக்கென்று பயன்படுத்துகிறார். **ஜார்ஜ் முல்லர்**

736. தேவ சித்தத்தின் எல்லைக்கு வெளியே நமக்கென்று எந்தவித நோக்கமும் (Ambitions) இல்லையென்றால், நமக்கு ஒருபோதும் பிரச்சினையே இருக்காது. **சகரியா பூணன்**

737. தேவனே, என்னுடைய சித்தத்தை நான் செய்வதுபோல் உமது சித்தத்தைச் செய்ய எனக்கு அருள்புரியும். அப்போது என் விருப்பத்தை, வாஞ்சையை உமது சித்தமாக நிறைவேற்றுவீர். **புனித அகஸ்டின்**

738. தேவ சித்தத்திற்குத் தன்னை அர்ப்பணித்தல் என்பது அடிமைத்தனம் அல்ல, ஆசீர்வாதம். **பெயர் அறியப்படாதவர்**

739. தேவ சித்தத்தை அறிகிற நோக்கத்திற்காக தேவ வார்த்தையைப் படிப்பது என்பது மேன்மையான நற்குணங்களை உண்டாக்கி இருக்கிற இரகசியமான ஒழுக்க முறையாகும். **ஜேம்ஸ் W. அலெக்சாண்டர்**

740. தேவனுடைய சித்தத்தைப் செய்வது நமது அலுவல்களில் ஒன்றல்ல. அதுவே நமது ஆவல். **அந்திரேயா துஷ்**

741. தேவனுடைய சித்தத்தில் தோல்வி இல்லை. தேவனுடைய சித்தத்திற்கு வெளியே வெற்றி இல்லை. **ஜார்ஜ் வாஷிங்டன் ட்ரெட்**

742. தேவனுடைய சித்தத்திற்கு முழுஇருதயத்தோடு கீழ்ப்படியும் போதெல்லாம் நான் சந்தோஷமாக இருக்கிறேன். அப்போதுதான் எல்லாக் காரியங்களும் சரியான முறையில் நடைபெறுகின்றன. விசுவாச சோதனையிலும் கஷ்டங்களிலும் பாடுகளிலும்கூட மிகப் பெரிய ஆசீர்வாதமாகவே இருக்கிறது. **பண்டித ரமாபாய்**

743. நம்முடைய தேவனுக்கு நாம் ஆற்றுகிற பணிவிடை யாவற்றையும் அவர் பாராட்டினாலும், அவருடைய காலடியில் அமர்ந்து அவருடைய சித்தத்தைக் கற்றுக் கொள்வதே நமது முதலாவது தேவை. **R. எர்ட்மேன்**

744. தேவனுடைய சித்தத்தில் யாருடைய சித்தங்கள் அடக்கம் செய்யப்படுகிறதோ அவர்களுக்கு மனக்கசப்புகளோ அல்லது ஏமாற்றங்களோ இல்லை. **ஃப்ரெட்ரிக் வில்லியம் ஃபேபர்**

745. இரண்டு வகையான மக்கள் இருக்கிறார்கள். முதலாவது கடவுளிடம் "உம் சித்தம் செய்யப்படுவதாக" என்று சொல்பவர்கள். இரண்டாவது "சரிப்பா, உன் சித்தப்படியே செய்து கொள்" என்று கடவுளால் சொல்லப்படுபவர்கள். **சி.எஸ் லூயிஸ்**

746. தேவனுடைய சித்தத்தில் ஏதோ ஒன்றைத் தொலைப்பது சிறந்த ஒன்றைக் கண்டுபிடிப்பதாகும். **ஜாக் ஹைஹல்ஸ்**

747. பிதாவே, உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக என்ற ஒரு வாசகத்தில் என்னுடைய எல்லா வேண்டுதல்களையும் துறந்துவிட்டேன். **சார்ஸ் வெஸ்லி**

748. தேவனுடைய சித்தத்திலிருப்பதே மிகவும் பாதுகாப்பான இடமாகும். **பெயர் அறியப்படாதவர்**

749. தேவன் அவருடைய சித்தத்தை நிறைவேற்ற, சரியில்லாத சூழ்நிலைகளில், சரியான மக்களை எப்பொழுதும் பயன்படுத்துகிறார். **ரிக் வாரன்**

88. தோல்வி

750. தோல்வி மனப்பான்மை பெலவீனத்திற்கு நம்மை வழி நடத்துகிறது. வெற்றி மனப்பான்மை பெலத்துக்கு நம்மை வழி நடத்துகிறது. **வில்லியம் ஜேம்ஸ்**

751. தோல்வியை உன் மேற்பார்வையாளராக்காதே, ஆசிரியராக்கு. **சிக் சிக்லர்**

752. தோல்வி என்பது வெற்றியின் அஸ்திபாரம். வெற்றி என்பது தோல்வி மறைந்திருக்கும் இடம். **லவோசி**

753. தோல்விகள் என்பது உன்னைத் தூங்க வைக்கப் பாடும் தாலாட்டு அல்ல, நீ நிமிர்ந்து நிற்பதற்கான தேசீய கீதம். **பெயர் அறியப்படாதவர்**

754. தோல்வி என்பது அடைக்கப்பட்ட தெரு அல்ல, வளைந்து வளைந்து செல்லும் சுற்றுவழியாகும். **சிக் சிக்லர்**

755. நீங்கள் ஓர் அங்குலம் இடம் கொடுத்தால், தோல்வி அடைவீர்கள். ஆனால் ஒரு மயிரிழை அளவுகூட இடங் கொடாமல் உறுதியுடன் இருந்தால், பிறர் உங்களை மதித்துப் போற்றுவார்கள். தான் பின்பற்றும் கொள்கைகளை மறந்து, நம்பிக்கையை மூடி மறைத்து ஒருவன் சிறிதளவு தவறு இழைத்தாலும் அவன் ஒன்றுக்கும் பயனற்றுப் போய் விடுவான். உங்களை உலகம் அசைக்க இடம் கொடுத்தால், உங்களால் உலகத்தை அசைக்க முடியாது. **சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்**

756. சாக்குப் போக்கு சொல்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிற மக்களிடமிருந்துதான் 99 சதவீதம் தோல்வி வருகிறது.
ஜார்ஜ் வாஷிங்டன்

757. ஆயத்தமாவதற்குத் தோல்வியடைவதால், நீ தோல்வியடைவதற்கு ஆயத்தமாகிறாய். **பென்ஜமின் ஃப்ராங்ளின்**

758. தோல்வியைத் தழுவியவர்களில் பலரும் விட்டு விட்டுப் பின்வாங்கியபோது வெற்றிக்கு எவ்வளவு அருகில் இருந்திருக்கிறோம் என்பதைத் தெரிந்துக் கொள்ளாதவர்கள்தான். **தாமஸ் எடிஸன்**

759. வீழ்ச்சி என்பது வீழ்ந்து கிடப்பதற்கல்ல. எழுச்சி பெற்று எழுந்து முன்னேறுவதற்கான மற்றொரு தருணமே. **மேரி பிக்ஃபோர்ட்**

760. தோல்வி வெற்றிக்கு உத்தரவாதமல்ல, தோல்வியிலிருந்து பாடம் கற்றுக் கொண்டு அந்தப் பாடத்தை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது நம்முடைய சாமர்த்தியம்.
பெயர் அறியப்படாதவர்

761. ஒவ்வொரு துன்பமும், ஒவ்வொரு தோல்வியும் ஒவ்வொரு நெஞ்சு பொறுக்காத வேதனையும் தம்மோடு அதற்குச் சமமான அல்லது அதைவிடப் பெரிய பயனுக்கான விதையைச் சுமந்தே வருகின்றன. **நெப்போலியன் ஹில்**

762. பிறர் பின்வாங்கிப் போய்விடும்போது இன்னும் சிறிது தாக்குப் பிடிப்பதே பெரும்பாலும் வெற்றியை நிர்ணயிக்கிறது.
வில்லியம் ஃவெதர்

763. தோல்விகள் நமது திமிரையும் பிடிவாதத்தையும் அடித்து நொறுக்கிக் கீழ்ப்படிதலை எளிதாக்கும். **பெயர் அறியப்படாதவர்**

764. தோல்வியில் தோல்வியடைபவர்கள் இல்லை. வெற்றி பெறுவதற்கு விரும்பாததில்தான் தோல்வியடைபவர்கள் இருக்கிறார்கள். **ஜீசஸ் எம ட்ரேஜோ**

89. தைரியம்

765. தைரியம் இல்லாதவன் கூர்மையில்லாத கத்தியைப் போன்றவன்
பென்ஞமின் ஃப்ராங்ளின்

766. தைரியம் என்பது பயங்களை எதிர்கொள்வதாகும். முட்டாள்தனம் என்பது எதற்கும் பயப்படாததாகும். **டோட் பெலிமே**

90. நண்பன்

767. கடவுள் நம்முடைய நண்பராக இருக்கவில்லையானால், எந் ஒரு நண்பனும் நமக்கு உதவ முடியாது. **மார்டின் லூத்த**

768. பகைவனை மேற்கொள்ள மிகச் சிறந்த வழி அவனை உன் நண்பனாக்குவதுதான். **ஆப்ரகாம் லிங்க**

769. உண்மை நண்பன் உனக்காகத் தன் கைகளைச் கொடுப்பான். அே நேரம் உன் இருதயத்தையும் தொடுவான். **கேத்லி**

770. செழுமையில் நம் நண்பர்கள் நம்மை அறிந்து கொள்கிறார்கள் துன்ப நேரத்தில் நாம் நமது நண்பர்களை அறிந் கொள்கிறோம். **J.C. கால்லின்**

771. ஒரு நண்பனைத் தேர்ந்தெடுப்பதில் நிதானமாயிரு. மாற்றுவதி இன்னும் நிதானமாயிரு. **பென்ஞமின் ஃப்ராங்ளி**

772. உன்னைப் பற்றி எல்லாம் அறிந்திருந்தும் அதன் நிமித்த உன்னை நேசிப்பவன் எவனோ அவனே நண்பன் ஆவா
எல்பர்ட் ஹப்பா

773. செல்வத்தை இழக்க விரும்பாதவன், நல்ல நட்பை இழக்க கொடுத்து விடுவான். **பென்ஞமின் பிராங்களி**

774. உலகின் அதிபதியாய் இருந்தாலும், ஒரு நண்ப இல்லாவிட்டால் அவன் ஏழைதான். உலகத்தைக் கொடுத்து ஒ நண்பனை வாங்கினாலும் அது ஆதாயம்தா
பெயர் அறியப்படாத

775. செழுமை நண்பர்களை உருவாக்குகிறது. துன்பம் அவர்களைச் சோதனை செய்கிறது. **பப்லிலியஸ் சைரஸ்**

776. ஒரு பிரிவில் நட்பின் கடமையை மதிக்காதபோதுதான் நட்பு சோதனைக்கு உள்ளாகிறது. **M.K. காந்தி**

777. கஷ்ட காலத்தில் எந்தவித நிபந்தனையுமின்றி உதவி செய்வதே நட்பிற்குச் சோதனை. **M.K. காந்தி**

778. நண்பர்களோடு நரகத்திற்கு செல்வதைவிட தனிமையாய் பரலோகத்திற்குப் போவதையே விரும்புகிறேன். **ஆர். எ. டார்ரீ**

779. இயற்கை நம்மை நேசிப்பவர்களை நேசிக்கக் கற்றுக் கொடுக்கிறது. ஆனால் கிறிஸ்தவம் பகைவனை நேசிக்கக் கற்றுக் கொடுக்கிறது. **தாமஸ் ஃபுல்லர்**

91. நம்பிக்கை

780. நம்பிக்கை இழந்த நாட்களே ஒளிக்குச் செல்லக் கால்வைக்கும் கற்கள். அவைகள் கர்த்தரின் தருணங்களும் மனிதனுக்கு ஞானமளிக்கும் கல்விச் சாலைகளுமாம். **பெயர் அறியப்படாதவர்**

781. நம்பிக்கை என்பது மனதில் உறுதியாய் பற்றியிருக்கிற உண்மையாகும். விசுவாசம் என்பது இருதயத்தில் இருக்கிற நெருப்பாகும். **ஜோசப் ஃபோர்ட் நியூட்டன்**

782. நம்பிக்கையின் முதல் வேலை நமது நம்பிக்கையற்ற மனநிலையை நாம் தாங்கிக் கொள்ளக் கூடியதாக ஆக்குவது தான். **ராபர்ட் ப்ரால்ட்**

783. நம்பிக்கை என்பது சிறகுகள் உள்ள ஒரு ஜீவன். உன் ஆன்மாவின் ஜன்னலில் அது உட்காந்து கொண்டு வார்த்தைகள் இல்லாத ஒரு இசையைப் பாடிக் கொண்டிக்கிறது. அதன் இசை நிற்கப் போவதில்லை. **எமிலி டிக்சன்**

784. நீ வைத்திருக்கிற நம்பிக்கை நீ கீழே விழும்போது அது உன்னைத் தாங்கும். **பெயர் அறியப்படாதவர்**

785. வாழ்க்கை தரும் கஷ்டங்கள் கொடுமையானவை தான், ஆனால் மனிதனின் நம்பிக்கை அதைவிட வலிமையானது.
பெயர் அறியப்படாதவர்

786. காண்கிறது என்பது நம்பிக்கையல்ல. காண்கிறது என்பது காண்கிறதாகும். நம்பிக்கை என்பது காண்கிறதைக் குறித்து உறுதியான தன்னம்பிக்கையுடன் இருப்பதாகும்.
ஜார்ஜ் காம்பெல் மார்கன்

787. நம்பிக்கையற்ற சூழ்நிலைகளே இல்லை. சூழ்நிலைகளைக் குறித்து நம்பிக்கையில்லாமல் வளர்ந்திருக்கிற மக்கள்தான் இருக்கிறார்கள். **க்ளார் பூத் லூஸ்**

788. உன் மேலேயே நம்பிக்கையிருந்தாலொழிய ஒரு காரியத்தைச் செய்ய முயற்சிக்காதே ஆனால் மற்றவர் உன்மேல் நம்பிக்கையில்லை என்ற காரணத்தினால் அதை விட்டுவிடாதே.
ஸ்டுவர்ட் ஒயிட்

789. நம்பிக்கையற்றவர் ஒவ்வொரு வாய்ப்பிலும் கடுமையைக் காண்கிறார். நம்பிக்கையுள்ளவர் ஒவ்வொரு கடுமையிலும் வாய்ப்பைக் காண்கிறார். **வின்ஸ்டன் சர்ச்சில்**

790. நமது இருதயத்தின் மிகப் பெரிய பக்கவாதம் நம்பிக்கையின்மையே. **ஆஸ்வால்ட் சாம்பர்ஸ்**

791. நம்பிக்கை என்பது ஆத்துமாவில் அமர்ந்திருக்கும் இறகுகளுள்ள ஒரு காரியமாகும், அது வார்த்தைகளில்லாத இராகத்தை இசைக்கும், ஒருபோதும் நின்றுவிடாது. **எமிலி டிக்கின்சன்**

792. நாம் தேவன்மேல் வைத்திருக்கும் நம்பிக்கையானது, நாம் மற்ற மனிதன்மேல் வைத்திருக்கும் நம்பிக்கையைச் சார்ந்ததாயிருக்குமேயென்றால், நாம் சரிந்து விழும் மணலின் மேலிருப்போம்.
பிரான்சிஸ் ஸ்சாப்பர்

793. நம்பிக்கை என்பது எதிர்காலத்தின் இன்னிசையைக் கேட்பதாகும். விசுவாசம் என்பது அவ்வின்னிசைக்கு நடனமாடுவாகும்.
ரூபெம் ஆல்வ்ஸ்

794. நேசிக்கப்படுவதைவிட நம்பப்படுவதே மிகச் சிறந்த பரிசாகும்.
ஜார்ஜ் மேக்டொனால்டு

92. நரகம்

795. நரகம் எங்கே இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள நம் நேரத்தை வீணடிக்க வேண்டாம். அதிலிருந்து எப்படி தப்பித்துக் கொள்வது என்பதைத் தெரிந்து கொள்ள அதிக நேரத்தைச் செலவிடுவோம்.
ஜான் கிறிஸ்சோஸ்தம்

796. ஆலய மணியோசை கேட்கும் எல்லைக்குள் வாழ வேண்டுமென்று சிலர் விரும்புகின்றனர். ஆனால் நான் நரகத்திற்கு அருகாமையில், ஒரு கெஜத்தூரத்தில் மீட்புப் பணிபுரியும் ஒரு கடையை நடத்த விரும்புகிறேன். C.T.ஸ்டட்

797. நீங்கள் விண்ணுலகைக் குறித்துக் பேசும்போது உங்கள் முகம் பிரகாசிக்கட்டும், உங்கள் கண்கள் மகிமை பிரதிபலிக்க ஜொலிக்கட்டும். ஆனால் நரகத்தைக் குறித்துப் பேசும்போது உங்களுடைய சாதாரண முகம் போதும்.
சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்

798. கிறிஸ்து இருந்தால் கிடங்கும் சிங்காசனமாகும். கிறிஸ்து இல்லையேல் சிங்காசனமும் நரகமாகும்! மார்டின் லூத்தர்

799. அவிசுவாசம் பரலோக வாசலை அடைக்கிறது, நரக வாசலைத் திறக்கிறது!
பில்லி கிரஹாம்

800. ஒருவன் தான் நரகத்திற்குப் பாத்திரவான் என்று ஏற்றுக் கொள்ளாதவரை அவன் ஒருபோதும் பரலோகத்தில் செல்ல முடியாது.
ஜான்". எவெரிட்

801. நரகத்தைக் காலி செய்வேன். பரலோகத்தை ஆத்துமாக்களால் நிரப்புவேன்.
ரெயின்னார்ட் போங்கே

802. நரகம் என்பது மனித விருப்பத்திற்குக் கொடுக்கும் உண்மையான மதிப்பு மற்றும் மனித சுதந்தரத்தின் உண்மைக்குச் கொடுக்கும் தேவனுடைய மிகப்பெரிய பரிசாகும். பெயர் அறியப்படாதவர்

93. நற்குணம்

803. நற்குணம் என்பது ஒரு மரம் போன்றது, நற்பெயர் என்பது அம்மரத்தின் நிழல் போன்றது. நிழல் என்பது நாம் அதைக் குறித்து என்ன யோசிக்கிறோம் என்பதுதான். மரம்தான் உண்மையான காரியம். **ஆப்ரகாம் லிங்கன்**

804. நற்பெயர் என்பது ஆண்களும், பெண்களும் நம்மைக் குறித்து என்ன யோசிக்கிறார்கள் என்பதுதான். நற்குணம் என்பது தேவனும் தேவ தூதர்களும் நம்மைக் குறித்து என்ன தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான். **பெயர் அறியப்படாதவர்**

805. ஒருவனின் நற்குணம் அவனின் வாழ்க்கையின் அக்கிரமங் களுக்கு அவனுடைய எதிர்ச்செயல்களால் மிகவும் நுட்பமாக அளவிடப்படுகிறது. **பெயர் அறியப்படாதவர்**

806. முதலாவது உங்கள் நற்பண்புகளை வளருங்கள். பின்பு அந்த நற்பண்புகள் உங்களை வளர்க்கும். **பெயர் அறியப்படாதவர்**

94. நற்செய்திப் பணி

807. நற்செய்திப் பணியில் வெற்றியடைய தீட்டும் திட்டங்களில் மிகச் சிறந்த வழி இயேசு காட்டிய வழியே. அது கோதுமை மணிபோல் நிலத்தில் விழுந்து சாவதே. **கஜேடன் டி. ராக்லாந்து**

808. மனிதர்கள் வந்து போவார்கள். இறையரசின் கட்டுமானப் பணியோ ஒரு நாளும் ஸ்தம்பிப்பதில்லை. **பீட்டர் மார்ஷல்**

809. சுவிசேஷத்தைக் குறித்து இரண்டு காரியங்கள் செய்ய வேண்டியதிருக்கிறது. முதலாவது அதை நம்பு, இரண்டாவது அதன் படி நட. **சூசன்னா வெஸ்லி**

810. ஒவ்வொரு தலைமுறைக்கும் பிற மதங்களிலிருந்து ஆண்டவரை ஏற்றுக்கொண்டவர்களாலேயே இன்றளவும் கிறிஸ்துவின் சுவிசேஷம் மிகவும் சிறப்பாக அறிவிக்கப்பட்டு வருகிறதே தவிர, பாரம்பரிய கிறிஸ்தவர்களாலல்ல. **கே.எஸ்.ஆமோஸ்**

811. இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டான புதிய உடன் படிக்கையின் நற்செய்தி என்னவெனில், நியாயப்பிரமாணத் தினால் கூடாதது கிருபையினால் கூடும் என்பதுதான்.
சகரியா பூணன்

812. நாம் இந்த உலகத்தில் இருப்பதற்குக் காரணம் கிறிஸ்தவ அருட்பணியேயாகும். **ஆன்ட்ரு முர்ரே**

813. ஒரு முறைகூட சுவிசேஷத்தை கேட்டிராத எவரோ ஒருவர் இருக்கும்போது, இருமுறை சுவிசேஷத்தைக் கேட்பதற்கு யாருக்கும் உரிமையில்லை. **ஆல்வால்ட் ஜே. ஸ்மித்**

814. முற்றிலும் கிறிஸ்தவர்களல்லாத வேறு மதத்தினர் வாழ்கின்ற இடத்தில் ஊழியஞ் செய்ய விரும்புகிறேன். **ஃப்ரான்சிஸ் சேவியர்**

815. கிறிஸ்தவர்கள் சபையை ஜெபிக்கச் சொல்லி வருந்தி அழைத்து தூண்டியெழுப்பும் மனிதனையே அகில உலகின் சுவிசேஷ மயமாகுதலுக்கென்று மிகப்பெரிய பணியைச் செய்பவனாக நான் கருதுகிறேன். **ஆண்ட்ரூ முரே**

816. பிரதான கட்டளை என்பது கிறிஸ்தவத்தின் பிரதான வீரச் செயலாகும். **ரான் லூஸ்**

817. மதத்தோடு வீணாகப் பொழுது போக்குகின்றதை விட்டுவிட்டு, உலக மக்களைக் கிறிஸ்துவண்டையில் கொண்டவர ஏதாவது ஒன்றைச் செய்வோம். **பில்லி சன்டே**

818. சுவிசேஷப் பிரசங்கியாரின் முதல் கடமை என்பது தேவனுடைய சட்டத்தைத் தெரிவிப்பதும், பாவத்தின் இயல்பை காண்பிப் பதுமாகும். **மார்டின் லூத்தர்**

819. சட்டமும் சுவிசேஷமும் இரண்டு திறவுகோல்கள். சட்டம் என்ற திறவுகோல் குற்றத்தீர்ப்பின்கீழ் எல்லா மனிதர்களையும் சிறையிலடைத்துப் பூட்டுகிறது. சுவிசேஷம் என்ற திறவுகோல் சிறைக் கதவைத் திறந்து அவர்களை விடுதலை செய்கிறது.
வில்லியம் டின்டேல்

820. மதம், கடவுளுக்காக மனிதனின் தேடல்; சுவிசேஷம் என்பது மனிதனுக்காகத் தேவனின் தேடல், அநேக மதங்கள் இருக்கின்றன. ஆனால் ஒரு சுவிசேஷம் தான் இருக்கிறது.
ஈ. ஸ்டான்லி ஜோன்ஸ்

821. சுவிசேஷம் என்பது ஆய்வுரையோ அல்லது விவாதமோ அல்ல, அறிவிக்கப்படவேண்டிய செய்தி. **பால் ஆர்.ரீஸ்**

822. மற்றவர்கள் துர்ச்செய்தியை அறிவிக்கட்டும். நாம் நற்செய்தியை அறிவிப்போம். **உட்ரோ க்ரோல்**

823. கடுமையான அருட்பணி ஸ்தலம் எங்கேயிருக்கிறதோ, எங்கே அதிகமான அருட்பணியாட்கள் தேவைப்படுகிறார்களோ, அங்கே என்னை அனுப்புங்கள். **இராபர்ட் மாரிசன்**

824. உலகம் முழுவதையும் நற்செய்தியால் நிரப்புவது என்பது முதலும் முடிவுமாக நமது ஜெப எழுப்புதலைப் பொறுத்தே நிகழக் கூடியது. கிறிஸ்துவின் சீஷர்களாக நமது இருதயத்தின் அடித்தளத்தில் கொப்பளிக்கும் வேதனை கலந்த பெருமூச்சு கெஞ்சுதலின் ஜெபமாக நம்மில் வெளிப்படும் வரையில் இந்த உலகை நம்மால் அசைக்க முடியாது. **இராபர்ட் ஸ்பியர்ஸ்**

825. ஒரே ஒரு வாழ்வுதான், அது சீக்கிரம் கடந்து போகும். கிறிஸ்துவுக்கென்று செய்யப்பட்டது எதுவோ அதுவே நிலைத்து நிற்கும். **பண்டித ரமாபாய்**

826. இந்நாளில் நானும் கல்லூரியில் பட்டங்களைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் கடவுளே அதை எனக்குத்தர மறுத்துவிட்டார். அதே நேரத்தில் கிறிஸ்துவை அறியாத மக்களைப் பற்றிய ஒரு மனப்பாரத்தையும், கவலையையும் கர்த்தர் கொடுத்தார். **டேவிட் பிரெய்னார்ட்**

827. என் வாழ்நாளை கிறிஸ்துவின் மகிமைக்காக தத்தம் செய்து செலவழிக்கப்பட ஒப்படைக்கிறேன். **டேவிட் பிரெய்னார்ட்**

828. ஆண்டவரே, நான் என்னவிதமான பணியை, எங்கு செய்ய வேண்டுமென்று எனக்குத் திட்டமாய்த் தெரிவியும். நீர் எனக்குச்

சொல்லும்வரை இந்த அறையிலிருந்து வெளியேறவே மாட்டேன். **ஜேம்ஸ் ஹட்சன் டெய்லர்**

829. உண்மைக் கிறிஸ்தவன் எவனும் சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படுவதுமில்லை, சுவிசேஷம் வெட்கமடைய அவன் காரணமாய் இருப்பதுமில்லை. **பெயர் அறியப்படாதவர்**

830. சொல்லப்படாத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்க ஒவ்வொரு தலைமுறையில் தேவன் மனுஷர்களையும் (ஆண்களையும்) மனுஷிகளையும் (பெண்களையும்) அழைத்திருக்கிறார் என்று நான் நம்புகிறேன். அழைக்காதது தேவனில்லை. பதில் கொடுக்காதது மனிதனாயிருக்கிறான். **இசோபல்குன்**

831. சுவிசேஷத்தை அறிவிப்பது நம்முடைய விருப்பத்தில் இல்லை. அதை நாம் செய்யவில்லையென்றால் அது நம்முடைய மரணமாயிருக்கிறது. **பீட்டர் பார்சித்**

832. ஆண்டவர் உலகத்திற்கு சுவிசேஷம் சொல்லச் சொன்னாரே தவிர, அழகான சபைகளைக் கட்டக் சொல்லவில்லை. **ஆஸ்வால்டு ஜே. ஸ்மித்**

833. தேவனுக்கென்று ஏதாவது செய்ய வேண்டும் என்ற உணர்வு எங்கு பெலவீனமாய் இருக்கிறதோ அங்கு அருட்பணிகளுக்கான ஆர்வமும் பெலவீனமாயிருக்கும். **ஜான் பைபர்**

834. விசுவாச இரத்தத்தால் எரியூட்டப்பட வேண்டிய கிறிஸ்துவின் சுவிசேஷ விளக்காய் நில். **வில்லியம் டின்டேல்**

835. வெற்றிகரமான உலக சுவிசேஷ ஊழியத்திற்கு நமது குணாதிசயமே திறவுகோல். **ஷர்வுட் எட்டி**

836. மதம் மனிதனை சீர்படுத்தக் கூடும். ஆனால் சுவிசேஷம் மாத்திரமே முற்றுமாய் மாற்றக்கூடியது. **பெயர் அறியப்படாதவர்**

837. சுவிசேஷத்தில் நீ விரும்புகிறதை நம்புகிறாய் மற்றும் நீ விரும்பாததை நிராகரிக்கிறாய் என்றால் நீ நம்புகிறது சுவிசேஷம் அல்ல, நீ உன்னையே நம்புகிறாய். **புனித அகஸ்டின்**

838. தேவ சட்டம் என்பது நாம் என்ன செய்யவேண்டும் என்பதாகும். சுவிசேஷம் என்பது கடவுள் என்ன செய்வார் என்பதாகும்.
மார்டின் லூத்தர்

839. சுவிசேஷம் கீழ்ப்படிவதற்கு நல்ல அறிவுரையல்ல, நம்பப்படுவதற்கு ஒரு நற்செய்தி. **ஹாரி ஐரன்சைட்**

95. நன்றி

840. நன்றி சொல்தல், நற்பண்புகளிலெல்லாம் பெரிதானது மட்டும் அல்ல, மற்ற நற்பண்புகளின் மூலம் அதுவே.
மார்க்ஸ் டி சிசெரோ

841. நன்றி என்பது ஆன்மாவிலிருந்து மலர்கிற ஓர் அழகான பூவாகும்.
ஹென்றி வார்ட் பீச்சர்

842. நாம் நன்றி சொல்லும்போது, மிக உயர்வான பாராட்டு என்பது வார்த்தைகளைச் சொல்வதல்ல, அவ்வார்த்தைகளால் வாழ வேண்டும் என்பதை ஒருபோதும் மறந்து விடக் கூடாது.
ஜான் எஃப் கென்னடி

96. நித்திய வாழ்வு

843. கிறிஸ்துவின் நித்திய வாழ்வைப் பெற்றிருக்கிற நாம், நமது உலக வாழ்க்கையைத் தூக்கி எறிய வேண்டும். **ஜார்ஜ் வெர்வ**

844. நித்திய வாழ்வு என்பது மிக உயர்வான நன்மை. நித்திய மரண என்பது மிக உயர்வான தீமை. **புனித அகஸ்டில்**

845. தேவ மனுஷனுக்கு நித்தியம் என்பது சூரிய மறைவற்ற ஒ நாளாயிருக்கிறது. தீமை செய்பவனுக்கு அது சூரி உதயமில்லாத ஓர் இரவாயிருக்கிறது. **தாமஸ் வாட்ச**

97. நியாயத்தீர்ப்பு

846. நியாயத்தீர்ப்பின் நாளிலே, நாம் என்ன படித்திருக்கிறோம், என் கேட்கப்படமாட்டோம். நாம் என்ன செய்திருக்கிறோம் என் கேட்கப்படுவோம். **தாமஸ் அ. கெம்பி**

347. மக்களை நீங்கள் நியாயந்தீர்ப்பீர்களென்றால் அவர்களை நேசிக்க உங்களுக்கு நேரமிருக்காது. அன்னை தெரேசா

98. நேரம்

348. நேரம்தான் நமக்கு மிக அதிகமாக தேவைப்படுகிறது. ஆனால் அதைத்தான் மிக மோசமாக பயன்படுத்துகிறோம். வில்லியம் பென்

349. மனிதர்களை உயர்ந்த மனிதர்களாக்குவது சோதனை நேரம் தான், வெற்றி நேரமல்ல. தாமஸ் ஹூட்

350. கடிகாரத்தில் நேரத்தைப் பார்க்காமல் கடினமாக உழைத்ததால் தான் என்னால் புதிய பொருட்களைக் கண்டுபிடிக்க முடிந்தது. தாமஸ் ஆல்வா எடிசன்

351. நேரத்தைச் சரியாக பயன்படுத்தினாலும், பயன்படுத்தா விட்டாலும் நாம் (பின்) விளைவுகளை (நல்லது அல்லது கெட்டது) சந்தித்தே ஆக வேண்டும் . கே. எஸ். ஆமோஸ்

352. இடத்தைப் பிடித்துக்கொள்ளலாம். காலத்தையோ ஒருபோதும் பிடிக்க முடியாது. நெப்போலியன்

353. காலத்தை விரயமாக்குவது நமது பொருளைக் கொள்ளைக்காரன் கையில் நாமே எடுத்துக் கொடுப்பதைப் போன்றது. பெயர் அறியப்படாதவர்

354. உன் கையிலிருக்கும் இந்த ஒரு நாள், நாளைக்கு வரப்போகும் இரு நாளுக்குச் சமம். பெஞ்சமின் ஃபிராங்ளின்

355. நாம் செய்து முடிக்க வேண்டிய வேலைகள் ஏராளமாயிருக்கின்றன. ஆனால் காலமோ கொஞ்சம்தான் நமக்கு கையளிக்கப்பட்டுள்ளது. A.W. டோசர்

356. தேவன் நம் வாழ்க்கைக்கு வைத்திருக்கும் நித்தியமான நோக்கத்தை அறிவதற்கான ஒரே வழி நமக்கு இப்போது கையளிக்கப்பட்டுள்ள காலத்தைச் சரிவர பயன்படுத்துவதே. பெயர் அறியப்படாதவர்

857. நேற்று என்பது ரத்து செய்யப்பட்ட காசோலை. நாளை என்பது உறுதிமொழிக் கடன்பத்திரம். இன்று என்பதுதான் நீ வைத்து இருக்கும் பணம், எனவே ஞானமாகச் செலவிடு. **காய் லியான்ஸ்**

858. உண்ண, பருக, உறங்க, வெட்டியாய்ப் பேச, நமக்குப் போதுமான நேரமிருக்கிறது. ஆனால் தேவனுக்காய் உழைக்க நேரமில்லை என்பது எத்தனை பழுதுபட்ட சிந்தனை. **ஜான் ஓவன்**

859. நமக்கு அருளப்படுகிற ஒவ்வொரு மணித்துளியும் தேவனுடைய பணிக்கும் ஒரு வேளை சேர்த்து அருளப்படுகிறது. **ஃபிரட்ரிக்**

860. எவ்வளவு காலம் நாம் வாழ்கிறோம் என்பது முக்கியமான காரியம் இல்லை. நமக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் நாம் என்ன செய்கிறோம் என்பதுதான். **Dr தாமஸ் உல்கி**

861. தருணத்தை விரைவில் பயன்படுத்துபவனே முன் யோசனை உள்ள மேதாவி. **லாவேடர்**

862. வாழ்நாள் குறைவுதான். நேரத்தை வீணாக்கி அதை மேலும் குறைக்கிறோம். **விக்டர் ஹுகோ**

863. நம்முடைய கடந்த காலத்தை நினைவுகூர்வதால் ஞானமடைவதில்லை, ஆனால் நம்முடைய எதிர்காலத்திலுள்ள பொறுப்பினால் ஞானமடைகிறோம். **ஜார்ஜ் பெர்னார்ட் ஷாவ்**

864. உலகத்தில் தேவன் ஒரு மனிதனுக்குக் குறைவான நேரத்தையே கொடுத்திருக்கிறார். ஆயினும் இந்த குறைவான நேரத்திலேதான் நித்தியம் சார்ந்திருக்கிறது. **ஜெரேமி டெய்லர்**

99. நோக்கம்

865. அசாதாரண நோக்கம் உடைய சாதாரண மக்களால் தான் பெரிய காரியங்களை சாதிக்க முடிகிறது என்று நான் நம்புகிறேன். **சிக் சிக்ல**

866. ஒருவனுடைய வாழ்க்கையில் எந்தவொரு காரியத்தைக் குறித்துப் குறிக்கோள் மற்றும் நோக்கம் இல்லாததே, அவன் வாழ்க்கை யில் அவைகள் இல்லாததற்கும் காரணமாகும். **கே.எஸ். ஆமோஸ்**

867. குறிக்கோள்கள் குறித்து மிக முக்கியமான காரியம் என்பது ஒரு குறிக்கோளைக் கொண்டுள்ளதுதான். ஜி.எப். ஆல்பர்ட்

868. நோக்கமற்ற மனிதன், சுக்கானஅற்ற கப்பலுக்கு ஒப்பா யிருப்பான். அவன் ஓர் அனாதை அவன் ஒன்றும் இல்லை. அவன் ஒரு மனிதனே இல்லை. தோமஸ் காலைல்

869. பிரச்சினைகள் தேவனுடைய நோக்கங்களுக்குத் தடைகள் அல்ல, மாறாக அவைகள் தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகளாகும். ரிக் வாரன்

870. சிறந்த மனிதர்கள் நோக்கத்திற்காக வாழ்வார்கள். சாதாரண மனிதர்கள் விருப்பதிற்காக வாழ்வார்கள். வாஷிங்டன் இர்விங்

871. ஒரு தெளிவான நோக்கம் என்பது நாம் என்ன செய்கிறோம் என்பதைத் தெளிவுப்படுத்துகிறதில்லை. நாம் என்ன செய்யவில்லை என்பதைத் தெளிவுப்படுத்துகிறது. ரிக் வாரன்

100. பணம்

872. பண ஆசையை மேற்கொள்வதற்கு ஒரே வழி கொடுத்துப் பழகுவதுதான். ஜான் தாமஸ்

873. பணத்தை நாம் எவ்வாறு உபயோகிக்கிறோம் என்பது கர்த்தருடன் நாம் கொண்டுள்ள உண்மையான உறவைக் காட்டும் அடையாளம் ஆகும். பெயர் அறியப்படாதவர்

874. பணம், ஓர் அதிசயமான சேவகர், பயங்கரமான குரு மற்றும் அருவருக்கத்தக்க கடவுள். ஜான் வெஸ்லி

875. தேவனுடைய பணிக்காக செலவிடப்பட்ட பணம் என்பது நித்திய வாழ்வுக்காகக் கொடுக்கப்பட்ட முதலீடு ஆகும். பெயர் அறியப்படாதவர்

876. கொஞ்சம் பணம் கிடைக்கும்போது புத்தகங்களை வாங்கு கிறேன். மீதமிருந்தால் துணியும் ஆகாரமும் வாங்குகிறேன். டிரைடெரியஸ் எராஸ்மஸ்

101. பண்பு

877. பிறர் மீது அக்கறை கொண்டிருப்பது மனிதப் பண்புகளிலேயே மிகச் சிறந்த பண்பாகும். **ஃப்ரெட்ஹாலோஸ்**

102. பணிவு

878. பணிவு என்பது நுண்ணறிவான சீஷனின் ஓர் அடையாளமாகும். **புனித தாமஸ் அக்குவினாஸ்**

879. பணிவு தான் எல்லா நற்பண்புகளுக்கும் உறுதியான அஸ்திபாரம். **காங் ப்யூசி**

880. மற்றவர்கள் நம்முடைய குற்றங்களைக் கண்டுபிடித்து நம்மைக் கண்டிப்பது அநேக சமயங்களில் நமக்கு அதிக பிரயோஜன மாயிருக்கும். தாழ்மை நமக்குள் பெருகுவதற்கும் அது இடமாகும். **தாமஸ் அ. கெம்பிஸ்**

881. தாழ்மை என்பது உங்களைக் குறித்துக் குறைவாக நினைப்பது அல்ல, உங்களை ஒன்றுமில்லையென்று நினைப்பதாகும். **ரிக் வாரன்**

882. தாழ்மை என்பது உன்னைக் குறித்துத் தாழ்த்தி யோசிப்பதில்ல, நீ தாழ்மையாய் இருக்கிறாய் என்று யோசிப்பது தான். **சி.எஸ் லூயிஸ்**

883. உண்மையான தாழ்மை என்பது பொய்யான தன்னடக் கத்தைவிடத் தன்னை மறந்து பிறர் நலத் தொண்டு மனப்பான்மையை அதிகமாக கொண்டுள்ளதைப் போன்றது. **சி.எஸ். லூயிஸ்**

884. ஓர் உண்மையான உயர்ந்த மனிதனின் முதல் சோதனை அவனுடைய பணிவைக் குறித்ததாய் இருக்கிறது. **ஜான் ரஸ்கின்**

885. தேவ தூதர்களைப் பிசாசுகளாக மாற்றியது பெருமையாகும். மனிதர்களைத் தேவ தூதர்களாக மாற்றுவது தாழ்மையாகும். **புனித அகஸ்டின்**

103. பயம்

886. பயப்படாமல் இருப்பதுதான், நாம் எப்போதுமே வீழ்ச்சியடையாமலிருப்பதற்குச் சிறந்த வழி.
வில்லியம் கென்கின்

887. பயம் ஒரு மனிதனை ஆபத்திலிருந்து காக்கும், ஆனால் தைரியம் உனக்கு ஆபத்தில் துணை நிற்கும். **தாமஸ் ஃபுல்லர்**

888. தேவனுக்குப் பயப்படுவது என்பது தேவனோடு பயபக்தியோடு இருப்பதாகும். தேவனைக் குறித்துப் பயப்படுவது என்பது தேவனை விட்டு விலகி ஓடுவதாகும். **காரோல் ஈ. சிம்காஸ்**

889. தேவனுக்குச் சிறிதளவு மட்டுமே பயப்படுகிறதினால் மனிதர்களுக்கு நாம் அதிகமாக பயப்படுகிறோம்.
வில்லியம் கர்னல்

890. ஆபத்துக்கள் பயங்களைக் கொண்டுவருகின்றன. அதிக பயங்கள் ஆபத்துக்களைக் கொண்டுவருகின்றன. **ரிச்சர்ட் பாஸ்டர்**

104. பரலோகம்

891. பரலோகம் என்பது ஆயத்தமான மக்களுக்கு ஏற்ற இடமாகும்.
லூயிஸ் ஸ்பெரி சேபெர்

892. இன்றைய குழந்தைகள் சந்திரனுக்குச் செல்வதைக் குறித்து அதிகம் கற்றுக்கொள்கிறார்கள். ஆனால் பரலோகத்திற்குச் செல்வதைக் குறித்து மிகக் குறைவாகவே கற்றுக் கொள்கிறார்கள். **டேவிட் ஜெரேமையா**

893. என்னுடைய வீடு பரலோகத்திலிருக்கிறது. இந்த உலகத்தின் மூலமாக அதை நோக்கிப் பயணிக்கிறேன். **பில்லி கிரஹாம்**

105. பரிசுத்த ஆவியானவர்

894. பரிசுத்த ஆவியானவர் எங்கே இருக்கிறாரோ அங்கே செயல்பாடும் இருக்கிறது. **கேத்ரின் குல்மேன்**

895. இயேசுவின் சீஷர்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவதற்கு முன்பும் அற்புதங்களைச் செய்தார்கள், ஆனால் பரிசுத்த ஆவி யால் நிரப்பப்பட்ட பிறகு உலகத்தையே மாற்றினார்கள். **சாட் ஃபிஷ்சர்**

896. பரிசுத்த ஆவியானவரைவிட மிகச் சிறந்த சுவிசேஷகர் இந்த உலகத்தில் இல்லை. **டி. எல்.மூடி**

897. சிலுவை பொறுப்பை நமக்கு கொடுக்கிறது. பரிசுத்த ஆவியானவர் அனுபவத்தை நமக்குக் கொடுக்கிறார். **வாட்ச்மேன் நீ**

898. பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் தேவனை நேசிக்கவோ அல்லது அவருடைய பிரதான கற்பனைகளைக் கைகொள்ளவோ முடியாது. **புனித அகஸ்டின்**

899. தேவ ஆவி இல்லாமல் நாம் ஒன்றுமில்லை, காற்றோட்டம் இல்லாத கப்பல்களைப் போல இருக்கிறோம். நாம் பயனற்றவர்களாயிருக்கிறோம். **சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்**

900. உனது சொந்த பெலத்திலே, தேவனுடைய ஊழியத்தைச் செய்வது என்பது எல்லா வேலையிலும் மிகவும் சோர்வானதும், குழப்பமானதும், வெறுமையானதும் ஆகும். ஆனால் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு ஊழியம் செய்யும் போதோ, நம்மால் அவ்வூழியத்தைத் தங்கு தடையின்றிச் செய்ய முடிகிறது. **கூரி டென் பூம்**

901. பரிசுத்த ஆவியானவர் கடவுளின் வார்த்தை எனும் கருவியைக் கொண்டே ஒவ்வொரு கிறிஸ்தவனையும் செதுக்கி சீர்படுத்துகிறார். **ராபர்ட் ஹார்ன்**

106. பக்தி

902. புத்தியில்லாத பக்தி வெறும் சடங்கு. பக்தியில்லாத புத்தி நாறும் கிடங்கு. **பெயர் அறியப்படாதவ**

107. பாடுகள்

903. பாடுகள் நம்மை அழிக்க அல்ல, உருவாக்கவே தேவனால் அனுப்பப்படுகிறது. **பெயர் அறியப்படாதவ**

904. மற்றவர்களுக்காகப் பாடுகளை மகிழ்ச்சியோடு சகித்துக் கொள்ளும்போது அநேக பிரசங்கங்களால் முடியாததை அப்பாடுகள் அநேக மக்களை மனமாற்றம் செய்கின்றன. **தெரேஸ்**

905. பாடுகள் அனுபவிப்பது கடவுளின் சித்தமே என்பதற்கும், அது நம்மை மகிமைக்கு நேராய் வழிநடத்துகிறது என்பதற்கும் கல்வாரி ஒரு சிறந்த அத்தாட்சி. **வாரன் வியர்ஸ்பி**

906. நாம் ஊக்கமாய் தேவனை நோக்கிப் பார்க்க உபத்திரவங்கள் நமக்கு உதவுகின்றன. **ஜான் பணியன்**

907. பாடுகள் இல்லாமல் பாக்கியம் இல்லை; பாடுகள் நம்மை மகிமைக்கு உருவாக்கும் காரணிகள். **பெயர் அறியப்படாதவர்**

08. மனிதர்களின் தோல்விகள் மற்றும் சாதனைகளிலிருந்து மனிதர்களை குறைத்து மதிப்பிட வேண்டும். அவர்களின் பாடுகளிலிருந்து மிக அதிகமாக மதிப்பிட வேண்டும். **பெயர் அறியப்படாதவர்**

108. பாவம்

09. பாவச் செய்கைமட்டும் பாவமல்ல; ஒரு கெட்ட எண்ணம், ஒரு தீய பார்வை அனைத்துமே பாவம்தான். **சாது சுந்தர் சிங்**

10. பாவமற்ற இன்பங்களை, கேளிக்கைகளை அனுபவிப்பதற்கு நமக்கு இருக்கும் தடைகளில் பிரதானமானது, பிறர் பார்க்கிறார்களே என்பதற்காக போலியான தோற்றங்களை உருவாக்க நாடும் நமது மாம்சீக சுபாவமே. **நீல் T. ஆண்டர்சன்**

1. பாவம் செய்வதை விட சாவையே விரும்புகிறேன். **புனித தோமினிக் சாவியோ**

2. பாவத்தின் வேரை அகற்றாதவரை வாழ்வில் சமாதானம் என்பது என்றுமே எட்டாக் கனிதான். **பிரான்சிஸ் ஹால்**

3. பூமியில் ஒரு பாவம் இரகசிய பாவமாக இருக்கலாம், ஆனால் பரலோகத்தில் அது வெளியரங்கமான இழிவான செயலாயிருக்கிறது. **லூயிஸ் ஸ்பெரி சேபர்**

914. பாவத்தை சர்வ வல்லமையுள்ள கிருபை தூக்கி எறியும் வரை, பாவம் சர்வ வல்லமையுடைதாக இருக்கிறது.
சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்

915. பாவத்தைத் தவிர, தேவனைத் தவிர்த்து, எதற்கும் அஞ்சாது, வேறு எதையும் இச்சிக்காத 100 பேரை எனக்குத் தாருங்கள். பாதாளத்தின் கதவுகளை அசைத்து கடவுளின் பேரரசை அமைத்துக் காட்டுவேன்.
ஜான் வெஸ்லி

916. நீ பாவி என்பது உண்மையானால் உனக்கு ஓர் இரட்சகர் இருக்கிறார் என்பதும் உண்மை.
டி.எல். மூடி

917. தேவனுக்கும் நம் ஆத்துமாவுக்கும் இடையில் பாவம் இருக்கும்போது, தேவனின் அங்கீகாரம் பெறுவதற்கு நேர்மையான குணாதிசயம் உடையவராக நம்மை வளர்த்துக் கொள்வது பிரயோஜனமற்றது.
ஆர்தர் W. பிங்க்

918. என்னுடைய மரண நேரத்தில் எது மிகவும் முக்கியமானது என்றால் என்னுடைய பாவங்கள் கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டிருக்கிறதா என்பதே.
ஆர்தர் W. பிங்க்

919. பாவத்தின் சம்பளம் மரணம். இது சரீரப் பிரகாரமானது மட்டுமல்ல, ஆவிக்குரிய மரணமாகும். இயற்கையானது மட்டுமல்ல, முக்கியமான தண்டனைக்குரிய மரணமாகும்.
ஆர்தர் W. பிங்க்

920. பாவத்தை அறிக்கை செய்தல் என்பது அதை தேவனுக்குத் தெரியப்படுத்துதல் அல்ல, தேவனோடு ஒத்துப் போதலாகும்.
டெரெக் க்ளீவ்

921. ஒருவன் தன் இருதயத்தைக் கடினப்படுத்துவதைவிட அவனுடைய பாவங்களை அறிக்கை செய்வது மேலானது.
புனித கிளமன்ட் I

922. பாவத்தை அறிக்கை செய்தல் என்பது மனந்திரும்புதலுக்கு முதல் படியாகும்.
எட்மண்ட் கேடன்

923. பாவம் என்பது உன் இருதயம் தேவனோடு திருப்தியில்லாமல் இருக்கும்போது நீ என்ன செய்கிறாயோ அதுதான். **ஜான் பைபர்**

924. வீடு தீப்பற்றி எரியும்போது, மேலும் அதன் உட்புறத்தில் சிலர் இருக்கிறார்கள் என்று அறிந்த பிறகும், அங்கு தொங்கும் படங்களைச் சீராக்குவது பாவம். உங்களைச் சுற்றிலும் இருக்கும் உலகம், அழியும் ஆபத்தில் இருக்கும்போது தன்னில் தானே பாவமற்றதாக இருக்கும் செயல்களைச் செய்வதும் தவறாகவே இருக்கும். **கூரி டென் பூம்**

25. பாவத்தின் முதல் பிறப்பு மரணம். அதனின் கடைசி பிறப்பு நரகம். **வில்லியம் செக்கர்**

26. இந்த உலகத்தில் தேவன் பாவமில்லாத மகனைப் பெற்றிருந்தார். ஆனால் ஒருபோதும் பாடுகள் இல்லாமல் இல்லை. **புனித அகஸ்டின்**

27. நமது பாவத்தினால் தேவன் நமக்கு எதிராக இல்லை. நமது பாவத்திற்கு எதிராக நம்மோடு இருக்கிறார். **பெயர் அறியப்படாதவர்**

28. இரண்டு வகையான மனிதர்கள் மட்டும் இருக்கிறார்கள். ஒன்று, பாவத்தில் மரித்தவர். இரண்டு, பாவத்துக்கு மரித்தவர். **லியோனார்ட் ரேவன்ஹில்**

9. பாவத்தின் சத்தம் அதிகமாயிருக்கிறது ஆனால் மன்னிக்கும் தன்மையின் சத்தம் மிக அதிகமாயிருக்கிறது. **டி.எல்.மூடி**

109. பரிசு

0. நீ என்னவாய் இருக்கிறாய் என்பது தேவன் உனக்குக் கொடுத்த பரிசு. நீ என்னவாய் ஆகிறாய் என்பது தேவனுக்கு நீ கொடுக்கும் பரிசு. **ஹான்ஸ் உர்ஸ் வேன் பால்தாசர்**

110. பரிசுத்த வாழ்வு

1. பரிசுத்த வாழ்வு என்றால் மடத்தில் வாழும் வாழ்வல்ல; அது தெய்வீக சட்டங்களுக்கும் சத்தியங்களுக்கும் உட்பட்ட கிரமமான வாழ்வு. **பெயர் அறியப்படாதவர்**

932. உன் தூய்மையைப் பொறுத்தே உன் வெற்றியும் இருக்கும். ஏனெனில் பரிசுத்தவான்களையே தேவன் பிரமிக்கும் விதம் தமது கரத்தின் அபார போர்க் கருவிகளாகப் பயன்படுத்துகிறார்.
ராபர்ட் மொரே மச்சேன்

933. வாழ்வில் பரிசுத்தம் அது உத்தமம். வார்த்தையில் பரிசுத்தம் அது உண்மை. இவ்விரண்டும் இடம் பெறும் ஆராதனையே உயிருள்ள ஆராாதனை. **பெயர் அறியப்படாதவர்**

934. கிறிஸ்துவிடம் செல்வதற்குப் பரிசுத்தம் வழி அல்ல; கிறிஸ்துவே பரிசுத்தத்திற்கு வழி. **அட்ரியன் ரோஜர்ஸ்**

935. கிறிஸ்து இவ்வுலகில் நடந்து கொண்ட முறை பரிசுத்தத்திற்கு அளவுகோலாக, நமக்கு முன் எப்பொழுதும் வைக்கப்பட்டிருக்க வேண்டும். **ஆர்.சி. சேப்மென்**

936. பூமியில் மிகப் பெரிய ஞானம் என்பது பரித்தமாயிருப்பதாகும்.
W.S. ப்ளம்மர்

937. ஆன்மீக மனிதனின் முதல் அடையாளம் அவன் பரவசத்தைவிடப் பரிசுத்தத்தை நாடுவான். **A.W. டோசர்**

938. அந்தரங்க வாழ்வின் தூய்மைக்கு ஏற்றாற்போல்தான் அரங்க வாழ்வின் வல்லமை இருக்கும், தூய்மையே வலிமை.
எமில் ஜெபசிங்

939. இயேசுவினாலன்றிப் பரத்தில் நுழையத் தகுதியான பரிசுத்தவானுமில்லை. இயேசுவினால் பரிசுத்தம் பண்ணப்படத் தகுதியற்ற பாவியுமில்லை. **பெயர் அறியப்படாதவர்**

940. பரிசுத்தம் என்னும் தன்மை, நற்செய்தியின் துணைக்கருத்தல்ல, அதின் மையக் கருத்தே. **பெயர் அறியப்படாதவர்**

941. தேவனைப் போல மாறுவதே மனித வாழ்வின் மிகச் சிறந்த நிறைவு. **ப்ளாட்டோ**

942. பரிசுத்தமாக்கப்பட்ட இருதயம் வைரக் கிரீடம் பதித்த சிரசை விட சிறந்தது. **தாமஸ் காட்வின்**

943. பரிசுத்த அலங்காரத்தை அணிகலன் ஆக்கியவர்களுக்கு வேறு முலாம் பூச்சுகள் தேவையில்லை. **மேத்யூ ஹென்றி**

944. இன்று தேவன் செய்யக்கூடிய மிகப் பெரிய அதிசயம் என்பது பரிசுத்தமற்ற உலகத்திலிருந்து பரிசுத்தமற்ற ஒருவனைத் தெரிந்து கொண்டு அவனை பரிசுத்தப்படுத்தி மீண்டும் அவனைப் பரிசுத்தமற்ற உலகத்திற்கு அனுப்பி, அதில் பரிசுத்தமாக இருக்கச் செய்வதுதான். **லியோனார்டு ரேவன்ஹில்**

945. ஒரு மனிதன் ஏதோவோர் அழைப்பைப் பெற்றிருப்பதாகப் பாசாங்கு செய்யலாம். ஆனால் அவன் பரிசுத்தமாயிருப்பதற்கு அழைக்கப்படவில்லையென்றால் நிச்சயமாக அவன் ஊழியம் செய்ய அழைக்கப்படவில்லை. **சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்**

946. ஜெபமின்மை பரிசுத்தத்திற்கு மிகப் பெரிய தடையாயிருக்கிறது. **ஜான் வெஸ்லி**

947. பரிசுத்த மனிதன், பாவம் செய்ய இயலாதவன் அல்ல, அவன், பாவம் செய்ய விரும்பாதவனாவான். **A.W. டோசர்**

948. பரிசுத்தம் என்பது இனிமேல் சோதனையே இல்லை என்பதல்ல, அது சோதனையை மேற்கொள்ள நாம் பெற்றிருக்கும் வல்லமையாகும். **ஜி.கேம்ப்பெல் மார்கன்**

949. பரிபூரண பரிசுத்தம் என்பதே இப்பூமியில் வாழும் பரிசுத்தவான்களின் நோக்கமாகும். அது பரலோகத்தில் பரிசுத்தவான்களுக்குச் கொடுக்கப்படும் பரிசு ஆகும். **ஜோசப் காரில்**

950. ஓர் அப்பாவின் பரிசுத்த வாழ்வு என்பது அவருடைய மகன்களுக்கு விட்டுச் சென்ற மிகப் பெரிய சொத்தாகும். **சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்**

951. உண்மையாக பின்பற்றத்தக்க கிறிஸ்தவ குறிக்கோள் நிலை என்பது சந்தோஷமாயிருப்பதல்ல, பரிசுத்தமாயிருப்பதுதான். **A.W.டோசர்**

111. பிரசங்கம்

952. நீ பிரசங்கிக்கிறவைகளை நீயே செய்யவில்லையென்றால்,
செய்கிறவைகளை இன்னொருவர் பிரசங்கிப்பா
பெயர் அறியப்படாதவ

953. நரம்புக்கிளர்ச்சியும் நகைப்பும் தோன்றும் படியாக இலேசாக
காதைத் தொடுபவரல்லர், இருதயங்களை உடைக்கிறவ
சிறந்த பிரசங்கியார். தாமஸ் ஃ ப்ரூக்

954. ஒரு பிரசங்கியாரின் தகுதி என்பது அவருடைய சபைய
அவருடைய செய்தியைக் குறித்து "என்ன ஓர் அழகான செய்த
என்று செல்வதினாலல்ல, மாறாக "தேவனுக்கென்று நா
ஏதாவது செய்வேன்" என்று சொல்வதினால்தா
ஃப்ரான்சிஸ் டி சேல்

955. இன்று ஊழியர் பிரசங்கிக்கும் பிரசங்கத்தை இயேசு கிறிஸ்
பிரசங்கித்திருப்பார் என்றால் அவர் சிலுவையில
அறையப்பட்டிருக்கமாட்டார். லியோனர்ட் ரேவன்ஹி

956. நமது நடத்தை நமது பிரசங்கமாயிராதவரை, பிரசங்கிப்பதற்
எங்கு நடந்தாலும் அதில் பயனில்லை
ஃப்ரான்சிஸ் ஆப் அஸ்சிஸ்

957. பிரசங்கியாரின் செய்தி அதிக அனலாயிருக்க வேண்டு
அல்லது அதிக அனலிலே அவர்கள் செய்தியை பே
வேண்டும். வான்ஸ் ஹாவ்

958. நீ பிரபலமாக விரும்பினால், சந்தோஷத்தைப் பிரசங்கி
பிரபலத்தை விரும்பவில்லையென்றால் பரிசுத்தத்தைப் பிரசங்
வான்ஸ் ஹாவ்

959. பிரசங்கியின் வேலை என்பது பாதிக்கப்பட்டவர்களை
தேற்றுவதும், சொகுசாக வாழ்பவர்களைக் கலங்கபடிப்பதுவாகு
வான்ஸ் ஹாவ்

960. பிரசங்கத்தின் பிரதான முடிவு என்ன? பின்வருமாறு இரு
விரும்புகிறேன்: தே வனுடைய பிரசன்னத்தையும் அவ

குறித்ததான உணர்வை ஆண்களுக்கும் பெண்களுக்கும் கொடுப்பதாகும். **மார்டின் லாய்ட் ஜோன்ஸ்**

961. சிறந்த பிரசங்கத்திற்கு மூன்று காரியங்கள் இன்றியமையானது: 1. உண்மை 2. தெளிவு 3. பேரார்வம். **ஜி. கேம்ப்பெல் மார்கன்**

962. நல்ல பிரசங்கம் உலகத்தை இரட்சிக்க முடியும் என்றால் அது பல காலத்திற்கு முன்பே பிரசங்கிக்கப்பட்டிருக்க வேண்டும். **பில்லி சன்டே**

963. எறும்பைவிட ஒருவரும் சிறப்பாக பிரசங்கிக்கிறதில்லை. ஆனால் அது ஒன்றும் பேசுகிறதில்லை. **பென்ஜமின் ஃப்ராங்ளின்**

964. எழுத்தாளர் பிரசங்கம் செய்ய இயலாத காலத்திலும், செய்ய மனமற்ற காலத்திலும் செய்ய துணிவற்ற காலத்திலும், இன்னும் சற்று மிகுதியாக எண்ணுவோம். எழுத்தாளர் இல்லாத காலத்திலும் எழுதப்பட்ட நூல் பிரசங்கம் செய்யும். **தாமஸ் புரூக்ஸ்**

965. காகிதத்தில் எழுதப்பட்ட பிரசங்கத்தைக் காட்டிலும் நடைமுறையில் செய்து காட்டின பிரசங்கம் எப்போதும் அதிக பேச்சுத் திறமை கொண்டது. **தியோடர் L. குயிலர்**

966. பிரசங்கம், ஓர் கடினமான இருதயத்தை உடைக்க வேண்டும் அல்லது ஓர் உடைந்த இருதயத்தைக் குணமாக்க வேண்டும். **ஜான் நியூட்டன்**

967. நாம் தந்திரசாலிகளல்ல, தீர்க்கதரிசிகள்! நமது செய்தி சமரசமல்ல, சம்மட்டி! சத்தியத்தைப் பிரசங்கித்து அதைக் கேட்பவர்களின் வாழ்க்கையில் அப்பியாசிக்கச் செய்பவனை ஆணிகளும், முட்களும் குத்தத்தான் செய்யும். **A.W. டோசர்**

968. பிரசங்கத்தை ஏற்றுக்கொள்ளச் செய்வது நமது வேலையல்ல, அதை எல்லா நேரங்களிலும் கிடைக்கச் செய்வதுதான். அப்பிரசங்கத்தை அவர்கள் விரும்பச் செய்வதல்ல, அவர்கள் கைக்கொள்ளச் செய்வதுதான். **வான்ஸ் ஹாவ்னர்**

112. பிரச்சினை

969. அறிஞர்கள் பிரச்சினைகளைத் தீர்க்கிறார்கள், மேதைகள் அவை வருவதற்கு முன் தடைபோடுகிறார்கள். **ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**

970. பிரச்சினையைப் புரிந்துகொள்ள மக்களோடு இரு. பிரச்சினையைத் தீர்க்க தேவனோடு இரு. **ஜான் கேக்ஸ்வெல்**

971. நான் சந்தித்த வேறு எவரையும்விட டி.எல். மூடியாகிய என்னோடுதான் எனக்கு அதிகப் பிரச்சினை. **டி.எல்.மூடி**

972. உன் பிரச்சினை எவ்வளவு பெரியது என்று தேவனிடத்தில் சொல்லாதே. உன் தேவன் எவ்வளவு பெரியவர் என்று பிரச்சினையிடத்தில் சொல். **பெயர் அறியப்படாதவர்**

973. ஒவ்வொரு பிரச்சினையின் உள்ளே ஒரு பொக்கிஷம் மறைந்திருக்கிறது. அதைக் கண்டுபிடிப்பதுதான் உன் வேலையாயிருக்கிறது. **பெயர் அறியப்படாதவர்**

974. பிரச்சினைகள் நிறுத்தற் குறியீடுகளல்ல, அவைகள் வழிகாட்டும் குறியீடுகளாகும். **ராபர்ட் ஹெச் ஸ்கல்லர்**

113. பிரதான கட்டளை

975. கிறிஸ்துவின் பிரதான கட்டளை உண்மையாக இருக்குமானால், நம்முடைய திட்டங்கள் மிகப் பெரியவை அல்ல. அவை மிக சிறியதாக உள்ளன. **பாட் மார்லி**

976. நமக்குப் பிரதான கட்டளை கொடுக்கப்பட்டிருக்கும்போது, நாம் ஏன் தேவ அழைப்புக்காகக் காத்திருக்க வேண்டும்? **பாப் ஹிஜஸ்**

977. இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளைக்கு விதிவிலக்கு எவருக்கும் அளிக்கப்படவில்லை. **குட்வின் ஹட்சன்**

978. தேவனுடைய கட்டளை என்மீது விழுந்து கடமையாகும். மரத்தின் நிழலில் தங்கி விளையாடுவதை நான் விரும்பமாட்டேன். தோட்டத்தில் பூக்களைப் பறிப்பது என்னுடைய வேலையல்ல. எனக்களிக்கப்பட்ட பணியினை

நிறைவேற்றி கணக்கினை ஒப்புவிக்கும்வரை நான் ஓய்ந்து போவதில்லை. **ஏமி கார்மைக்கேல்**

979. பிரதான கட்டளையை நிறைவேற்றுவதற்கும் சுவிசேஷத்தை மேம்படுத்துவதற்கும் என்ன செய்யப்பட வேண்டும் என்பது நமக்குச் சரியாகத் தெரியும். கேள்வி என்னவென்றால் நாம் அதைச் செய்கிறோமா? **டேவிட் ஜெரேமியா**

114. புகழ்

980. எப்பொழுதுமே விழாமல் இருப்பதில் நம் புகழ் இல்லை. ஆனால் ஒவ்வொரு முறையும் நாம் விழுந்து எழுந்திருப்பதில்தான் நம் புகழ் இருக்கிறது. **நெல்சன் மண்டேலா**

981. உன்னைக் குறித்து நீ புகழாதே. உன் மரணத்திற்குப்பின் அது பேசப்படும். **வில்சன் மிஸ்நெர்**

982. ஒரு மனிதனின் புகழ் என்பது மற்ற மக்கள் அவனைக் குறித்து என்ன நினைக்கிறார்கள் என்பதே, அவனுடைய குணமோ அவன் எப்படி இருக்கிறான் என்பதே. **ஜான் மில்டன்**

983. ஒரு மனிதனின் புகழ் அவனது அறிவுத் திறமையையோ அல்லது உயர்பதவி நிலையையோ பொருத்ததல்ல, இவைகள் மாத்திரம் ஒரு மனிதனைப் பெரியவனாக்குவதில்லை. மற்றவர்களுக்காக வாழும் மனிதனே பெரியவனாகிறான். **சாது சுந்தர் சிங்**

115. புத்தகங்கள்

984. புத்தகங்கள் இல்லையென்றால் வரலாறு மௌனமாகிவிடும். இலக்கியம் ஊமையாகிப் போகும். புத்தகம் என்பது மனித குலமே அச்சு வடிவில் இருப்பதுபோல. **பார்பரா சச்மன்**

985. மனிதன் அற்ப ஆயுசு உள்ளவனாவான். ஆனால் அவன் எழுதிய புத்தகம் தீர்க்காயுசு பெறுகிறது. ஒரு நல்ல புத்தகம் என்பது அத்தகைய பெருமையுடையது. **ஆர். எஸ். ஜேக்கப்**

116. புன்னகை

986. புன்னகை என்பது உங்கள் தோற்றங்களை மாற்றச் செலவில்லாத ஒரு வழியாகும். **சார்லஸ் கார்டி**

987. யாரோ ஒருவரைப் பார்த்து ஒவ்வொரு முறை புன்னகைப்பது அன்பின் செயலாகும். அது ஓர் அழகான காரியமாகவும் அவருக்குக் கொடுக்கும் பரிசாகவும் இருக்கிறது. **அன்னை தெரேசா**

988. புன்னகை புரிகிற முகத்தில் அழகு இல்லாததை நான் எப்பொழுதும் பார்த்ததேயில்லை. **ஆனன்**

117. புனிதம்

989. புனிதம் என்பது, இறைவனின் கைகளில் சிறியோராகவும் தாழ்ச்சியுள்ளோராகவும் இருக்கிறோம் என்பதை உணர்வதாகும். **புனித தெரசம்மாள்**

990. மனசாட்சி எல்லா சொத்துக்களிலும் மிகவும் புனிதமான ஒன்றாகும். **ஜேம்ஸ் மாடிசன்**

118. பெண்கள்

991. பெண்கள் ஆண்களைக் காட்டிலும் ஞானமானவர்கள். ஏனெனில் அவர்கள் தெரிந்து கொள்வது குறைவு, புரிந்து கொள்வது அதிகம். **ஜேம்ஸ் தர்பெர்**

992. பொய், கோழைத்தனம், கீழ்த்தரமான குணம் ஆகிய மூன்றுமே பெண்கள் பெரிதும் வெறுப்பவை. **வில்லியம் ஷேக்ஸ்பியர்**

993. பெண்களிடம் உள்ள நல்ல பண்பு அவர்களுக்குப் பாராட்டைப் பெற்றுத் தருகிறது. ஆனால் அவர்களின் நல்ல நடத்தையே அவர்களை மதிப்பிற்குரியவர்களாக்குகிறது. **வில்லியம் ஷேக்ஸ்பியர்**

119. பெருமை

994. சோதனைகளும், வேதனைகளும் வரும்போதுதான் இருதயத்தின் பெருமை குணமாகிறது. **ஜார்ஜ் ஒயிட்பீல்டு**

995. எங்கே தற்பெருமை முடிகிறதோ, அங்கே பெருந்தன்மை ஆரம்பமாகிறது. **ஒவன் டி யங்**

120. பொய்

996. நீங்கள் பொய் சொல்லும் பழக்கம் உடையவராயின், அப்பொய்களை மறைப்பதற்கு நல்ல நினைவுத்திறன் படைத்தவராயிருக்க வேண்டும். எப்போதும் உண்மை பேசுவீர்களெனில் உங்களுக்கு ஞாபகசக்தி தேவையில்லை. உண்மையைச் சொன்னால் போதும், அது மிகவும் எளிது. **ஸ்டான்லி ஜோன்ஸ்**

997. கெட்ட உள்நோக்கத்துடன் கூறப்படும் உண்மை ஆயிரம் பொய்களைவிட மோசமானது. **ரூபி பிளேக்**

998. கிறிஸ்தவர்கள் பொய் சொல்வதில்லை, ஆனால் அவர்கள் சும்மா சபைக்கு சென்று அவைகளைப் பாடுகிறார்கள். **A.W. டோசர்**

121. பொறுமை

999. பொறுமைக்கும், விடா முயற்சிக்கும் ஒரு மந்திர சக்தியுண்டு, அதன்முன் கஷ்டங்கள் மறைந்துபோகும், தடைகள் மறைந்தே போகும். **ஜான் க்லின்ஸி ஆடம்ஸ்**

1000. நீடிய பொறுமை கொண்ட இருதயத்தின் ஆழ்ந்த அமைதியிலிருந்து பெலன் பிறக்கிறதேயன்றி சந்தோஷத்தின் நடுவிலிருந்து அல்ல. **பெலிசியா ஹெமன்ஸ்**

122. பேராவல்

1001. மனித இயல்பில் மிக உள்ளார்ந்த கோட்பாடு என்பது ஒருவன் கொண்டுள்ள பேராவலைப் பாராட்டுவதுதான். **வில்லியம் ஜேம்ஸ்**

1002. மக்களின் வாழ்க்கையின் சேவைகளில் அவர்களின் பேராவல்களைப் பயன்படுத்தவதற்குப் பதிலாக, அவர்களின் பேராவல்களின் சேவைகளில் அவர்களுடைய வாழ்க்கையைச் செலவிடுகிறார்கள். **ரிச்சர்ட் ஸ்டீலே**

1003. தனிப்பட்ட பேராவல் மற்றும் பேரரசை கட்டுதல் என்பது சுவிசேஷத்தை அறிவிப்பதற்குத் தடையாயிருக்கிறது. **ஜான் ஸ்டாட்**

123. மதம்

1004. நான் நல்லது செய்யும்போது நல்லதை உணர்கிறேன், கெட்டது செய்யும்போது கெட்டதை உணர்கிறேன், அது தான் என் மதம். **ஆப்ரகாம் லிங்கன்**

124. மரணம்

1005. நான் மரித்துவிட்டதாக ஒருநாள் செய்தித்தாள்களில் செய்திவரும். ஆனால் அதை ஒருவரும் நம்ப வேண்டாம். ஏனென்றால் நான் மாம்சத்தில் மரணமடைந்த அடுத்த வினாடி முதல் இன்னும் பரிபூரண ஜீவனுடன் கிறிஸ்துவோடு வாழ்வேன். நான் 1837 ஆம் ஆண்டு மாம்சத்தில் பிறந்தேன். 1855 ஆம் ஆண்டில் ஆவியில் பிறந்தேன். ஆவியில் பிறந்தவன் நித்தியமாய் வாழ்வான். **டி.எல்.மூடி**

1006. நீ பிறக்கும்போது நீ அழுகிறாய். மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். நீ மரிக்குமபோது மக்கள் அழுகிறார்கள். நீ இரட்சிக்கப்பட்டுவிட்டாய் என்றால் நீ மகிழ்வாய். **பெயர் அறியப்படாதவர்**

1007. உயிரோடிருந்த இவ்வளவு நாட்களும் கஷ்டத்தை அனுபவித்து இளைத்துப்போனேன். தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனேகூட இருக்கவே எனக்கு ஆசை. **தாமஸ் அ. கெம்பிஸ்**

1008. நித்திய வாழ்வு மரணத்திற்குப் பிறகு ஆரம்பமாகிறதில்லை. அது விசுவாசத்தை நன்கு பற்றிக் கொண்ட பிறகே ஆரம்பமாகிறது. **சாமுவேல் சூமேக்கர்**

009. நித்திய வாழ்விற்கு நாம் பிறந்திருக்கிறோம் என்பதற்கு நாம் இறக்கவேண்டியிருக்கிறது. **புனித ஃப்ரான்சிஸ் ஆப் அஸ்ஸிசி**

010. மரணத்தைத் தேடிப் போகாதே. அது உன்னைத் தேடி வரும். ஆனால் இந்த உலகத்திற்கு நீ வந்த நோக்கத்தை நிறைவேற்றும் ஒரு மரணத்தைக் கொடுக்கும் சாலையை தேடிப் போ. **டாக் ஹாம்மர்ஸ்க்ஜோல்ட்**

011. இரட்சிக்கப்படாதவர்களுக்கு மரணம் என்பது பயங்கரத்தின் ராஜாவாயிருக்கலாம். ஆனால் கிறிஸ்தவர்களுக்கு மரணம் என்பது நம்மை நேசித்தவர்களின் சமூகத்திற்கு நம்மை வழிநடத்தும் வாசலாகும். **ஆர்தர் W. பிங்க்**

012. பூமி பின்வாங்குகிறது, வானம் வா வா என்றழைக்கிறது; இதுதான் நான் முடிசூட்டப்படும் நாள், ஆ, மரணம் எவ்வளவு இனிமையானது! **சுவிசேஷகன் டி.எல்.மூடி**

013. மரணத்தைவிட மிக நிச்சயமானது ஒன்றுமில்லை. மரண நேரத்தைவிட மிக நிச்சயமற்றது ஒன்றுமில்லை. **பெயர் அறியப்படாதவர்**

014. ஒருவன் மரிக்காதவரை, அவன் முழுமையாகப் பிறக்கவில்லை. **பென்ஞமின் ஃப்ராங்ளின்**

015. மரணம் ஒரு முடிவு. ஆனால் எனக்கு இது ஜீவனின் ஆரம்பம். **இரத்த சாட்சி டையட்ரிச் போன்ஹோபெர்**

016. தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனே கூட இருக்க ஆசையுண்டு. அது அதிக நன்மையாயிருக்கும். **இரத்தசாட்சி அப்போஸ்தலனாகிய பவுல்**

017. செய்து முடிக்காத கனவுகளுடன் மரிப்பது பாவமல்ல, கனவுகள் காணாமலிருப்பதே பாவம். இந்த பூமியில் நம்முடைய முக்கிய வேலை கடவுளை மகிமைப்படுத்துவதேயாகும். **டேவிட் வில்கர்சன்**

1018. எனக்கு மரணம் நேர்ந்தால் நீங்கள் அழுது புலம்ப வேண்டாம். மாறாக தேவனின் திருவடிமுன் ஓர் ஆத்துமாவைப் பாடலோடு அனுப்புங்கள். **சூசன்னா வெஸ்லி**

1019. இன்று என் வாழ்வின் கடைசி நாளாக இருக்குமானால், அதனைப் படுக்கையில் நான் செலவழிக்கமாட்டேன். **கார்ல் பேக்கர்**

1020. நிர்ப்பந்தனும், ஏழையும், நாதியுமற்ற புழுவாகிய நான், நேச கர்த்தரே! உமது கரங்களில் வீழ்கின்றேன். **வில்லியம் கேரி கல்லறையில் எழுதப்பட்டது.**

1021. தேவன் என்னை அழைத்திருப்பதால் இந்த இடத்திலேயே என் ஆடுகளுடன் ஜீவிக்கவும், மரிக்கவும் ஆயத்தமாக இருக்கிறேன். **பிஷப் ஹீப்பர்**

1022. நான் இம்மண்ணுலகை விட்டு விண்ணுலகம் செல்வதற்கு நேரமாகிவிட்டது. என் நேசர் இயேசுவின் இரத்த புண்ணியத்தை நம்பியே மறு உலகு செல்கிறேன். **ஜான் வெஸ்லி**

1023. ஆண்டவரே, இன்று யாரேனும் உமக்காக மரிக்க வேண்டிருந்தால், அது நானாக இருக்கட்டும். அதற்கு நான் ஆயத்தமாயிக்கிறேன். **பில்லி பிரெய்**

1024. மரணம் மாத்திரமே என்னுடைய முயற்சிக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க முடியும். **டேவிட் லிவிங்ஸ்டன்**

1025. உலகத்தைக் குறித்தோ அல்லது தேவ பணியைக் குறித்தோ நான் களைப்படையவில்லை. ஆனபடியால் கிறிஸ்து என்னை அவருடைய வீட்டிற்கு அழைக்கும்பொழுது சந்தோஷத் துடனேயே செல்வேன். **அதோனிராம் ஜட்சன்**

1026. மனிதர்களுக்கான வாழ்நாட்களை தேவன் நியமித்து இருக்கிறார். அது தீவிரிப்பதுமில்லை, அது பிந்திப் போவதுமில்லை. **வான் கெர்கஸ்**

1027. நீங்கள் என்னை அம்பு எய்து, சுட்டுக் கொன்று போடலாம். ஆனால் நானோ உங்களுடைய உண்மையான நண்பன், நான் நேசித்து சேவிக்கிற என் ஆண்டவர் இயேசுவிடம் என்னை அதிசீக்கிரத்தில் அனுப்புகிறீர்கள் என்பதைத் தவிர, மரணம் என்னை ஒன்றும் செய்யாது. உங்கள் மத்தியில் மரிக்க நான் பயப்படவில்லை. ஜான் ஜி. பேட்டன்

1028. நான் மரிப்பதைக் குறித்துப் பயப்படவில்லை. இயேசு என்னை இரட்சித்திருக்கிறார். ஆனால், நான் வெறுங்கையனாக என் ஆண்டவரிடம் செல்ல வேண்டுமா? பெயர் அறியப்படாதவர்

1029. நான் நினைவு இழந்தவனாகிக் கொண்டிருக்கிறேன். ஆனாலும், இரண்டு காரியங்களை மட்டும் ஒருபோதும் மறவேன். ஒன்று, நான் மகா பாவி; மற்றொன்று கிறிஸ்து மாபெரும் இரட்சகர். ஜான் நியூட்டன்

1030. இந்த உலகத்தில் நாம் எத்தனை ஓட்டங்கள் ஓடினாலும், சாதனைகள் புரிந்தாலும், கண் மூடும் வேளையில், அழகாய் நிற்கும் பரிசுத்தரின் வரிசையில் நமக்கும் ஓர் இடம் உண்டு என்ற நிச்சயம் பெரியது. எமில் ஜெபசிங்

1031. உன் பிறப்பிலே நீ அழுதாய்; உலகம் சந்தோஷமாய் இருந்தது. உன் இறப்பிலே உலகம் அழவேண்டும்; நீ மட்டும் சிரிக்கவேண்டும். அப்படிப்பட்ட வாழ்க்கை நீ வாழவேண்டும். பெயர் அறியப்படாதவர்

125. மனம்

1032. நமது தலைமுறையின் மிகப் பெரிய கண்டுபிடிப்பு என்னவென்றால் மனம் தன்னைப் பற்றிய நோக்கை மாற்றிக்கொண்டால் வாழ்வில் புறப்பகுதிகளை மாற்றிக் கொள்ள முடியும் என்பதுதான். வில்லியம் ஜேம்ஸ்

126. மனந் திரும்புதல்

1033. மெய்யான மனந் திரும்புதல் இரட்டை நோக்கங்களுள்ளது. அது கடந்த காலத்தைக் கண்ணீர் சிந்தும் கண்களுடன் நோக்குகிறது. எதிர்காலத்தை எச்சரிக்கை நிறைந்த கண்களுடன் நோக்குகிறது. **ராபர்ட் ஸ்மித்**

1034. நாம் மனந்திரும்புதலை இன்னொரு நாள்வரை தள்ளிப்போடுவோமென்றால், நாம் மனம் வருந்துவதற்கு இன்னொரு நாள் சேர்த்துக்கொள்ளும், மனந்திருந்தியிருப்பதில் ஒரு நாள் குறைந்துவிடும். **பெயர் அறியப்படாதவர்**

1035. மனந்திரும்புதல் ஆண்டவருக்கு முன்பாக உயிருள்ள மனச்சாட்சியைச் சார்ந்ததேயன்றி அறிவுபூர்வமான செயலல்ல. **ஆர்தர் W. பிங்க்**

127. மனதுருக்கம்

1036. ஆக்கினைத் தீர்ப்பைவிட மனதுருக்கம் அநேகப் பாவங்களைக் குணமாக்கும். **ஹெண்றி வார்ட் பீச்சர்**

128. மன்னிப்பு

1037. மன்னிப்பு என்பது எல்லா விசுவாசிகளின் நடுவிலும் பரவலாகக் காணப்பட வேண்டிய பொதுவான செயல்பாட்டு முறையாகும். **நீல் T. ஆண்டர்சன்**

1038. விருப்பமில்லாமல் கேட்கும் மன்னிப்பு என்பது ஒருவரை இரண்டாவது முறையாக அவமதிப்பதாகும். **G.K.செஸ்டெர்டன்**

1039. பெலனற்றவனால் மன்னிக்கவே முடியாது. மன்னிக்கும் தன்மை என்பது பெலமுள்ளவனின் இயல்புக்குணமாகும். **எம். கே. காந்தி**

1040. மன்னிக்கப்படுதலில்தான் நாம் மன்னிக்கப்படுகிறோம். **ஃப்ரான்சிஸ் ஆப் அஸ்ஸிசி**

41. மனிதனுக்கு இரண்டு மிக பெரிய ஆவிக்குரிய தேவைகள் இருக்கின்றன. முதலாவது மன்னிக்கும் தன்மை, இரண்டாவது நற்குணம். **பில்லி சன்டே**

42. தேவ மன்னிப்பைப் பெற்றவர்களின் சங்கமே சபை. **ஆர்.சி. லூக்காஸ்**

43. கிருபை என்னும் வெள்ளித் தட்டில் வைக்கப்பட்ட பொற்பழமே மன்னிப்பு. **தாமஸ் வாட்சன்**

44. தேவ மன்னிப்பை முதலில் இறைஞ்சிப் பெறுதலே அனைத்து ஆசீர்வாதங்களையும் நாம் பெற்று அனுபவிப்பதற்கான ஒரே வழி. **ஜெப்ரி வில்சன்**

45. பழிவாங்குதல் அல்ல மன்னித்தலே நாம் பூரணமானவர்கள் என்பதை உலகத்திற்குப் பறைசாற்றுகிறது. **பெயர் அறியப்படாதவர்**

46. கிறிஸ்தவத்தின் மகிமை என்பது பிறரை மன்னித்து அவர்களின் மனங்களை வெல்வதேயாகும். **வில்லியம் பிளேக்**

47. மன்னிப்பு மன்னிக்கப்பட்டவர்களை மட்டுமல்ல, மன்னித்தவர்களையும் மனச்சுமையிலிருந்து விடுவிக்கும். **பெயர் அறியப்படாதவர்**

48. மன்னிப்பதற்கு சக்தி சிறிதளவும் இல்லாதவன், நேசிப்பதற்கும் சக்தி சிறிதளவும் இல்லாதவனாகிறான். **மார்டின் லூத்தர் கிங் ஜுனியர்**

49. நீ ஒருவரை மன்னிப்பது அவருக்காக அல்ல, உனக்காகத்தான். நீ விடுதலையோடு வாழும்படியாகத்தான். நீ மன்னிக்க வேண்டும் என்பது உனக்கும், உனக்குத் தீங்கிழைத்தவருக்கும் இடையேயுள்ள பிரச்சினை அல்ல; அது தேவனுக்கும் உனக்கும் இடையே உள்ள விஷயம். **நீல் T. ஆண்டர்சன்**

1050. மன்னிக்க விரும்பும் வரும் வரை மன்னிக்கமாட்டேன் என்று சொல்லாதே; அந்த விருப்பம் ஒரு நாளும் வராது.
நீல் T. ஆண்டர்சன்

1051. மன்னிப்பதன் விளைவாக நமக்குக் கிடைப்பது விடுதலையே அன்றி ஏதோ ஓர் உணர்ச்சி அல்ல. **நீல் T. ஆண்டர்சன்**

1052. உண்மையான மன்னிப்பு என்பது ஒருவரைத் தண்டிக்க சக்தி இருந்தும் தண்டிக்காமல் இருப்பதாகும். **எம். கே. காந்தி**

1053. ஒருவர் செய்த தவறை மன்னிப்பது மிகவும் நல்லது, அதை மறப்பது மிகவும் சிறந்தது. **ராபர்ட் பிரௌனிங்**

1054. இந்தக் கொலைக்கு (எனது கணவர் கிரஹாம் ஸ்டெயின்ஸ்) மற்றும் இரு பிள்ளைகள் படுகொலைக்குக் காரணமானவர்களை நான் மன்னித்துவிட்டேன். எதையும் நமக்குக் கொடுக்கவும் நம்மிடத்திலிருந்த எடுக்கவும் கடவுளுக்கு உரிமை உண்டு. என் கணவரை எனக்குக் கொடுத்து இத்தனை ஆண்டுகள் அவரோடு வாழவும் மக்களுக்குக் குடும்பமாக ஊழியம் செய்யவும் கர்த்தர் அனுமதித்தாரே அதற்கு அவருக்குத்தான் நான் நன்றி கூற வேண்டும்.
கிளாடிஸ் ஸ்டெயின்ஸ்

1055. மன்னித்தல் என்ற சாவி பகையின் கைவிலங்கையும் கோபத்தின் கதவையும் திறக்கிறது. **வில்லியம் வார்ட் ஆர்தர்**

1056. மன்னிப்புக் கேட்டல் என்பது தவறான காரியத்தை செய்த பிறகு, சரியான காரியத்தைச் சொல்வதாகும்.
பெயர் அறியப்படாதவர்

1057. அறிக்கையிடப்பட்ட பாவங்கள் மன்னிக்கப்பட்டாயிற்று மன்னிக்கப்பட்ட பாவங்கள் மறக்கப்பட்டாயிற்று
பெயர் அறியப்படாதவர்

129. மனித உயிர்

1058. மனித உயிர் என்பது தேவனின் மிக மேலான நன்கொடையாகும். **அன்னை தெரேசா**

959. மனிதன் என்பவன் ஓர் அற்புதமான கலைப் பெட்டகம். இறைவனது பரிபூரண படைப்பாற்றலுக்கு அவன் ஒரு முத்திரைச் சான்று. **வில்லியம் சேக்ஷ்பியர்**

130. மகிழ்ச்சி

960. உலகத்திலிருக்கும்போதே மகிழ்ச்சியை அனுபவிக்கிறவன், சுத்த இருதயமுள்ளவனே தவிர வேறொருவருமல்லர். **தாமஸ் அ. கெம்பிஸ்**

961. மகிழ்ச்சி எங்கேயிருக்கிறதோ அங்கே பொக்கிஷம் இருக்கிறது. பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே நல்ல இருதயம் இருக்கிறது. எங்கே நல்ல இருதயம் இருக்கிறதோ அங்கே சந்தோஷம் இருக்கிறது. **புனித அகஸ்டின்**

962. நாம் நேசிக்கப்படுகிறோம் என்ற நம்பிக்கைதான் வாழ்க்கையின் மிக உயர்வான சந்தோஷமாகும். **விக்டர் ஹுகோ**

963. மகிழ்ச்சி நம்மிலிருக்கும் தேவ வாழ்வின் எதிரொலியாகும். **ஜோசப் கொலம்பா மார்மியன்**

964. தேவன் என்ன விரும்புகிறாரோ அதையே நான் விரும்புகிறேன். அதனால்தான் நான் மிகவும் மகிழ்ச்சியாயிருக்கிறேன். **பிரான்சிஸ் ஆஃப்ஸிசிஸ்**

965. ஒரு மகிழ்ச்சியான குடும்பம் முன்பே கிடைத்த சொர்க்கம். **ஜான் பௌரிங்**

966. மகிழ்ச்சியின் உண்மையான மூல தனம் இரக்கமே. **காட்வின்**

131. மகிமை

967. ஆண்டவருடைய மகிமையை ஒருவன் தான் எடுத்துக் கொள்ளாமல் இருந்தால், அவனைக் கொண்டு ஆண்டவர் சாதிக்கக்கூடிய காரியங்களுக்கு அளவே இல்லை. **பெயர் அறியப்படாதவர்**

1068. வாழ்விலோ சாவிலோ தேவன் உன் மூலம் மகிமைப்பட வேண்டும் என்பது மட்டுமே உனது ஒரே வாஞ்சை யாயிருக்கட்டும். **தாமஸ் அ. கெம்பிஸ்**

132. மாய்மாலம்

1069. மனிதரின் பார்வையில் அயோக்கியமாய் நடந்து, கடவுளின் பார்வையில் யோக்கியமாய் நடக்கிறேன் என்பது மாய்மாலம்! **பெயர் அறியப்படாதவர்**

1070. உலகத்தில் பாதிக்கு மேற்பட்ட அவலநிலைக்குக் காரணம் நான் எப்படியிருக்கிறேன் என்பதைக் காட்டாமல் நான் எப்படி இல்லையோ, அதைக் காட்ட முயற்சிப்பது தான் மாய்மாலம். **ஜார்ஜ் மேக்டொனால்ட்**

133. மாற்றம்

1071. மாற்றமில்லாமல் வளர்ச்சியில்லை. பயமோ இழப்போ இல்லாமல் மாற்றமில்லை. அதுபோல் வேதனையில்லாமல் இழப்புமில்லை. **ரிக் வாரன்**

1072. எனக்கு தெரியாது, எனக்குக் கவலையில்லை என்பது எந்தவொரு மாற்றத்தையும் உண்டுபண்ணாது. **ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**

1073. மாற்றம் என்பது வாழ்வின் சட்டம். யாரெல்லாம் நிகழ்காலத்தை அல்லது கடந்த காலத்தை மட்டும் பிடித்துக் கொண்டிருக்கிறார்களே, நிச்சயமாகவே அவர்கள் எதிர்காலத்தைத் தவறவிடுகிறார்கள். **ஜே.எப்.கே.**

1074. நாம் மாறும்போது எல்லாம் மாறுவதாகத் தோன்றுகிறது. **ஹென்றி பிரடெரிக் அமியல்**

1075. எனக்கு எந்த ஒரு காரியமும் முக்கியம் வாய்ந்ததாகத் தெரிகிறதில்லை. என்னுடைய இருதய தூய்மையும், பேய் அடிமைத்தனத்தில் வாழும் மக்களுடைய மாற்றமுமே அதிக முக்கியம் வாய்ந்ததாகக் கருதுகிறேன். **டேவிட் பிரெய்னார்ட்**

076. எல்லாரும் உலகத்தை மாற்ற நினைக்கிறார்கள். ஆனால் அவர்களையே மாற்றுவதைக் குறித்து யோசிப்பதில்லை.
கவுண்ட் லியோ டோல்ஸ் டாய்

077. நீ யோசிக்கிற முறையை மாற்றுவதால்தான், நீ உணர்கிற முறையை மாற்ற முடியும். **பெயர் அறியப்படாதவர்**

078. நெருப்பிலிடப்பட்ட இரும்பு அதின் துரு நீங்கி எல்லாம் நெருப்பாகி விடுகிறதுபோல, தேவனுக்கு நேராய்த் தன்னை முழுவதும் திருப்புகிறவன் எல்லா அசுசியும் நீங்கி, முழுவதும் புது மனிதனாக மாறி விடுகிறான். **தாமஸ் அ. கெம்பிஸ்**

134. மாதிரி

079. ஒருவன் எப்படி இருக்கக் கூடாது என்பதற்குப் பலர் மாதிரி, ஆனால் ஒருவன் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு சிலர் மட்டுமே மாதிரி. **கே.எஸ். ஆமோஸ்**

080. ஒரு மாதிரியை உண்டுபண்ணுவது என்பது பிறருடைய வாழ்க்கையில் மாறுதலை உண்டு பண்ணுவதற்கான பிரதான வழியல்ல, அது தான் ஒரே வழி. **ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**

081. நாம் போதிப்பதற்கு மாதிரியாக இருக்கவில்லையென்றால், நாம் வேறு ஏதோ ஒன்றைப் போதிக்கிறோம்.
பெயர் அறியப்படாதவர்

135. மிஷனரி

082. மிஷனரிகள் நிலைத்து நிற்பதற்கான முக்கிய ஆதாரம், ஜெப ஆதரவாளர்களின் ஜெபமே. **ரோலன்ட்**

083. ஆண்டவருடைய காரியத்தை தன்னுடைய காரியமாகவும், அவருடைய பாரத்தை தன்னுடைய பாரமாகவும் ஏற்றுக் கொள்வதே மிஷனரி ஊழிய தரிசனமாகும்.
டேவிட் வில்கர்சன்

084. உலகிலே அதிகக் கடினமாக பணிக்களத்தை எனக்குத் தாரும். அங்கு உமக்கென்று ஊழியம் செய்வேன். **இராபர்ட் மாரீஸன்**

1085. ஆண்டவரே, உலக முழுவதையும் மனமாற்றம் செய்வதற்கு முன் அம்மனமாற்றத்தை முதலில் என்னிலிருந்து ஆரம்பியும். **பில்லி கிரஹாம்**

1086. தேவனுடைய திருப்பணியில் உழைப்பதைக் காட்டிலும் சிறந்ததொரு பணி வேறில்லை. **வில்லியம் கேரி**

1087. மிஷனரி பணிக்கு மிகப் பெரிய தடையாயிருப்பது சுயமாகும். சுயம் மரிக்க மறுக்கிறது. சுயம் அர்ப்பணிக்க மறுக்கிறது. சுயம் கொடுக்க மறுக்கிறது. சுயம் ஊழியத்திற்குப் போக மறுக்கிறது. **தாமஸ் ஹாலே**

1088. தேவனுடைய வார்த்தையை அதிகமாக அறிவி. அதைக்குறித்து குறைவாக விவாதம் செய். **வில்லியம் டவுன்சென்ட்**

1089. நீ அறிவிக்கும் சுவிசேஷம் பிறரைத் தொடவில்லை என்றால், அது உன்னையே தொடவில்லை என்றுதான் அர்த்தம். **கரி ஆர். பிளேக்**

1090. உலகத்திற்கு சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு மிகப் பெரிய தடைக்கற்களாக இருப்பவர்கள் சபைக்குள்ளேயேதான் இருக்கிறார்கள். **ஜான் ஆர். மாட்**

1091. மிஷனெரிகளை அனுப்பாத சபை செத்த சபை. நற்செய்திப் பணியில் உற்சாகமற்ற சபை உறைந்து போகும். **ஆஸ்வால்டு ஜே. ஸ்மித்**

1092. மிஷனெரிப் பணி உலகத்திலேயே மிகவும் கடினமான காரியமாகும். அதைச் செய்ய முயற்சிப்பதே வியப்பான காரியமாக உள்ளது. **பேராயர் சார்லஸ் ஸ்டீபன் நீல்**

1093. தேவ அருட்பணி மிஷனரிகளுக்கு மாத்திரமல்ல. தேவனுடைய அழைப்பு எல்லாருக்கும் இருக்கிறது. **ஆன் டன்கன்**

1094. எங்கெல்லாம் நாகரீகம் வளர்ச்சி பெற்றுள்ளதோ, அறிவியல் முன்னேற்றம் அடைந்துள்ளதோ, கல்வியறிவு உயர்ந்

துள்ளதோ, மனித வளம் மேம்பட்டுள்ளதோ அவ்விடத்தைத் தோண்டிப் பாருங்கள். அங்கே ஒரு மிஷனரி மண்ணிற்குள் விதைக்கப்பட்டிருப்பான். **பேராயர் சார்லஸ் ஸ்டீபன் நீல்**

136. முட்டாள்

1095. முட்டாளின் பரதீஸ் என்பது ஞானவானின் நரகமாகும். **தாமஸ் ஃபுல்லர்**

1096. முட்டாள் அலைந்து திரிகிறான். ஞானவான் சுமுகமாகப் பயணம் செய்கிறான். **தாமஸ் ஃபுல்லர்**

1097. முட்டாளின் இருதயம் அவன் வாயில் இருக்கிறது. ஆனால் ஞானவானின் வாய் அவனுடைய இருதயத்தில் இருக்கிறது. **பென்ஞ்மின் ஃப்ராங்ளின்**

137. முயற்சி

1098. சராசரியானவனைவிட சற்றேவித்தியாசமானவனாக இருக்கச் செய்யும் முயற்சியே மிகவும் கடினமானதாகும். **சார்லஸ் எம். ஷ்வார்ட்ஸ்**

1099. நீங்கள் எதையும் செய்ய முயற்சிக்கும் வரையில் நீங்கள் எதில் அதிக திறமைசாலிகள் என்பதை ஒருபோதும் அறிந்து கொள்ளமாட்டீர்கள். **ரிக் வாரன்**

1100. நமது முயற்சிகளைக் கண்டு சாத்தான் சிரிக்கிறான். நமது மூளை அறிவைக் கண்டு சாத்தான் பரியாசம் செய்கிறான். ஆனால் நமது முழங்கால்களைக் கண்டால் சாத்தான் நடுங்குகிறான். **பெயர் அறியப்படாதவர்**

1101. நீங்கள் வேறொருவராக இருக்கும்படியாகத் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டிருக்கும் இந்த உலகத்தில், நீங்கள் நீங்களாக இருப்பதுதான் மிகப் பெரிய சாதனையாகும். **ரால்ஃப் வால்டோ எமர்சன்**

138. மேன்மை

1102. உண்மையிலே மேன்மையானவன் யாரென்றால் ஒவ்வொரு மனிதனையும் மேன்மையை உணரச் செய்பவனேயாவான்.

ஜி.கே. செஸ்டெர்டன்

1103. மேலானதொன்றை நமக்குக் கொடுப்பதற்காகவே எதையும் தேவன் தம் பிள்ளைகளிடமிருந்து எடுக்கிறார்.

ஜார்ஜ் முல்லர்

1104. ஆண்டவருடைய நட்சத்திரத்தைக் காண்பது மகிழ்ச்சியானது தான், ஆனாலும் அவருடைய முகத்தைக் காண்பதே மேன்மையானது.

டி.எல்.மூடி

1105. உலகத்தின் மேன்மை என்பது உலகத்தை ஆள்வது. கிறிஸ்தவனின் மேன்மை என்பது மக்களுக்குச் சேவை செய்வது.

ஜே.சி. ரைல்

1106. மேன்மை என்பது யாரோ ஒருவரைப் போல இருக்க முயற்சிப்பதில் இல்லை. அது யாரோ ஒருவருக்கு உதவி செய் வதற்கு முயற்சிப்பதில் இருக்கிறது. **பெயர் அறியப்படாதவர்**

1107. பிரசித்தி பெறுவதைவிட உண்மையாய் இருப்பது மேன்மையானது.

தியோடர் ரூஸ்வெல்ட்

1108. பரலோகத்திற்கு மோசமானவர்கள் போவதில்லை, மேன்மையானவர்கள் மட்டுமே. நரகத்திற்கு மேன்மையானவர்கள் போவதில்லை, மோசமானவர்கள் மட்டுமே.

பெயர் அறியப்படாதவர்

1109. மேன்மை என்பது பெலமாயிருப்பதில் இல்லை. அது பெலத்தைச் சரியாக பயன்படுத்துவதில் இருக்கிறது.

ஹென்றி வார்ட் பீச்சர்

139. வயது

1110. இள வயதில் சோம்பி உடல் கெடுப்பதை விட உழைத்து இயல்பாகத் தளர்வுறுவது நன்று.

ஜார்ஜ் ஒயிட்பீல்டு

1111. எல்லாரும் நீண்டகாலம் வாழ விரும்புகிறார்கள், ஆனால் எவரும் வயதுடையவர்களாக ஆக விரும்புகிறதில்லை.
ஆப்ரகாம் லிங்கன்

1112. முதிர்ச்சி என்பது வளர்ந்த ஒவ்வொருவரிடமும் காணும் அம்சம். வயது மாத்திரமே அதிகரித்து முதிர்ச்சியடையாது இருப்பதனால் அதிகம் பிரயோஜனமில்லை.
பெயர் அறியப்படாதவர்

1113. வயது என்பது வருடங்கள் குறித்தான விஷயமல்ல, அது உணர்வு குறித்ததான ஒரு விஷயம். **ஜார்ஜ் வில்லியம் கர்டிஸ்**

1114. வயது என்பது மனது குறித்ததான ஒரு காரியமாகும். வயதை மனதில் கொள்ளவில்லையென்றால் அது ஒரு காரியமல்ல.
பெயர் அறியப்படாதவர்

1115. முதிர்ச்சி என்பது நிச்சயமின்மையைத் தாங்குவதற்கான ஆற்றலாகும். **ஜான் பின்லி**

1116. உங்கள் வடிவமைப்பு உங்கள் ஊழியத்தை வெளிப்படுத்துகிறது. உங்கள் சேவக உள்ளம் உங்கள் முதிர்ச்சியை வெளிப்படுத்துகிறது. **ரிக் வாரன்**

140. வரம்

1117. மற்றவர்களுக்காகப் பயன்படுத்தப்படாத ஒரு வரம் பெருமதியற்றது. **ரிக் வாரன்**

141. வரலாறு

1118. வரலாற்றைக் குறித்து நீ எழுதுவாய் என்றால் வரலாறு உன்னைப் பற்றி எழுதும். **கே.எஸ். ஆமோஸ்**

1119. ஒருவன் பிறக்குமுன் என்ன நடந்திருக்கும் என்று தெரிந்து கொள்ளாமல் இருப்பது குழந்தையாய் எப்போதும் இருப்பதற்குச் சமம். **சிசெரோ**

1120. நல்ல குறிக்கோளை அடைவதற்காகத் தொடர்ந்து முயலும் மனிதனின் செயல்பாடே பிற்காலத்தில் அனைவரும் படிக்கும் சரித்திரமாக மாறுகிறது. **கார்ல் மார்க்ஸ்**

1121. உலக வரலாறு என்பது வீர புத்திரரின் வாழ்க்கை வரலாற்றின் தொகுப்பாகும். **தாமஸ் கார்விக்**

1122. வரலாறு குறித்ததான நமது அறிவுதான், நாம் வரலாறு படைக்கவும், நமது வரலாறை உண்டுபண்ணவும் உதவுகிறது. **கே.எஸ். ஆமோஸ்**

1123. தேவ மனுஷரின் வாழ்க்கை வரலாறும், தேவனுக்குத் தோல்வியைக் கொண்டு வந்தவர்களின் வாழ்க்கை வரலாறும் நமது போதனைக்காகவும், எச்சரிப்புக்காகவும் வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. **சகரியா பூணன்**

1124. வெற்றியடைந்தவனுக்கும் தோல்வியடைந்தவனுக்கும் சரித்திரத்தில் இடமுண்டு. ஆனால் முயற்சி செய்யாதவனுக்கு சரித்திரத்தில் இடமே இல்லை. **கே.எஸ். ஆமோஸ்**

1125. வரலாறு தேவனுடைய கரங்களால் எழுதப்பட்ட ஒரு கதை. **சி.எஸ். லூயிஸ்**

142. வல்லமை

1126. வல்லமையை விளைவிப்பது தேவனின் பங்கு. விசுவாசத்தை விளைவிப்பது நம்முடைய பங்கு. **ஆன்ட்ரு போனர்**

1127. தேவனைச் சேவிக்க நாம் ஒன்று கூடும்போது நாம் வல்லமை படைத்தவர்களாகிறோம். ஜெபத்தால் தேவனை நாம் வற்புறுத்துகிறோம். இந்த வற்புறுத்தல் தேவனுக்கு மிக மிகப் பிரியமானது. **புனித இரேனியஸ்**

1128. நாம் நமது சொந்த வல்லமையில் இல்லை. ஆனால் தேவனுடைய வல்லமையில் இருக்கிறோம். **புனித பெர்பெட்டுவா**

143. வாய்ப்புகள்

1129. பிறருக்கு உதவ பெரிய வாய்ப்புகள் மிக அருகலாக வருகிறது. ஆனால் சிறிய வாய்ப்புகள் ஒவ்வொரு நாளும் நம்மைச் சுற்றியே இருக்கிறது. **சால்லி கோச்**

1130. தேவனுடைய சிறந்த பரிசு பொருட்களல்ல, வாய்ப்புகள். நாம் துன்பம் என்று அழைப்பதை தேவன் வாய்ப்பு என்று அழைக்கிறார். **பெயர் அறியப்படாதவர்**

1131. வாய்ப்பு கதவை ஒரு முறை தட்டுகிறது. ஆனால் சோதனை எப்பொழுதும் கதவை வேகமாகத் தட்டுகிறது. **பெயர் அறியப்படாதவர்**

144. வார்த்தைகள்

1132. உன் வார்த்தைகள் விதையைப் போன்று உள்ளது. அது ஓர் அறுவடையை உண்டாக்கும். **சார்லஸ் கேப்ஸ்**

1133. நீ பேசுவதற்கு முன் இருமுறை யோசி. ஏனெனில் மற்றவர்களுடைய மனதில் உன் வார்த்தைகளும் செல்வாக்கும் தோல்வி அல்லது வெற்றியின் விதையை விதைக்கும். **நெப்போலியன் ஹில்**

1134. உன் வார்த்தைகள் உன் அறுவடையை முன்னறிவிக்கிறது. காரணம், உன் வார்த்தைகள் எதிர்காலத்திற்கு விதைகளாம். **ஜான் டி. லெம்மி**

1135. அவிசுவாசத்தில் பேசப்படும் வார்த்தைகளைவிட பேசப்படாத வார்த்தைகள் அதிக வல்லமையுள்ளவைகள். **சார்லஸ் கேப்ஸ்**

1136. மனித குலத்தினால் பயன்படுத்தப்படும் மிக சக்தி வாய்ந்த மருந்து சொற்கள்தான். **சிப்லிங்**

145. வாழ்க்கை

1137. வாழ்க்கை என்பது இறைவன் நமக்குத் தரும் பரிசு. அதைக் கொண்டு நாம் என்ன செய்கிறோம், அது தான் நாம் இறைவனுக்குத் தரும் பரிசு. **ஆர்.வி. வால்டர்**

1138. வாழ்க்கையை ஏற்றுக்கொள்கிறாயா இல்லையா என்று கடவுள் ஒருவரையும் கேட்பதில்லை. அது ஒரு விருப்பமல்ல, கட்டாயம். ஒரே ஒரு விருப்பம் என்னவென்றால் அதை நீ எப்படி அமைத்துக் கொள்கிறாய் என்பதுதான். **ஹென்றி வார்ட் பீச்சர்**

1139. மனிதன் வாழ ஒரு பொருள் வேண்டும். அவன் வாழும் வாழ்க்கையிலும் ஒரு பொருள் (அர்த்தம்) வேண்டும். **ஆர்.வி. வால்டர்**

1140. நீ வாழ்க்கையில் உயரும்போது மனிதர்களிடம் சுமுகமாக இரு. ஏனெனில் நீ கீழே இறங்கும்போது அவர்களைச் சந்திப்பாய். **வில்சன் மிஸ்னெர்**

1141. ஒரு வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்காமல் மறுவாழ்க்கை இல்லை. பழைய வாழ்க்கையின் இயல்பு மறையாமல் புதிய வாழ்க்கையின் ஆரம்பமில்லை. **ஆர்.வி. வால்டர்**

1142. தேவனுக்கு ஊழியம் செய்யவே பூமியில் நமக்கு ஒரு வாழ்க்கை ஈவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. **ஆண்ட்ரூ முரே**

1143. பின்நோக்குவதனால் மட்டுமே வாழ்க்கையைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் முன்னோக்குவதால் மட்டுமே வாழ்க்கை வாழ முடியும். **சோரென் கியர்கி கார்ட்**

1144. வளர்ச்சி என்பது வாழ்வின் ஒரே சான்று ஆகும். **கார்டினல் நியூமென்**

1145. வாழ்க்கையின் உண்மையான பெருந்துயரம் என்னவென்றால் ஒரே ஒரு தாலந்தைப் பெற்று இருப்பதல்ல, அந்த ஒரு தாலந்தை நாம் தோல்வி பெறாததற்குப் பயன் படுத்தாததாகும். **எட்கர் .ஓர்க்**

1146. முட்டுக்கட்டைகளிலிருந்து வளர்ச்சிக்குச் செல்லும் மேல்படிக்கட்டுகளை உருவாக்குவதுதான் வாழ்க்கையின் இரகசியங்களின் ஒன்றாகும். **ஜேம்ஸ் பென்**

1147. பயனற்ற வாழ்வு என்பது முன்கூட்டியே இறப்பதாகும். **ஜோகன் வோல்ப்காங்**

1148. வாழ்க்கையின் நோக்கம் என்பது நோக்கத்தின் வாழ்க்கையாகும். **ராபர்ட் பைர்ன்**

1149. தீர்மானம் ஏதும் இல்லாமல், பயணம் ஏதுமில்லை! உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எடுக்கும் தீர்மானமே, சமுத்திரமாகிய இந்த உலகில் உங்கள் படகு சரியான திசை நோக்கிச் செல்ல வழிவகுக்கும் **A.W. டோசர்**

1150. நம் வாழ்க்கையின் மிக முக்கியமான கேள்வி எதுவெனில், நாம் மற்றவர்களுக்காக என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதுதான். **மார்டின் லூத்தர் கிங் ஜுனியர்**

1151. நமது வாழ்க்கையை இனியதும் அர்த்தமுள்ளதுமாக மாற்றுவது இறைவனோடு நாம் தொடர்பு கொள்வதற்காகச் செலவிடும் நேரத்தின் அளவே. **வில்லியம் W. வால்போர்டு**

1152. பள்ளியில் நாம் கற்றுக் கொள்ளவில்லை. வாழ்க்கையில் கற்றுக் கொள்கிறோம். **செனேகா**

1153. என்னோடு ஜால்ரா அடிக்கிற எந்த ஒரு மனிதனிடமிருந்தும் எதையும் என் வாழ்க்கையில் நான் கற்றுக் கொள்ளவில்லை. **டட்லி ஃபீல்ட் மலோன்**

154. வாழ்க்கையின் பாதையை வழிநடத்தும் அன்பு, எதையும் கண்டு அஞ்சாத விசுவாசம், எந்த ஏமாற்றங்களும் அசைக்காத நம்பிக்கை, அணையா விளக்காய் எரியும் வாஞ்சை, போன்றவை தாரும். நான் ஒரு மாமிசப் பிண்டமாய் அழியாமல் உமக்காய் எரியும் நெருப்பாய் என்னை மாற்றும். **ஏமி கார்மைக்கேல்**

1155. வாழ்க்கையின் ஒரே இயலாமை என்பது தவறான மனப்பான்மையைக் கொண்டுள்ளதுதான். **ஸ்காட் ஹாமில்டன்**

146. வாசித்தல்

1156. வாசித்தல் முழு மனிதனை உருவாக்குகின்றது. பேசுதல் ஆயத்தமான மனிதனையும், எழுதுதல் சரியான மனிதனையும் உருவாக்குகின்றன. **ஃபிரான்சிஸ் பேக்கன்**

1157. புத்தகங்கள் இல்லாத ஒரு வீடு ஆத்துமா இல்லாத ஒரு சரீரம். **மார்கஸ் துல்லியஸ்**

1158. பிரதிபலிப்பில்லாமல் படிப்பது ஜீரணமாகாமல் சாப்பிடுவது போன்றதாகும். **எட்மன்ட் பார்க்**

1159. நான் படிப்பதற்காக வாழ்கிறேன். வாழ்வதற்காகப் படிக்கவில்லை. **ஃபிரான்சிஸ் பேக்கன்**

1160. நாம் அதிகமாகப் படிக்கும்போதுதான் நமது அறியாமையை அதிகமாகக் கண்டுபிடிக்கிறோம். **பெர்சி பி. செல்லி**

147. விசுவாசம்

1161. விசுவாசம் என்பது உணர்ச்சியுமல்ல, காண்பதுமல்ல, பகுத்தறிவுமல்ல, கர்த்தருடைய வார்த்தையை அப்படியே நம்புவதாகும். **இவான்ஸ்**

1162. விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் இவையிரண்டும் ஒரே செடியில் பூத்த இரு மலர்க் கொத்துக்கள். தேவனை விசுவாசிப்பவன் அவருக்குக் கீழ்ப்படிவான். கீழ்ப்படிபவன் அவரை விசுவாசிப்பான். **சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்**

1163. விசுவாசப் பாதை ரோஜா இதழ்கள் தூவப்பட்ட பாதை அல்ல. அது இரத்தம் வடிந்த தடம் காணப்படும் பாதை. **J. ஆஸ்வால்டு சாண்டர்ஸ்**

1164. நாம் கவலைகொள்ள ஆரம்பிப்பதே விசுவாசத்தின் முடிவு கவலையின் இறுதியே உண்மையான விசுவாசத்தின் ஆரம்பம். **ஜார்ஜ் முல்லர்**

1165. விசுவாசமில்லாமல் நீந்துவதைவிட விசுவாசத்தோடு நீரில் மூழ்குவோர்களில் நானும் ஒருவன். **ஸ்டான்லி பால்ட்வின்**

1166. விசவாசம் தேவனைச் செயல்பட செய்கிறது. பயம் எதிரியைச் செயல்பட வைக்கிறது. **ஜோயேல் ஓஸ்டீன்**

1167. விசுவாசத்தை வெறுமனே சுதந்தரித்துக் கொள்ள விரும்பவில்லை. என்னை ஆட்கொள்கிற விசுவாசத்தை விரும்புகிறேன். **சார்லஸ் கிங்ஸ்லி**

168. விசுவாசத்தினால் எல்லாம் கூடும். அன்பினால் எல்லாம் சுலபமாகும். **டி.எல்.மூடி**

169. விசுவாசமுள்ள ஒருவன் பின்வாங்குவதில்லை. எதிரியை நின்ற இடத்திலேயே பின்வாங்கச் செய்வான். **மார்லில் போக்**

170. விசுவாசம் ஆண்டவரை மகிமைப்படுத்துகிறது. ஆண்டவர் விசுவாசத்தை மதிக்கிறார். **பெயர் அறியப்படாதவர்**

171. தாமதமாகும் ஜெபங்களின் பதில்கள் விசுவாசக் சோதனைகள். **சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்**

72. நாம் காணாதவற்றை நம்புவதே விசுவாசம். இவ்விசுவாத்தின் பலன், நாம் விசுவாசிப்பதைக் காண்பதேயாகும். **புனித அகஸ்டின்**

73. விசுவாசம் என்பது வாழ்க்கையை ஓர் பிரமிக்கத்தக்க அனுபவமாய் மாற்றும் ஒரு ஊக்கமிக்க முயற்சி. **ரெயினார்டு போங்கே**

74. கிறிஸ்து, இருதயங்களைக் கொழுந்து விட்டு எரியச் செய்கிறார். அப்போதுதான் நாம் தேவனுக்காக எரிந்து பிரகாசிக்க முடியும். இதை விசுவாசிப்பவர் அநேகரில்லை. ஆயினும் நாம் இதை விசுவாசிக்கும்போது, நாம் பிரகாசிக்கிறோம். **ரெயினார்டு போங்கே**

5. நம்முடைய எல்லா செயல்பாடுகளையும் அப்படியே முடக்கி வைத்துவிடும் பயத்தை வடிகட்டி விடும் ஒருவிதமான

தடுப்புச் செயல்முறை தான் விசுவாசம்.
ரெயினார்டு போங்கே

1176. நான் காணாத எல்லாவற்றிற்கும் நான் கண்ட எல்லாமே தேவனை நம்பும்படி எனக்குப் போதிக்கிறது.
ரால்வ் வால்டோ எமர்சன்

1177. விசுவாசம் என்பது முற்றிலும் ஓர் எளிமையான காரியம். ஆனால் அதுவே தேவனுடைய பார்வையில் நம்மை மேன்மையானவர்களாக ஆக்குகிறது.
ரெயினார்டு போங்கே

1178. காணாததைக் காணக்கூடிய கண்தான் விசுவாசம். தேவனைக் காண்பதற்கு பௌதீக விதிப்படி செய்யப்பட்ட கண்ணாடி, லென்ஸ், கருவிகள் எதுவுமே பயன்படாது.
ரெயினார்டு போங்கே

1179. வசனத்தை நாம் விசுவாசிக்கிறோம் என்று சொல்லியும், அதற்குக் கீழ்ப்படியாவிட்டால், நாம் நம்முடைய விசுவாசத்தை மறுதலிக்கிறோம். **ரெயினார்டு போங்கே**

1180. குழிமுயல்களைப் போல் வசதியான குழிகளுக்குள் பதுங்கிக்கிடக்கும் நம்மைத், தட்டி எழுப்பி, தேவனுக்காக எதையாவது செய்யும்படி விரட்டக்கூடியது விசுவாசம்.
ரெயினார்டு போங்கே

1181. விசுவாசம் என்பது தேவனுக்கும் நமக்கும் இடையிலான ஒரு பரஸ்பர செயல்பாடாகும். **ரெயினார்டு போங்கே**

1182. விசுவாசத்தில் வேரூன்றியிருக்கிற விசுவாசியின் மனம் செழிப்பான நிலம் போலிருக்கிறது. **ஹென்னத் ஹேகின்**

1183. விசுவாசத்தால் வாழ்க்கையை நடத்துகிற மக்கள் தடைகளைப் பார்ப்பதில்லை. வாய்ப்புகளைத் தான் பார்க்கிறார்கள்.
வான்ஸ் ஹாவ்நெர்

1184. விசுவாசமுள்ள ஒருவனுக்கு எந்த விளக்கமும் தேவைப்படாது. விசுவாசமில்லாதவனுக்கோ எந்த

விளக்கமும் கூறி விளங்க வைக்க முடியாது.
தாமஸ் அக்வினாஸ்

1185. இயேசுவின் வார்த்தைகளை நாம் கவனித்துப் பார்த்தால் ஒன்று புலப்படும் - அவர் மனிதர்களை ஒருபோதும் பாராட்டியதில்லை. ஆனால் அவர்கள் விசுவாசத்தைப் பாராட்டியிருக்கிறார். **ரெயினார்டு போங்கே**

186. விசுவாசம் என்பதே தேவனுடைய ராஜ்யத்தினுள் நுழைந்து அதன் ஐசுவரியங்களை அனுபவிப்பதற்குரிய பாஸ்போர்ட், விசா, மற்றும் நுழைவுக் கட்டணம். **ரெயினார்டு போங்கே**

187. நீ ஒரு பெரிய விசுவாசத்தை விரும்பினால், ஒரு பெரிய போராட்டத்தைப் போராட ஆயத்தமாயிரு.
பெயர் வெளியிடாதவர்

188. விசுவாசம் என்பது காணமுடியாதைக் காண்கிறது, நம்பமுடியாததை நம்புகிறது, பெறமுடியாததைப் பெறுகிறது.
கூரி டென் பூம்

89. விசுவாசமானது சிறு விதையில் அழகிய தோட்டத்தையும் ஆல விதையில் இராட்சக ஆலமரத்தையும் காணும்.
வில்லியம் ஆர்தர் வார்டு

90. பயம் சாத்தானைச் செயல்படச் செய்கிறது. விசுவாசம் தேவனை செயல்படச் செய்கிறது. **சார்லஸ் காப்ஸ்**

91. விசுவாசம் செய்யமுடியாத காரியங்களைச் செய்கிறது. ஏனெனில் நமக்காக அதைச் செய்ய, விசுவாசம் தேவனைச் செயல்படச் செய்கிறது. தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. **இ.எம். பவுண்ட்ஸ்**

92. விசுவாச வாழ்க்கை நித்திய வாழ்க்கையைப் பெற்றுக் கொள்வதில்லை. அதுதான் நித்திய வாழ்க்கை. கிறிஸ்து அதனுடைய வாகனமாயிருக்கிறார். **வில்லியம் டெம்பில்**

3. விசுவாசத்தின் பிரதான பகுதி பொறுமை. **தெரேசா வெஸ்ட்**

1194. விசுவாசம், நம்பிக்கை, அன்பு, இம்மூன்றும் தேவ பிள்ளைகள் என்பதற்கு அடையாளம். அவிசுவாசம், மனச் சோர்வு, பகை இம்மூன்றும் பிசாசின் பிள்ளைகள் என்பதற்கு அடையாளம். **பெயர் அறியப்படாதவர்**

1195. என்றுமே குறையாத விசுவாசப் பாதையில் செல்லும் அன்பினை எனக்குத் தாரும். **ஏமி கார்மிக்கேல்**

1196. நாம் சந்திக்கும் ஒவ்வொரு சோதனையும், நமது விசுவாசத்திற்கு ஒரு பரீட்சையேயாகும். **சகரியா பூணன்**

1197. நீ விசுவாசத்தால் உன் வாழ்க்கையை நடத்தப் போகிறாய் என்றால் உன் விசுவாசம் சோதிக்கப்படட்டும். சோதிக்கப்படாத விசுவாசம் நம்பப்படலாகாது. **வாரன் வியர்ஸ்பி**

1198. விசுவாசத்தால் நடத்தல் என்பதன் அர்த்தம், ஒன்றைப் பார்ப்பதற்கு எங்கே நாம் அனுமதிக்கப்படவில்லையோ, அதை நம்புவதற்கு தன்னைத் தயார்படுத்துதல் ஆகும். **ஜான் பிளான்சர்ட்**

1199. தேவன் மாத்திரமே மலைகளை அசைக்க முடியும். ஆனால் விசுவாசமும் ஜெபமும் தேவனை அசைக்க முடியும். **இ.எம். பவுண்ட்ஸ்**

1200. விசுவாசம் என்பது நீ எதை நம்புகிறாயோ அதை எவ்வளவு நம்புகிறாய் என்பதைக் குறித்ததல்ல, நீ நம்பத் தகுந்ததை நம்புகிற ஒன்றுதான் விசுவாசம். **டோனி ஈவன்ஸ்**

1201. ஒரு சிறிய விசுவாசம் உன் மனதைப் பரலோகத்திற்குக் கொண்டு செல்லும், ஆனால் பெரிய விசுவாசம் பரலோகத்தை உன் மனதிற்குள் கொண்டு வரும். **டி.எல். மூடி**

148. விசுவாசி

1202. ஒவ்வொரு விசுவாசியும் நற்செய்தியை அறிவிக்கத் தேவனால் அபிஷேகிக்கப்பட்ட தூதுவர்கள். **ஆர்.பி. குய்யர்**

3. ஒரு விசுவாசியிடம் பெற்றுக் கொள்வதற்கு எல்லாம் இருக்கிறது, ஆனால் இழப்பதற்கு ஒன்றுமில்லை. ஒரு விசுவாசியாயில்லாதவரிடத்தில் பெற்றுக் கொள்வதற்கு ஒன்றுமில்லை, ஆனால் இழப்பதற்கு எல்லாம் இருக்கிறது.

பெயர் அறியப்படாதவர்

149. விடா முயற்சி

4. விடா முயற்சி என்பது ஒரு நீண்ட ஓட்டப்பந்தயமல்ல, ஒவ்வொன்றாக ஓடக்கூடிய பல சிறிய ஓட்டப்பந்தயங்களாகும். **வால்டர் எலியட்**

150. விமர்சனம்

5. உலகத்தில் மிகவும் பயனுள்ள விமர்சனம் என்பது தன்னைத்தானே விமர்சித்துக் கொள்வதாகும்.

ஓ.ஏ. பாட்டிஸ்டா

6. விமர்சனத்தால் ஒருவருடைய நற்குணம் தீர்மானிக்கப்படுகிறதில்லை. விமர்சனத்தால் அவர் மன்னிக்கிறார் என்பதினால்தான். **ஓ.ஏ. பாட்டிஸ்டா**

7. உதவி செய்யும் எண்ணம் உள்ளவர்களுக்கு விமர்சிப்பதற்கு உரிமை உண்டு. **ஆப்ரகாம் லிங்கன்**

151. வெற்றி

8. வெற்றி என்பது ஒருபோதும் தானதர்மத்தாலோ பிச்சையாலோ பெறுவதல்ல. அது போராடி ஜெயிப்பது. **O.S. மெர்வின்**

. வெற்றி என்பது மற்றவர்கள் என்ன செய்திருக்கிறார்கள், நீ என்ன செய்திருக்கிறாய் என்பதற்கு ஒப்பிடுவதல்ல. நீ என்ன செய்திருக்க வேண்டும், நீ என்ன செய்திருக்கிறாய் என்பதற்கு ஒப்பிடுவதாகும். **டோனி ஈவன்ஸ்**

. விடாமுயற்சியின் மனப்பாங்கு என்பது வெற்றியின் மனப்பாங்காகும். **ஹெர்பெர்ட் காஃப்மேன்**

1211. முதன்மை நிலை என்பது சிறப்பாக இருப்பது அல்ல, அது சிறப்பானதைச் செய்வதாகும். **பெயர் அறியப்படாதவர்**

1212. உனது வெற்றியின் அளவு உனது விருப்பத்தின் ஆழத்தைச் சார்ந்திருக்கிறது. **பெயர் அறியப்படாதவர்**

1213. வெற்றிக்கும் தோல்விக்கும் இடையே உள்ள ஒரே வேறுபாடு என்பது செயலில் இறங்குவதின் திறமையாகும். **அலேக்ஸ்சாண்டர் கிரஹாம் பெல்**

1214. வெற்றிக்கு இரகசியம் என்பது வாய்ப்பு கிடைக்கும்போது தயாரான நிலையில் இருந்து அதைப் பயன்படுத்துவதாகும். **பென்ஞமின் திஸ்ரேலி**

1215. கடின முயற்சி செய்வதற்கு முன்பே வெற்றி இருக்கிற ஒரே இடம் அகராதியாகும். **டொனால்டு கென்டெல்**

1216. வெற்றி வாகை சூடுவதற்கு வேறொருவரும் உன்னில் நம்பிக்கை வைக்காதபோது, நீ உன்னிலே நம்பிக்கை வைப்பதால்தான் அது ஆகும். **சுகர் ரேய் ராபின்சன்**

1217. 99 முறை முயற்சி செய்து தோல்வியடைந்திருக்கிறேன். ஆனால் நூறாவது முறை வெற்றியடைந்திருக்கிறேன். **ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**

1218. வெற்றியின் இரகசியம் என்பது நோக்கத்தைக் குறித்து கொள்கை மாறாமலிருப்பதாகும். **பென்ஞமின் திஸ்ரேலி**

1219. ஒன்றாக இணைவது ஒரு தொடக்கமாகும். இணைந்திருப்பது முன்னேற்றமாகும். இணைந்து செயலாற்றுவது வெற்றி யாகும். **ஹென்றி ப்போர்டு**

1220. தொடர்ந்து தடைகளை எதிர்த்துப் போராடி கைவிடாமல் செய்யும் முயற்சிக்குப் பதிலான இன்னுமொரு பொருள் உலகத்திலேயே இல்லை. **ரே க்ரோக்**

1221. ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் வெற்றியின் இரகசியம் – அதற்கென அவன் தன்னை ஆயத்தம் செய்து கொள்வதுதான். **பெஞ்சமின் திஸ்ரேலி**

222. வெற்றி பெறவேண்டுமா? தோல்விகளை இரட்டிப் பாக்கிக்கொள். வெற்றி, தோல்வியின் பக்கத்தில் கிடக்கிறது.
தாமஸ் ஜே. வாட்ஸன்

223. வெற்றிக்கும் தோல்விக்கும் சிறிய வித்தியாசம்தான் உண்டு. கடமையைச் செய்தால் வெற்றி; கடமைக்குச் செய்தால் தோல்வி. **பெயர் அறியப்படாதவர்**

224. வெற்றிக்களிப்பில் மனிதன் தன்னை மறப்பான். தோல்வியில் மட்டுமே மனிதன் தன்னை நினைப்பான். **ஆர். வி. வால்டர்**

225. வெற்றியில் மனிதன் கற்றுக் கொள்வதை விட, தோல்வியிலும் கஷ்டத்திலுமே அதிகம் கற்றுக் கொள்கிறான்.
ஆர். வி. வால்டர்

226. கைமேல் இருக்கும் காரியத்தின் மீது கண் வைக்கும்போது விரைவில் வெற்றியைப் பெறுகிறோம். **பெயர் அறியப்படாதவர்**

227. ஒரு காரியத்தைத் தீர்மானித்துவிட்டால் சாவு அல்லது வெற்றிதான். **பக்ஸ்டன்**

228. நல்ல ஆரம்பமே பாதி நிறைவு. **அரிஸ்டாட்டில்**

229. வெற்றி பெறுவதற்கு முதலில் தோல்வியடைய வேண்டும். அப்போதுதான் அடுத்த முறை என்ன செய்யக்கூடாது என்பதைத் தெரிந்து கொள்வாய். **அந்தோனி ஜே.டி. ஆங்கிலே**

30. நீ வெற்றிபெறப் பிறந்திருக்கிறாய். ஆனால் வெற்றி வீரனாயிருப்பதற்கு, வெற்றி பெறத் திட்டமிட வேண்டும். ஆயத்தமாக வேண்டும், இன்னபடி நடக்க வேண்டுமென நினைக்க வேண்டும். **சிக் சிக்லர்**

31. உண்மையான வெற்றி என்பது நீ நேசிக்கும் பணியில் உன் வாழ்நாள் பணியைக் கண்டுபிடிப்பதாகும். **டேவிட்**

32. ஏதாவது ஒன்றில் வெற்றி பெறுவதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அது எல்லாவற்றையும் கொடுப்பதில் தான் இருக்கிறது. **வின்சன்ட்**

1233. வாழ்க்கையில் நீங்கள் வெற்றி பெற மூன்று வழிகள். 1. பிறரைக் காட்டிலும் அதிகமாக அறிந்து கொள்ள முயலுங்கள். 2. பிறரைக் காட்டிலும் அதிகமாக உழைக்கக் கற்றுக் கொள்ளுங்கள். 3. பிறரைக் காட்டிலும் குறைவாக பிறரிடமிருந்து பெற முயலுங்கள். **வில்லியம் ஷேக்ஸ்பியர்**

1234. வெற்றி என்பது ஒவ்வொரு முறையும் முதல் இடத்தை அடைவது என்று அர்த்தமல்ல, வெற்றி பெற்றாய் என்றால் உன் செயல்பாடு சென்ற முறையைவிட இம்முறை சிறப்பாக அமைந்துள்ள து என்று தான் அர்த்தம். **ஃபேன்னி ப்ளேயர்**

235. முயற்சியின்றி கவலை ஒரு போதும் வெற்றியைத் தருவதில்லை. **பெயர் அறியப்படாதவர்**

236. வெற்றி வந்தால் பணிவு அவசியம். தோல்வி வந்தால் பொறுமை அவசியம். எதிர்ப்பு வந்தால் துணிவு அவசியம். எது வந்தாலும் நம்பிக்கை அவசியம். **பெயர் அறியப்படாதவர்**

37. ஒருவனின் வெற்றி அவன் வாழ்வில் அடைந்த உயர்ந்த நிலையைப் பொறுத்து அளவிடப்படலாகாது. அது அவன் வாழ்வில் வந்த தடைகளை மேற்கொண்டதைப் பொறுத்தே அளவிடப்படவேண்டும். **பூக்கர் டி. வாஷிங்டன்**

38. வஞ்சக சூழ்ச்சியால் வெற்றி பெறுவதைவிட நற்பெயரோடு தோல்வியடைவது நல்லது. **சோஃப்போக் லெஸ்**

9. வெற்றி வீரனாக ஆக முயற்சி செய்யாதே. தகுதியாளனாக ஆக முயற்சி செய். **ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**

0. இந்த பூமியில் தைரியத்தின் மிகப் பெரிய பரீட்சை என்பது வெற்றியின் மனதை இழக்காமல் தோல்வியைத் தாங்கிக் கொள்வதுதான். **இராபர்ட் க்ரீன் இக்கெர்சோல்**

. வெற்றி, செயலோடு தொடர்புடையதாகத் தெரிகிறது. வெற்றிக்குரிய மக்கள் தொடர்ந்து முன்னேறுகிறார்கள்.

அம்முன்னேற்றத்தில் தவறுகள் செய்தாலும் அம்முயற்சியைக் கைவிடுவதில்லை. **கான்ராட் ஹில்டன்**

42. எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமோ அந்தக் காரியத்தை எப்போது செய்ய வேண்டுமோ அப்போது செய்கிறவர்களே வெற்றியடைகிறார்கள். அவர்களுக்கு அதில் விருப்பம் இருக்கிறதா இல்லையா என்பது வேறு விஷயம். **ஆல்டஸ் ஹக்ஸ்வி**

43. வெற்றி பெறுவதற்கு முதல் படி என்பது நமக்கு எதிராக போட்டியிடுபவர் யார் என்பதை அறிந்து கொள்வது தான். **கூரி டென் பூம்**

44. புகழ் இல்லாமல் வெற்றிபெறுவதென்பது, அபாய நேர்வு (risk) இல்லாமல் வெற்றி பெறுவதாகும். **கார்சில்லி**

45. வெற்றி என்பது 80 சதவீதம் மனப்பான்மையையும் 20 சதவீதம் தகுதியையும் கொண்டுள்ளது. **ஃபன்மி வேல் அடெக்பைட்**

152. வேதாகமம்

46. முழுமையான விழிப்புணர்ச்சி அடையாத மக்கள் வேதத்தை வாசிப்பதில் அக்கறை செலுத்தமாட்டார்கள். அவர்களுக்கு அது சுவையாக இருக்காது. ஆனால் ஒரு சிறிய கைப்பிரதியானது அவர்களின் கவனத்தை அரை மணி நேரத்திற்குக் கவர்வதாய் இருக்கும். அதுவே தேவனுடைய ஆசீர்வாதத்தினால் அவர்களை வேதம் வாசிக்கும்படி தூண்டும். **ஜான் வெஸ்லி**

47. வேதம் என்பது தேவனுடைய ராஜ்யத்தின் அரசியல் சாசனம். அது பூமியின் எந்த ஒரு நாடாளுமன்றத்தின் மூன்றால் இரண்டு பங்கு பெரும்பான்மையாலும் மாற்றப்படக் கூடியதல்ல. **ரெயினார்டு போங்கே**

48. எதுவெல்லாம் தேவனால் கூடும் என்று நமக்குத் தெரிவிப்பதற்காக வேதம் எழுதப்படவில்லை. ஆனால், அவர்

எதையெல்லாம் செய்வார் என்பதைத் தெரிவிப்பதற்கே வேதம் இருக்கிறது. **ரெயினார்டு போங்கே**

1249. அவிசுவாத்தை உடைத்து நொறுக்கி தேவனிடத்தில் நாம் கொள்ளும் நம்பிக்கையைக் கட்டி எழுப்பவே, இந்த முழு வேதாகமமும் எழுதப்பட்டுள்ளது. **ரெயினார்டு போங்கே**

1250. வேத புத்தகத்தை திறந்து இதன் சுகமளிக்கும் பக்கங்களைப் புரட்ட விசுவாச விரல்கள் தேவை. **ரெயினார்டு போங்கே**

1251. தேவனுடைய வசனத்தைக் கேட்கும்போது அதை விசுவாசத்துடன் கேட்காவிட்டால், வேதமே வீணாகிவிடும். நாமும் சாத்தானின் நகைப்புக்கு இடமாகிவிடுவோம். ஆம், நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். **ரெயினார்டு போங்கே**

1252. வேதத்துக்குப் புறம்பான எந்த வெளிப்பாடுமே, கள்ளத்தீர்க்தரியின் வழிமுறைதான். **ரெயினார்டு போங்கே**

1253. எனது வெற்றியின் இரகசியம் என்பது மிக எளிமையானது. அது வேதாகமத்தில் இருக்கிறது, 'உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள், அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். **ஜார்ஜ் வாஷிங்டன் கார்வெர்**

1254. கிறிஸ்துவே வேதாகமத்தின் இருதயமும், கிறிஸ்தவ வாழ்வு மற்றும் விசுவாசத்தின் மையமுமானவர். சபைக்கான மாதிரியும் உதாரணமுமானவர் கிறிஸ்து மட்டுமே. அவர் மட்டும் போதுமானவராயிருக்கிறார். **மார்டின் லூத்தர்**

1255. நான் வேதம் வாசிப்பதனால் மிகுந்த பலனைக் காண்கிறேன். மற்றெல்லாப் புத்தகங்களையும் எடுத்து வைத்து விட்டு, விசுவாசத்தோடு இதைப் படித்தால் நீ ஒரு பயனுள்ள மனிதனாக வாழ முடியும், சாக முடியும், **ஆபிரகாம் லிங்கன் தம் நண்பருக்கு எழுதிய கடிதத்தில்**

1256. நாங்கள் வேதத்தை நம்புகிறோம் என்று மார்தட்டிக் கொண்டு, அப்படி ஒரு நூல் இல்லாதது போலத் தங்கள் மனம்போன போக்கிலே முன்னுக்குப் பின் முரணாக வாழும் கிறிஸ்தவர்களின் போக்கு, உண்மையை உணராத தோழர்களின் வாதங்களை வலுப்படுத்தி விடுகிறது.
ஜேம்ஸ் ஹட்சன் டெய்லர்

1257. உலகம் படிக்கிற வேதாகமங்களாக நாம் இருக்கிறோம். உலகத்திற்குத் தேவைப்படுகிற திருமறைக்கோட்பாடுகளாக நாம் இருக்கிறோம். உலகம் கவனத்திற்கொள்கிற பிரசங்கங்களாய் நாம் இருக்கிறோம். **பில்லி கிரஹாம்**

1258. மனிதர்கள் எதிர்த்தாலும், பரிசுத்த வேதாகமத்தின் குற்றமற்ற வார்த்தையைப் பிரசங்கிக்க நாங்கள் பயப்படோம். ஆனால் அது பரிசுத்த வேதாகமத்தின் வார்த்தையாக இல்லாதிருக்குமானால், எல்லாரும் அதை ஏற்றுக் கொண்டாலும், நாங்கள் அதை ஒருபோதும் ஒத்துக் கொள்ளமாட்டோம்.
வாட்ச்மேன் நீ

1259. வேதம் பாவத்திலிருந்து உன்னைக் காக்கும், அல்லது பாவம் உன்னைப் பரிசுத்த வேதத்திலிருந்து விலக்கும்.
ஜான் பணியன்

1260. விருப்பம் இல்லாத காரியம் எதிர்ப்படும்போது ஒரு மணிநேரம் வேதத்துடன் ஒட்டிக் கொள்.
கிறிஸ்டியன் பிரடரிக் சுவாஸ்ட்ஸ்

1261. வேதாகமம் மற்றும் தேவன் இல்லாமல் இந்த உலகத்தைச் சரியாக ஆட்சி செய்ய முடியாது. **ஜார்ஜ் வாஷிங்டன்**

1262. வேதாகமத்தின் நம்பகத் தன்மையை ஏற்றுக் கொள்ளுமுன், மக்கள் நம்முடைய வாழ்க்கையின் நம்பகத் தன்மையை அறிய விரும்புவார்கள். **ரிக் வாரன்**

1263. வேதாகமத்தை வாசிக்கும் மக்களை மனதளவிலலோ அல்லது சமூக ரீதியாகவோ அடிமைகளாக்குவது சாத்தியமற்றது. **ஹோரேஸ் க்ரீன்லி**

1264. நான் ஒரு வேதாகம வைராக்கியமுடையவன். எல்லாவற்றிலும் நான் அதை பின்பற்றுகிறேன். **ஜான் வெஸ்லி**

1265. வேதாகமம் தேவன் நமக்கு அனுப்பிய ஒரு கடிதம். ஜெபம் நாம் தேவனுக்கு அனுப்பும் ஒரு கடிதம். **மேத்யூ ஹென்றி**

1266. வேத ஆய்வு என்பது பட்டாணி சாப்பிடுவது போன்றது. எவ்வளவு அதிகமாக அதை சாப்பிடுகிறீர்களோ அவ்வளவு அதிகமாக சாப்பிட விரும்புவீர்கள். **பால் லிட்டில்**

1267. நான் ஒரு வேதாகமத்தின் மனிதன். **தாமஸ் அக்குவினாஸ்**

1268. வேத வாசிப்பு இல்லாததற்கான பெரிய காரணம், நமக்கு நேரம் இல்லாமையால் அல்ல; நமக்கு விருப்பம் இல்லாததுதான். **ராபர்ட் சாப்மேன்**

1269. என்னைப் புரிந்துகொள்கிற ஒரே புஸ்தகம் வேதாகமம்தான். **எமிலி கைலியட்**

1270. உலகிலே வேதாகமம் மட்டும்தான் செய்தி புஸ்தகம் ஆகும். என்ன நடந்திருக்கிறது என்று செய்தித்தாள் கூறுகிறது, ஆனால் என்ன நடக்கப் போகிறது என்பதை வேதாகமம் நமக்குக் கூறுகிறது. **டி.எல். மூடி**

1271. நேர்மையின் வாழ்க்கையினால் சான்றளிக்கப்படாத விசுவாசம், விவிலிய விசுவாசம் இல்லவே இல்லை. **டேவிட் ஜெரேமையா**

1272. வேதாகமம் என்பது சிறப்பு நிகழ்ச்சிகளுக்குப் பயன் படுத்தப்படும் கேக் அல்ல, தினமும் பயன்படுத்தப்படும் ரொட்டியாகக் கருதப்படுகிறது. **பெயர் அறியப்படாதவர்**

1273. செழிப்பு பழைய எற்பாட்டின் ஆசீர்வாதம். துன்பம் புதிய ஏற்பாட்டின் ஆசீர்வாதம். **ப்ரான்சிஸ் பேக்கன்**

1274. நான் ஆப்பிள்களை சேகரிப்பதுபோல என்னுடைய வேதாகமத்தைப் படிக்கிறேன். முதலாவது பழுத்த கனிகள் விழுவதற்கு மரத்தைக் குலுக்குகிறேன். பிறகு ஒவ்வொரு

கொப்புகளையும் குலுக்குகிறேன். ஒவ்வொரு கொப்புகளை நான் குலுக்கும்போதும் ஒவ்வொரு கிளை மற்றும் சிறு கிளை குலுங்குகிறது. பிறகு ஒவ்வொரு இலைகளுக்குக் கீழே நான் பார்க்கிறேன். **மார்டின் லூத்தர்**

1275. வேதாகமம் தேவனின் இராஜ்யத்தின் சட்டப் புத்தகமாகும். அது பரலோக சட்டத்தின் முழு குழுமம், ஒரு பரிசுத்த வாழ்க்கையின் பூரண விதிகள், மற்றும் மகிமையான ஒன்றின் உறுதியான வாக்குத்தத்தங்களைக் கொண்டதாகும். **எசேக்கியல் ஹோப்கின்ஸ்**

1276. தன் வேதாகமத்தை உபயோகித்ததற்கான யாதொரு அறிகுறியுமின்றி, அதைப் புதியதாகவே வைத்திருக்கும் ஒரு நபரை எனக்கு காண்பி. அசுத்தமான இருதயமுள்ள ஒருவனை உடனே நான் உனக்குக் காண்பிக்கிறேன். தன் வேதாகமத்தை அடிக்கடி உபயோகித்து, அதைப் பழைமையாய்ப் போன நிலையில் வைத்திருக்கும் ஒரு நபரை நீ எனக்குக் காண்பி – சுத்தமான இருதயமுள்ள ஒருவனை உடனே நான் உனக்குக் காண்பிக்கிறேன். **பேசில் மலோஸ்**

1277. நீ ஞானவானாகும்படி, வேதாகமத்தைத் தியானத்துடன் வாசி; நீ இரட்சிக்கும்படி, வேதாகமத்தை விசுவாசி; நீ பரிசுத்தவானாயிருக்கும்படி, வேதாகமத்தைக் கைக்கொள். **பெயர் அறியப்படாதவர்**

1278. வேதாகமம் ஒரு சிங்கம் போன்றது. யாரும் அதற்குப் பாதுகாப்பளிக்க அவசியமில்லை. அதைக் கூண்டிலிருந்து வெளியே விட்டால் போதும்; அதுவே தன்னைத் தற்காத்துக் கொள்ளும். **சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்**

1279. மற்றப் புத்தகங்களெல்லாம் நமக்கு அறிவூட்டும்படி எழுதப்பட்டுள்ளன. வேதாகமமோ நாம் மறுரூபமாகுதலுக்காக அருளப்பட்டுள்ளது. **பில்லி கிரஹாம்**

1280. வேதாகம அறிவைப் பெறும் சிலாக்கியத்தை இழந்தவன், முழு உலகிலுமுள்ள அனைத்திலும் மிகச் சிறந்த ஒன்றினையே தவற விட்டவனாவான். W. **வில்சன்**

1281. தன் வேதாகமத்தைக் திறவாமல் வைத்திருப்பவனுக்கு, தேவனால் பரலோகத்தின் பல கணிகளைத் திறக்க முடியாது. **பெயர் அறியப்படாதவர்**

1282. வேதாகம அறிவு அற்ற கல்லூரியின் உயர்தரக் கல்வியைக் காட்டிலும் கல்லூரியின் பட்டப்படிப்பற்ற வேதாமக அறிவே சாலச் சிறந்தது. **பெயர் அறியப்படாதவர்**

1283. உன் சிரசில் வேதாகமத்தை அறிந்து கொள்; உன் உள்ளத்தில் அதை நேசி; உலகில் அதை விதைத்திடு; உன் வாழ்வில் அதைக் காண்பி. **பெயர் அறியப்படாதவர்**

1284. வேதம் என்பது மனிதனுக்கு தேவன் எழுதிய கடிதங்களின் தொகுப்பாகும். **புனித அகஸ்டின்**

1285. பகைவர்களையும் அயலாரையும் நேசிக்க வேதாகமம் சொல்கிறது. ஏனெனில் அவர்கள் பொதுவாக ஒரே இயல்புடைய மக்களாயிருக்கிறார்கள். **G.K. செஸ்டர்டன்**

1286. கர்த்தர் செயலாற்றும்போது அவரது கரத்தை நாம் உணர்கிறோம். வேதாகமத்தை நாம் வாசிக்கும் போது அவரது திருமுகத்தையே நாம் தரிசிக்கிறோம். **பெயர் வெளியிடாதவர்**

1287. மனிதர்கள் வேதாகமத்தை நிராகரிப்பதற்குக் காரணம் அதில் குறைவு உண்டு என்பதினாலல்ல. வேதாகமம் அவர்களின் குறைவை சுட்டிக் காட்டுவதாலேயே. **பெயர் வெளியிடாதவர்**

1288. வேதாகமம் பழைமையானதுமல்ல, புதுமையானதுமல்ல, அது எக்காலத்திற்கும் பொருத்தமானது. **மார்டின் லூத்தர்**

1289. தேவ வார்த்தையே பிசாசின் மறைவுத் தாக்குதலுக்கு விலக்கி நம்மைப் பாதுகாக்கும் பலம் வாய்ந்த பேராயுதமாகும். **பெயர் அறியப்படாதவர்**

1290. உலகை அசைத்தவர்களின் வரலாற்றையெல்லாம் படித்துப் பாருங்கள். அவர்கள் கையில் வேதாகமம் இருந்திருக்கும்.
டி.பி. மேட்சன்

1291. இயேசுவிடமிருந்து அவருக்குப் பிரியமானவனுக்கு வந்த அன்பு மடலே வேதாகமம். **சகரியாஸ் டேனி ஃபோமம்**

1292. வேதாகமம் ஒரு நிழற் கண்ணாடி. அது உங்கள் மனதை அழகுபடுத்துகிறது.
தாமஸ் வாட்சன்

1293. சபை உருவாகவும், சபை எழுப்புதல் அடையவும் வேதாகமம் தேவை. வேதாகமத்தைக் காக்கவும், அதை அறிவிக்கவும் சபை தேவை.
பேக்கர்

1294. வேதாகமம் என்பது கிறிஸ்துவைச் சுமந்து செல்லும் ராஜ தேர் ஆகும்.
சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்

1295. உலகத்தில் உள்ள எல்லா புத்தகங்களிலும் மேன்மையான புத்தகம் வேதாகமாகும். அதைப் படிப்பது என்பது எல்லா குறிக்கோள்களிலும் மிகச் சிறந்தது. அதைப் புரிந்து கொள்வது என்பது எல்லா இலக்குகளிலும் மிக உயர்வானது.
சார்லஸ் சி. ரைரீ

1296. நீ வேதத்தைப் படிக்கும்போது எண்ணிக்கைக்காக படிக்காதே. புரிந்து கொள்வதற்காகப் படி **அட்ரியன் ரோகர்ஸ்**

1297. சிலர் தபால்தலைகளையும், ஓவியங்களையும் சேகரிக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் வேத வசனங்கள் எனக்கு மிகவும் பெரிய சேமிப்பாக இருக்கின்றன. அவைகளின் மதிப்பை நாம் கணக்கிட முடியாது. நாம் மனக்கிலேசமடைந்த வேளையிலும், அன்புக்குரியவர்களைப் பிரியும் வேளையிலும் அவை நமக்கு மிகப் பெரிய ஆறுதலைக் கொடுக்கின்றன. அவை கண்ணீரைத் தாங்கும் தலையணையைப் போல இருக்கின்றன. **ரூத் பில்லி கிரஹாம்**

1298. வேதாகமம் என்பது தேவனுடைய தொடர் பேச்சு, அடைபட்டிருக்க முடியாமல் வெளிவந்ததாகும். அது அவர் மனதின் பிழையில்லாத உறுதியான ஆவணமாகும்.
A.W. டோசர்

1299. வேதாகமத்தை இக்காலத்திற்குப் பொருத்தமானதாக ஆக்க வேண்டியதில்லை. அது ஏற்கனவே பொருத்தமாக உள்ளது. இக்காலத்திற்கு அதன் பொருத்தத்தைக் காட்ட வேண்டும்.
ரிக் வாரன்

1300. வேதாகமத்தை நீங்கள் வாசிக்கும் முன்னே, அது உங்கள் இருதய கதவைத் திறக்கும் திறவுகோல், மட்டுமல்லாது உங்கள் கடமைகளை உண்மையாய் செய்யத்தூண்டும், உங்களை மகிழ்ச்சியாய் வாழ வைக்கும். **உட்ரோ வில்சன்**

1301. பரிசுத்த வேதாகமம் மட்டுமே நம் இங்கிலாந்து தேசத்தை உயர்த்தக்கூடிய ஒப்பற்ற நூல். **இங்கிலாந்து தேசத்தின் விக்டோரியா மகாராணி**

1302. தேசத்தின் சுதந்திரம் என்பது தேசச் சட்டங்களுக்கு கட்டுப்பட்டு இருப்பதாகும். தேசச் சட்டங்கள் என்பது தேச மக்களின் சன்மார்க்கத்தை நிலை நாட்டுவதாகும். தேச மக்களின் சன்மார்க்கம் அத்தேசத்தின் மதங்கள் மூலம் வருவாகும். சிறந்த மதத்தின் மூல ஆதாரம் அது பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையில் அமைவதாகும்.
ஜார்ஜ் வாஷிங்டன்

1303. பரிசுத்த வேதாகமம் என்பது மனிதனுக்குத் தேவனால் கொடுக்கப்பட்ட சகல வெகுமதிகளைவிட மேன்மையான வெகுமதியாகும். மனிதனுக்கு எந்த ஒரு நல்ல பண்பை உருவாக்க வேண்டுமானால், அதை இந்த வேத புத்தகத்தின் மூலமாகவே உருவாக்க முடியும். **ஆபிரகாம் லிங்கன்**

1304. பரிசுத்த வேதாகமம் மட்டுமே ஒழுக்கமில்லாமல் அலைந்து திரியும் மனிதனை ஒழுக்கத்துக்குள் வழிநடத்தும் ஒப்பற்ற நூலாகும். **ஆன்ட்ரு ஜேக்ஷன்**

1305. உலகமெங்குமுள்ள சகல மனிதர்களாலும் அறியப்பட்ட சகல கொள்கைகளைவிட புதிய ஏற்பாட்டு சத்தியமே மிக உயர்ந்த உன்னதமான சத்தியமாகும். **சார்ல்ஸ் டீக்கன்ஸ்**

1306. இதுவரை நடந்த உலக சரித்திரத்தைப் பற்றிய எல்லா நூல்களையும்விட வேதாகம சரித்திர உண்மைகள் நூற்றுக்கு நூறு உண்மையானவை. **ஐசக் நியூட்டன்**

1307. வேதாகம சத்தியங்கள் கடந்தகால மக்களாலும் நிகழ்கால மக்களாலும் எதிர்காலத் தலைமுறையினாலும் கைக் கொள்ளக கூடியதும், இது மனிதனுடைய வாழ்க்கையில் எல்லா காலத்திலும் ஒத்துப்போகக் கூடியதுமாயிருக்கிறது. **இம்மானுவேல் கான்ட்**

1308. வேதாகமம் என்பது ஒடுக்கப்பட்டவர்களையும் ஏழை களையும் உயர்த்தக்கூடிய உன்னத சத்தியங்கள் அடங்கிய நூலாகும். **பெயர் அறியப்படாதவர்**

1309. மனிதர்கள் சந்திக்கிற எல்லாப் பிரச்சினைகளுக்கும் வேதாகமத்தின் அட்டைக்குள்ளே தீர்வு இருக்கிறது. **ரொனால்ட் ரீகன்**

1310. வேதாகமத்தின் வழிகாட்டுதல் இல்லாமல் ஒரு மனிதன் பெரியவனாக விரும்பினால், அவன் தன் வாழ்வில் அநேக உபத்திரவங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். வேதாகம சத்தியங்களால் தன்னை சீர்ப்படுத்திக் கொள்கிறவன் சிறந்த தலைவனாக மாறி எதையும் எளிதில் செய்து முடிக்கும் திறமையுள்ளவனாவான். **தியோடர் ரூஸ்வெல்ட்**

1311. வேதாகமம் ஜீவனுள்ள வார்த்தைகள் அடங்கிய நூலாக, தன்னை எதிர்க்கக்கூடிய எவரையும் மேற்கொள்ளக்கூடிய நூலாகும். **நெப்போலியன்**

1312. வேதாகமம் என்பது இந்த உலகத்தில் புனித பயணம் மேற்கொள்கிற கிறிஸ்தவனுக்கு பரிபூரண நிலப்படம் மற்றும் விளக்கப்படமாகும். **ஜார்ஜ் எப். பெண்டிகாஸ்ட்**

1313. அநேகர், புரிந்து கொள்ள முடியாத வேத வாக்கியங்களைக் குறித்து கவலைப்படுவதில்லை. ஆனால் நான் புரிந்து கொண்ட வேத வாக்கியங்கள் எனக்கு மனக்கவலையை உண்டுபண்ணுகின்றன.
மார்க் தீவைன்

1314. வேதாகமம், தேவன் மனிதர்களுக்கு கொடுத்த மிகச் சிறந்த பரிசு என்று நான் நம்புகிறேன். இந்தப் புத்தகத்தின் மூலமாக உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் எல்லா நன்மைகளும் நமக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.
ஆப்ரகாம் லிங்கன்

1315. வேதாகமம் இல்லாத கல்வி பயனற்றது.
தானியேல் வெப்ஸ்டர்

1316. என்னுடைய வேதாகமம்தான் கிறிஸ்தவத்தின் மூலக் கோட்பாடாகும்.
வால்டர் மேத்யூ அப்பாட்

1317. தேவனுடைய வார்த்தை பரிசுத்தமாய் பிரசங்கிக்கப்பட்டு, கேட்கப்படுகிறதை எங்கே நாம் பார்க்கிறமோ, அங்கே தேவனுடைய சபை இருக்கிறது அநேக குறைகளால் நிறைந்திருந்தாலும் கூட.
ஜான் கால்வின்

1318. வேதாமத்தை அறிந்த யாரும் கல்வி அறிவற்றவர்களல்ல. அதன் போதனையை தள்ளுகிற யாரும் ஞானவானல்ல.
சாமுவேல் சாட்விக்

1319. வேதாகமம் என்பது மனிதனுடைய மொழியில் கொடுக்கப்பட்ட தேவனுடைய வார்த்தையாகும்.
மேக்ஸ் லுகாடோ

1320. நமது அறிவை அதிகப்படுத்த நமக்கு வேதாகமம் கொடுக்கப்படவில்லை, மாறாக நமது வாழ்க்கைகளை மாற்றவே.
டி.எல்.மூடி

1321. முரண்பாடு வேதாகமத்தில் இல்லை, உன் வாழ்க்கையில்தான் இருக்கிறது.
பில்லி சன்டே

322. பரிசுத்த ஆவியில்லாத வேதாகமம் என்பது சந்திரனால் வெளியிடப்படும் ஒரு சூரிய மணிப்பொறியாகும். **டி.எல். மூடி**

23. மனிதருக்குள் கிறிஸ்து எப்படியோ அப்படியே புத்தங்களுள் பைபிளும்! இறைநூலானது ஒரு புத்தகம் மட்டுமல்ல அது புத்தகங்களுக்கெல்லாம் இறைவனாம்! **பெயர் அறியப்படாதவர்**

24. வேதாகமத்தின் முதல் அட்டையிலிருந்து கடைசி அட்டைவரை உள்ளவற்றை எல்லாம் விசுவாசிக்கிறேன் என்று சொல்லும் அநேகர் ஒருபோதும் அதை முழுமையாக வாசித்திருக்கவே மாட்டார்கள். **ரிக் வாரன்**

25. தேவன் உங்கள் வாழ்க்கையில் பிரகாசிக்க வேண்டுமானால் வேதத்தை உங்கள் விளக்காக்கிக் கொள்ளுங்கள். **ஜான் கால்வின்**

26. தற்கால வாசகங்களைப் பயன்படுத்தி கிறிஸ்தவ விசுவாசத்தை அறிவிப்பது நமது பணியாய் இருக்க வேண்டுமே தவிர கிறிஸ்தவ வாசகங்களைப் பயன்படுத்தி நவீன சிந்தனைகளைப் பரப்புவதற்கில்லை. **ஜே.ஐ.பாக்கர்**

27. உலகத்திலுள்ள எல்லா ஞானவான்களின் புத்தகங்களையும் நான் கற்றுக் கொள்வதினால் உண்டாகும் அற்ப ஞானத்தைவிட, கர்த்தாவின் வசனங்களை ஒரு மாதத்தில் நான் வாசித்து தியானிக்கும் தியானம் எல்லையற்ற பேரின்ப ஞானம் அளிப்பதாயிருக்கிறது. **ஜார்ஜ் ஒயிட்பீல்டு**

8. வேதாகமத்தில் அநேக பாத்திகள் உள்ளன. பாவியான மனிதன் வேதாகமத்தை வாசிக்கையில், பாவ மன்னிப்பைப் பெறுகிறான். பாவ மன்னிப்பைப் பெற்றவன் வாசிக்கையில் பக்திமானாய் மாறுகிறான். பத்திமான் வேதாகமத்தை வாசிக்கையில், பரிசுத்தவானாய் மாறுகிறான். **ஒரிஜன்**

1329. வெளிப்படுத்தப்பட்ட வார்த்தை கிறிஸ்து. எழுதப்பட்ட வார்த்தை வேதாகமம். அறிவிக்கப்படும் வார்த்தை சபை.
கார்ல் பார்த், இறையியல் வல்லுநர்

1330. வாழ்வைக் குறித்து தேவனின் எண்ணத்தை நமக்குப் போதிப்பதற்கு வேதாகமம் மூன்று உருவகங்களைக் கொடுக்கிறது: வாழ்வு என்பது ஒரு சோதனை, வாழ்வு என்பது ஒரு நம்பிக்கை, வாழ்வு என்பது ஒரு தற்காலிக ஒப்படைப்பு.
ரிக் வாரன்

331. நாம், அநேக மனிதர்கள் வாசித்து அறிகிற கிறிஸ்துவின் ஜீவனுள்ள நிருபமாயிருக்கிறோம். வேதத்தை ஒரு மனிதன்தான் வாசிக்கமுடியும். ஆனால் உங்களையும் என்னையும் நூற்றுக்கணக்கானோர் வாசிக்கமுடியும். நம்முடைய பரிசுத்த நடக்கையால் நாம் மக்கள் முன்பாக சுவிசேஷத்தை மேன்மைப்படுத்தாவிட்டால் கிறிஸ்துவுக்காக நாம் யாரையும் ஆதாயப்படுத்த முடியாது. **டி.எல். மூடி**

332. தாய்மொழியில் உள்ள வேதாகமம்தான் மிகப்பெரிய மிஷனரி ஆகும். அதற்கு விடுமுறை தேவையில்லை. அது ஒரு வெளிநாட்டவர் என்று எப்போதும் கருதப்படுவதும் இல்லை.
வில்லியம் கேமரன் டவுன்செண்ட்

33. இந்தப் பூமியில் மக்கள் வாழ்வதற்கு வேதாகமத்தை ஒரு நடைமுறை வழிகாட்டி ஏடாக பார்க்கவில்லையென்றால், அது அநேகமாக நிலைப்பேழையின் படித்தட்டிலேயே தொடர்ந்து இருக்கும்.
ஜார்ஜ் பர்னா

34. வேதமென்பது பிதாவின் சித்தத்தின் எழுத்து வடிவம்.
ஆர்தர் W. பிங்க்

5. பெயர் கிறிஸ்தவ வாழ்வில் வேத வாசிப்பு வறட்சியானது. மனம் திரும்பியவுடன் வாசிக்கும் வேத வாசிப்பு இனிமையானது. பரிசுத்த ஆவியானவரைப் பெற்றபின் வேத வாசிப்பு உயிரோட்டமானது. **பெயர் அறியப்படாதவர்**

153. ஜெபம்

1336. சரியான ஆவியோடு ஏறெடுக்கப்பட்ட ஜெபம், பதிலளிக்கப்படாமல் போயிற்றென்ற காரியம், ஆண்டவருடைய இராஜ்யத்தின் வரலாற்றில் எங்கேயாகிலும் இருக்கிறது என்பதை நான் நம்பமாட்டேன். **தியோடர் எல். குயிலர்**

1337. ஜெபம் எனும் வலிய போராயுத்தைக் கொண்டே ஆத்தும இரட்சிப்புப் பணியை தேவன் நடத்துகிறார். எனவே ஜெபமில்லாமல் ஆத்துமாக்களை இரட்சிப்பது என்பது இயலாத காரியம். **ஆஸ்வால்ட் சேம்பர்ஸ்**

1338. ஆண்டவரே! என்னால் மாற்றக் கூடாததை ஏற்கும் மெய் உணர்வையும், நான் மாற்றிக் கொள்ளவேண்டியவையை மாற்றி அமைக்கும் துணிவையும் ... எவை மாறக்கூடியது, எவை மாறக்கூடாதது என்பதை நிதானிக்கும் மெய் அறிவையும் எனக்குத் தாரும். **ஆர். நைபர் அசிசி**

1339. ஆண்டவரே, உயர்ந்த உள்ளமும், மருளாத சிந்தையும் மெய்யான விசுவாசமும் உன்னத தரிசனமும் உழைக்க அஞ்சாத சித்தமும் கொண்ட மனிதர்களை ஊழியராக எழுப்பித் தாரும். **பேராயர் வேதநாயகம் சாமுவேல் அசரியா**

1340. மிகுதியான இரகசிய ஜெபம் மிகுதியான வல்லமையை வெளிப்படுத்தும். **பெயர் அறியப்படாதவர்**

1341. கேட்கப்படாத ஒவ்வொரு ஜெபமும் நம்முடைய உள்ளத்தில் உள்ள குறையைக் கண்டு கொள்வதற்குரிய தெளிவான அழைப்பாய் இருக்கிறது. **பெயர் அறியப்படாதவர்**

1342. ஜெபம் என்பது வேறெதுவுமில்லை, தேவ சமூகத்தை உணர்வதேயாகும். **சகோ. லாரன்ஸ்**

1343. உண்மையான ஜெபம் என்பது சரீரம் களைத்துப் போகாதவாறு தொடர்ந்து ஜெபிப்பதாகும். **பிஷப் மியூல்**

1344. நாம் நம்முடைய தேசத்திற்காக, ஜனங்களுக்காக மன்றாடி ஜெபிக்கவேண்டும் என்பதைவிட வேறெந்த முக்கியப் பொறுப்புகளையும் தேவன் நமக்குத் தரவில்லை. **வெஸ்லி எல். டூயெல்**

1345. ஜெபமற்ற ஊழியம் தேவனுடைய சத்தியத்திற்கும், திருச்சபைக்கும் கல்லறைக் குழிதோண்டும் வெட்டியான். அங்கு விலையேறப் பெற்ற பெட்டி இருக்கலாம். அழகான மலர்கள் இருக்கலாம். ஆனால் சவப்பெட்டி. அடக்க ஆராதனைக்குரியது என்பதையும் மறக்கக் கூடாது. **இ. எம். பவுண்ட்ஸ்**

1346. ஜெபத்தின் தலையாய நோக்கமே நம்முடைய சித்தம் செய்யப்படுவது அல்ல. அது தேவனுடைய வெளிப் படுத்தப்பட்ட சித்தம் செய்யப்படுவதற்காக மட்டுமே. **ரெயினார்டு போங்கே**

1347. ஒரு மனிதன் தனிமையில் ஜெபித்துக் கொள்ளும் வாஞ்சையின் அளவுதான், அவன் தேவனை அறிகிற அறிவுக்கும், தேவன்பால் கொண்டுள்ள அன்புக்கும் அளவுகோல் ஆகும். **சகரியாஸ் டேனீ ஃபோமம்**

1348. ஜெபம் என்பது தேவனிடம் ஒன்றைக் கேட்பதும், அதைப் பெற்றுக்கொள்வதும் மட்டுமல்ல, அதைக் காட்டிலும் மேலானதொன்றாகும். அது அவரோடு ஐக்கியம் கொள்வதாகும். **சகரியாஸ் டேனீ ஃபோமம்**

1349. சாத்தானின் தாக்குதல் என்றால் முதலில் மெல்ல மெல்ல மறைந்துபோவது ஜெப வாழ்வே. **உல்ஃப் எக்மன்**

1350. ஜெபமில்லாமையே ஒரு மனிதனுக்கு வெளிப்பாடு இல்லாமைக்கு காரணம். **சகரியாஸ் டேனி ஃபோமம்**

1351. ஜெபம், தேவனின் வல்லமை எனும் இயில் எஞ்சின் ஓடுவதற்குப் போடப்பட்ட தண்டவாளம். **சகரியாஸ் டேனி ஃபோமம்**

1352. ஜெபத்திலுள்ள வல்லமை, அணுகுண்டுவிலுள்ள வல்லமையைக் காட்டிலும் அதிகமானது. சகரியாஸ் டேனி ஃபோமம்

1353. ஒரு தனி மனிதனின் வாழ்வை இன்பச் சோலையாய் மாற்றி தூய்மைப்படுத்துவது ஜெபமே. இ.எம். பவுண்ட்ஸ்

1354. லேசான சுமையைக் கொடுங்கள் ஆண்டவரே என்று நான் ஜெபிப்பதில்லை. ஆனால் வலிமையான முதுகை தாருங்கள் ஆண்டவரே என்று நான் ஜெபிக்கிறேன். பிலிப்ஸ் புரூக்ஸ்

1355. ஜெபம் என்பது நாம் உதவி கேட்பது மட்டுமல்ல. தேவனுடைய கட்டளைகளைக் கேட்பதும் ஜெபம்தான். பில்லி கிரஹாம்

1356. ஜெபம் என்பது இரு வழி உரையாடல். நான் பேசுவதைவிட தேவன் பதிலளிப்பதையே கேட்க அதிக முக்கியமாகக் கருதுகிறேன். பிராங் லாபாக்

1357. சுவாசமில்லாமல் உயிருடன் இருப்பதைவிட ஜெபம் இல்லாமல் ஒரு கிறிஸ்தவனாய் இருப்பது மிகவும் கூடாத காரியம். மார்டின் லூத்தர் கிங் ஜூனியர்

1358. உலகம் தன் கால்களில் நின்று வெற்றியைத் தேட முயற்சிக்கிறது. உண்மை கிறிஸ்தவன் தன் முழங்காலில் நின்று அதைப் பெறுகிறான். பெயர் அறியப்படாதவர்

1359. தினமும் காலை இரண்டு மணி நேரமாவது ஜெபிக்காவிட்டால் அந்நாளில் பிசாசு ஜெயித்து விடுகிறான். மார்ட்டின் லூத்தர்

1360. எங்கெல்லாம் போராடி ஜெபிக்கும் ஜெபத்தின் ரகசியம் தெரிகிறதோ அங்கெல்லாம் அசாதாரண காரியங்கள் நடைபெறும். பெயர் அறியப்படாதவர்

1361. ஆத்ம ஆதாயம் செய்கிறவர்கள் எல்லோரும் தங்கள் முழங்கால்களில் நின்று வென்றிருக்கிறார்கள். பெயர் அறியப்படாதவர்

1362. நாம் விரும்பினால் இந்த உலகத்திற்கு சுவிசேஷத்தை அறிவிக்கலாம். இன்று மிகப்பெரிய தேவை என்னவென்றால் மக்களோ அல்லது பணமோ அல்ல, ஜெபமே.
வெஸ்லி டுவெல்

1363. அருட்பணிக்கு வேலையாட்களைத் தேடுவதற்குமுன் அனுப்புவதற்கு வேண்டிய பொருளாதாரத்தை நாடுவதற்கு முன் தேவ சமூகத்தில் அமர்ந்திருந்து சாத்தானுக்கு எதிராக நடத்தும் அந்தரங்க தாக்குதல் எனும் ஜெபப் போராட்டமே இன்றியமையாதது.
இராபர்ட் சபேயர்

1364. மக்கள் நம்முடைய அன்பைப் புறக்கணிக்கலாம், அல்லது நம்முடைய செய்தியை ஏற்க மறுக்கலாம், ஆனால் நம்முடைய ஜெபத்துக்கு அவர்களால் எதிர்த்து நிற்க முடியாது.
ரிக் வாரன்

1365. கொடுமையான நாட்களை எதிர்கொள்வதற்கு, ஜெபமே வல்லமையான ஆயுதம்.
வாட்ச்மேன் நீ

1366. ஜெபத்தை முக்கியப்படுத்துகிறவர்களைத் தேவனும் முக்கியப்படுத்துவார்.
பெயர் அறியப்படாதவர்

1367. நமது போராயுதங்கள் தேவனுடைய வசனமும் ஜெபமும்!
வாரன் வியர்ஸ்பி

1368. ஒரு மணி நேரமாவது ஜெபிக்காதவன் விசுவாசியல்ல, இரண்டு மணி நேரமாவது ஜெபிக்காதவன் ஊழியக் காரனல்ல.
பால் யாங்கி சோ போதகர்

1369. எவ்வளவுக்கதியமாய் எழுப்புதலுக்காக ஜெபிக்கிறோமோ அவ்வளவுக்கதியமாய் எழுப்புதலை வாஞ்சிப்போம்! எவ்வளவுக்கதியமாய் எழுப்புதலை வாஞ்சிக்கிறோமோ அவ்வளவுக்கதியமாய் எழுப்புதலுக்காக ஜெபிப்போம். இன்று எழுப்புதல் இல்லாததற்கு ஒரு முக்கிய காரணம் எழுப்புதல் இல்லாமல் வாழ நாம் கற்றுக்கொண்டதே.
லியோனார்டு ரேவன்ஹில்

1370. ஜெபிக்கிறவன் கடவுளை நம்புகிறான்; ஜெபிக்காதவன் தன்னை நம்புகிறான். **லியோனார்டு ரேவன்ஹில்**

1371. கிறிஸ்தவனின் மிகவும் முக்கியமான பணி ஜெபிப்பதாகும். **மார்டின் லூத்தர்**

1372. ஒருவன் வேறு எதோவொன்றால் நிரப்பப்பட்டிருக்கும்போது, அவனை தேவன் நிரப்பவேண்டும் என்று ஜெபம் செய்கிறான் என்று நான் நம்புகிறேன். தேவன் ஒருவனை நிரப்ப ஜெபம் செய்யும்முன் அவனை தேவன் வெறுமையாக்க ஜெபிக்கவேண்டும் என்று நான் நம்புகிறேன். **டி.எல்.மூடி**

1373. ஜெபம் கிறிஸ்தவனின் உயிர்மூச்சு. **ஜே.சி. ரைல்**

1374. தேவன் இன்னும் அவருடைய சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறார். மனிதன் இன்னும் அவனுடைய கல்மனையில் அமர்ந்திருக்கிறான். அவர்களுக்கிடையில் முழங்கால் தூரம் மட்டும் தான் இருக்கிறது. **ஜிம் எலியட்**

1375. நமக்குப் பயன்படக்கூடிய அல்லது உதவக்கூடிய முதல் மற்றும் ஒரே காரியம் என்னவென்றால் நாம் கடைசியாக முயற்சி செய்கிற ஜெபமேயாகும். **சார்லஸ் ஆர் ஸ்வின்டோல்**

1376. ஜெபமாக மாற்றப்பட மிகச்சிறியதாக இருக்கும் எந்தக் காரியமும் பாரமாக மாற்றப்பட மிகச் சிறியதே. **கூரி டென் பூம்**

1377. மனித அமைப்புகளை நம்பினால் மனித சாமர்த்தியத்தால் நடக்கக் கூடியதே நடக்கும். கல்வி அறிவை நம்பினால் மனித அறிவாற்றலால் நடக்கக் கூடியதே நடக்கும். பேச்சு சாமர்த்தியத்தை நம்பினால் பேச்சாற்றலால் நடக்கக் கூடியதே நடக்கும். ஆனால் நாம் ஜெபத்தை நம்பினால் தேவன் செய்யக் கூடியது, எதுவோ அது அத்தனையும் நடக்கும். **இராபர்ட் குளோவர்**

1378. ஜெபம் என்பது கர்த்தர் சர்வ வல்லவர் என்று அறிக்கை செய்வதும், நாம் அப்பிரயோஜனமான பெலவீனர்கள் என்று அறிக்கை செய்வதுமேயாகும். **ஜே. ஐ. பேக்கர்**

1379. ஜெப ஊழியத்தில் நாம் முனைந்து ஈடுபடுமட்டும், உலக நற்செய்தி மயமாதலில் நாம் முழுமையாக ஈடுபடவில்லை என்று தான் சொல்லமுடியும். **ஈஸ்ட்மென்**

1380. நம்முடைய தேவைகளை மட்டுமல்ல, நம்மையே முழுவதுமாய் தேவனிடம் சமர்ப்பிப்பதே உண்மையான ஜெபம் ஆகும். **பெயர் அறியப்படாதவர்**

1381. ஜெபத்தை நம் வாழ்வில் இரண்டாவது இடத்திற்குத் தள்ளிவிடும்போது, தேவனையும் நம் வாழ்வின் முதலிடத்திலிருந்து கீழிறக்கி விடுகிறோம் என்று அர்த்தம். **இ.எம். பவுண்ட்ஸ்**

1382. கபடற்ற உதடுகளிலிருந்து பிறக்கும் ஜெபமே கருத்துள்ள ஜெபம். **பெயர் அறியப்படாதவர்**

1383. முழங்கால் படியிடுதல் நிறுத்தப்படும்போது பின் வாங்கும் படலம் ஆரம்பமாகிறது. **பெயர் வெளியிடாதவர்**

1384. குறைவான சொற்களே மேலான ஜெபம். **மார்டின் லூத்தர்**

1385. பிரச்சினைகளும், சிக்கல்களும் என்னை ஜெபிக்கத் தூண்டுகின்றன. ஜெபம் இவையிரண்டையும் விரட்டியடித்து விடுகிறது. **பெலைன்**

1386. தேவனின் இரக்கம் மற்றும் ஆசீர்வாதம் என்னும் பொக்கிஷத்தைத் திறக்கும் திறவுகோல் அதிகாலை ஜெபம், மாலையில், நம்மை அவருடைய பாதுகாவலில் வைத்துப் பூட்டும் திறவுகோலும் அதுவே. **ஹென்றி வார்டு பீச்சர்**

1387. ஜெபம் என்பது வெறுமனே நாம் கிறிஸ்துவண்டையில் வருவதில்லை. நமக்குள் கிறிஸ்துவை வர அனுமதிப்பது தான். **பெக்கி திரபாஸ்ஸி**

1388. ஜெபமின்மையும் நோக்கமில்லாத வாழ்க்கையும் இரட்டைப் பிறவிகள். **சகரியாஸ் டானி ஃபோமம்**

1389. சபைகளில் என்றைக்கு ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ அன்றுதான் சபைகள் வளர்ச்சி நோக்கிப் பயணிக்கும். **சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்**

1390. இரவு தொலைக்காட்சிச் செய்தியைப் பார்த்தபிறகு குடும்ப ஜெபத்தில் ஈடுபடுவது சிறப்பாகும். அப்போது நாம் நமது சொந்த காரியங்களுக்காக மட்டுமின்றி, உலக பிரச்சனைகளுக்காகவும் ஜெபிக்க முடியும். உலகமே இப்படி ஒன்றாக உலகத்துக்காக ஜெபித்தால் அது எப்படிப்பட்ட மாற்றத்தை உண்டாக்கும். **ரூத் பில்லி கிரஹாம்**

1391. நாம் சாதரணமாக தேவனிடத்தில் என்ன ஜெபிக்கிறோம் என்றால் தேவனுடைய சித்தம் செய்யப்படுவதற்காக அல்ல, நம்முடைய சித்தத்தைத் தேவன் அங்கீகரிப்பதற்காகத்தான். **ஹெல்கா பெர்கோல்டு க்ராஸ்**

1392. இருபது வருஷமாக நான் ஜெபித்துக் கொண்டிருக்கிறேன் ஆனால் பதில் கிடைக்கவில்லை. காரணம் நான் முழங்காலில் நின்று ஜெபிக்காததே. **ப்ரெடெரிக் டக்ளஸ்**

1393. மன அமைதியில் தேவன் பேசுகிறார். தேவன் சொல்வதைக் கேட்பதுதான் ஜெபத்தின் ஆரம்பம். **அன்னை தெரேசா**

1394. ஜெபம் தேவனை மாற்றுவதில்லை. ஆனால் அது ஜெபிக்கிறவனை மாற்றுகிறது. **சோரன் கியர்கேகார்ட்**

1395. மாறாத ஜெபத்தின் தரம் என்பது தேவன் நாம் சொல்வதைக் கேட்பார் என்பதல்ல அவர் சொல்வதை நாம் கேட்பதாகும். **வில்லியம் மேக்கில்**

1396. தேவனிடத்தில் பேசுவதால் ஜெபம் ஆரம்பமாகிறது. தேவனுக்குச் செவி கொடுப்பதால் ஜெபம் நிறைவடைகிறது. தேவ சமூகத்தில் அமைதிதான் ஆன்மாவின் மொழி. **ஃபல்டன் ஜே. சீன்**

1397. ஜெபத்திற்கு "எங்கள் பிதா" எப்படியோ அப்படியே மனித குலத்திற்கு" கிறிஸ்து." **சிமோனி வெய்ல்**

1398. பிரச்சினைக்கும் தீர்வுக்கும் இடையேயுள்ள தொலைவு என்பது உன் வீட்டுத் தரைக்கும் உன் முழங்காலுக்கும் இடையே உள்ள தொலைவாகும். **சார்லஸ் ஸ்டான்லி**

1399. உன் பெலனுக்குச் சமமான கடும் உழைப்புக்காக ஜெபிக்காதே, உன் கடும் உழைப்புக்குச் சமமான பெலனுக்காக ஜெபம் செய். **பிலிப் ஃப்ரூக்ஸ்**

1400. ஜெபம் என்பது ஒரு வல்லமையான கருவியாகும். அது பரலோகத்தில் மனிதனுடைய சித்தம் செய்யப்படப் பயன்படுத்துவதற்கல்ல, தேவனுடைய சித்தம் பூமியிலே செய்யப்படுவதற்குப் பயன்படுத்துவதாகும். **இராபர்ட் லா**

1401. ஜெபம் என்பது சபையின் கோட்டையும் பெலமுள்ள சுவருமாயிருக்கிறது. அது ஓர் அழகான கிறிஸ்தவ ஆயுதம். **மார்டின் லூத்தர்**

1402. கால்களில் நடப்பதைவிட முழங்கால்களில் காத்திருப்பது நமது வாழ்க்கையின் குறியைச் சீக்கிரம் எட்டச் செய்துவிடும்! **பெயர் அறியப்படாதவர்**

1403. என்னைச் சிறையாக்கும் ஆண்டவரே, அப்போது நான் விடுதலையாவேன். என்னுடைய வாளை விட்டுவிடச் செய்யும் ஆண்டவரே, அப்போது நான் மேற்கொள்கிறவனாயிருப்பேன். **ஜார்ஜ் மத்தீசன்**

1404. ஜீவனிருப்பதற்கு சுவாசிப்பது எவ்வாறு ஓர் இயற்கையான வெளிப்பாடோ, அவ்வாறே விசுவாசத்திற்கு ஜெபம். **ஜோனாத்தான் எட்வர்ட்ஸ்**

1405. நம்மை நம்பிக் கிணற்றினுள் இறங்கியிருக்கும் அருட்பணியாளரைத் தாங்கும் கயிறு நமது ஜெபமே! **பெயர் அறியப்படாதவர்**

1406. வாழ்வின் மிகப்பெரும் துயரம் என்பது ஜெபத்திற்குப் பதில் கிடைக்காததல்ல, ஜெபிக்காததுதான். **எ.பி. மேயர்**

407. ஜெபிக்கும்பொழுது உயர்ந்த சொற்களை விரும்பாதே. குழந்தையின் மழலைச் சொற்கள் நம் பரலோக தந்தைக்குப் பிரியமானவை.
புனித க்ளிமாக் அருளப்பர்

408. மிஷனரிப் பணியைச் சிறப்பாகச் செய்ய, ஜெபம் வல்லமைமிக்க எந்திரமாகும்.
A.B. சிம்ப்சன்

409. வேதாகமத்தில் உள்ள ஜெபங்கள் அற்புதமானவை அல்ல, விவேகமானவை.
வாட்ச்மேன் நீ

10. ஜெப ஜீவியமானது நம்முடைய உள்ளங்களை நித்தியத்திற்கு நேராகத் திருப்புகிறது. அது நம்முடைய மனக்கண்களைத் திறக்கிறது.
போதகர் பால் யாங்கி சோ

11. நமது தேவைகள், விருப்பங்கள் அனைத்தையும் குறித்து கரிசனை கொண்டவரும், நம்மைக்குறித்துக் உணர்வூட்டும் திட்டங்களையும் வைத்திருக்கிற தேவனோடு நம்மை இணைப்பதே ஜெபமாகும்.
பெயர் அறியப்படாதவர்

2. கர்த்தர் சமூகத்தில் காத்திராதவன், கண்ட இடமெல்லாம் காத்திருப்பான். கர்த்தரின் பாதப்படியில் கண்ணீர் சிந்தாதவன் கண்ட இடமெல்லாம் கண்ணீர் சிந்துவான்.
பெயர் அறியப்படாதவர்

3. தேவனிடத்தில் பேசுவது ஜெபம். தேவனுக்குச் செவி கொடுப்பது தியானம்.
பெயர் அறியப்படாதவர்

4. இருதயமில்லாமல் வார்த்தைகளைவிட வார்த்தைகள் இல்லாமல் ஒரு இருதயத்தை ஜெபத்தில் கொண்டிப்பது சிறந்தது.
எம். கே. காந்தி

154. பல தலைப்புகள்

. யாரும் பார்க்காதபொழுது நீ எப்படி இருக்கிறாயோ அதுதான் நீ.
இராபர்ட் எட்வர்ட்ஸ்

1416. நாம் என்ன வைத்திருக்கிறோம் என்பதினால் நாம் செல்வந்தர்களல்ல. மாறாக ஒன்றுமே இல்லாமல் என்ன செய்ய முடியும் என்பதினால்தான். **இம்மானுவேல் ஐ. காண்ட்**

1417. சேர்த்து வைக்கவுமில்லை, ஒதுக்கிவைக்கவுமில்லை, வருத்தப்படவுமில்லை. **பில் போர்டன், சீன மிஷனரி**

1418. ஆவிக்குரிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை என்பது பிசாசுகளின் சக்திகளோடு போராடி மேற்கொள்ளும் வல்லமையின் விளைவு ஆகும். **நீல் T. ஆண்டர்சன்**

1419. தனக்கு என்ன தெரியாது என்பதை ஒரு நபர் தெரிந்து கொள்ளாத வரையில் அவர் முன்னேறுவதில்லை. **பெயர் அறியப்படாதவர்**

1420. உற்சாகத்துடன் எரிபந்தமாய்ச் சென்றிடு. நீ எரிவதைக் கண்டிட மக்கள் பல மைல் தூரம் நடந்து வந்து கவனிப்பர். **ஜான் வெஸ்லி**

1421. உன் ஓய்வினை சீக்கிரம் எடுத்துக் கொள்ளாதே. எடுத்துக் கொண்டால் உனது உண்மை ஓய்வினை நீ அடைய முடியாது. **ஜான் பிரவுன்**

1422. அநேக மக்கள் அவர்களால் முடியும் என்று நினைத்ததைவிட வெகு தொலைவில் சென்று விட்டார்கள். காரணம், அவர்களால் முடியும் என்று வேறு யாரோ ஒருவர் நினைத்தார். **சிக் சிக்லர்**

1423. பிற மக்கள் செய்யும் தவறுகளிலிருந்து நம்மில் பலர் கற்றுக் கொள்கிறோம். நம்மில் மீதி மற்ற மக்களாய் இருக்கிறோம். **சிக் சிக்லர்**

1424. நீ செய்கிற காரியங்களைக் கணக்கிடாதே, மதிப்பிடுகிற காரியங்களை நீ செய். **சிக் சிக்லர்**

1425. காரியங்களை எப்படிச் செய்யவேண்டும் என்று மக்களிடம் ஒருபோதும் சொல்லாதே. மாறாக என்ன செய்யவேண்டும்

என்று சொல். பிறகு அவர்களின் புத்தி கூர்மையால் உன்னை வியப்பில் ஆழ்த்துவார்கள். **ஜார்ஜ் ஜி. பேட்டன்**

1426. ஒருவரது முதுக்குப் பின்னால் செய்யக்கூடிய ஒரே நல்ல காரியம் அவரைத் தட்டிக்கொடுப்பதே! **பெயர் அறியப்படாதவர்**

1427. காரியங்களை அவை இருக்கும் வண்ணமாக நாம் பார்ப்பதில்லை. நாம் இருக்கும் வண்ணமாகவே அவற்றைப் பார்க்கிறோம். **அநாய்ஸ் நின்**

1428. ஒருவன் என்ன வைத்திருக்கிறான் என்பதைக் கொண்டு அவன் பணக்காரன் அல்லது ஏழை என்று தீர்மானிப்பதில்லை. அவன் என்னவாயிருக்கிறான் என்பதில்தான். **ஹென்றி வார்டு பீசர்**

1429. கோட்பாட்டின் விஷயங்களில் ஒரு பாறை போன்று நில்; உணர்வுகளின் அல்லது விருப்பத்தின் விஷயங்களில் எதிர் நீச்சல் போடு. **தாமஸ் ஜெஃப்பர்சன்**

1430. கடவுளின் இருதயத்தை உடைக்கும் செயல்கள் என் இருதயத்தையும் உடைக்கட்டும். **பாப் பியர்ஸ்**

1431. நான் பிறக்கும் முன்பு உலகத்தை ஆண்டவர், அவ்வாறே நான் இருந்தபோதும் காத்துப் பேணிக் கொள்வார். தற்காலத்தை செம்மைப்படுத்துவதே என்னுடைய பங்கு. **ஜான் வெஸ்லி**

1432. ஒரு காரியத்தில் உன் ஆதரவு நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ இருக்கலாம். ஆனால் நடுநிலையாக ஒருபோதும் இருக்கக் கூடாது. **ஹென்ரீட்டா மியர்ஸ்**

1433. உபயோகமின்றித் துருப்பிடித்து அழிவதைக் காட்டிலும், தொடர்ந்து உபயோகிக்கப்பட்டுத் தேய்ந்து போவதே மேல். **ஹென்றி லைட்**

1434. கீழே விழுந்த பிறகு தரையிலேயே தொடர்ந்து இருப்பது தான் நாம் செய்யும் தவறுகளில் மிகப் பெரிய தவறு. **விக்டர் மேனுவேல் ரிவேரா**

1435. நம்மிலே நாம் திருப்தியைக் காணாதபோது அதை வேறெங்கும் தேடுவது பயனற்றது. **ஃப்ரான்கேய்ஸ் டி.லா ரோச்போகால்டு**

1436. தனது அறிவுறுத்தல்களைத் தானே பின்பற்றும் போதகர், நல்ல போதகர். **வில்லியம் ஷேக்ஸ்பியர்**

1437. இந்த உலகத்தில் மிகப் பெரிய காரியம் என்பது நாம் எங்கே மிக அதிகமாக நின்றுகொண்டிருக்கிறோம் என்பதல்ல, எந்தத் திசைநோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம் என்பதுதான். **ஒலிவர் வென்டெல் ஹோல்ம்ஸ்**

1438. என்னைக் காயப்படுத்துகிற காரியங்கள் எனக்கு போதிக்கின்றன. **பென்ஞமின் ஃப்ராங்கிளின்**

1439. முதன்மையானதை நீ உன் வாழ்வில் முக்கியப்படுத்தும் போது, இரண்டாவதாக கருதப்படுபவைகளை நீ எளிதில் தூக்கி எறிந்து விடுவாய். ஆனால் இரண்டாவதை நீ முக்கியப்படுத்தும்போதோ முதன்மையானதையும் இரண்டாவதையும் நீ அடைய முடியாமல் போய் விடுவாய். **சி.எஸ். லூயிஸ்**

1440. நாம் என்ன வைத்திருக்கிறோம் என்பதைக் குறித்து மிக அருகலாக நாம் யோசிக்கிறோம். ஆனால் நாம் என்ன தவறவிட்டோம் என்பதைக் குறித்து எப்போதும் யோசிக்கிறோம். **பெயர் அறியப்படாதவர்**

1441. நான் மெதுவாக நடப்பேன், ஆனால் நான் எப்போதும் பின்னோக்கி நடக்கமாட்டேன். **ஆப்ரகாம் லிங்கன்**

1442. தாமதமாக கிடைத்த நீதி மறுக்கப்பட்ட நீதி. **வில்லியம் கிளாட்சன்**

1443. உன்னால் ஒரு வழியைக் கண்டுபிடிக்க முடியவில்லை யென்றால், ஒரு வழியை உண்டாக்கு. **மார்லன் க்ரீ**

1444. ஒரு காரியத்தை உன்னால் எளிமையாக விளக்க முடிய வில்லையென்றால், அக்காரியத்தை நீ நன்றாகப் புரிந்து கொள்ளவில்லை என்றுதான் அர்த்தம். **ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**

1445. ஒன்றைத் தொடங்குவதற்கு நீ பெரிய ஆளாய் இருக்க வேண்டியதில்லை. பெரிய ஆளாய் ஆவதற்கு நீ அதைத் தொடங்க வேண்டும். **சிக் சிக்லர்**

1446. எல்லாவற்றையும் குறித்து ஏதாவது ஒன்றைக் கற்றுக் கொள்ள முயற்சி செய், ஏதாவது ஒன்றைத் குறித்து எல்லாவற்றையும் கற்றுக்கொள்ள முயற்சி செய். **தாமஸ் ஹெச். ஹக்ஸ்லி**

1447. மக்களைக் கட்டுவதற்கு உங்கள் ஊழியத்தைப் பயன்படுத்துங்கள், உங்கள் ஊழியத்தைக் கட்டுவதற்கு மக்களை பயன்படுத்தாதீர்கள். **ஜாக்குலின் கே. ஹீஸ்லி**

1448. நாம் எதைத் தேர்ந்தெடுக்கிறோமோ அதை நாம் நம்பலாம். நாம் நம்புவதற்கு எதை தேர்ந்தெடுத்தோமோ அதற்கு பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். **ஜான் ஹென்றி நியூமென்**

1449. நீ எங்கு இருந்தாலும், நீ என்ன வைத்திருக்கிறாயோ அதைக் கொண்டு உன்னால் என்ன செய்ய முடியுமோ செய். **தியோடர் ரூஸ்வெல்ட்**

1450. நம்மில் அநேகர் கர்த்தருக்காகப் பெரிய காரியங்களைச் செய்ய சித்தமாயிருக்கிறோம். ஆனால் நம்மில் சிலர் கர்த்தருக்காக சிறிய காரியங்களை செய்ய சித்தமாயிருக்கிறோம். **டி.எல். மூடி**

1451. எதை குறித்தும் படிக்காதவன் யாராலும் படிக்கப் படமாட்டான். மேற்கோள் காட்டாதவன் மேற்கோளாய் காட்டப்படமாட்டான். பிற மனிதர்களின் மூளையின் சிந்தனைகளைப் பயன்படுத்தாதவன், அவனுக்குச் சொந்த மூளை இல்லையென்பதை நிரூபிக்கிறான். **சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன்**

1452. ஒரு நாத்திகருக்கான நல்ல கேள்வி என்பது அவரை இரவு உணவு விருந்துக்கு அழைத்து, நன்றாக போஷித்து பிறகு சமையல்காரர் ஒருவர் இருக்கிறார் என்பதை நம்புகிறாயா என்று கேட்பதுதான். **பெயர் அறியப்படாதவர்**

1453. உன்னால் செய்ய முடியாததை, என்னால் செய்ய முடியும். என்னால் செய்ய முடியாததை உன்னால் செய்யமுடியும். நாம் இணைந்து பெரிய காரியங்களைச் செய்யலாம்.
அன்னை தெரேசா

1454. பார்வையிருந்தும் பார்க்காதவன்போல இருப்பவன் தான் பிறவிக் குருடன். அவனுக்கு நிகரான குருடன் வேறு யாருமில்லை. **ஜோனத்தான் ஸ்விப்ட்**

1455. மனிதனுக்குக் குழந்தைப் பருவம் இரண்டுமுறை கிடைக் கிறது. ஒன்று குழந்தை பருவம், இரண்டு முதுமைப் பருவம். ஆனால் இளமை ஒரு போதுமல்ல. **அன்னா ஜேம்ஸ்சன்**

1456. ஒரு சிறிய கடன் ஒரு கடனாளியை உண்டாக்குகிறது. ஒரு பெரிய கடன் ஓர் எதிரியை உண்டாக்குகிறது. **சைரஸ்**

1457. நாளைய தினத்தைக் குறைவாக நம்பி, இன்றைய தினத்தை இறுக்கப் பிடித்துக்கொள். **ஹேரேஸ்**

1458. என்னிடம் இருக்கிற பொருள் எதுவானாலும், அது என்னிடம் இருக்கிற தேவனோடு கொண்டிருக்கிற தொடர்பின ாலொழிய வேறு எந்த மேன்மையானாலும் என்னுடைய மதிப்பைப் பெறாது. **டேவிட் லிவிங்ஸ்டன்**

1459. என் மகனே, தேவன் உன்னை ஊழியத்திற்கு அழைப்பா ரென்றால், நீ ஓர் அரசனாக ஆவதும் அறிவற்ற செயல். நீ அரசனாக ஆவதை நான் விரும்பவும் மாட்டேன்.
சார்லஸ் ஹெச். ஸ்பர்ஜன் தன் மகனிடம் கூறியது.

1460. கண்ணுக்கு கண் என்ற பழிவாங்கும் கோட்பாடு முழு உலகத்தையும் குருடாக்கிவிடும். **எம். கே. காந்தி**

1461. நாம் பெரிய மனிதர்களாக வேண்டும் என்ற அவசர முயற்சி யில் சிறிய மனிதர்களாகி விடுகிறோம். **ஸ்டான்லி ஜோன்ஸ்**

1462. மற்றவர்களைக் கண்டித்துத் திருத்துவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஆனால் நம்மைத் திருத்த நாம் எவரையும் அனுமதிக்கிறதில்லை. **தாமஸ் அ.கெம்பிஸ்**

1463. இவரைப்போல இருக்க வேண்டும் என்று நினைக்காதே. நீ என்னவாய் இருக்கிறாயோ அவ்வாறு துல்லியமாக இருக்க முயற்சி செய். **ஃப்ரான்சிஸ் டி. சேல்ஸ்**

1464. ஒவ்வொரு எதிரான நிலைக்கும், அது தொடர்பான சாதகமான நிலை இருக்கிறது. **W. கிளமன்ட் ஸ்டோன்**

1465. செழுமைக்கான நல்ல காரியங்கள் விரும்பப்படவேண்டும். துன்பத்திற்கு உரியதாயிருக்கிற நல்ல காரியங்கள் வரவேற்கப்பட வேண்டும். **லூசியஸ் அன்னயஸ் செனேகா**

1466. உன்னை நீ அடக்கி ஆள், பின்பு உலகத்தை அடக்கி ஆளும் அதிகாரத்தைப் பெறுவாய். **நெப்போலியன் ஹில்**

1467. தன்னுடைய நலனிலே தொடர்ந்து கவனம் செலுத்துபவரை சுயநலவாதி என்று கூடிமுடியாது. தன்னுடைய அண்டை அயலகத்தாரின் நலனை புறக்கணிப்பதாலேயே அவன் சுயநலவாதியாகின்றான். **ரிச்சர்ட் வாட்லி**

1468. வானத்தைக் குறி பாருங்கள் பூமியாவது கிடைக்கும். பூமியைக் குறிவைத்தால் ஒன்றுமே கிடைக்காது. **சி.எஸ். லூயிஸ்**

1469. நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்புவதைப் பெற்றுக் கொள்வதால் ஏற்படுவது திருப்தியாகாது. ஆனால் ஏற்கனவே நீங்கள் எவ்வளவு கொண்டிருக்கின்றீர்கள் என்பதை உணர்ந்து கொள்வதுதான் திருப்தி. **பெயர் அறியப்படாதவர்**

1470. நமக்கு முன்னால் என்ன இருக்கிறது என்பதைப் பார்க்கத் தவறுகிறதினால்தான், நாம் எப்போதும் பின்னோக்கிப் பார்க்கிறோம். **ஜஸ்டின் சிம்ஸ்**

1471. நமக்கு என்ன நடக்கிறது என்பது முக்கியமல்ல, நமக்குள் என்ன நடக்கிறது என்பதுதான் முக்கியம். **ஜேம்ஸ் W. கென்னடி**

1472. இயக்குதிறமை என்பது காரியங்களைச் சரியாகச் செய்வதாகும். செயலூக்கமுடைமை சரியான காரியங்களைச் செய்வதாகும். **பீட்டர் ட்ரக்கெர்**

1473. சூழ்நிலைகளை உன்னால் மாற்ற முடியவில்லையென்றால் சூழ்நிலைகளுக்கு ஏற்ப செயல் பட உன்னை நீ மாற்று.
டிம் ஹான்செல்

1474. மனப்பான்மையின் பெலவீனம் குணத்தின் பெலவீனமாகிறது. **ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**

1475. தவறே செய்யாத யாரும் புதிதாக எதையும் செய்ய முயற்சிக்கவில்லை என்றுதான் அர்த்தம். **ஆல்பர்ட் ஐஸ்ன்டீன்**

1476. என்னுடைய வாழ்வின் மிகப் பெரிய துயரம் என்னவென்றால் நான் ஆயிரக்கணக்கான மக்களைக் கிறிஸ்துவுக்குள்ளாக வழி நடத்தியிருக்கிறேன். ஆனால் என் சொந்த மகன்கள் இரட்சிக்கப்படவில்லை என்பதுதான். **பில்லி சன்டே**

1477. சந்திரனைக் குறி வைத்து எய். அது இலக்கை அடையத் தவறினாலும் நட்சத்திரங்களை அடையும். **லெஸ் ப்ரவுன்**

1478. நான் ஓய்வெடுக்கும்போது, துருப்பிடித்துவிடுகிறேன்.
மார்டின் லூத்தர்

1479. நல்ல வேலைகள் ஒரு நல்ல மனிதனை உருவாக்குகிறதில்லை. ஆனால் ஒரு நல்ல மனிதன் நல்ல வேலையைச் செய்கிறான்.
மார்டின் லூத்தர்

1480. ஒரு கொள்கைக்காக உயிர் துறப்பதற்குத் துணிவு இல்லாதவன், வாழ்வதற்குத் தகுதியற்றவன்.
மார்டின் லூத்தர் கிங் ஜுனியர்

1481. ஒரு நல்ல முகம், மிகச் சிறந்ததொரு சிபாரிசுக் கடிதமாகும்.
எலிசபெத் ராணி ε

1482. உன்னை அளவின்றிப் புகழ்கிறவன் ஏற்கனவே உன்னை ஏமாற்றிவிட்டான் அல்லது ஏமாற்ற விரும்புகிறான்.
பெயர் அறியப்படாதவர்

1483. மன நிறைவு என்பது இயற்கையாக நம்மிடம் உள்ள செல்வம். ஆடம்பரம் என்பது நாம் தேடிக் கொள்ளும் வறுமை.
சாக்ரடீஸ்

1484. நாம் வாழும்வரை நம்மை யாரும் வெறுக்கக் கூடாது. நாம் மறைந்த பின்பு நம்மை யாரும் மறக்கக் கூடாது. **பெயர் அறியப்படாதவர்**

1485. வன்முறை வன்முறையைப் பிறப்பிக்கிறது. **மார்டின் லூத்தர் கிங் ஜூனியர்**

1486. அதிகம் பேசாதவனை உலகம் அதிகமாக விரும்புகிறது. அளந்து பேசுபவனை அதிகமாக மதிக்கிறது. அதிகம் செயல்படுபவனையே கைகூப்பி வணங்குகிறது. **கான்பூசியஸ்**

1487. சிக்கனம் என்பது ஒருவன் பணத்தை எவ்வளவு குறைவாகச் செலவு செய்கிறான் என்பதைப் பொறுத்ததல்ல, மாறாக அவன் பணத்தை எவ்வளவு பிரயோஜனமாக செலவிடுகிறான் என்பதைப் பொறுத்ததாகும். **செனாக்கா**

1488. நான் சந்திக்கும் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் என்னைவிட உயர்ந்தவராகவே இருக்கிறார்கள் அதை நான் கற்றுக் கொள்கிறேன். **எமெர்சன்**

1489. மழையோ, பனியோ, வியாதியோ, எதுவுமோ எங்கள் ஊழியத்தைத் தடுப்பதில்லை. வியாதியாயிருந்தால் நடந்து போகாமல், ஊர்ந்தாவது போய்விட வேண்டும் என்பதுதான் எங்கள் இலட்சியம். அங்குதான் உண்மையான ஊழியம் நடைபெறுகிறது. **பில் வில்சன்**

1490. உடல் பலம் ஒரு மிருக உணர்வு. நேர்மையான துணிவுதான் உயர்ந்ததும் உண்மையானதுமாகும். **வென்டெல் ஃபிலிப்ஸ்**

1491. சிறகை விரிக்காதவரை சிறகுகள் கூட பாரம் தான். சிறகை விரித்துப் பறந்தால் வானம் கூட தொடும் தூரம் தான். **பெயர் அறியப்படாதவர்**

1492. ஆவிக்குரிய கோழைத்தனம் என்பது பெலவீனம் மாத்திரமல்ல, அது ஒரு அவக்கேடானது. **ஜே.பி. கேம்ப்ரெல்**

1493. தெய்வீக ஆறுதல் நமக்கிருக்கும்போது மனுஷீக ஆறுதலை வேண்டாமென்று தள்ளுவது கடினமல்ல
தாமஸ் அ. கெம்பி

1494. சகிப்புத்தன்மை என்பது ஒரு கடினமான காரியத்தை தாங்குவதற்கான திறமை அல்ல, அதை தேவ மகிமைக் மாற்றுவதேயாகும். **பிலிப் யான்**

1495. பறவைகளைப் போல வானத்தில் பறக்கக் கற்றுக் கொல டோம், மீன்களைப் போல கடலில் நீந்தக் கற்றுக் கொல டோம். ஆனால் சகோதரர்களாக மண்ணில் வாழ இன்னு கற்றுக் கொள்ளவில்லை. **மார்டின் லூத்தர் கிங் ஜூனிய**

1496. சமுதாயம் என்பது நமது தேவைகளால் உருவாகிறது அரசாங்கம் என்பது நமது கடமையால் உருவாகிறது
வில்லியம் கோட்வி

1497. சுதந்திரம் என்பது நாம் என்ன விரும்புகிறோம் என்பதை செய்வதல்ல, மாறாக நாம் என்ன செய்யவேண்டு என்பதுதான். **விக்டர் மானுவேல் ரிவே**

1498. மனிதர்கள் அவர்களுடைய சூழ்நிலைகளை மேம்படுத் ஆவலாயிருக்கிறார்கள், ஆனால் அவர்கள் அவர்களையே மேம்படுத்தச் சித்தமில்லாமல் இருக்கிறார்கள் எனவே அவர்கள் கட்டுண்டவர்களாகவேயிருக்கிறார்கள்
ஜேம்ஸ் ஆல்லெ

1499. மெய்யான ஊழியர்கள் தங்களின் நோக்கங்களுக்கா தேவனைப் பயன்படுத்த முயற்சிக்க மாட்டார்கள் தேவனுடைய நோக்கங்களுக்காகத் தங்களைப் பயன்படுத்த தங்களைத் தேவனுக்கு விட்டுக்கொடுப்பார்கள். **ரிக் வார**

1500. உண்மையிலே நாம் உலகத்தின் வெளிச்சமாயிருக்கிறோ ஆனால் மின்தொடர்பிணைப்பை திருப்புவதால் மட்டுமே அது ஆகும். **ஜான் ஹாக்**

* * *

ஆதார நூற்பட்டியல்
(BIBLIOGRAPHY)

ENGLISH BOOKS

444 Surprising Quotes About Jesus: A Treasury of Inspiring Thoughts and Classic Quotations, Minnesota: Baker Books, 2006.

Alli, Irfan. *201 Motivational Quotes from Around the World*, eBookIt.com, 2013.

Andrews, Robert. *The Routledge Dictionary of Quotations*, London: Routledge and Kegan Paul Limited, 1987.

Bellanca, Carolyn B. *Favorite Quotes and Sayings, Words of Inspiration and Encouragement From: Forwarded E-Mails*, Bloomington: iUniverse, 2011.

Beri, G.C. *Inspirational Quotes and Thoughts*, New Delhi: V & S Publishers, 2011.

Blacketor, Paul G. *Everyday Useful Quotes*, Xlibris Corporation, 16-Oct-2009.

Boller Jr, Paul F. and John George Jr. *They Never Said It : A Book of Fake Quotes, Misquotes, and Misleading Attributions*, New York: Oxford University Press, 1989.

Chervin, Ronda. *Quotable Saints*, Illinois: CMJ Publishers, 1993.

Clark, D. B. *Clever Quotes from Ancient Throats*, Lulu.com, 2004.

Day, Malcolm. *1001 Pearls of Bible Wisdom*, London: Chronicle Books, 2008.

DeFord, David W. *1000 Brilliant Achievement Quotes: Advice from the World's Wisest*, Ordinary People Can Win! 2004.

Dholakia, Chintak. *Inspiration: An E-book Featuring 1001 Inspiring Quotes*, World of Inspiration.

Esar, Evan. *20,000 Quips & Quotes*, New York: Barnes & Noble Publishing, 1995.

Eternal Perspectives: A Collection of Quotations on Heaven, the New Earth, and Life After Death, Tyndale House Publishers, Inc., 2012.

Famous Quotes from 100 Great People, MobileReference, 2011.

Flaherty, Patrick. *The Scout Law Quotes for Life*, Bettendorf: Teckni-Corp., Ltd., 2002.

Goldsmith, A. Daniel. Jokes, Quotes and Anecdotes, Xulon Press, 2010.

Graham, Franklin and Donna Lee Toney (eds). *Billy Graham in Quotes*, Nashville: Thomas Nelson Inc, 2011.

Greer, Marlon A. *365 Inspirational Words of Wisdom: Quotes that Touch the Heart and Empower the Soul*, Bloomington: Balboa Press, 2012.

Johnson, Addie. *A Little Book of Thank Yous: Letters, Notes & Quotes*, San Francisco: Conari Press, 2010.

Kelly, Bob. *Worth Repeating: More than 5000 Classic and Contemporary Quotes*, Grand Rapids: Kregel Academic, 2003.

Kushner, Malcolm L. (ed). *The Little Book of Humorous Quotes*, Little Quote Books, 2011.

Lemme, John Di. *177 Motivational Success Quotes to Live the Championship Life*, Florida: Lulu.com, 2008.

Lockyer, Herbert. *Last Words of Saints and Sinners: 700 Final Quotes from the Famous, the Infamous, and the Inspiring Figures of History*, Grand Rapids: Kregel Publications, 2000.

Lyseight, Laura. *1001 Life Changing Quotes 4 Teens: Chart Your Success Path With Wisdom Words*, Xlibris Corporation, 2010.

Manser, Martin H. *The Westminster Collection of Christian Quotations: Over 5,000 Quotations Arranged by Theme*, Louisville: Westminster John Knox Press, 2001.

Marrishaw, Romeo. *Fantabulous Quotes of Wisdom*, Xlibris Corporation, 2009.

Mead, Frank S. *12,000 Inspirational Quotations*, Federal Street Press, 2000.

Mills, Dondrae. *Success Book of Quotes*.

Norris, George. *Quotes and Words of Inspiration*, Melbourne: Brolga Publishing, 2010.

O'Doherty, Kevin. *Worry Not: Be Happy! A Collection of Inspirational Quotes for Anxiety and Worry*, Cognitive Behavior Therapy, 2011.

Peter, Anthony. *The Greatest Quotations of All-Time*, Xlibris Corporation, 2010.

Quote Junkie: Motivational: An Incredible Collection of Motivational Quotes, Hagopian Institute, 2008.

Quotes about Christians and Christianity (E-book).

Quotes to Live By: Words that Inspire those Who Inspire Us, Avon: Adams Media, 2013.

Rangarajan, D.V. *An Anthology of Quotes and Proverbs: English and Tamil*, Chennai: Sura Books, 2003.

Reed, Kenneth C. *Pass the Nuggets, Please!: A Book of Christian Quotes, Anecdotes, and Humor*, Xulon Press, 2009.

Rhodes, Ron. *1001 Unforgettable Quotes about God, Faith, and the Bible*, Oregon: Harvest House Publishers, 2011.

Rowell, Edward K. *1001 Quotes, Illustrations, and Humorous Stories for Preachers, Teachers, and Writers*, Grand Rapids: Baker Books, 2008.

Singh, M.P. *Quote Unquote: A Handbook of Famous Quotations,* New Delhi: Lotus Press, 2006.

Smith (Jr.), Joseph. *Topical Quotes of the Prophet Joseph Smith,* Spiringville: Horizon Publishers, 2007.

The Complete Guide to Christian Quotations: An Indispensable Resource for Writers, Pastors, Teachers, Students and Anyone Else Who Loves Books, Ohio: Barbour Publishing, 2011.

The Speaker's Quote Book: Over 5,000 Illustrations and Quotations for All Occasions, Grand Rapids: Kregel Academic, 2009.

Toliver, Wendy (ed). *The Little Giant Encyclopedia of Inspirational Quotes,* New York: Sterling Publishing Company, Inc., 2004.

Umekwe. *240 Inspirational Quotes on Humility: Quotes that Lead to Humility,* Xlibris Corporation, 2009.

Vilord, Thomas J. *1001 Motivational Quotes for Success,* Austin: Live Oak Book Company, 2001.

Ward, Hannah and Jennifer Wild. *The Lion Christian Quotation Collection: Over 5,000 Quotations, Past and Present,* Lion Children's Publishing Plc, 2002.

West, Theresa. *Sister Theresa's Lighthouse: Collection of Gospel Quotes and Poems,* Xlibris Corporation, 08-Jul-2010.

Whitaker, Todd, and Dale Lumpa. *Great Quotes for Great Educators,* Larchmont: Eye On Education, 2005.

Wiersbe, Warren W. *Looking Up When Life Gets You Down,* Chennai: Word of Christ, 2013.

Wiersbe, Warren W. *Pocket New Testament Commentary: Nelson's Pocket Reference Series,* Nashville:Thomas Nelson, 2005.

Wiersbe, Warren W. *Pocket Old Testament Bible Commentary: Nelson's Pocket Reference Series,* Nashville:Thomas Nelson, 2005.

Wise, R.A. *Wise Quotes of Wisdom: A Lifetime Collection of Quotes, Sayings,* Bllomington: Author House, 2011.

Wright, Kevin. *The Christian Travel Planner,* Nashville: Thomas Nelson Inc, 2008.

Ziglar, Zig. *Inspiration From the Top: A Collection of My Favorite Quotes,* Napeville:Simple Truths LLC, 2012.

TAMIL BOOKS

Bonnke, Reinhard. *Faith – The Link with God's Power,* Chennai: Word of Christ, 2003.

Chellappa, Lalitha and Chellappa, J. *Father Forgive Them,* Chennai: Word of Christ, 2010.

D, Cesar Castellanos. *The Leader of Success,* Madurai: Word of Christ.

D, Cesar Castellanos. *The Successful Leadership through the Government of Twelve,* Madurai: Word of Christ.

Daniel, Sam. *D.L. Moody,* Chennai: Word of Christ, 2010.

Graham, Billy. *The Secret of Happiness,* Chennai: ELS, 11th Reprint, 2011.

Kempis, Thomas a. *The Imitation of Christ,* Chennai: Chennai: Word of Christ, 2013.

MacDonald, William. *My Heart, My Life, My All,* Chennai: Moriah Ministries, 2012.

MacDonald, William. *The Disciple's Manuel,* Chennai: Moriah Ministries, 2009.

Meyer, Joyce. *100 Ways to Simplify Your Life,* Hyderabad: Joyce Meyer Ministries – Asia, 2010.

Rao, R.S. *Vazhlvil Munnera Valamana 1001 Karuththukkal,* Chennai: Jeyshankar Publications, 2nd edition, 2003.

Smith. *William Carey: Life History,* Chennai: Word of Christ.

Stanley, R. *Better Every Day: Daily Meditations for Christian Development,* Sivakasi: New Shenbagam Offset, 2003.

Stuart, Samuel T.P. *Those Who Accepted and Rejected Christ,* Chennai Word of Christ, 2006.

The Life and Ministry of John Wesley, Chennai: Word of Christ, 2007

The Unknown Christian. *The Kneeling Christian,* Chennai: Word of Christ, 2011.

Veera Swamidass. *Manitharkalai Thediya Maamanitharkal,* Chennai Friend of Bible, 2009.

Warren, Rick. *The Purpose Driven Life,* Thomas Press, Sri Lanka Edition, 2004.

TAMIL JOURNALS

Ask Task, India Service Mission, 2013.

Aththuma Adaaya Diary, Vedagama Nanban, 2013.

Leonard Ravenhill, An Epistle to the Church, Vol. 1 No.8, Octobe 2011.

NMS News Magazine, Vol. 10, No. 2, April 2012.

NMS News Magazine, Vol. 8, No. 11, January 2011.

OM Thoni, No. 13, October – November, 2012.

Sathiyathoodu, Vol.3, No.2 (Feb-Mar), 2012.

Sathiyathoodu, Vol.3, No.3 (August), 2012.

Vanamutham, 2008, 2010, 2011, 2012; 2013 till April-May.

Vedhanayagam Samuel Azariah, Vanamutham, April-May 2008.

Word of God, Vol. 10, No. 8, August, 2011.

Word of God, Vol. 12, Nos. 1-5, Janury – April, 2013.

Word of God, Vol. 9, Nos. 2 & 7, February & July, 2010.

INTERNET SOURCES

Pandita Ramabai in Her Own Words: An Honorable Heritage. http:/ bibleteachingprogram.com/religion/panditaramabai.pdf

Stephen Ross, Missionary Quotes, 2 February 2013 http://www.wholesomewords. org/missions/msquotes.html

Missions Slogans and Notables Quotes From Missionaries. 10 March 2013 http://home.snu.edu/~hculbert/slogans.htm Howard Culbertson, Southern Nazarene University.

Inspirational Quotes, 15 March 2013 http://www.historymakers.info/stuff/ inspirational-quotes.html

Harvest Ministry. 100 Mission Mottos (& Missionary Quotes) 22 March 2013 http://harvestministry.org/100-mission-mottos

Quotes About Christian Living. 10 April 2013 http://www.goodreads.com/quotes/tag/christian-living.

Christian Quotes. 15 April 2013 http://christian-quotes.ochristian.com/Christian-Quotes-Topics.shtml

Daily Christian Quotes. 20 April 2013 http://dailychristianquote.com/dcqsubject.html

Inspirational Quotes. 30 April 2013 http://www.jesusalive.cc/quotes.htm.

Adventures In Missions. 4 May 2013. 100 Missionary Quotes that changed my life, http://davidhepting.theworldrace.org/?filename=100-missionary-quotes-that-changed-my-life.

60,000 Quotations: Famous Quotes. 20 May 2013 www.MyFamousQuotes.com. 2008-2011

Zig Ziglar Quotes. 25 May 2013, http://www.goodreads.com/author/quotes/50316.Zig_Ziglar

* * *

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

நாம் இரண்டாம் வருகையைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால், பாதி உலகத்திற்கு இன்னும் முதல் வருகையைப் பற்றிக்கூடத் தெரியவில்லையே

[illegible]

சரியான வார்த்தையை, சரியான இடத்தில் பயன்படுத்துவதே நல்ல பேச்சாளரின் மற்றும் எழுத்தாளரின் அறிகுறியாகும். [illegible] அவர்கள் பயன்படுத்த அதிக புத்தக மற்றும் [illegible] இணைய இரண்டையும் [illegible] திரு. கே. எஸ். ஆபோஸ் அவர்கள் [illegible] தன் சக தோழர்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் சான்றோர்களின் கருத்துக்களைத் தொகுத்துள்ளார். இக்கருத்துக்கள் அனைத்தும் நமக்குள் ஒரு எழுப்புதலை உண்டுபண்ணுவதாகவும், தேவனுக்காக எதையாவது செய்யத் தூண்டுவதாகவும் இருக்கின்றன.

திரு. ஆர். வி. [illegible], இயக்குநர், [illegible] இந்தியா ரீஜன், சென்னை, இந்தியா

கே. எஸ். ஆபோஸ் ஒரு கிறிஸ்தவ சபை வரலாற்று ஆராய்ச்சியாளர் மற்றும் எழுத்தாளர் ஆவார். இவர் கிறிஸ்துவின் வார்த்தை ஊழியங்கள் என்ற அமைப்பில் பணிபுரிகிறார். சென்னை பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ இயலில் M.A. மற்றும் M.Phil. பட்டப் படிப்புகளை முடித்திருக்கிறார். முதல் இந்திய குருப்பட்டம் பெற்ற சீர்திருத்த போதகர் 'ஆரோனின் வாழ்க்கை வரலாறு.' 'இந்திய கிறிஸ்தவ வரலாற்றிலே 1001 கேள்விகளும் பதில்களும்' மற்றும் 'உலக கிறிஸ்தவ வரலாற்றிலே 2001 கேள்விகளும் பதில்களும்' ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ளார். '501 வேதாகம கால வழக்கங்களும் விதங்களும்' என்ற இரண்டு தொகுதிகள் மற்றும் 'பிஷப் வி.எஸ். அசரியாவின் படைப்புகளின்' மூன்று தொகுதிகள் ஆகியவையின் தொகுப்பாளர் ஆவார்.

Chennai, India